In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्री भास्करराय मखि विरचितम्

श्री त्रिपुरोपनिषत् भाष्यम्, श्री कौलोपनिषत् भाष्यम् च ॥

ஸ்ரீ பாஸ்கரராய யஜ்வா என்பவரால் இயற்றப்பட்ட

ஸ்ரீ த்ரிபுரோபநிஷத் பாஷ்யமும், ஸ்ரீ கௌளோபநிஷத் பாஷ்யமும்.

அவைகளின் தமிழ் உரையுடன்

द्रविडभाषानुवादः श्री श्रीसत्यानन्दनाथेन्द्र सरस्वती स्वामिनः ।

தமிழாக்கம் : ஸ்ரீ சத்யாநந்த நாதேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள்.

श्री भास्करप्रकाशाश्रम ग्रन्थावली - ४

ஸ்ரீ பாஸ்கர பிரகாச ஆச்ரம வெளியீடு

SR! BHASKARA PRAKASHA TRUST

(Books - Publications divison)

1998

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्री भास्करराय मखि विरचितम्

श्री त्रिपुरोपनिषत् भाष्यम्, श्री कौलोपनिषत् भाष्यम् च ॥

ஸ்ரீ பாஸ்கரராய யஜ்வா என்பவரால் இயற்றப்பட்ட

ஸ்ரீ த்ரிபுரோபநிஷத் பாஷ்யமும், ஸ்ரீ கௌளோபநிஷத் பாஷ்யமும்.

அவைகளின் தமிழ் உரையுடன்.

द्रविडभाषानुवादः श्री श्रीसत्यानन्दनाथेन्द्र सरस्वती स्वामिनः।

தமிழாக்கம்: ஸ்ரீ சத்யாநந்த நாதேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள்.

श्री भास्करप्रकाशाश्रम ग्रन्थावली - ४

ஸ்ரீ பாஸ்கர பிரகாச ஆச்ரம வெளியீடு

SRI BHASKARA PRAKASHA TRUST

(Books - Publications divison)

1998

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Copyright Reserved :

First Edition : 1998

Price : Rs. 64/-

Copies can be had from :

Sri Bhaskara Prakasha Ashram
7, First Main Road,
Raja Annamalaipuram
Chennai-600028.
Phone : 4936571.

Lasertypeset & Printed at :

V.K.N. ENTERPRISES
8/1, Dr. Rangachari Road, Mylapore, Madras-4 Ph: 4950775

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ:

வெளியிடுவோரின் முகவுரை:

श्री विमर्शानन्दनाथं सत्याम्बा सहितं गुरुम् ।
हृत्पद्मकर्णिकामध्ये भावयेत् सर्वसिद्धये ॥

ஸ்ரீ ஸத்குருவின் சரணாரவிந்தங்களின் விசேஷத்தால் நம் யாவர்க்கும் ஸகல சௌபாக்யங்களும் க்ஷேமமும் உண்டாகட்டும்.

ஸகல சாஸ்திர விற்பன்னரும் வைதிக தர்மத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவரும், சாக்தமத சித்தாந்தத்தின் ஒப்புயர்வற்ற ஓர் மணிமகுடம் போல் திகழ்பவரும், ஸகல தந்திர, ஆகமாதி சாஸ்திரதிரங்களிலும் அதிசயிக்கத்தக்க புலமை பெற்றவரும், ஸ்ரீ வித்யா மந்திர சாஸ்திரங்களின் கரையைக் கண்டவரும் ''ஸ்ரீ வித்யையில்'' தனக்கு நிகராக எவரும் இல்லாதவரும், சாக்ஷாத் அன்னையின் அவதாரமுமான ஸ்ரீ பாஸ்கரராய மகி என்ற மஹான், வடமொழியில் ஸ்ரீத்ரிபுரோபநிஷத், ஸ்ரீ கௌளோபநிஷத் என்ற நுட்பமான வேத உபநிஷத் பாகங்களுக்கு எழுதிய விரிவுரையை (भाष्यम्) அதனதன் மூலத்துடன் தமிழாக்கம் செய்து புத்தகவடிவில் தற்போது வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

மேற்கண்ட ஸ்ரீ பாஸ்கரராய மகியினுடைய ஸம்ஸ்க்ருத விரிவுரைக்கு தமிழாக்கம் செய்தவர் ஸ்ரீ ஸ்ரீசத்யாநந்த நாதேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் என்ற ஒரு மஹாயதிவரர். இவருக்கு வடமொழியில் நல்ல தேர்ச்சியும் முக்யமாக வியாகரண சாஸ்த்ரத்தில் மிகச்சிறந்த நுட்பமான புலமையும் மற்றும் மீமாம்சா தர்க்க சாஸ்திரங்களில் நல்ல பாண்டித்யமும், பயிற்சியும் இருப்பதோடு, நம் பாரததேசத்தின் சநாதநதர்மத்திலும், வைதிக மதத்திலும் அளவற்ற ஈடு இணையற்ற அன்பும் ஈடுபாடும் உண்டு. இந்த மஹான், நம் ஸத்குருநாதர் ஸ்ரீ விமர்சாநந்த நாதேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் அன்புக்கும், அருளுக்கும் பாத்ரமானவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் இருவருக்கும் சுமார் 70 வருட காலம் நட்பு உண்டு. என்பது குறிப்பிடத்தக்கது. இவர் நம் ஸத்குருநாதர் பால் ஈர்க்கப்பட்டு, அவர் விருப்பத்தின் பேரிலும், அருளின் பேரிலும் ஸ்ரீவித்யாசாக்த வித்யையில் மிகுந்த ஈடுபாடும், நம்பிக்கையும் ஏற்பட்டு, ஸ்ரீவித்யா ஸம்பந்தமான சாஸ்திர க்ரந்தங்களை ஒய்வு ஒழிவின்றி கற்றறிந்து அதன் நுட்பமான விஷயங்களை, தன் மதிநுட்பத்தினால் நன்ருக அலசி ஆராய்ந்து, அந்த சாஸ்த்ரத்தின் மிக,மிக நுட்பமான ரகசியங்களை நம் குருநாதர் மூலம் கேட்டுத்தெரிந்து, தெளிந்து, குரு, சாஸ்த்ர ஸம்ப்ரதாய முறைப்படி நம் பரம்பரையில் ஸ்ரீவித்யாதீக்ஷை, பூர்ணாபிஷேகம் செய்யப்பெற்று ஸதா ஸர்வகாலமும் ஸ்ரீ அம்பிகையின் தியானத்திலும், இந்த ஸ்ரீவித்யா மற்றும் தந்திசாஸ்திர நூல்களின் பரிசீலனையிலும், மனதை ஏகாக்ரசித்தத்துடன் ஈடுபடுத்தி, நம் போன்ற சாமானியர்களுக்கு இந்த சாஸ்த்ரங்களின் நுட்பங்களையும் கொள்கைகளையும் மற்றும் அதைச்சார்ந்த விஷயங்களையும் போதித்து வருகிருர். இந்த தள்ளாத வயதிலும் (வயது 95) இந்த நூல்களுக்கு தமிழில் மொழிபெயர்த்து, புத்தக வடிவில் வந்து, நம் ஸத்குருநாதரின் எல்லா சிஷ்யர்களும் மற்றும் இந்த உலகில் உள்ள ஸ்ரீதேவியின் உபாஸகர்களும் இந்த நூலைப்படித்து, பயனடைய வேண்டும் என்ற விருப்பம் ஸ்ரீ பராம்பிகையின் ஸங்கல்பத்தாலும், ஸ்ரீஸத்குருநாதரின் அனுக்ரஹத்தாலும், மற்றும் நமது ஒப்புயர்வற்ற, ஈடு இணையற்ற நம் ஸ்ரீவித்யா குரு பரம்பரையின் விசேஷத்தாலும் மட்டிலுமே என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. மேலும் இந்த நூல்களை தமிழாக்கம் செய்து யாவரும் பயனடைய வேண்டும் என்பது நம் ஸத்குருநாதர் ஸ்ரீ விமர்சாநந்த நாதேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் இந்த மஹானுக்கு இட்ட அன்புக்கட்டளையாகும் என்பது இந்த சமயத்தில் குறிப்பிடத்தக்கது.

இந்த புத்தகத்தை ஸ்ரீ பாஸ்கர ப்ரகாச ஆச்ரம டிரஸ்ட் மூலம் வெளியிடுகிரேம். இது ஸ்ரீ பாஸ்கர ப்ரகாசாநந்த மண்டலியின் நான்காவது புத்தக வெளியீடாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த நூலுக்கு தமிழாக்கம் செய்த யதீச்வரர், ஸ்ரீ பாஸ்கரராய மகீ என்ற மஹானிடம் மிகவும் பற்றுதலும், தேவதா விசுவாசமும், அவர் ஸ்ரீ அம்பிகையின் பூர்ணாவதார ஸ்வரூபமே என்ற நம்பிக்கையும் கொண்டவர். இவர் மூலமாக மற்ற ஸ்ரீ பாஸ்கரராயர் இயற்றிய மிக முக்கியமான, சிறப்பான நூல்களான ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம் (ஸ்ரீ ஸௌபாக்ய பாஸ்கரம்), ஸ்ரீ நித்யாஷோடசிகார்ணவ தந்த்ர பாஷ்யமான ''சேதுபந்தம்'', மற்றும் அவரது சுதந்திர நூலான ''வரிவஸ்யா ரஹஸ்யம்'' என்ற நூல்களை தமிழாக்கம் செய்யவேண்டும் என்பது எங்களுடைய உண்மையான விருப்பம். இந்த விருப்பமானது நம் ஸ்ரீ ஸத்குருநாதரின் சிஷ்யர்களின் ஊக்கத்தாலும், ஸ்ரீ அம்பாளின் பிரேரணையாலும், நம் ஸ்ரீ குருநாதரின் அளவற்ற கருணையாலும் தான் நடைபெற வேண்டுமேயல்லாது, நம் போன்ற சாதாரண சாமானியர்களின் முயற்சியால் நிறைவு பெறக்கூடிய காரியமல்ல. இருப்பினும், நாம் மிகவும் பக்தியுடன் இதை ஸ்ரீ அம்பாளுடைய கைங்கர்யமாகவும், ஸ்ரீ ஸத்குருநாதரின் அன்புக்கட்டளையாகவும் ஏற்று, நம் உடல், உயிர், ஆவி இந்த மூன்றையும் இந்த வேள்விக்கு அர்பணித்து, நம்மை நாமே இதில் ஈடுபடச் செய்தால், இந்த புனித வேள்வி நிறைவடைய ஸர்வலோக ஜனனீயான ஸ்ரீ மாதாவே அருள் புரிவாள் என்பதில் சந்தேகமேயில்லை.

முடிவாக இந்த நூலை நம் ஸத்குரு ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய, ஸ்ரீ பாஸ்கரப்ரகாசாச்ரம ப்ரதிஷ்டாபகாசார்ய, ஸ்ரீ வித்யா பீடாதிபதி, ஸ்ரீ வித்யாகுரு, ஸ்ரீ ஸ்ரீ விமர்சாநந்த நாதேந்த்ர ஸரஸ்வதீ மஹாஸ்வாமிகளின் பொற்பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்—

இங்ஙனம்

ஸ்ரீ பாஸ்கர ப்ரகாசாச்ரம டிரஸட் நிர்வாகிகள்

சென்னை - 600 028.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

		பக்கம்
1.	வெளியிடுவோரின் முகவுரை	(i)
2.	'த்ரிபுரோபநிஷத்' உரையாசிரியரின் முன்னுரை	(xi)
3.	'த்ரிபுரோபநிஷத்' பாஷ்யமும் அதன் தமிழ் உரையும்	(1)
4.	'கௌளோபநிஷத்' உரையாசிரியரின் முன்னுரை	(108A)
5.	'கௌளோபநிஷத்' பாஷ்யமும் அதன் தமிழ் உரையும்:-	(109)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



Sri Sri Chakra

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्री त्रिपुरोपनिषत् ॥

உரையாசிரியரின் முன்னுரை:

"जयन्तिं जंगदानन्द सन्दायिगुण निर्भराः
भासुरानन्द नाथेन्द्राः श्रीविद्यारक्षणेरताः ॥"

ஸர்வ லோக ஜனனீயான ஸ்ரீ பராம்பிகையின் கருணாப்ரவாஹத்தாலும் நம் குருபரம்பரையின் அனுக்ரஹ பரம்பரையாலும் பூர்வஜன்மாக்களில் நாம் அனுஷ்டித்த புண்ணிய கர்மாக்களின் விசேஷத்தாலும் தற்சமயம் நாம் பெற்றிருக்கும் மஹோந்நதமான மனுஷ்ய ஜன்மாவை மிகவும் எச்சரிக்கையுடன் சாஸ்திர விசேஷங்களில் கூறப்பட்ட அனுஷ்டான முறைப்படி காப்பாற்றி வந்து அதன்மூலமாக புருஷார்த்தங்களில் மிகவும் சிறந்த "முக்தி" என்ற பரதத்வாபேதத்தைப் பெற்று சத் - சித் - ஆநந்த ரூபமான நித்யசுகத்தை அடைய அனுகூலமான சன்மார்க்கங்களில் ஈடுபடுத்த வேண்டும் என்பது நமது கடமைகளில் முக்கியமாக இருக்கிறது.

இந்த மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தை அடைய உபாயமாக உள்ள தர்ம, அர்த்த, காம புருஷார்த்தங்களுடன் நான்கு புருஷார்த்தங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான நான்கு புருஷார்த்தங்களையும் நாம் அடைவதற்கு அனுகூலமான பலபல மார்க்கங்களை அனுக்ரஹ மூர்த்தியான சர்வேச்வரன் வெகுவிரிவான வேதங்கள் மூலமாக அருள் புரிந்திருக்கிறார். மேற்படி வேதசாகைகளை சிருஷ்டிக்கிரமத்தில் முதன்மை பெற்ற பிரம்மதேவனுக்கு சர்வேச்வரன் உபதேசித்து அதன்பின் அவ்வேதங்கள் பிரம்மதேவரால் தனது புத்திரர்களான வசிஷ்டர், வாமதேவர், கபிலர் முதலிய மகரிஷிகளுக்கு கர்ணபரம்பரையாக உபதேசிக்கப்பெற்று காலக்கிரமத்தில் இந்திராதி தேவர்களும், பூலோகத்திலுள்ள மகனீயர்களான மகரிஷிகளும் உபதேசக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிரமத்தாலும், யோக சக்தியாலும் கிடைப்பதற்கரிய ''வேதம்'' என்ற பெரும் நிதியைப் பெற்று அந்த மகரிஷிகள் மூலம் சிஷ்ய பரம்பரையாக இன்று வரை சிறப்பாக வளர்க்கப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. இந்த வேதங்களுக்கு பக்கபலமாக ஈசனால் தேவிக்கு நேரிடையாக உபதேசிக்கப்பட்ட தந்திர, ஆகமாதி சாஸ்திரங்களும், மனு முதலிய மகரிஷிகளால் இயற்றப்பட்ட தர்ம சூத்திரங்கள், க்ருஹ்ய சூத்திரங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், இதிகாசங்களும் வேதோக்த தர்மங்களை அறிந்துகொள்ள உபாயமாக விளங்கி வருகின்றன.

''श्रोतव्यः श्रुतिवाक्येभ्यः'' என்ற விதிப்படி சிறந்த ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட சுருதி வாக்யங்களான நான்கு மஹாவாக்யங்கள் (महावाक्य) மூலமாகத்தான் நாம் ஈசனை அறியமுடியும் என்றிருப்பதால் அந்த வேதங்கள்தான் முக்யமான மூலப் பிரமாணங்களாக கருதப்படுகின்றன.

மீமாம்சா சாஸ்திர நிபுணர்களில் (निरीश्वर) நிரீசுவர மீமாம்சகர்கள், சேச்வர (सेश्वर) மீமாம்சகர்கள் என இரு பிரிவினர் இருக்கிறார்கள். இவற்றில் முதல்பிரிவினர் - நாம் செய்யும் நற்காரியங்களுக்கு பலன்களைத் தருவதற்காக ஈசுவரன் என்ற ஓர் தத்துவம் தேவையில்லை. அனுஷ்டிக்கப்படும் நமது கர்மாக்களே அதனதன் பலனைக் கொடுக்கின்றன எனக் கருதுகிறார்கள். ஈசுவரனை அங்கிகரிக்காமல் வேதத்தை மாத்திரம் ஒப்புக்கொள்ளும் இவர்களும் ஆஸ்திகர்களே. அடுத்த பிரிவினரோவெனில் - தாங்கள் செய்யும் நற்காரியங்களுக்கு फलदाता வாகவும் (பலனைத் தருபவராகவும்), சர்வசக்திகளும் உள்ளவனாகவும் சர்வக்ஞனாகவும் உள்ள சர்வே ச்வரன் என்ற ஓர் தத்துவத்தை அங்கிகரிக்கிறார்கள். ஈசுவரனுக்கு பிராதான்யம் அளிக்கும் இவர்களும் ஆஸ்திகசிரேஷ்டர்களே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமது வேதங்களை ஒப்புக்கொள்ளாமல் கடவுளை மாத்திரம் ஒப்புக்கொள்ளும் - உதாரணமாக - புத்தர்கள், ஜைனர்கள், கிருஸ்துவர்கள், முஸ்லீம்கள் இவர்களை நாம் ஆஸ்திகர்களாக ஏற்றுக் கொள்வதில்லை. ஆகவே வேதங்களையே மிகுந்த பக்தி சிரத்தையோடு பூர்ண நம்பிக்கையுடன் கைக்கொண்டு அதன்படி அனுஷ்டித்து வருபவர்கள்தான் ''ஆஸ்திகர்கள்'' என்பது நமது சித்தாந்தம்.

இவ்வாறு ஈசனால் நமக்கு அளிக்கப்பட்ட வேத சாகைகள் யாவும் கர்மகாண்டம், ஞானகாண்டம் அல்லது உபாசனாகாண்டம் என்று இரு பிரிவுகளாக விரிந்து நாம் அனுஷ்டிக்க வேண்டிய கிரியாகலாபங்களை கர்மகாண்டம் மூலமாகவும், தேவதாராதனம் முதலான உபாசனுமார்க்கங்களை ஞானகாண்டம் மூலமாகவும் விஸ்தாரமாக விளக்கிக் கொண்டிருக்கின்றன.

பூர்வகாண்டத்தில் விதிக்கப்பட்ட அக்னிமூலமாகச் செய்ய வேண்டிய ''அக்னி ஹோத்ரம்'' முதலான சர்வயக்ஞாதி கர்மாக்களையும் சிறிதும் பலனை எதிர்நோக்காது 'கடமை' என்ற உறுதியுடன் விதிப்பிரகாரம் அனுஷ்டித்து அதன்மூலம் மனத்திலுள்ள அழுக்காறுகளை நீக்கி அந்த: கரணத்தை சுத்தி செய்து ஏகாக்ரசித்தத்துடன் நமது வேத சாஸ்திரங்களில் அனுமதிக்கப்பட்ட பலவகையான தெய்வங்களில் ஏதாவது ஒன்றை திடமான நம்பிக்கையுடன் இதர நினைவுகள் யாதும் இன்றி ஒரே நிலையில் அனுசந்தானம் செய்து வரும் சாதகபுருஷன் படிப்படியாக தனது பந்தங்களிலிருந்து நீங்கியவனாக கண்ணாடி போன்ற நிர்மலமான தனது மனத்தில் சர்வேச்வரனது ஸ்வரூபம் பிரதிபிம்பமாக பிரதிபலிக்க அதை அனுபவித்துக் கொண்டிருப்பதையே நிரந்தரமாக அப்பியாசம் செய்து வரும் நிலையில் ''ஞானம்'' என்ற அபரோக்ஷசாக்ஷாத்கரம் ஏற்பட்டு க்ரமமாக 'பரதத்வாபேதம்'' என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சச்சிதாநந்த ஸ்வரூபமான முக்தியை அடைகிறான் என்பது நமது சாஸ்திரங்களின் சிறப்பான சித்தாந்தம்.

கர்ம காண்டங்களில் கூறப்பட்ட க்ரதுவிசேஷங்களை இக்காலத்தில் வழுவின்றி முடிப்பது என்பது சாத்தியமற்ற செயலாக இருப்பதாலும், அதற்குறிய சாமக்ரியா சாதனங்களும், ரித்விக்களும் கிடைப்பது அறிதாக இருப்பதாலும், தர்ம சாஸ்திரங்களில் கூறப்பட்ட முக்கியமான சிலசில வைதிகக்கிரியா விசேஷங்களையும் அவசியமான சம்ஸ்கார விசேஷங்களையும் அனுஷ்டித்து அடுத்ததாக உள்ள உபாசனா காண்டத்தில் கூறப்பட்டதும் சர்வசாதரணமுமான தேவதோபாஸ்திகளில் ஏதாவது ஒன்றை சத்குரு மூலமாகப் பெற்று அனுஷ்டித்து வருவது ஒன்றே தற்காலத்துக்கு சாத்யமாக இருக்கிறது என்பது அனுபவசித்தம்.

தற்காலத்திற்கு மிகவும் பொருத்தமாயுள்ள உபாசனா மார்க்கங்களை அறிவிக்கின்ற தந்திர, ஆகமக் கிரந்தங்களும், நிபந்தனக் கிரந்தங்களும், பத்ததி கிரந்தங்களும் பற்பலதேவதா பேதங்களைக் கொண்ட உபாசனைகளை அறிவிக்கின்றன. உதாரணமாக சைவம், வைணவம், துர்க்கை என்ற காளிமதம், சூர்யன், கணபதி, கௌமாரம், பௌத்தம் மற்றும் பல மதங்களையும் அதனதற்குறிய தேவதாபேதங்களுடன் கூடிய உபாசனைகளையும் போதிக்கின்றன.

“शैववैष्णवदौर्गार्क गाणपत्येन्दुसंभवैः।
मन्त्रैः विशुद्धचित्तस्य कुलज्ञानं प्रकाशते॥”

“श्रीविद्यैव तु मन्त्राणां” என்பது போன்ற நூற்றுக்கணக்கான சாஸ்திர வசநங்கள் “கௌள மதம்” என்று கூறப்படும் “சாக்த ஸ்ரீவித்யா” மார்கத்தை மிகவும் சிறந்ததாக புகழ்கின்றன. काठकोपतनिषत्, अरुणोपनिषत् என்ற வேத பாகங்களில் सावित्रोपास्ति முதலான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சில உபாசனைகள் கூறப்பட்டிருந்தாலும் அந்தந்த உபாசனா முறைகளையும் மந்திர விசேஷங்களையும் அனுஷ்டான பூர்வமாக அறிந்து உபதேசம் செய்யக்கூடிய ஆசார்யர்கள் இக்காலத்தில் எங்காவது இருப்பதாகத் தெரியவில்லை.

'உபநிஷத்' என்ற பல வேதவாக்யங்களாலும், தந்திராகம புராணாதிகளாலும் வெகுவாகப் புகழப்படுகின்ற சாக்தம் என்ற இந்த ஸ்ரீ வித்யா மார்க்கமோவெனில் ஆதியில் பரஸ்பரம் குருசிஷ்ய பாவம் பெற்ற பார்வதி பரமேச்வரன் இவர்களின் பரஸ்பர சம்வாதபூர்வமாக ஈசனால் பார்வதிக்கு உபதேசம் செய்யப்பெற்று அவர்கள் மூலம் பிரம்ம, விஷ்ணு, ருத்ரர், இந்திராதி தேவர்கள், பிரம்மரிஷிகள், மகரிஷிகள், பூலோக வாசிகளான சான்றோர்கள் யாவரும் உபதேசக்கிரமத்திலேயே அடைந்து, இடையற்ற சிஷ்யபரம்பரை மூலமாக இன்றுவரை மிகவும் விஸ்தாரமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

"निरुपाधिकसंविदेव कामेश्वरः" என்றபடி யாதொரு தர்மசம்பந்தமும் இல்லாத பரமாத்ம ஸ்வரூபத்தை அனுபவிப்பது என்பது स्वानुभूति (ஸ்வாநுபூதி) பெற்ற முக்தர்களுக்குத்தான் சாத்யமே தவிர முமுக்ஷுக்களான நம் போன்றவர்களுக்கு சிறிதளவு கூட எட்டாததாக இருப்பதால் நிர்தர்மக, நிர்குணமான அந்த பரதத்வமே, தன்னால் தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சத்திலுள்ள சாமான்யர்களை அனுக்ரஹிக்கும் பொருட்டு स्वाभिन्न மான (தன்னைக்காட்டிலும் வேறாக இல்லாத) सत्व चित्व आनन्दत्व (சச்சிதாநந்த) என்ற தர்மங்களை தன்னிடம் ஆரோபனம் செய்துகொண்டு தன்னை பிரதிபலிக்கச் செய்கின்ற நிலையில் "साच्चिदानन्दरूप स्वात्मैव परदेवता ललिता" என்றபடி धर्म धर्मि भावத்தில் உருவம் பெற்று நாம் உபாசிக்கத் தகுந்த நிலையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைகிறது. ஆகவே முக்தர்களான யோகிச்வரர்கள் இப்பரதத்துவத்தை நிர்குணமாகவும் நம் போன்ற முமுக்ஷுக்கள் (சாமானியர்கள்) அவரவரது விருப்பப்படி ஸ்த்ரீ வடிவத்திலோ புருஷ வடிவத்திலோ சகுணமாகவும் உபாசிக்க முடிகிறது.

"पुंरूपं वा स्मरेत् देवीं स्त्रीरूपं वा विचिन्तयेत् । अथवा निष्कलं ध्यायेत् सच्चिदानन्दरूपिणीम् ॥" என்று ஸ்ம்ருதி கூறுகிறது.

சைவசிந்தாத்தில் சிறந்து விளங்கும் "சூதசம்ஹிதை" என்ற க்ரந்தத்தில்.

"चिन्मात्राश्रयमायायां शक्त्याकारे द्विजोत्तमाः ।
अनुप्रविष्टा या संवित् निराकारा स्वयंप्रभा ॥"
सदाकारा परानन्दा संसारोच्छेदकारिणी ।
सा शिवा परमादेवी शिवाभिन्ना शिवंकरी ॥"
एषा सा साक्षिणी शक्तिः शंकरस्यापि शंकरी ।
शिवाभिन्ना तयाहीनः शिवः साक्षात् निरर्थकः ॥"

என்றவாறு இந்த ஸ்ரீவித்யா ரூபிணியான சிவசக்தியானது வெகுவாக புகழ்ந்து பாடப்படுகிறது.

உலக வாழ்க்கையில் தாயினிடம் கிடைக்கும் சலுகைகளும் அன்பும் தந்தையிடம் கிடைப்பதில்லை என்பது அனுபவம். "मातेव पुत्रान् रक्षस्व" (தாய்போல் புத்திரர்களை காப்பாற்று) "न मातुः परमास्ति दैवतम्" (தாயைக் காட்டிலும் சிறந்த தெய்வம் இல்லை) என்ற சூக்திகளும் (நற்சொற்கள்) தாயின் பெருமையை கூறுகின்றன. தந்தையின் கண்டிப்புகளிலிருந்தும் சிக்ஷணங்களிலிருந்தும் (தண்டனைகள்) தன்னை விடுவித்துக் கொள்ள குழந்தைகள் தாயைத் தான் சரணம் அடைகின்றன. பெற்றோர்கள் இக்குழந்தைகளின் சரீர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளர்ச்சிக்கான போஷணைகளையும், லௌகிகமான படிப்பின் மூலம் சிறிது லௌகிக அறிவையும் பெற்றுத் தருகிறார்கள். ஜனன, மரணம் இல்லாத நிரந்தரமான நித்ய சுகத்தை அளிக்க அவர்களால் முடிவதில்லை. இந்த தாய்தந்தையரைப்போல் முந்திய பல ஜன்மங்களில் எத்தனை தாய் தந்தையரை அனுபவித்திருக்கிறோமோ, இனி ஏற்படவிருக்கும் பல பிறவிகளில் எத்தனை பெற்றோர்களை சந்திக்க வேண்டியிருக்குமோ.

இந்தப்பிறவியில் மட்டிலுமே பிற்காலத்தில் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பிரதிபலனை எதிர்பார்த்து ஏதோ சிற்சில சௌகரியங்களை செய்து தருகின்ற தாய் தந்தையர்களிடம் "மிக பக்திசிரத்தையுடனும், தேவதாபுத்தியிடனும் வேண்டிய பணிவிடைகளைச் செய்து அவர்களது பூர்ண அனுக்ரஹத்தைப் பெறவேண்டும்" என்று சாஸ்திரங்களும், பெரியோர்களின் உபதேசங்களும் ஏராளமாக நம்மை கட்டாயப்படுத்துகின்றன. அப்படியிருக்க இந்த ஸர்வலோகஜநநீயான கருணைவடிவமான ஸ்ரீ மாதாவோவெனில் ப்ரதிப் ப்ரயோஜனத்தை சிறிதும் எதிர்நோக்காமல் உயர்ந்த பிறவியையும் அதற்குறிய சிறந்த தேஹேந்திரியங்களையும் தந்து, இகலோக வாழ்க்கையில் அடையவேண்டிய சகலபோகங்களையும் அளித்து கடைசியில் ஜநந, மரணம் என்ற துக்க சம்பந்தம் இல்லாத மோக்ஷம் என்ற நித்தியானந்தத்தையும் தநது நம்மை பரம்பொருளுடன் ஒன்றுபடச் செய்கிறாள் என்பதால் ப்ரபஞ்சத்திலுள்ள சகல ஜீவர்களையும் உஜ்ஜீவனம் செய்து கடைத்தேறச் செய்வதையே தனது முக்கிய நோக்கமாக கொண்டிருக்கும். ஸ்ரீவித்யாரூபிணியான த்ரிபுரசுந்தரியை ஸ்ரீசாக்தசிந்தாந்தப்படி உபாசித்து வரவேண்டும் என்பதில் யாவர்க்கும் உறுதியான நம்பிக்கை இருந்து வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீபராம்பிகையின் பெருமையை நன்ருக அறிந்த நமது பெரியோர்கள் உருவம் அற்ற நிஷ்கலமான பரப்பிரம்மத்தை புருஷ வடிவில் உபாசிப்பதைக் காட்டிலும் உடனேயே அன்புடன் பலன்களைத் தந்து அனுக்ரஹிக்கும் ஸ்த்ரீ வடிவத்தை உபாசிப்பதே சாலச்சிறந்தது என்ற நோக்கத்தில் தான் இந்த ஸ்ரீவித்யா மார்க்கத்தை தாங்கள் கையாண்டு வருவதுடன் மற்றவர்களுக்கும் உபதேசித்து அனுக்ரஹம் செய்து வருகிருர்கள்.

''श्रीविद्या परमामुक्तेः हेतुभूता सनातनी'' ஸ்ரீ வித்யை என்பது உயர்வான முக்திக்கு மிகப்பழமையான சிறந்த சாதனம் என்று சப்தசதீ ஸ்தோத்ரம் இவ்வித்யையை புகழ்கிறது. ''अविद्यया मृत्युं तीर्त्वा विद्यया अमृतं अश्नुते'' (அவித்தையினால் மிருத்யுவைக் கடந்து வித்யையினால் மோக்ஷத்தை அடைய வேண்டும்) என்று உபநிஷத் கூறுகிறது. இந்த இடத்தில் अविद्या என்ருல் கர்மாக்கள். மிருத்யு என்ருல் சகலவிதமான பந்தங்கள்:- அதாவது பூர்வ வினைகள். विद्या என்ருல் ஸ்ரீ வித்யை என்று பொருள் கொள்ளவும். பந்தங்கள் யாவும் உயர்மார்க்கத்திற்கு போகவிடாமல் தடுப்பதால் அவைகளை மிருத்யு என்று நிந்திக்கிறது. ஆகவே பலனை எதிர்பாராது தன் தனது கர்மாக்களை அனுஷ்டானம் செய்து அதன் மூலமாக 'மிருத்யு' என்ற தனது வினைகளை நாசம் செய்து பந்தங்களிலிருந்து விடுபட்டு ஸ்ரீவித்யா உபாஸ்தி மூலமாக முக்தியைப் பெறவேண்டும் என்பது உபநிஷத்தின் தாத்பர்யம்.

இந்த ஸ்ரீவித்யைதான் आत्मविद्या என்றும், ब्रह्मविद्या எனவும், இதை பரமேச்வரன் உபாசித்து வருகிருன் என்பதாகவும் லலிதா ஸஹஸ்ர நாமத்தில் ''आत्मविद्या, महाविद्या, श्रीविद्या, कामसेविता'' என்ற நான்கு நாமாக்களால் புகழப்படுகிறது. (இங்கு काम என்ருல் பரமேச்வன் என்று பொருள் கொள்ளவும்).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நகரங்களில் 'ஸ்ரீபுரம்' போலவும், சக்திகளுக்குள் 'லலிதை' போலவும், சக்தி உபாஸர்களுக்குள் 'பரமேசுவரன்' போலவும் இந்த ஸ்ரீ வித்யையானது மற்ற வித்யைகளுக்குள் சிறப்பாக விளங்குகிறது என பிரம்மாண்ட புராணம் கூறுகிறது.

''यत्रास्ति भोगो न च तत्र मोक्षः यत्रास्ति मोक्षो न च तत्र भोगः।
श्रीसुन्दरीसाधकपुङ्गवानां भोगश्च मोक्षश्च करस्थ एव॥''

போகத்தை தரும் மார்க்கங்கள் மோக்ஷத்தை தருவதில்லை. மோக்ஷத்தை தரும் இதர யோகாதி மார்க்கங்கள் போகத்தை தருவதில்லை. ஸ்ரீ வித்யா உபாஸ்தி செய்துவரும் சாதக ச்ரேஷ்டர்களுக்கு போகமும் மோக்ஷமும் கைமேலேயே இருக்கின்றன. என்பது தந்திர வாக்யம்.

இவ்வாறு மகிமை பொருந்திய 'ஸ்ரீ வித்யை' யை ஓர் சத்குரு மூலமாகத்தான் உபதேசக்கிரமத்தில் அடைய வேண்டும். மற்ற வழிகளில் வந்தால் பயன் தராது.

ப்ரபஞ்சத்திலுள்ள ஜீவர்களை தன் வசமுள்ள இந்த ஸ்ரீ வித்யா மந்திரத்தால் அனுக்ரஹம் செய்ய ஆவல்கொண்ட ஸ்ரீ பரமேச்வரன் தன்னிடமுள்ள ப்ரகாச அம்சத்தால் தன்னை குருவாகவும், விமர்ச அம்சத்தால் தேவீரூபமான சிஷ்யையாகவும் தன்னை இரு உருவமாக மாற்றிக்கொண்டு முதன்முதலாக பார்வதிக்கு இம்மந்திரத்தை உபதேசம் செய்கிறார்.

''गुरुशिष्यपदे स्थित्वा स्वयमेव सदाशिवः।
प्रश्नोत्तरपदैः वाक्यैः तन्त्रं समवतारयत्॥
आगतं शिववक्त्रेभ्यः गतं च गिरिजामुखे ॥''

(சதாசிவன் ஒருவனே குரு, சிஷ்யன் என்ற இரு ஸ்தானத்தையும் அடைந்து, கேள்வி பதில் என்ற வாக்கியங்கள் மூலமாக தந்திர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாஸ்திரங்களை பூலோகத்திற்கு அருள் புரிந்தார். சிவனுடைய முகத்திலிருந்து வந்து பார்வதியின் முகத்தில் சென்றது) என்ற வசனங்கள் ஈசனது இச்செய்கையை வர்ணிப்பதன் மூலமாக குரு, சிஷ்ய பாவத்தின் அவசியத்தை சூசனையாகத் தெரிவிக்கின்றன. 'गुरुमूलाः क्रियास्सर्वाः', 'गुरुरुपायः', 'श्रीगुरुः सर्वकारणभूता शक्तिः' என்ற பற்பல வசனங்களும் குருவின் அவசியத்தை வற்புறுத்துகின்றன .

ஸ்ரீ வித்யாமந்திர ஸ்வரூபமாகவும் அம்மந்திரத்தின் அர்த்த ரூபமாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் பரப்பிரம்மாபின்னமான 'சித்சக்தி' என்ற தேவீ, கால, தேச, வஸ்து என்ற உபாதிவசத்தால் அந்தந்த பக்தர்களின் விருப்பப்படி சில சமயங்களில் ஸ்த்ரீ ரூபத்திலும், சில சமயங்களில் புருஷ வடிவத்திலும் தோற்றம் கொண்டிருக்கிருள். ''उमैव बहुरूपेण पत्नीत्वेन व्यवस्थिता'' (உமை என்ற ஒருவளே பல உருவங்களில் பலவித பத்னீகளாக ஈசனிடம் இடதிற்குத் தக்கவாறு நிலை கொண்டிருக்கிருள்) என்றும் ''एकैव अनेका'' (ஒன்றே பலவாறாக இருக்கின்றன) என்ற கௌடபாத சூத்ரமும் ''आद्या शक्तिः महेशस्य चतुर्धाभिन्नविग्रहा। भोगे भवानी समरे च दुर्गा कोपे च काली पुरुषेषु विष्णुः'' (மகேசனுடைய ஆதிசக்தியானது ஈசனுடைய ரதிகாலத்தில் பார்வதியாகவும், யுத்த காலத்தில் துர்கையாகவும், கோபத்தில் காளியாகவும், புருஷ வடிவில் விஷ்ணுவாகவும்) என்ற ஆகம, புராண வசனங்களாலும் ''ममैव पौरूषं रूपं गोपीजनमनोहरम्'' (எனது புருஷ உருவமே கோபிகாஸ்த்ரீகளின் மனதிற்கு இன்பமாக இருக்கிறது) என்ற பிரம்மாண்ட புராணமும் ''कदाचिल्ललितादेवी धृतश्रीकृष्णविग्रहा। वेणुनादविनोदेन मोहयत्यखिलं जगत्'' (லலிதாதேவீ சில சமயங்களில் ஸ்ரீ கிருஷ்ண உருவம் கொண்டு தனது வேணுகானம் மூலமாக ஸமஸ்த உலகங்களையும் மோகிக்கச் செய்கிருள்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"सहस्रमूर्धानमनन्तशक्तिं सहस्रबाहुं पुरुषं पुराणम्।
शयानमब्धौ ललीते तत्रैव नारायणाख्यं प्रणतोऽस्मि रूपम्॥"

ஆயிரக்கணக்கான தலைகளை உடையவனும், எல்லையற்ற சக்திபெற்றவனும், ஆயிரக்கணக்கான கைகளை உடையவனும், ஆதிபுருஷனும், சமுத்திரத்தில் பள்ளி கொண்டிருப்பவனும், நாராயணன் என்ற பெயர் கொண்டவனுமான மகாவிஷ்ணுவின் ஸ்வரூபத்தை உன்னுடைய உருவமாகவே பாவித்து நான் எப்பவும் நமஸ்காரம் செய்கிறேன் என்ற மேனகையின் வாக்யமும்.

"एवं देव्यात्मना स्वेन रूपेण च जनार्दनः।
दम्पत्योः एककायत्वात् एक एव द्विधार्चितः॥"

(ஜனார்தனன் என்ற ஒருவனே மனைவியால் தேவீரூபமாகவும் புருஷனால் ஜனார்தனன் என்ற விஷ்ணுரூபமாகவும் இருவகையாக பூஜிக்கப்பட்டான்) என்று சனத்குமார ஸம்ஹிதையிலும் "या तस्य पार्श्वगा बाला सा तस्य पार्श्वगो हरिः" (ஈசனின் பக்கத்திலுள்ள பாலா என்பவள் பார்வதியின் அம்சமான விஷ்ணுவே) என்றும்

"अहं तु वासुदेवाख्यः नित्यं कामकलान्वितः।
अहं च ललितादेवी पूंरूपा कृष्णविग्रहा॥"

आवयोरन्तरं नास्ति सत्यं सत्यं वदाम्यहम्।
इदं बृन्दावनं नाम रहस्यं मम बै गृहम्॥"

"சதாசர்வகாலமும் காமகலா உருவத்தில் இருந்துவரும் லலிதாதேவீயான நானே வாசுதேவன் என்ற புருஷவடிவம் பெற்ற ஸ்ரீகிருஷ்ணனாக தோன்றிக் கொண்டிருக்கிறேன். இந்த ஸ்ரீ கிருஷ்ண உருவத்திற்கும் காமகலாதேவியான லலிதைக்கும் யாதொரு பேதமும் இல்லை. இது சத்யம், சத்யம்" என்ற பாத்மபுராண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மதேவனின் வசநமும், மற்றும் பல புராண வசனங்களும் வாசுதேவன் என்ற மஹாவிஷ்ணு ஸாக்ஷாத் பரதேவதையின் மற்றோர் உருவமே என்பதை நிர்ணயிக்கின்றன.

கௌளோபநிஷத் பாஷ்யத்தில் "விஷ்ணு" என்ற ஸ்வரூபம் பரமசிவனின் ரகசியமான அந்தঃபுர ஸ்த்ரீயின் வெளிப்படையான உருவமே என்பதாக ஸ்ரீ பாஷ்யகாரர் விவரித்திருக்கிறார். மேலும்

"येऽर्चयन्ति परां शक्तिं विधिनाप्यविधिनापि वा।
न ते संसारिणो नूनं मुक्ता एव न संशयः॥"

(முறைப்படியோ, முறையின்றியோ பராசக்தியை எவர்கள் பூஜிக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக சம்சாரிகள் இல்லை. அவர்கள் முக்தர்களே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை). என்பதான சூக்திகளும் அம்பிகையின் பெருமையை மிகவும் பாராட்டுகின்றன. ஆகவே இந்த ஸ்ரீவித்யா ஸ்வரூபிணீயான பராசக்தியின் ஆராதனமே மற்ற தேவதைகளின் ஆராதனத்தைக் காட்டிலும் சிறந்தது என்பது சாஸ்திரங்களின் சாரம்.

தேவதோபாஸ்தி என்பது "बाह्य" வெளிப்படை, "आन्तरं" (உள் உணர்வின் மூலம் மானஸீகமாக த்யானம் அல்லது பாவனை என்ற வகையில் செய்யப்படுவது) என இரு வகை. आन्तरोपास्ति என்பதுதான் अन्तर्यागः, महायागः என்பதாக கூறுகிறார்கள். இந்த முறையானது முந்திய ஜன்மாக்களில் கர்மகாண்டத்தில் கூறப்பட்ட பலவகையான கிரியாகலாபங்களை அதனதன் பலன்களில் சிறிதும் ஆசையின்றி ஒழுங்கமாக அனுஷ்டித்து மனதிலுள்ள அழுக்காறுகள் நீங்கி चित्तैकाग्र्यं (மனத்தை ஒரே நிலையில் நிறுத்தல்) பெற்று மனத்தையடக்கிய மஹாயோகிகளுக்குத்தான் அனுஷ்டான சாத்தியமாக இருக்கிறது. முமுக்ஷுக்களான சாமனியர்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடைத்தேறும் வகையில் प्रतीकोपास्ति (உருவ வழிபாடு) என்ற ஓர் சிறந்த மார்க்கத்தையும் அதன் வழிபாடு முறைகளையும் கருணாமூர்த்தியான பகவான் ஆகம சாஸ்திரங்கள், தந்திரங்கள் மூலமாக அருள் புரிந்திருக்கிறார். இந்த ஆகமசாஸ்திரங்களின் அடிப்படையில் பலபல பெரிய க்ஷேத்திரங்களும், சிறிய க்ஷேத்திரங்களும், அந்தந்த பக்தசிரோமணிகளின் மனோபீஷ்டப்படி அநேகவிதமான தேவதாவிக்ரஹ பேதங்களும், பூஜா முறைகளும், உத்ஸவாதிகளும் ஏற்பட்டு நம் பாரத தேசம் முழுவதும் மற்றும் பல வெளிநாடுகளிலும் விஸ்தாரமாக இந்த உருவ வழிபாடு பரவியிருக்கிறது.

தாந்திரிக மார்க்கத்திலோவெனில் கர, சரணாதி அவயவங்களுடன் கூடிய (प्रतीक) உருவ வழிபாடு கூறப்படவில்லை. அதற்கு பதிலாக ஸ்வர்ணம், வெள்ளி தாம்ரம் போன்ற உலோகத்தகடுகளில் அந்தந்த தேவதைகளுக்குறிய ரேகைகள் அமைத்து மந்திராக்ஷரங்களையும் அதற்குள் எழுதி சக்ராகார யந்திரரூபமான प्रतीकं (உருவம்) அமைத்து அவற்றில் பூஜா விசேஷங்கள் செய்யப்படுகின்றன. இவ்வாறான யந்திரங்கள் ஏழு கோடி. அதன் மந்திரங்களும் ஏழு கோடிகள் என தந்திரசாஸ்திரம் கூறுகிறது. இந்த யந்திரோபாஸ்திகளுள் ஏதாவது ஒன்றில் ஈடுபடும் சாதகன் தக்க ஆசிரியரின் உதவியுடன் அதன் மந்திரங்களையும் பூஜா முறைகளையும் நன்ருய் அறிந்து அனுஷ்டித்து வருவானேயானால் படிப்படியாக மேலே சென்று உத்தம ச்ரேயஸை அடையலாம்.

"ईशानः सर्वविद्यानां" (எல்லா வித்யைகளுக்கும் ஈசுவரன்) என்று வேதமும் "अष्टादशानां एतासां विद्यानां भिन्नवर्त्मनाम्। आदिकर्ता कविः साक्षात् शूलपाणिरिति स्मृतः॥" (பற்பல மார்க்கங்களை போதிக்கும் பதினெட்டு (18) வகையான இந்த வித்யைகளுக்கும் कविः சிறந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிவுள்ளவனும், சூலத்தை கையில் ஏந்தியவனுமான பரமேச்வரனே ஆதிகர்த்தா. ஜனங்களின க்ஷேமத்திற்காக அவைகளை இயற்றியவர் என்று கூறப்படுகிறது) என்ற ஸ்மிருதிகளும் கூறுகின்றபடி ஈசனால் கூறப்பட்ட மந்திரங்களில் உயர்வு, தாழ்வு, என்பது கிடையாது என்ற சாமான்ய கொள்கை இருந்தாலும் அவைகளை உபாசிக்கும் அதிகாரிகளின் தன்மையை பொறுத்தும், அந்தந்த தேவதாவிசேஷங்களைப் பொறுத்தும் சிறிதும், பெரிதுமான (சாதாரணமானதும், சிறந்ததுமான) பல உபாசனைகள் ஆன்றோரால் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறான உபாஸ்திகளுள் ''ஸ்ரீ வித்யோபாஸ்தியே'' யாவற்றிலும் மேன்மை பெற்றது என்பதை.

1) ''अश्वमेधसहस्राणि वाजपेयशतानि च।
ललितापूजनस्यैते लक्षांशेनापि नोसमा :॥''

2) ''सप्तकोटिमहामन्त्र पारायण फलप्रदम्॥''

3) ''श्रीविद्यैव महाविद्या नायको गुरुनायकः॥''

4) ''प्रणम्य शिरसा देवीं न स पापैर्विलिप्यते॥''

1) ஆயிரக்கணக்கான அசுவமேதங்களோ, அதேபோல் அநேக ஆயிரம் வாஜபேயங்களோ லலிதா பூஜையின் லக்ஷத்தில் ஒரு பங்குக்குக் கூட சமமாகாது.

2) ஏழு கோடி மந்திரங்களின் பாராயணத்தினால் கிடைக்கும் பலன் இந்த ஸ்ரீ வித்யையினால் கிடைக்கும்.

3) ஸ்ரீவித்யைதான் மஹாவித்யை. நாயகன் என்பவர் குருவாகிய ஈசனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4) தலையால் தேவியை வணங்குபவன் பாபங்களால் அனுகப்படமாட்டான்.

என்ற பல வசனங்கள் சிறப்பாக விளக்குகின்றன. இவ்வாறு சிறந்த இந்த 'சாக்தோபாஸனா' மார்கமானது ஜாதி, மத, வர்ண, சிறியவர், பெரியவர், தாழ்ந்தவர், மேம்பட்டவர் என்ற யாதொரு வித்யாசமும் இன்றி யாவராலும் அவரவர் தகுதிக்கு தக்கவாறு.

''दुर्गापूजोपकरणं स्वल्पं वा यदि वा बहु।
स्वस्ववित्तानुसारेण पूजयित्वा सुखं लभेत्॥'' (தங்களது சக்திக்குத் தக்கவாறு துர்காபூஜை செய்து சௌகரியத்தை அடையவும்) என்ற வாக்கியத்தின் படி எளிய முறையிலும் கையாளத் தக்கதாக இருப்பதால் இந்த ஆராதன முறை மிகச் சிறந்ததாக கருதப்படுகிறது.

இம்முறையில் இரு பிரிவுகள்

''समयाचारः,'' ''कौलाचारः'' (சமயாசாரம், கௌளாசாரம்) என்பதாக.

समयाचार 'சமயாசார' முறை சிறிது கடினமானது. யோகாப்பியாசத்தால் மனதை அடக்கி ஒரே நிலையில் நின்று தியானம் செய்யும் சக்திபெற்ற யோகிகளுக்கு மட்டிலுமே சாத்தியமானதாக இருக்கிறது. இந்த சமயாசாரக் கொள்கையில் இரு வகை.

1) மஹாகாசம் முதலிய பஞ்சமஹாபூதங்களையும், சிவாதி பூமிபர்யந்தம் உள்ள சகல தத்துவங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது 'பிரம்மாண்டம்'' எனப்படுகிறது. ஜீவர்களின் தேகமே ''பிண்டாண்டம்'' எனப்படுகிறது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் என்பது பழமொழி. பிரம்மாண்டத்திலுள்ள ஸர்வ அம்சங்களும் பிண்டாண்டம் என்ற நமது தேகத்திலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூக்ஷ்மரூபமாக இருக்கின்றன. வெளியில் இருப்பது மஹாகாசம் அல்லது பாஹ்யாகாசம். அதேபோல் நமது தேகத்தில் ''ஹ்ருதயத்தில் சூக்ஷ்மமாக ஓர் ஆகாசவெளி இருக்கிறது. அதற்கு அந்தராகாசம் अन्तराकाशः அல்லது (दहर) தஹராகாசம் எனப்பெயர். ''ஹ்ருதயத்தினில் உள்ள இந்த தஹராகசம் என்ற अन्तराकाशத்தில் ஸ்ரீ சக்ரத்தின் ஸ்வரூபத்தை சகல உட்பிரிவுகளுடன் 'பாவனா' வழியில் அனுசந்தானம் செய்து வெளிப்பொருட்கள் எதையும் அபேக்ஷிக்காமல் அந்தர்முகனாக இருந்து மானசீகமாகவே சகல பூஜைகளையும் செய்து வருவது சமயாசார முறை'' என ஒரு பிரிவினரின் அபிப்ராயம்.

2) மற்றோர் பிரிவினர் கூறுவதாவது. நமது சரீரத்தில் உள்ள முதுகு எலும்பு என்ற மேருதண்டத்தில் ''சூஷும்னா'' सुषुम्ना என்ற நாடி அடியிலிருந்து உச்சிவரை செல்கிறது. அந்த நாடியில் 'மூலாதாரம்'' முதலான ஆறு சக்ரங்கள் இருக்கின்றன. இரண்டு இரண்டு இரண்டு சக்ரங்களை அடுத்து ब्रह्म, विष्णु, रुद्र (பிரம்மா, விஷ்ணு, ருத்ர) என்ற மூன்று ग्रन्थिகள் (முடிச்சுகள்) அந்த சுஷும்னையில் இருக்கின்றன. அதற்குமேல் ''ஸஹஸ்ராரம்'' என்ற பத்மம் இருக்கிறது. 'குண்டலினீ' என்ற நமது பிராணசக்தியான பரதேவதையே ஸர்ப்பத்தின் (பாம்பின்) உருவத்தில் மூலாதாரம் என்ற முதல் சக்ரமான பத்மத்தின் நான்கு தளங்களுக்கு மத்தியிலுள்ள கர்ணிகைக்குள் தன் முகத்தை மறைத்துக் கொண்டு தனது சர்ப்பாகாரமான தேகத்தை (3 1/2) மூன்றரை வளையங்களாக வளைத்துக் கொண்டு சதாசர்வகாலமும் தூங்கிக் கொண்டிருக்கிறாள். உபாஸகன் ப்ராணயாம ரூபத்தில் கும்பகத்தில் நிறுத்தும் ச்வாஸ பந்தத்தின் உஷ்ணத்தாலோ அல்லது யோகிகள் செய்யும் யோகப்பயிற்சியாலோ அல்லது சாக்த ஸம்ப்ரதாயமான பாவனா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

('भावना') என்ற முறையினாலோ நமது சரீரத்தில் மிகுதியான உஷ்ணம் ஏற்பட்டு அந்தச்சூடு மூலாதாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினீ சக்தியை பலமாகத்தாக்க அந்த உஷ்ணம் தாங்காமல் மூலாதார பத்மத்திலிருந்து கிளம்பி சுஷும்னா நாடிமூலம் மேலே வந்து அடுத்து ஸ்வாதிஷ்டான சக்ரத்தைத் தாண்டி அதை ஒட்டிய ப்ரம்மக்கிரந்தியையும் பேதித்து (பிளந்து) அதற்கு மேலுள்ள மணிபூரகம் என்ற பத்ம சக்ரத்தில் வந்து அமர்கிருள். இந்த குண்டலினீ என்ற பிராணசக்திதான் பரதேவதை. அந்த மணிபூரம் என்ற சக்ரத்தில் இந்த குண்டலினீ என்ற தேவதை உபாசகனுக்கு ப்ரத்யக்ஷமாகிருள். அப்பொழுது அம்பாளுக்கு மணிகளாலும், ரத்னங்களாலும் மற்றும் பற்பல ஆபரணங்களாலும் அலங்காரம் செய்வித்து அந்த இடத்தில் அம்பிகையை ப்ரத்யக்ஷமாக அனுபவித்துக் கொண்டிருப்பதே சமயவிதானத்தின் முக்கிய பலன் என்று கருதுபவர்கள் ஒர சாரார்.

இவ்விருவகையினரும் அந்தராகாசத்தில் தியானம் அல்லது பாவனா முறையில் பூஜை செய்து வருகிருர்கள். இவர்கள் ஆந்தரமான ஆகாசத்தில் பூஜை செய்வதால் ஸ்ரீசக்ரம் "वियचक्रं" ஆகாச சக்ரம் என்று குறிப்பிடப்படுகிறது. வெளிப்பொருட்களின் சம்பந்தம் சிறிதும் இன்றி உள்ளுணர்வுகளுடன் மட்டிலுமே செய்யப்படும் இவ்விரு பூஜை முறைகளுக்கும் 'சமயாசாரம்' அல்லது சமயமதம் என்று பெயர். समय: என்ற பதத்திற்கே "கொள்கை" என அர்த்தம். அப்பதத்தாலேயே அவர்களது ஆசாரம் குறிப்பிடப்படுகிறது.

அடுத்து கௌளமதம் பற்றி சில விபரங்கள்.

"கௌளம்" குலத்தைச் சார்ந்தது கௌளம் எனப்பொருள். 'குலம்' என்ற சம்ஸ்க்ருத பதத்திற்கு ஒரே இனத்தைச் சார்ந்த பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள்களின் கூட்டம் என அர்த்தம். உதாரணமாக ज्ञानं, ज्ञाता, ज्ञेयं இது ஒரு குலம். அதேபோல் मानं माता, मेयं; माता, पिता, पुत्रः; गुरुः, शिष्यः, मन्त्रः இவைகள் தனித்தனி குலங்கள். இவ்வாறான கூட்டத்தில் எந்த ஒரு பொருள் இல்லையென்றாலும் மற்றவைகளும் இல்லையென ஆகிறது. அறிவு, அறியப்படும் பொருள், அறிபவன் இவைகள் ஒவ்வொன்றும் மற்றவைகளை சார்ந்தே இருக்கின்றன. அதேபோல் குரு, சிஷ்யன், மந்திரம், இவற்றுள் எந்த ஒன்று இல்லையென்றாலும் மற்றவை இல்லை என்பது அனுபவம். இம்மாதிரியான கூட்டத்திற்கு குலம் என்று பெயர்.

பிரகாச, விமர்சங்களின் ஐக்யத்தில் இருக்கும் சர்வேச்வரன் தனது பிரகாச அம்சத்தால் குருவாகவும் விமர்ச அம்சத்தால் தேவீரூபத்தில் சிஷ்யனாகவும் உருவெடுத்து தந்திர சாஸ்திரத்தை தேவிக்கு உபதேசித்தார். (गुरुशिष्यपदे स्थित्वा तन्त्रं समवतारयत्) என்று கூறுகின்றபடி குரு என்ற ஈசன், சிஷ்யை என்ற தேவீ, தந்திரம் என்ற மந்திரம் இந்த மூன்றும் ஒரு குலமாகிறது. இந்த குலமுறையைக் கையாண்டதால் ஈசுவரனுக்கு कौलः, कुलपातिः என்ற பெயர் ஏற்பட்டது. शं नः कौलिकः என்ற உபநிஷத் ஈசனை कौलिकः என்று குறிப்பிடுகிறது. குலபதியான ஈசுவரனால் வெளியிடப் பட்டிருப்பதால் இந்த மார்கத்திற்கு कौलमार्गः (கௌள மார்க்கம்), कौलमतं (கௌளமதம்) என்ற பெயர். மற்றும் பற்பல காரணங்க ளாலும் कौलं என்ற பெயர் ஏற்பட்டிருப்பதாக ஸஹஸ்ர நாம பாஷ்யத்தில் பாஷ்யகாரர் விஸ்தரிக்கிறார்.

இக்கௌளாசாரத்தில் बाह्यं, (வெளிப்படை) आन्तरं (உள்ளுணர்வுடன் செய்யப்படுவது) என்று இருவகை.

பாஹ்யம் என்பதாவது: பிரம்மாண்டத்தில் அடங்கிய மஹாகாசத்தில் சாதகன் இருந்து கொண்டு ஸ்வர்ணம், வெள்ளி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாம்ரம், என்ற வெளிப்பொருட்களால் செய்யப்பட்ட ஸ்ரீசக்ரம் என்ற (प्रतीक) உருவத்தில் வெளிப்பொருட்கள் மூலம் உபாசிப்பது பாஹ்யம் எனப்படுகிறது. மனப்பக்குவம் ஏற்படாதவர்கள் आन्तर பூஜை செய்வது கடினமாக இருப்பதால் சாதாரண மக்களை அனுக்ரஹிக்கும் நோக்கத்தில் தந்திர சாஸ்திரங்களில் விஸ்தாரமாக ஈசனும், அதை அனுசரித்து பத்ததி, நிபந்தக்கிரந்தங்களில் உபாஸகச்ரேஷ்டர்களும் பாஹ்ய பூஜையை விஸ்தாரமாக கூறி யிருக்கிறார்கள்.

இவ்வாறான ப்ரதீகோபாஸ்தியில் திருடச்சித்தனாக இருந்து பல நாட்கள் பூஜை செய்து வருபவன் காலக்கிரமத்தில் चित्तैकाग्र (மனதின் ஒரு நிலை)த்தை அடைந்து பாஹ்ய வஸ்துக்களின் சம்பந்தம் இன்றியே சமயாசாரத்தில் கூறப்பட்டிருப்பது போல் ஆந்தரமான ஹ்ருதயாகாசத்தில் ஸ்ரீசக்ரபாவனை செய்து அவற்றில் அம்பிகையை அர்ச்சித்து வருபவன் உரிய ச்ரேயஸை அடைகிறான் என்பது கௌளமதக் கொள்கை.

சான்றோர், சாமானியர் என்ற பேதமின்றி யாவர்க்கும் பொருத்தமாக இருப்பதால் இந்த கௌளமதம் மிகச்சிறந்தது என்ற அடிப்படையில் இந்திராதி தேவர்களும், துர்வாசர் முதலிய சிறந்த மகரிஷிகளும் இக்கௌள ஆசாரத்தையே கைக்கொண்டிருக்கிறார்கள்.

மற்றும் சிஷ்யபரம்பரை மூலமாகவும் பரப்பி வந்திருக்கிறார்கள். அதிகம் கூறுவானேன் - ஸ்ரீ பார்வதி பரமேச்வரர் இவர்கள் கூட இக்கௌள மத முறைப்படி பரஸ்பரம் பூஜை செய்து வருகிறார்கள் என்று தந்திரங்கள் முறையிடுகின்றன. சர்வத்திற்கும் ஆதிகாரணனான பரமேசுவரனே இக்கௌளாசாரத்திற்கு प्रवर्तकाचार्य முதல் ஆசிரியனாக இருந்து அனுக்ரஹித்திருக்கிறான். कौलात् परतरं

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

नास्ति (கௌளத்தைக் காட்டிலும் சிறந்தது இல்லை) என்ற சூக்தியும் மேலும் பலபல சூக்திகளும், அநேக இடங்களில் விரிவாக விளக்குகின்றன.

இக்கௌள மார்கத்தில் वाम (வாம), दक्षिण தக்ஷிண் என இருபிரிவுகள் அனுஷ்டானத்தில் இருக்கின்றன.

1) வாமமார்கமாவது:- சிஷ்டர்களான வைதிகோத்தமர்களால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் अग्निहोत्रादि, औपासनादि ச்ரௌத, ஸ்மார்த்த கிரியைகள் யாவற்றிலும் சுருதி முதலியவைகளில் கூறப்பட்ட ச்ரௌத, ஸ்மார்த்த தேவதைகளை அங்கதேவதைகளாக குறிபபிட்டு, தனது உபாஸ்யமான தேவதையை பிரதானமாகக் கொண்டு ஹோமம், உத்தேச்யத்யாகாதிகள் செய்யப்பட வேண்டும் என்ற நிர்பந்தம் இம்மார்கத்தில் இருக்கிறது. உதாரணமாக अग्नये स्वाहा என்பதற்குப் பதிலாக अग्निस्वरूपिण्यै ललितायै नमः स्वाहा என்று ஹோமம் செய்து अग्निस्वरूपिण्यै ललितायै इदं न मम என்று உத்தேச்யத்யாகமும் செய்ய வேண்டும் என்பதாக.

இம்மாதிரியான அனுஷ்டானத்தில் வேதோக்த ச்ரௌளத, ஸ்மார்த்த தேவதைகளுக்கு பூர்ணஹவிர்பாகம் கிடைக்க மார்க்கமில்லை என்பதால், தேவ, ரிஷி, பித்ரு கடன்களிலிருந்து விடுபட்டு சுத்தனாக ஆவது சாத்தியமில்லையாதலால் 'முக்தி' என்ற சிறந்த ஸ்தானம் கிடைப்பது மிகவும் தாமதமாகும். லௌகிகமான, ஐஹிக சுக போகங்களில் அதிகப்பற்றுதல் கொண்டு இந்த வாம மார்கத்தில் சிலர் ஈடுபடுகிறார்கள்.

ஐஹிக போகத்தில் அபேக்ஷை இல்லாத மகனீயர்களான வைதிக ச்ரேஷ்டர்கள் ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களை அந்தந்த விதிகளில் கூறப்பட்ட அந்தந்த தேவதைகளுக்கே, உபாஸ்ய தேவதையின் சம்பந்தம் சிறிதும் இன்றி சாக்ஷாத்தாகவே ஹவிர்தானமும் உத்தேச்ய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்யாகமும் செய்தும், அதன்பிறகு பிரத்யேகமாக தனது ஆராத்ய தேவதையை உபாசித்தும் வருகிறார்கள். இவர்கள் விஷயத்தில் தேவ, ரிஷி, பித்ரு 'கடன்கள் உடனுக்குடன் தீர்த்து விடுவதால் முக்தி என்ற சாம்ராஜ்யத்தை அடைய தடைகள் யாதும் இல்லை. சீக்கிரத்திலேயே உச்சஸ்தானங்களை அடைகிறார்கள்

இந்த சாக்த மார்க்கத்தில் 'சமய' மதத்தைக் காட்டிலும் 'கௌளமதம்' சிறந்தது என்றும் கௌளமதத்தின் பிரிவுகளான வாம, தக்ஷிண மார்க்கங்களுக்குள் தக்ஷிணமே மிகவும் சிறந்தது என்பதாகவும் பல வசனங்கள் இருக்கின்றன.

''यस्य नो पश्चिमं जन्म यादि वा शंकरः स्वयम् ।
तेनैव लभ्यते विद्या श्रीमत्पञ्चदशाक्षरी ॥''

எவனுக்கு மறுஜன்மம் இல்லையோ அல்லது எவன் தானேசங்கரனாக (ஈசனாக) ஆகிறானோ அவனுக்குத்தான் ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ என்ற மந்திரம் கிடைக்குமென்றும்.

''शैववैष्णवदौर्गार्क गाणपत्येन्दुसंभवैः ।
मन्त्रैः विशुद्धचित्तस्य कौलज्ञानं प्रकाशते ॥''

முந்திய பற்பல ஜன்மாக்களில் அனுஷ்டிக்கப்பட்ட சைவம், வைணவம், தௌர்க்கம் என்ற சாக்தம், சௌரம் (சூர்ய உபாஸ்தி), காணபத்யம், இந்து சம்பவம் (ஜைனம்) மற்றும் பல மந்திரங்களால் சித்தசுத்தி பெற்ற உபாஸகனுக்குத்தான் கௌளம் என்ற இந்த ஸ்ரீவித்யை கிடைக்கும் என்று இக்கௌளமார்க்கம் வெகுவாக புகழப்படுகிறது.

வேதாதி பிரமாண கிரந்தங்களில் சில இடங்களில் வ்யக்தமாகவும், பலபல இடங்களில் சூக்ஷ்மமாகவும் சிறந்ததாகக், கூறப்பட்டிருக்கும் இந்த சாக்த - கௌளமார்கத்தை தங்களது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறியாமை காரணமாக சில வைதிகாபிமானிகள், அவைதிகமான பாஹ்யதிரவியங்களின் சம்பந்தம் இதில் இருப்பதால் இம்மார்க்கம் கைக்கொள்ளத்தக்கதில்லை என்றும், அவைதிகமான மார்க்கம் என்று நிந்தித்து பிரசாரம் செய்தும் வந்திருக்கிறார்கள். இதனால் பலருக்கு இதில் அவநம்பிக்கையும் த்வேஷமும் ஏற்பட்டு காலக்ரமத்தில் பல இடங்களில் அதிலும் முக்யமாக தென்நாட்டில் மிகவும் க்ஷீணதசையை அடைந்துவிட்டது. அபூர்வமாக ஓர் இரு உபாஸகர்கள் பயந்து நடுங்கி ஒளிமறைவாக ஏதோ ஒருவாறு சிறிது அனுஷ்டானம் செய்து வந்திருக்கிறார்கள்.

தர்மத்திற்கு துஷ்டர்களாலோ, துர்மதத்தினர்களாலோ அபாயம் ஏற்பட்டு அதர்மம் தலைதூக்கும் நேரங்களில் சஸ்திரபாணியாகவும், சாஸ்திரபாணியாகவும் அவதரித்து காப்பாற்றுகிறேன் என கீதையில்

"यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥"

'தர்மம் இளைத்து அதர்மம் பருத்து வளரும் சமயங்களில் என்னை உசிதப்படி சிருஷ்டித்துக்கொண்டு தர்மத்தைக் காப்பாற்றுகிறேன்' என பகவானும்

"इत्थं यदा यदा बाधा दानवोत्था भविष्यति ।
तदा तदावतीर्याहं करिष्याम्यरिसंक्षयम् ॥"

(அசுரர்கள் மூலம் எவ்வப்போது தீங்குகள் ஏற்படுகின்றனவோ, அந்தந்த சமயங்களில் நான் அவதரித்து சத்ருக்களை நாசம் செய்கிறேன்) என்று சப்தசதீயில் ஸ்ரீதேவியும் வாக்குறுதி செய்திருக்கின்றபடி ஆயுதங்களை கையில் ஏந்தி ராமகிருஷ்ணாதி அவதாரங்களால் துஷ்டநிக்ரஹம் செய்தும்,

பௌத்தர்களின் மதத்தையும் அவர்களது ,, சந்நியாஸத்தையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டிப்பதற்காக சுத்த கர்மடர்களான வைதிகச்ரேஷ்டர்கள் சிலர் கர்மாக்களை சிறப்பிக்க வேண்டி நமது ஆசிரம தர்மங்கள் யாவற்றிலும் சிறந்த "सन्यास एषां तपसां अतिरिक्तमाहुः", "सन्यासयोगात् यतयः शुद्धसत्वाः", "सन्यासो हि परो धर्मः", என்று வர்ணிக்கப்பெற்ற வைதிக ஸந்நியாஸத்தையும் திரஸ்கரித்து சுத்த கர்மமார்க்கத்தை ஸ்தாபித்த நிலையில் இந்த நாலாவது ஆசிரம முறையே அடியோடு நசித்துப் போகும் நிலையில் த்வைதிகள், சார்வாகர்கள் முதலான நாஸ்திகர் வ்யாபகமாகி ஆஸ்திக வைதிகமதம் நசித்துக் கொண்டிருக்கும் தருவாயில் சாக்ஷாத் சங்கரனே சாஸ்திரபாணியாக ஆதிசங்ரராக அவதரித்து முக்யமாய் சந்நியாஸ தர்மத்தையும், வைதிக ஸம்ப்ரதாயங்களையும் காப்பாற்றி அனுக்ரஹம் செய்ததற்கு ஒப்பாக, சும்ப, நிசும்பாதி அசுரர்களை நிக்ரஹம் செய்வதற்காக சாக்ஷாத் பரதேவதையே சஸ்திரபாணியாக பல ரூபங்களில் அவதாரம் செய்து அசுரர்களை நாசம் செய்து உலகிற்கு க்ஷேமத்தை செய்வித்தும், தாந்திரிக மார்கத்தில் சிறப்பாக விளங்கும் இந்த ஸ்ரீவித்யா ஸம்ப்ரதாயத்துக்கு மிகுந்த அபாயம் நேரிட்ட கடுமையான காலத்தில் அதே அம்பிகையே சாஸ்திர பாணியாக "एवं युवतयः सद्यः पुरुषत्वं प्रपेदिरे" என்ற வழக்கப்படி புருஷ வடிவில் ஸ்ரீ பாஸ்கரராயமகி என்ற ஸ்வரூபத்தில் அவதாரம் செய்து ஆஸேது ஹிமாசலம் சென்று ஆங்காங்குள்ள சாக்தமத எதிரிகளை சாஸ்திர பிரமாணங்கள் பூர்வமாக வென்று இவ்வுயர்ந்த மார்கத்தை பரவச்செய்து தகுந்த இடைவிடாத சிஷ்ய ஸம்பிரதாயம் மூலமாக இன்று வரையும், உபரி உள்ள வருங்காலங்களிலும் இந்த ஸ்ரீ வித்யா முறை பிரகாசித்துக் கொண்டிருக்கும்படி நம் யாவர்க்கும் உபகாரம் செய்து தந்திருக்கும் இவரது பெருமையை யாவரால்தான் வர்ணிக்க முடியும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்த வைதிக குடும்பத்தில் ஜனித்து அதிபால்யத்திலேயே வேதாத்யயந, சாஸ்திராப்பியாசங்கள் பெற்று உசிதமான காலத்தில் கிரஹஸ்த தர்மத்தை கைக்கொண்டு வைதிக தர்மங்களான பஞ்ச மஹாயக்ஞங்கள், सप्तपाकसंस्था, सप्तसोमसंस्था, सप्तहविःसंस्था என்ற சகல ச்ரௌத, ஸ்மார்த்த தர்மங்களை விதிப்படிச் செய்து "ஸ்ரீ ந்ருஸிம்ஹகுரு" என்ற ஓர் சிறந்த ஆசிரியனிடம் அஷ்டாதச (18) மஹாவித்யைகளையும் பயின்று ஸ்ரீ சிவதத்த சுக்ல சரணர் என்ற மஹனீயரிடம் பூர்ணாபிஷேகம் பெற்று சகலதந்திர சாஸ்திரங்களையும், சாக்த கிரமங்களையும் கற்றறிந்து ஸ்ரீ சக்ராராதனம் செய்து வந்தும், பின்வரும் சிஷ்யர்களின் நன்மைக்காக அநேக வைதிகதர்ம கிரந்தங்களும், உபாஸனைக்கு வேண்டிய சாக்தமத கிரந்தங்களும், பூஜாபத்ததிகளும் விஸ்தாரமாக எழுதி லோகோபகாரம் செய்திருக்கிறார்.

"गङ्गा पुष्कर, नर्मदा, सुयमुना, गोदावरी, गोमती,
गङ्गाद्वार, गया प्रयाग, बादरी वाराणसी सिन्धुषु ।
रेवा सेतु सरस्वती प्रभृतिषु ब्राह्मण्ड भाण्डोदरे
तीर्थस्नान सहस्रकोटिफलदं श्रीचक्रपादोदकम् ॥"

பாரதத்திலுள்ள ஸமஸ்த தீர்த்தங்களிலும் தனித்தனியாக ஆயிரம்கோடி ஸ்நாநம் செய்த பலன் ஒரு தடவை ஸ்ரீ சக்ராபூஜா தீர்த்தத்தின் புரோக்ஷணத்தினாலும் பானத்தினாலும் கிடைக்கிறது' என்று சிறப்பாக கூறப்படும் இந்த ஸ்ரீ சக்ராராதனத்துக்கு அடிப்படையாக உள்ள ஸ்ரீ வித்யா (श्रीवीद्या) மந்திரமானது दशभेदविभेदितः பத்து வகையான பேதங்களை உடையதாக இருக்கிறது. அவைகளுள்.

"तेषु द्वौ मनुराजौ तु वरिष्ठौ विन्ध्यमर्दिनि । लोपामुद्रा कामराजौ इति ख्यातिं उपागतौ ॥ हादिस्तु लोपामुद्राख्या कामराजस्तु कादिकः ॥"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லோபமுத்ரை, காமராஜ என்ற இரு மந்திரங்கள் யாவற்றிலும் சிறந்தது. ह (ஹ) என்ற அக்ஷரத்தில் தொடங்குவது லோபாமுத்ரை. क (க) என்ற அக்ஷரத்தில் ஆரம்பிப்பது காமராஜம் என்றும், இவ்விரண்டினுள்.

"तयोस्तु कामराजोऽयं सिद्धिदः भक्तिशालिनाम्" என்று காமராஜ வித்யையானது பக்திமான்களுக்கு சித்தியைத் தரவல்லது என்று காமராஜ வித்யையின் உயர்வு விளக்கப்படுகிறது. லலிதா ஸஹஸ்ர நாமத்திலும் "श्रीविद्यैव तु मन्त्राणं तत्र कादिः यथा परा" என்று காதிவித்யை சிறப்பிக்கப்படுகிறது.

"मनुः चन्द्रः कुबेरश्च लोपामुद्रा च मन्मथः। अगस्त्यः नन्दिकेशश्च सूर्यो विष्णुश्च षण्मुखः ॥ शिवो दुर्वाससाश्चैव द्वादशैते उपासकाः।" என்ற 12 உபாகசர்கள் பத்துவித பேதங்கள் கொண்ட இந்த வித்யையை உபாசித்து வருகிறார்கள். "विद्याद्वयं इदं भद्रे देवानामपि दुर्लभम्" என்ற மகிமை வாய்ந்த காமராஜ, லோபாமுத்ரா என்ற இரு வித்யைகளும் இனி விவரிக்கப் போகின்ற உபநிஷத்தில் உத்தாரம் செய்யப்படுகின்றன.

ரிக் வேதத்தைச் சார்ந்த बह्वृच शाखाः பஹ்ருவிருச சாகா என்ற வேதபாகத்தில் आरण्यकं என்ற பகுதியின் மத்தியில் 16 ரிக் மந்திரங்களால் ஸ்ரீ சக்ரத்தின் உற்பத்தி, அதன் ஸ்வரூபம், அதன் தேவதா விசேஷங்கள், ஸ்ரீ சக்ரத்தின் விஸ்தரிப்பு, ஸ்ரீ வித்யா மந்திரோத்தாரம், பூஜை செய்ய வேண்டிய முறை, அதற்கு உரிய திரவியங்கள், ப்ரஸாதஸ்வீகாரத்தின் விசேஷமுறை, பாஹ்யமான காமகலா ஸ்வரூபம், அதன் தியான முறை, பூஜாதிரவியத்தில் நப்பாசையால் ஈடுபடுபவனுக்கு உரிய தண்டனை, உபாஸகனுக்குறிய சிறந்த ஸாம்ராஜ்யம், சிவசக்திகளுக்குள் பரஸ்பரம் ஸாம்யம் என்றாலும் பக்தர்களுக்கு பலன் தரும் விஷயத்தில் சக்திக்கு தனியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓர் சிறப்புஸ்தானம், கடைசியில ஆन्तर பூஜையின் சிறப்பு, சிவசாயுஜ்யம், பலச்ருதி இவைகள் கூறப்பட்டு 'ॐ' என்ற யஜுர் மந்திரத்தால் இவ்வுபநிஷத் முடிவுபெறுவதால் சந்நியாஸிகளும் இதைப்பாராயணம் செய்யலாம் என்ற சூசனையுடன் இவ்வுபநிஷத் முடிவு பெறுகிறது.

தந்திரசாஸ்திரங்கள் யாவற்றுக்கும் முக்கிய ஆதாரப்பிரமாணமாக விளங்கும் இவ்வேதபாக உபநிஷத் மற்ற சாக்த உபநிஷத்துக்களைக் காட்டிலும் அமைப்பாலும், உள்ளடக்கிய சிறந்த நுட்பமான விஷயங்களாலும், வேதபாகத்தின் மத்தியில் अनारभ्याधीत மாக இருப்பதாலும் மிகச்சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஸர்வதந்திர ஸ்வதந்த்ரரும், ஸர்வசாஸ்திர பிரவீணரும், அக்னி ஹோத்ரம் முதல், அப்தோர்யாமம் வரை உள்ள ஸர்வக்ரதுக்களையும் அனுஷ்டித்த வைதிகச்ரேஷ்டரும் சாக்தோபாஸனையில் உலகில் சிறந்தவரும், நித்யாஷோடசிகார்ணவம் என்ற தந்திர சாஸ்திரத்திற்கு 'சேதுபந்தம்' என்ற சிறந்த வ்யாக்யானம் எழுதியவரும், லலிதா ஸஹஸ்ரநாமபாஷ்யம் இயற்றியவரும், वरिवस्यारहस्यं (வரிவஸ்யார-ஹஸ்யம்) என்ற சுதந்திர க்ரந்தம் யாவரும் அதிசயிக்கத்தக்க வகையில் அமைத்துத்தந்தவரும், (சேதுபந்தம், ஸஹஸ்ரநாம பாஷ்யம், வரிவஸ்யா ரஹஸ்யம் இம்மூன்றுக்கும் சாக்த ப்ரஸ்தான த்ரயம் என்ற பெயர் உண்டு) त्रिपुरोपनिषत्, कौलोपनिषत्, भावनोपनिषत् என்ற வேதபாகங்களுக்கு விரிவுரை தந்திருப்பவருமான ஸ்ரீதேவியின் அபிந்நஸ்வரூபமான ஸ்ரீ ஸ்ரீ பாஸ்கரராய மகி என்ற ஆசார்ய புருஷோத்தமன் இந்த த்ரிபுரோபநிஷத்திற்கு வெகு விமரிசையாக பாஷ்யம் அருளியிருக்கிறார். அதில் தந்திர சாஸ்திரங்களின் அதிநுட்பமான விஷயங்களை சாக்தசிஷ்ய பரம்பரையை அனுக்ரஹிக்கும் நோக்கத்துடன் சிறப்பான சாஸ்திர வ்யாக்யான பத்ததியில் ஆங்காங்கு வேண்டிய மீமாம்சா ந்யாயங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தையாண்டும், பூர்வபக்ஷ, சித்தாந்த வழிமுறையில் தர்க்க ப்ரமாணங்களுடன் விமர்சன பூர்வமாக உபநிஷத்தின் சாராம்சங்களை விசதமாக விளக்கி' சாக்தோபாஸர்களுக்கு மகத்தான உபகாரம் செய்து, தந்திருக்கிறார்.

ஸம்ஸ்க்ருத பாஷா பரிசயம் இல்லாத உபாஸகர்களும் இவ்வுபநிஷத்திலும், அதன் பாஷ்யத்திலும் கூறப்பட்ட நுட்பமான சாஸ்திர சித்தாந்தங்களை அறிந்து அனுஷ்டானம் செய்து வரவேண்டிய சௌகரியத்திற்காக இந்த பாஷ்யத்திற்கு தமிழில் உரை ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. சொந்த ஆசயங்கள் (அபிப்ராயங்கள்) சிறிதளவும் கலப்பின்றி தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு ஸ்ரீ பாஷ்யகாரரின் அபிப்ராயம் அப்படியே கூறப்பட்டிருக்கிறது. இந்த உயர்வான ஸ்ரீ வித்யா ஆசாரத்தில் பக்தியும், ஈடுபாடும் கொண்ட சாக்தோபாஸகர்கள் யாவரும் இந்த உபநிஷத்தையும், அதன் பாஷ்யத்தையும் தமிழ் உரையுடன் படித்து அறிந்து அதன்படி அம்பிகாராதனம் செய்து ஸர்வச்ரேயஸையம் அடைய வேண்டுமென்று அம்பிகாபதியின் பிரார்த்தனையுடன் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

क्रियते नारायणस्मृतिः
इत्थम्
सामान्योपासकः कश्चित् यतिवरः

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

॥ श्री त्रिपुरोपनिषत् ॥

"श्री भास्कररायमखि विरचित भाष्येण समलङ्कृता"

॥ ஸ்ரீ த்ரிபுரோபநிஷத் ॥

ஸ்ரீ பாஸ்கரராய யஜ்வாவினால் இயற்றப்பட்ட
ஸ்ரீ த்ரிபுரோபநிஷத் பாஷ்யம்
தமிழ் உரையுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

|| श्रीः ||

ஸ்ரீ பாஸ்கரராய யஜ்வாவினுல் இயற்றப்பட்ட தமிழ் உரையுடன்

"SRI TRIPUROPANISHAT"

'Commentary in Sanskrit by

Sri Bhaskararaya

with Tamil Translation of the Commentary

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्रीः

''श्री त्रिपुरोपनिषदः शान्तिपाठः''

शिष्यप्रार्थनारूपः ॥

॥ श्री भास्करराय मखिविरचित भाष्यसमेतः ॥

ஸ்ரீ த்ரிபுரோபநிஷத்திற்குரிய சிஷ்யர்களின் பிரார்த்தனை வடிவமான சாந்தி மந்திர பாடங்கள்

ஸ்ரீ பாஸ்கரராய மகீ என்பவரின் பாஷ்யத்துடன் கூடியது.

(தமிழ் உரையுடன்)

उप. ''ओम्'' वाङ्मे मनसि प्रतिष्ठिता ।
मनो मे वाचि प्रतिष्ठितम् ॥

भा. तत्वविद्याप्रतिपादकग्रन्थपाठे प्रवृत्ता मे वाक् सर्वदा मनसि प्रतिष्ठिता । मनो विवक्षितशब्दजातप्रतिपादिका इति यावत् । मनश्च मदीयं वाचि प्रतिष्ठितम् । आत्मविद्याप्रतिपादकमेव शब्दजातं मनसा विवक्ष्यते । अन्योन्यानुगृहीते हि वाङ्मनसी विद्यार्थग्रन्थं साकल्येन अवधारयितुं शक्नुतः । मनसः सावधानत्वाभावे यत्किंचित् असङ्गतं ब्रूयात् । तथा वाचः पाटवाभावे विवक्षितं न यथावत् उच्चार्येत । अतः तयोः परस्परानुकूल्यप्रार्थना क्रियते इति भावः ॥

ஆத்ம தத்வ ஸ்வரூபங்களை விளக்கும் உபநிஷத் நூல்களின் அப்பியாசத்தில் ஈடுபடும் ''வாக்'' என்ற எனது இந்திரியம் ''மனஸ்'' என்ற இந்திரியத்துடன் நிலைத்து நிற்கட்டும். (மனது நினைக்கின்ற சிறந்த சொற்களையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியிடும் சக்திபெற்றதாக ஆகட்டும் என்பது கருத்து). எனது மனதும் "வாக்" என்ற இந்திரியத்துடனேயே ஒன்றி நிலைத்து நிற்கட்டும். (ஆத்மதத்துவங்களை சிறப்பாக விளக்கும் நற்சொற்களையே எனது மனதும் சிந்தனை செய்யட்டும் என்பது கருத்து). வாக்கும், மனதும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டால் தான் ஆத்மதத்வ சிரந்தங்களிலுள்ள நுட்பமான விஷயங்கள் யாவற்றையும் சந்தேகமற அறிந்து கொள்வது சாத்தியமாகும். அவ்வாறின்றி மனதும் வாக்கும் ஒற்றுமையற்று இருக்குமானால் "மனம்" சிந்திக்கும் நற்சொற்களை "வாக்" என்ற இந்திரியம் சரியாக எடுத்துக்கூறுமல் பொருத்தமற்ற சொற்களை வெளியிடக் கூடும். மனதும் வாக்கினால் வெளியிடக்கூடாததும், பொறுத்தமற்ற விஷயங்களையும், வேண்டாத சொற்களையுமே சிந்திக்கக்கூடும். ஆதலால் சிறந்த தத்துவங்களையும், அதை செம்மையாக விளக்கும் நற்சொற்களையுமே மனது சிந்திக்கவும், அவ்வாறு சிந்தனைசெய்யப்பட்ட நற்சொற்களையே "வாக்" இந்திரியம் வெளியிடவும் "வாக்" "மனம்" என்ற இரு இந்திரியங்களின் ஒற்றுமை பிரார்த்திக்கப்படுகிறது.

उप. "आविरावीर्म एधि"

भा. आविश्शब्देन स्वप्रकाशं ब्रह्मचैतन्यं उच्यते । हे परमात्मन्! मे आविः- एधि । अविद्यावरणापनयनेन मे प्रकटीभव इत्यर्थः ।

ஆவி: என்ற சம்போதனச்சொல் ஸ்வப்ரகாசபிரம்ம சைதன்யத்தை குறிக்கிறது. हे आविः- சப்தாத்மகமான உபநிஷத் என்ற வேதவடிவத்தில் பிரகாசிக்கின்ற ஹே பரமாத்ம ஸ்வரூபமே! मे आविः एधि- (என்னிடம் உள்ள அவித்யை என்ற திரையை விலக்கி) என்முன் பிரத்தியக்ஷமாக தோன்றுவாயாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. ''वेदस्य म आणी स्थः''

भा. हे वाङ्मनसी तत्त्वविद्याप्रतिपादकग्रन्थस्य, मे- मदर्थं, आणी स्थः- आनयनसमर्थे भवतं इत्यर्थः ।

வாக்கு, மனம் என்ற ஹே இரு இந்திரியங்களே! எனது நலம் கருதி வேதக்கிரந்தங்களை என்னிடம் கொண்டுசேர்ப்பிக்கும் சக்தியை நீங்கள் பெறுவீர்களாக.

उप. ''श्रुतं मे मा प्रहासीः''

भा. हे श्रोत्रेन्द्रिय! मदर्थं त्वया श्रुतं ग्रन्थजातं मा प्रहासीः-मा विस्मर इत्यर्थः ।

ஹே சுரோத்திரேந்திரியமே ! என் பொருட்டு நீ கேட்டு அறிந்த வேதக்கிரந்தங்களை சிறிதும் மறக்காமல் காப்பாற்றித்தருவாயாக. (இவ்வாறு ''மனம்'' ''வாக்'' ''சுரோத்ரம்'' என்ற இந்திரியங்கள் பிரார்த்திக்கப் படுகின்றன).

उप. ''अनेन अधीतेन''। ''अहोरात्रान् संदधामि''। ''ऋतं वदिष्यामि'' । ''सत्यं वदिष्यामि'' ।

भा. अनेन अधीतेन उपनिषद्ग्रन्थेन विस्मरणरहितेन अहोरात्रान् संयोजयामि । अहनि रात्रौ च आलस्यं परित्यज्य निरन्तरं पठामि इत्यर्थः । पठिते च ग्रन्थे ऋतं- परमार्थभूतं वस्तु, वदिष्यामि ।-विपरीतार्थवदनं कदाचिदपि मा भूत् इत्यर्थः । ऋतं-मानसं, सत्यं-वाचिकं । मनसा वस्तुतत्वं विचार्य वाचा वदिष्यामि इत्यर्थः ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பியசிக்கப்பட்ட இந்த உபநிஷத் கிரந்தத்துடன் இரவு, பகல் இரண்டையும் சிறிதும் இடைவெளியின்றி ஒன்ருக பிணைந்து வைக்கிறேன். (அத்தியயனம் செய்யப்பட்ட வேத மந்திரங்களை சிறிதும் சோம்பலின்றி இரவும் பகலுமாக இடைவிடாது அப்பியாசம் செய்து வருவேன் என்பது கருத்து). அவ்வாறு படித்த கிரந்தங்களின் உண்மைப்பொருட்களையே கூறிவருவேன். விபரீதமான அர்த்தங்களை வெளிப்படுத்தும் வாதங்களை ஒருபோதும் செய்யக்கூடாது என்பது கருத்து. ऋतं என்பது மானஸீக உண்மை. सत्यं என்பது வாக்கினுல் கூறப்படும் உண்மை. மனத்தால் அறிந்த உண்மை விஷயங்களையே வாக்கினுல் வெளியிடுவேன் எனப்பொருள்.

उप. "तन्मामवतु" । "तद्वक्तारं अवतु" ।
"अवतु माम्" । "अवतु वक्तारम्" ।
"अवतु वक्तारम्" ।

भा. तत्-ब्रह्मतत्वं, मां-शिष्यं, अवतु-सम्यक् बोधेन पालयतु । आचार्यं च बोधकत्वसामर्थ्यप्रदानेन पालयतु । पुनरपि "अवतु मां" इति फलप्रार्थना अविद्यानिवृत्तिविषयिणी क्रियते । आचार्यस्य तु तादृशशिष्यलाभेन विद्यासंप्रदायाविच्छेदलाभः फलम् । अनेन मन्त्र पाठेन पूर्वं विद्याप्रतिबन्धकविघ्नाः परिह्रियन्ते । विद्योत्पत्तेः ऊर्ध्वं तु असंभावना, विपरीतभावनोत्पादकविघ्नाः । अभ्यासः अध्यायसमाप्त्यवबोधकः । इति शान्ति मन्त्रार्थः

उप. "ओम् शान्तिः शान्तिः शान्तिः" ।

அந்த பிரம்மதத்துவமானது சிஷ்யனுகிய எனக்கு சிறந்த தத்வார்த்தங்களின் அறிவைத்தந்து என்னைக்காப்பற்றட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனது ஆசிரியனையும் சந்தேக, விபரீதங்களின்றி கற்பிக்கும் திறம் பெற்றவராக செய்யட்டும். தன்னிடம் உள்ள அவித்யா நிவர்த்தியின் பொருட்டு சிஷ்யன் மறுபடியும் பிரார்த்திக்கிறான். ஆசார்யனுக்கும் சிறந்த சிஷ்யர்கள் கிடைப்பதின் தொடர்பாக வித்யாசம்ப்ரதாயம் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது பிரயோஜனம்.

கிரந்த ஆரம்பத்தில் செய்யப்படும் இம்மந்திர பாடத்தால் வித்யாக்ரஹணத்திற்கும் உபதேசத்திற்கும் எதிரிகளாயுள்ள இடையூறுகள் விலக்கப்படுகின்றன. முடிவில் செய்யப்படும் சாந்திமந்திரபாடத்தால் வித்யாக்கிரஹணத்திற்குப்பின் சம்பவிக்கக்கூடிய உண்மை யான அர்த்தம் தோன்றாதிருத்தல், விபரீதார்த்தம் தோன்றுதல் முதலிய கேடுகளை விளைவிக்கும் விக்னங்கள் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

''अवतु वक्तारम्'' என மறுபடியும் கூறப்படும் அப்பியாசமானது அத்தியாயத்தின் முடிவைக் குறிப்பிடுவ தற்காக.

இவ்வாறு சாந்திமந்திரங்களின் அர்த்தம் கூறப்பட்டது.

''ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

।। भाष्यस्य उपोद्घातः ।।

सहस्रदलपद्मे स्वे
नाथाङ्घ्र्यब्जद्वये सति ।
कमले कमलोत्पत्तिः
न दृष्टा इत्युक्तयः कथम् ।।

எனது சிரசில் உள்ள ஸஹஸ்ரதளபத்மத்தில் என் குருநாதரின் இரு சரணகமலங்களும் மலர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது. "ஒரு கமலத்தின் மேல் மற்றோர் கமலத்தின் உற்பத்தியைக்கண்டதில்லை'' என்ற உலகவழக்கிலுள்ள சொல் எவ்வாறு பொருத்தமாகும்? (இது குருப்பிரார்த்தனரூப மங்களம்).

भाष्यकारस्य प्रतिज्ञावचनम्

श्रीसाङ्ख्यायन कल्पसूत्र विधिभिः कर्माणि ये कुर्वते
तेषां शाकल एव मन्त्रनिचयः कौषीतकं ब्राह्मणम् ।
तैः आरण्यकमध्य मन्त्र विततिः या पठ्यते बह्वृचैः
ऋग्भिः षोडशिभिः महोपनिषदं व्याचक्ष्महे तां वयम् ।।

ஸ்ரீ சாங்க்யாயன மஹரிஷி அளித்த கல்பசூத்திர விதிப்படி தங்களது வைதிக கர்மாக்களை இக்காலத்திலும் எவர்கள் அனுஷ்டித்து வருகிறார்களோ, ''शाकलम्'' சாகலம் என்ற வேதபாகமே எவர்களுக்கு மந்திரசமூஹமாக இருந்துவருகின்றதோ, ''कौषीतकम्'' கௌஷீதகம் என்ற வேதப்பகுதியே எவர்களுக்கு ''ब्राह्मण'' ப்ராம்மண கிரந்தங்களாக விளங்கிவருகின்றனவோ ''बह्वृच'' பஹ்வ்ருச என்ற ரிக்வேத் சாகையைச்சேர்ந்த அந்த மஹனீயர்களால் ''आरण्यकम्'' ஆரண்யகம் என்ற வேதபாகத்தின் மத்தியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரகாசிக்கின்ற பதினாறு ரிக்குகளால் அமைந்த எந்த மந்திரசமூகமானது இன்றளவும் வெகுவாக அத்தியயனம் செய்து வரப்படுகின்றனவோ, அப்பேர்ப்பட்ட மிகச்சிறந்த உபநிஷத் ரூபமாயுள்ள ரிங் மந்திரங்களுக்கு நாம் விரிவுரை செய்கிறோம்.

भा. इह खलु त्रैवर्णिकैः अध्येतव्यो वेदः पूर्वोत्तरकाण्डभेदेन द्विविधः । उभयविधोऽपि सः साक्षात् परम्परया वा क्रियाविशेषविधानाय प्रवृत्तः । क्रियाश्च-काश्चित् सदेवताकाः, काश्चित् निर्देवताकाः । यथा- अग्निहोत्र स्नानादयः, रामकृष्णोपास्ति योषिदग्न्युपास्त्यादयश्च । अधिकारिणस्तु – ''देहातिरिक्तः आत्मा परलोकयातायातक्षमः अस्ति'' इति विश्वासशीलाः एव । ते एव आमुष्मिकफलक्रियासु अधिक्रियन्ते । तेष्वपि ''अस्माभिः अदृश्यमाना अपि अभिमतफलदानक्षमा देवता नाम काचित् अस्ति'' इति विश्वासशीलाः एव रामकृष्णद्युपास्तौ अधिक्रियन्ते । ईदृशजनाभिप्रायेणैव देवतानां विग्रहादि पञ्चकं समर्थितं बादरायणादिभिः । येषां तु देवतासद्भावे जन्मान्तरकर्मवशात् अनाश्वासः, आस्तिकता च ते पूर्वकाण्डोक्तकर्मस्वेव अधिकारिणः, न देवतोपासनायाम् । तादृशजनाभिप्रायेणैव देवतानां विग्रहादिपञ्चकनिरासेन कर्मप्रधान्यवादः समर्थितो जैमिन्यादिभिः । अत एव तादृशकर्मठानामेव कर्मपरिपाकवशात् कतिपयानां शिवशक्तिपूजायां प्रवृत्तौ सत्यां मीमांसकमतपरित्यागप्रयुक्तः उपहासः वृत्तौ वर्णितः मृगेन्द्रसंहितायाम् । ये तु देवतोपासकाः तैरपि विग्रहादिपञ्चकापह्नवाभिप्राय रहस्यं जानानैरपि कर्मप्राधान्यवादो न निरसनीयः । तथात्वे तादृशकर्मठानां चित्तपरिपाकविशेषमन्तरेण समर्थ्यमानेऽर्थे विश्वासानुदयात् निरसनयुक्तिभिः तदवलम्बितेऽर्थे संदेहोदये तेषां उभयभ्रष्टतापत्तेः । अत एव तेषां संरक्षणार्थमेव उपासकैरपि तानि कर्माणि तद्वदेव सविश्वासमिव कार्याण्येव । एतदभिप्रायेणैव

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''लोकसंग्रहमेवापि संपश्यन् कर्तुमर्हसि'' इत्यादि विधयः, ''न बुद्धिभेदं जनयेत् अज्ञानां कर्मसङ्गिनां'' इत्यादि निषेधाश्च ''उत्तरभूमिकारूढैरपि पूर्वभूमिकायाः समर्थनं, स्वभूमिकायाः अप्रकाशनं च अवश्यं कर्तव्यं'' इति तु पिण्डितोऽर्थः । तेन ''एतौ विधिनिषेधौ निस्त्रैगुण्ये पथि विचरतां जीवन्मुक्तानामपि आवश्यकौ'' इति सिद्ध्यति! येषां तु बहुषु जन्मसु पूर्वकाण्डोक्तकर्मानुष्ठानवशात् चित्तपरिपाकविशेषो दृढो दृश्यते, तादृशान् प्रति तु सम्यक् परीक्ष्य स्वभूमिका शनैश्शनैः प्रकाशनीयैव । अन्यथा संप्रदायविच्छेदापत्तेः।

இவ்வுகில் மூன்றுவர்ணத்தாராலும் அத்தியயனம் செய்துவரப்படுகின்ற வேதசமூகம் பூர்வகாண்டம், உத்திரகாண்டம் என இரு பிரிவைக் கொண்டதாக விளங்குகிறது. இவற்றுள் பூர்வகாண்டம் प्राधान्येन சாக்ஷாத்தாகவும் உத்திரகாண்டம் உபாஸனுமார்க்கத்தை அவலம்பித்து अप्राधान्येन பரம்பரையாகவும், ஆக இருபிரிவுகளும் क्रिया கிரியா விசேஷங்களையே விதித்து வருகின்றன. அவ்வாறு விதிக்கப்படும் கிரியா விசேஷங்கள் सदेवताकाः தேவதையை உத்தேச்யமாகக்கொண்டு (தேவதையை குறிக்கோளாக கொண்டு) சிலவும், निर्देवताकाः தேவதை அற்றவைகளாக சிலவும் ஆக இருவகையாக உள்ளன. சிரௌதமான அக்னிஹோத்ரம் முதலிய க்ரதுக்கள், ஸ்மார்த்தமான गृह्य க்ருஹ்ய கர்மாக்கள், தர்சம் அஷ்டகை முதலான பித்ருகர்மாக்கள், தாந்திரிகமான உபாஸனு ஜப பூஜாதிகள், பௌராணமான ராமகிருஷ்ணுதி உபாஸனே, முதலியவைகள் தேவதைகளை மனதிற்கொண்டே செய்யப்படுகின்ற படியால் இவைகள் सदेवताकाः தேவதையை உத்தேச்யமாகக் கொண்டன எனப்படுகின்றன.

ஜாதகர்மா, உபநயனம் முதலிய ஸம்ஸ்கார கர்மாக்களும் ப்ராதஸ்நாநம், புண்ட்ர தாரணம் போன்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிரியா விசேஷங்களும், ஸ்த்ரீகளே அக்னியாகப்பாவனே செய்யவேண்டும், பெரியோர்களிடம் பணிவுடனும் சிரத்தாபக்தியுடன் இருந்துவரவேண்டும் என்பதான கர்மாக்களும் தேவதா விசேஷங்களே குறிக்காமலேயே விதிக்கப்படுகின்ற படியால் இவைகள் निर्देवताका: தேவதா நோக்கம் அற்றவைகள் என கூறப்படுகின்றன.

அழியும் தன்மையுள்ள இந்த नश्वर நச்வரமான பௌதிக தேஹத்தைக் காட்டிலும் வேருக நித்தியமான ஆத்மா என ஒன்று இருக்கிறது. அதேபோல் பரலோகம் எனவும் ஒன்று உண்டு. இந்த ஆத்மா இப்பௌதிக சரீரம் மூலமாக செய்து வரும் புண்ணிய பாப கர்மாக்களே அனுசரித்து இக, பரலோகங்களில் ஜனன, மரண ரூபமான யாதனைகளே (சுக துக்கங்களே) அனுபவித்து வருகிறது என்றும், இந்த சித்தாந்த கொள்கைக்கு வேதங்கள் முதலிய யாவுமே முக்கிய பிரமாணங்கள் என்றும் திடமான நம்பிக்கை உள்ளவர்கள் ஆஸ்திகர்கள் எனப்படுகிருர்கள். இவ்வாருன ஆஸ்திக சமூகமும் கொள்கை பேதத்தால் सेश्वर (ஈசுவரனே ஒப்புக்கொள்ளும்) ஆஸ்திகர்கள், निरीश्वर (ஈசுவரனே ஏற்றுக் கொள்ளாத) ஆஸ்திகர்கள் என இரு பிரிவுகொண்டதாக இருக்கிறது.

''நாம் செய்து கொள்ளும் சுப, அசுப காரியங்களுக்கு அதனதன் தன்மையை பொறுத்து உரியபலன்களேக் கொடுக்க சர்வசக்தி பெற்ற சர்வக்ஞனை, சர்வோத்க்ருஷ்டமான, ஓர் தேவதாவிசேஷம் நமது புறக்கண்களுக்குத் தென்படாத அப்பிரத்யக்ஷ நிலேயில் எங்கும் வியாபித்து இருக்கிறது'' என்ற ஈசுவர நம்பிக்கை உள்ளவர்கள் ஒருசாரார். இந்த ஆஸ்திகர்களேத்தான் सेश्वरमीमांस्का: ஸேஸ்வர மீமாம்ஸகர்கள் என சாஸ்திரங்களில் கூறுகிருர்கள். ஈஸ்வரனே ஒப்புக்கொள்ளும் இந்த ஆஸ்திகர்கள்தான் பூர்வகாண்டத்திலுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்மாக்களையும் உத்திரகாண்டத்தில் கூறப்பட்ட தேவதா பிரதானமான உபாஸனுக்கிரமங்களையும் அனுஷ்டிக்கத்தகுதி பெற்ற அதிரிகாரிகள். தேவதா • விசுவாசத்துடன் கர்மானுஷ்டான சீலர்களான இப்பெரியோர்களை மனதில் கொண்டுதான் பாதராயணர் முதலிய மஹான்கள் "विग्रहादि पञ्चकम्" உருவம் முதலிய ஐந்து அம்சங்களை தேவதை களுக்கு समर्थनम् சித்தாந்தம் செய்து இருக்கிறாகள்.

"வேதசாஸ்திரங்களில் கூறப்பட்ட அந்தந்த கர்மாக்களை திடநம்பிக்கையுடன் செய்து வருவதாலேயே அதனதன் பலன்கள் தானுகவே வந்தடையும். பலன்களை விநியோகம் செய்வதற்காக தனியாக ஓர் தேவதா விசேஷத்தை ஒப்புக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. சிரத்தையுடன் செய்யப்படுகின்ற கர்மாக்களுக்கே தகுந்த பலனைத்தரக்கூடிய வலிமை உண்டு" என்று கூறுபவர்கள் மற்றோர் சாரார். இவ்வாறு கொள்கை உள்ள இப்பிரிவினர் निरीश्वर मीमांसका: நிரீஸ்வர மீமாம்ஸகர்கள் எனப்படுகிறார்கள். இவர்களுக்கும் வேதங்களே முக்கியப்பிரமாண கிரந்தமாக இருப்பதால் இப்பிரிவினரும் ஆஸ்திகர்களாகவே கருதப்பட்டு வருகிறார்கள். ஈஸ்வரனை அங்கீகரிக்காத இந்த சமூகத்தினரை உத்தேசித்தே ஜைமினீ முதலிய மஹரிஷிகள் सेश्वर வாதத்தை மிக பலமாகக் கண்டித்து சுத்தமான கர்மப் பிராதன்யத்தையே வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். தேவதா விசுவாசம் அற்ற இவர்கள் பூர்வகாண்டத்திலுள்ள கர்மாக்களை மட்டிலுமே அனுஷ்டிக்க அதிகாரம் உள்ளவர்கள். தேவதா விசேஷங்களையே முக்கிய விஷயங்களாகக் கொண்ட உத்தரகாண்ட உபாஸனுக் கிரமங்களில் இப்பிரிவினருக்கு சிறிதும் உரிமை இல்லை.

இவ்வாறு फलदाता (பலனைத்தருபவர்). வாக சர்வசக்திமானுன ஈஸ்வரனை அங்கீகரிக்காமல் கடினமான கர்மாக்களை மட்டிலும் அனுஷ்டித்துவரும் மஹனீயர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களுக்குள் ஏதோ ஒருவருக்கு பல ஜன்மாக்களில் அனுஷ்டித்து வந்த அவரது பூர்வபுண்ய கர்மாவின் பரிபாக விசேஷத்தால் நாளடைவில் சிறிது சிறிதாக சிவ சக்தி பூஜாதி உபாஸனைகளில் கொஞ்சம் பற்றுதல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இக்கர்மடரான உபாஸகரைப்பற்றி "மீமாம்ஸகமதபரித்யாகி"என்ற நிந்தனைகளுடன் மற்றும் பல வகையான உபஹாஸ (கேலி) சொற்களும் ஏற்பட்டன. மேலும் मृगेन्द्र संहिता மிருகேந்த்ர ஸம்ஹிதை என்ற நூலின் விருத்திக் கிரந்தத்திலும் நித்தனைகளுடன் கூடிய கேலிச் சொற்களும் வெகுவாக கிடைக்கின்றன.

கர்மப்பிராதான்யத்தையே மிகவும் உறுதியாக உபதேசிக்கும் ஜைமினீ முதலிய மஹரிஷிகளின் விக்ரஹாதி பஞ்சகங்களை நிராகரிக்கும் வசனங்களுடைய உட்கருத்துக்களை நன்கு அறிந்து இருப்பவர்களான சிறந்த தேவதோ பாசர்களும் ,கர்மப்பிரதான்ய வாதத்தை நிராகரணம் செய்யக்கூடாது. அவ்வாறு இன்றி அவர்கள் கர்மமார்க் கத்தை நிராகரிக்க முற்பட்டால் திடநம்பிக்கையுடன் கர்மாக்களில் ஈடுபட்டிருக்கும் சாதாரண ஜனங்களுக்கு சித்தபரிபாகம் ஏற்படாத நிலையில் புதிதாக போதிக்கப்படும் உபாஸனுமார்க்காத்தில் விசுவாசம் ஏற்படாமலும் பலமான யுக்திகளால் கண்டிக்கப்பெறும் கர்மமார்கத்தில் பல சந்தேகங்கள் ஏற்பட்டு நம்பிக்கை சிதறியும் ஆகவே இரண்டு மார்கங்களில் எதையும் கைக்கொள்ள முடியாத उभयभ्रष्टता இரண்டுங்கெட்டநிலை ஏற்படக்கூடும். ஆதலால் இவ்வாறு சித்தபரிபாகம் மனோதிடம் இல்லாத சாதாரண மக்களை சம்ரக்ஷிக்கும் பொருட்டு உபாஸகச்ரேஷ்டர்களும் தங்களது உபாஸனைகளுடன் கர்மாக்களிலும் ஈடுபட்டு அனுஷ்டித்து வரவேண்டும்.

உபசஸகர்களும் தங்களது உபாஸனைகளுடன் அவரவர் களுக்குறிய கர்மாக்களையும் கண்டிப்பாக அனுஷ்டித்து வரவேண்டும் . என்ற சித்தாந்தத்தை வற்புறுத்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"लोकसङ्ग्रहमेवापि सम्पश्यन् कर्तुमर्हसि" "கற்றறிந்த விவேகிகளும் பாமர மக்களின் நன்மைகளையும் கருத்திற் கொண்டே தங்களது கடமைகளைச்செய்து வரவேண்டும்" என்ற விதிவாக்யங்களும், न बुद्धिभेदं जनयेत् अज्ञानां कर्मसङ्गिनाम्" "கர்மாக்களில் ஈடுபட்ட சாமான்ய ஜனங்களுக்கு, புத்திமயக்கம் ஏற்படும்படியான எதையும் விவேகிகள் செய்யக்கூடாது" என்ற நிஷேத வாக்யங்களும் வெகுவாக ஸ்மிருதிகளில் காணப்படுகின்றன.

"உத்தர பூமிகையை (மேல் ஸ்தானத்தை) அடைந்தவர்கள் தனது பூர்வபூமிகையை (முந்திய உள்ள ஸ்தானத்தை) சமர்த்தனம் செய்து காப்பாற்றி வருவதுடன் தனது உயர்ஸ்தானத்தையும் வெளியில் பிரகாசப்படுத்தாமல் ரஹஸ்யமாக காப்பாற்றி வரவேண்டும்" என்பதும், "முக்குணங்களின் சம்பந்தம் நீங்கிய மோக்ஷமார்க்கத்தில் சஞ்சரித்துவரும் ஜீவன் முக்தர்களையும் குறிப்பிட்ட இவ் விதி, நிஷேதங்கள் கட்டுப்படுத்தும்" என்பதும் உட்கருத்து.

பல ஜன்மாக்களில் பூர்வகாண்டத்தில் கூறப்பட்ட பல கர்மாக்களை செம்மையாக அனுஷ்டித்து அதனல் சித்தபரிபாகம் பெற்று அதன்பயனுக உபாஸனுபூமிகையில் விசுவாசமும், அதைக்கைக் கொள்ளும் அபிலாஷையும் எந்த ஜீவர்களுக்கு ஏற்படுகிறதோ அந்த பக்தர்களை நன்ருக பரீக்ஷை செய்து சிறிது சிறிதாக உபாஸனுக்கிரமத்தை அதனதன் நுட்பங்களுடன் உபதேசம் செய்து வரவேண்டும். இவ்வாருன வழிமுறையில் பிரகாசப்படுத்தி வந்தால் இந்த வித்யாமார்க்கமானது சிஷ்ய பரம்பரை மூலம் "अविच्छिन्न" மாக இடைவெளியின்றி விரிவாக வளர்ந்து கொண்டு இருக்கும்.

भा. श्री त्रिपुरसुन्दर्युपास्तिपर्यन्ताः ये भूमिकाभेदाः ते तु सविस्तरं वाम्केश्वरतन्त्रव्याख्याने सेतुबन्धाख्याने अस्माभिः प्रदर्शिताः ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उपासनाशास्त्रे तु देवताप्राधान्यमेव, न कर्मणः प्राधान्यम्। क्रियाप्राधान्याभावादेव "देवतारूप सिद्धवस्तु बोधकाः वेदान्ताः" इति वाचो युक्तिः ।

देवातायाश्च त्रीणि रूपाणि - स्थूलं, सूक्ष्मं, परं चेति। तत्र आद्यं तत्तद्ध्यानश्लोकोक्तम्। द्वितीयं तत्तन्मूलमन्त्रात्मकम्। तृतीयं तु वासनात्मकम् । देवतारूपत्रैविध्यादेव तदुपास्तिरपि त्रिविधा—बहिर्याग, जप, अन्तर्यागभेदात् । तदिदं सपरिकरं ऋग्वेदपुरुषः महोपनिषद्रूपेण उपदिशति - "तिस्रः पुरः" "इत्यादिना" "इत्युपनिष्त्" इत्यन्तेन । अस्याः उपनिषदः परदेवतास्तुतौ विनियोगः - तृतीय पञ्चमर्च मन्त्रलिङ्गात्।

ஆரம்பித்திலிருந்து ஸ்ரீமஹா த்ரிபுரசுந்தரியின் உபாஸனவரையில் உள்ள பல பூமிகா விசேஷங்கள் வாமகேஸ்வர தந்திரத்தின் வ்யாக்யானமான "சேதுபந்தத்தில்" எங்களால் விவரிக் கப்பட்டிருக்கின்றன.

உபாஸனமார்க்கத்தில் உபாஸ்ய தேவதைக்குத்தான் பிராதான்யம். கிரியாகலாபங்கள் அங்க கார்யங்களாகவே கருதப்படுகின்றன.

சாத்யமாயுள்ள (கிரியா ரூபங்களான) புதியவிஷயங்கள் எதையும் விவரிக்காமல் ஏற்கனவே சித்தமாயுள்ள தேவதைகளைப்பற்றியே கூறிவருவதால் இம்மார்க்கமானது "सिद्धवस्तु बोधकाः वेदान्ताः" "சித்தமாக இருப்பதையே திரும்பத்திரும்பக்கூறும் வேதாந்தச் சொற்களையே போதிப்பவை;' என்று கேலியாகப்பேசப்படுகிறது.

உபாஸனையில் ஆராதிக்கப்படும் தேவதைகளுக்கு மூன்று ரூபங்கள் - ஸ்தூலம், சூக்ஷ்மம், பரம் என்பதாக. அந்தந்த தியானஸ்லோகங்களில் கரசரணாதி அவயவங்களுடன் வர்ணிக்கப்படுகின்ற மூர்த்திவடிவமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்தூலரூபமாகும். சப்தவடிங்களில் உள்ள மந்திர ஸ்வரூபங்களே சூக்ஷ்மரூபம். தேவதா விஷயமான மானஸீக பாவனு (தியான) விசேஷ்மே பரம்ரூபம். தேவதைகள் , மூன்று பிரிவாக இருப்பதால் அதை உபாசிக்கும் முறையும் பஹிர்யாகம், ஜபம், அந்தர்யாகம் என மூன்று வகையாக அமைந்து இருக்கிறது. இந்த மூன்று வகையான உபாஸனுவிசேஷங்களேயும் ஸாங்கோ பாங்கமாக ''त्रिपुरोपनिषत्'' என்ற ரிக்வேதப்பகுதியில் ''तिस्रः पुरः'' என ஆரம்பித்து ! ''वियोम् इत्युपनिषत्'' என்பது வரையிலுள்ள பதினுறு ரிங்மந்திர ஸ்வரூபங்களால் சர்வேஸ்வரனுன ரிக்வேதபுருஷன் நம் யாவர்க்கும் உபதேசம் செய்கிருன்.

இவ்வுபநிஷத்தின் மூன்ருவது ரிக்கிலுள்ள ''उशतीरि- वमातरोमा विशन्तु'' என்ற பிரார்த்தனு வாக்யத்தாலும், 10வது ரிக்கிலுள்ள ''तदीडे'' என்ற ஸ்தோத்ர சொற்களாலும் இந்த உபநிஷத்திற்கு ஸ்ரீ த்ரிபுரசுந்தரியின் ஸ்தோத்திரத்தில் விநியோகம் என சூசனே செய்யப்படுகிறது.

॥ ''श्री त्रिपुरोपनिषत्'' ॥

उप. तिस्रः पुरः त्रिपथा विश्वचर्षणी -
यत्र अकथा अक्षरा सन्निविष्टा ।
अधिष्ठाय एनां अजरा पुराणी -
महत्तरा महिमा देवतानाम् ॥ १ ॥

भा. तत्र प्रधानदेवतां निर्देष्टुं प्रथमां ऋचं आह ''तिस्रः पुरः'' इत्यादि ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

तत्र मुक्तिः तावत् पञ्चविधा । सालोक्यं एकम् । सामीप्य, सारूप्य, सायुज्य त्रितयं, कैवल्यं च इति । तासु आद्यान्त्यौ प्रत्येकं द्वौ मार्गौ । मध्यमत्रयं एको मार्गः । तथा च तैत्तिरीयाः आमनन्ति - **"य एवं विद्वान् उदगयने प्रमीयते देवानामेव महिमानं गत्वा आदित्यस्य सायुज्यं गच्छति । अथ यो दक्षिणे प्रमीयते पितृणामेव महिमानं गत्वा चन्द्रमसः सायुज्यँ सलोकतां आप्नोति । एतौ वै सूर्याचन्द्रमसोः महिमानौ ब्राह्मणो विद्वान् अभिजयति । तस्मात् ब्रह्मणो महिमानं आप्नोति। तस्मात् ब्रह्मणो महिमानं"** इति । अयं भावः- ऊर्ध्वरेतसां स्वाश्रमोक्तकर्मानुष्ठानवतां चन्द्रलोकप्राप्तिः सालोक्यरूपा । प्रतीकोपासनया, स्वस्वामिभावेन उपासनया, अहङ्ग्रहोपासनया च सामीप्यादि त्रितयरूपा आदित्यलोकप्राप्तिः । निर्गुणोपास्तिरूप ब्रह्मज्ञानवतां तु कैवल्यरूप ब्रह्मपद प्राप्तिः इति । एतन्मार्गत्रितयमेव स्पष्टं उपबृंहितं विष्णुपुराणे तृतीयांशे - **"उत्तरं यदगस्त्यस्य अजवीथ्याश्च दक्षिणम् । पितृयाणः स वै पन्थाः वैश्वानरपथात् बहिः"** इत्यादिना **"विवेकज्ञानदृष्टंच तद्विष्णोः परमं पदम्"** इत्यन्तेन। मार्गत्रैविध्यादेव गन्तव्याः पुर्यः अपि तिस्रः । ईदृशपुरत्रयप्रापकत्वात् तद्रूपत्वाद्वा परदेवता "त्रिपुरा" इत्युच्यते।

"आत्मबुद्ध्या प्रतीकेन मातृ बुद्ध्याप्यहंधिया । कर्मणापि भजन् मर्त्यः कैवल्यं पदं अश्नुते ॥" इति शक्तिरहस्यवचनेन पञ्चविधात्मभजनेनापि त्रैपुरप्राप्तेः उक्तत्वात् । तस्मात् सैव **"तिस्रः पुरः, त्रिपुरा"** । त्रयः पन्थानः यस्याः सा त्रिपथा । तत्पुरुषानङ्गीकारादेव **"पथस्संख्याव्ययादेः"** इति नपुंसकत्वं न । चर्षणीशब्दः वैदिक निघण्टुरीत्या प्रजावाचकः । विश्वाः समस्ताः चर्षणयः यस्याः सा विश्वचर्षणी । देव्येव समस्तप्राण्युत्पादिका इति यावत् । विश्वदृष्टिर्वा ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வுபநிஷத்தால் விளக்கப்படும் பிரதான தேவதாஸ்வரூபம் तिस्रः पुरः என்ற முதல் மந்திரத்தால் விவரிக்கப்படுகிறது.

मुक्तिः- மோக்ஷம் என்பது ஐந்து பிரிவினை உள்ளதாக இருக்கிறது. அதாவது

1. सालोक्यं - ஸாலோக்யம்:- கைலாஸம், வைகுண்டம் சத்யலோகம் முதலான ஈசுவரலோகங்களில் ஜீவர்கள் அமர்ந்திருப்பது..

2. सामीप्यम् - ஸாமீப்யம்:- ஈசுவரனுடன் அவரது சமீபத்திலேயே தங்கியிருப்பது.

3. सारूप्यम् - ஸாரூப்யம்:- ஹாவ, பாவ அலங்காரங்களால் ஈசனுக்கு சமமான உருவம் பெற்று பிரகாசிப்பது.

4. सायुज्यम् - ஸாயுஜ்யம்:- ஈசுவரதேகத்துடன் அவருடைய அவயவங்களாகவே ஒன்றிவிடுதல்.

5. कैवल्यम् - கைவல்யம்:- நிர்விகல்பக சைதன்ய ப்ரம்மமாகவே கறைந்துவிடுதல்.

இவ்வாறான ஐந்து முக்திகளையும் அவற்றை அடையும் வழிமுறைகளையும் "சக்திரஹஸ்யம்" என்ற நூல் விளக்கிக்கூறுவதாவது.

1. आत्मबुद्ध्या - (स्वात्ममात्रावशेषवृत्ति) என்ற தன்னை மாத்திரமே விஷயமாகக்கொண்ட ஞான ரூபமான நிர்குணோபாஸ்தியாலும்.

2. प्रतीकेन - உருவ வழிபாட்டலும்

3. मातृबुद्ध्या - தாய், சேய் என்ற சேவ்ய சேவக பாவ அல்லது லக்ஷ்ய லக்ஷண பாவத்தாலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. अहंधिया - தன்னையும், பிரம்மத்தையும் விஷய மாகக்கொண்ட अहं ब्रह्मास्मि என்ற பாவனு விசேஷத்தாலும் (2, 3, 4, இந்த மூன்று பிரிவுகளும் சகுணோபாஸனு மார்கம் எனப்படுகிறது)

5. कर्मणा - பூர்வ காண்டங்களிலும், ஸ்மிருதிகளிலும் கூறப்பட்ட, அவரவர்களுக்குறிய கர்மாக்களை அனுஷ்டித்து சித்தசுத்தியைப் பெறுதல். (இது உபாஸனுசம்பந்தம் இல்லாததால் சுத்த கர்ம மார்கம் எனப்படுகிறது.) இவ்வைந்து வழிகளாலும் ஈசனை வழிபட்டு ஈசனை அடையலாம் என்பதாக. இவற்றுள் -

1. कर्मणा - கர்மமார்கத்தால் "ஸாலோக்ய" முக்தியும்

2. प्रतीक - உருவ வழிபாட்டால் "ஸாமீப்ய" முக்தியும்

3. मातृ बुद्धि - சேவ்ய, சேவக பாவத்தால் "சாரூப்ய" முக்தியும்

4. अहंधिया - अहं ब्रह्मास्मि - "நானே ப்ரம்மம்" என்ற பாவனையால் "ஸாயுஜ்ய" முக்தியும்

5. आत्म बुद्धि - நிர்குணோபாஸனையால் "கைவல்ய" முக்தியும் கிடைப்பதாகக் கூறப்படுகிறது.

உருவவழிபாடு, சேவ்யசேவகபாவம், நானே ப்ரம்மம் என்ற பாவனை இவைமூன்றும் உபாஸனு ஸ்வரூபங்க ளாகவே இருப்பதால் ஒன்றுகவே கணக்கிட்டு "கர்மா" "உபாஸனு," "ஞான" என்ற மூன்று மார்கங்களாகவே பல நுல்கள் கூறுகின்றன.

தைத்திரீய உபநிஷத் இது பற்றி கூறுவதாவது. "வேதங்களின் பூர்வபாகத்தால் அந்தந்த வர்ணுசிரமத் திற்குறிய விதிக்கப்பட்ட கர்மாக்களை மாத்திரம் உபாஸனு சம்பந்தமின்றி பக்தி சிரத்தையுடன் ஸாங்கோபாங்கமாக கர்மலோபம் சிறிதும் இன்றி அனுஷ்டானம் செய்து வருகின்ற "ஊர்த்வரேதஸ்" களான மஹாச்ரோத்திரிய, கர்மடச்ரேஷ்டர்கள் தக்ஷிணுயனத்தில் தனது பௌதிக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேகத்தை துறந்து "பித்ரு தேவர்களின் சிறப்பை பெற்று "பித்ருயானம்" என்ற தக்ஷிணமார்கம் மூலமாக சந்திரலோகத்தை அடைந்து "ஸாலோக்யம்" என்ற முக்தியை அனுபவிக்கிறார்கள்."

"அவரவர்குறிய கர்மானுஷ்டானங்களுடன் "உபாஸனா" முறையாலும் ஈசனை வழிபட்டுவரும் கர்மோபாஸக ச்ரேஷ்டர்கள் உத்தராயணத்தில் தேக வியோகம் பெற்று "தேவயானம்" என்ற உத்திரமார்கத்தால் ஆதித்யலோகம் சென்று தான் அனுஷ்டித்து வந்த உபாஸனா முறைக்குறியதான "ஸாமீப்ய" "ஸாரூப்ய" "ஸாயுஜ்ய" முக்திகளில் ஏதாவது ஒன்றை அனுபவிக்கிறார்கள்"

"யாவற்றையும் மறந்து "தன்னை" மாத்திரம் விஷயமாகக்கொண்ட "நிர்விஷய, நிர்விகல்பக சமாதி" என்ற ஞான மார்கத்தை அவலம்பித்த மஹா யோகிகளான நிர்குணோபாஸகர்கள் "நித்யாநித்ய விவேகம்" என்ற சிறந்த அறிவைப் பெற்றவர்களாய் "முன்கூறிய கர்மோபாஸனா மார்கங்களால் அடையப்பெறும் சந்திரலோக, ஆதித்ய லோக ப்ராப்தியும், ஸாலோக்யாதி முக்திகளும் அநித்யமானவை. சந்திர, சூர்யர்களின் மகிமையும் மிகச்சிறந்ததல்ல. பரப்பிரம்ம மஹிமை ஒன்றுதான் யாவற்றிலும் சிறந்தது. அதுதான் நித்ய, நிரதிசய, ஆநந்தஸ்வரூபம்" என்ற தத்துவத்தை அறிந்து தாங்கள் பயின்றுவரும் நிர்குணோபாஸ்தி மூலமாக ஸச்சிதாநந்த பரப்பிரமத்தை அடைகிறார்கள் என்பதாக

"उत्तरं यदगस्त्यस्य" என்று ஆரம்பித்து "तद्विष्णोः परमं पदम्" என்பதுவரை இந்த மூன்று மார்கங்களைப்பற்றியும் அதனதன் பயன்களைப்பற்றியும் விஷ்ணுபுராணம் விரிவாக கூறுகிறது.

சந்திரலோகம், ஆதித்யலோகம், ப்ரம்மபதம் என்று அடையப்படவேண்டிய முக்திஸ்தானங்கள் மூன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருப்பதால் அந்தந்த ஸ்தானங்களை அடையவேண்டிய மார்கங்களும் "கர்மா," "ஸகுணோபாஸன", நிர்குணோபாஸன" என்ற மூன்று மார்கங்களாக அமைந்து இருக்கின்றன. அடையப்படவேண்டிய இந்த மூன்று முக்தி ஸ்தானங்கள் இங்கு மூன்று புரங்கள் (நகரங்கள்) என்று கூறப்படுகின்றன.

புரங்கள் (पुरम्) மூன்று முக்தி ஸ்தானங்களாகவும் அவற்றை அடைவதற்குறிய மூன்று மார்க்கங்களாகவும் பிரகாசித்துக்கொண்டிருப்பவள் "ஸ்ரீமஹா த்ரிபுரசுந்தரியே" என்பதை உபநிஷத்தில் முதல் மந்திரத்திலுள்ள **तिस्रः पुरः त्रिपथा** என்ற முதல் மூன்று பதங்களும் விளக்கிக் கூறுகின்றன. இந்த தேவியே ஸமஸ்த உலகங்களையும் சிருஷ்டிப்பவள் என்றும், சிருஷ்டிக்கப்பட்ட உலகங்கள் யாவற்றையும் தனது **दृष्टि** பார்வையினாலேயே காப்பாற்றி வருகிறாள் என்றும் அடுத்த **विश्वचर्षणी** என்ற பதம் விளக்கி கூறுகிறது.

भाः "इदमत्र बोध्यम्" - तदैक्षत । बहुस्यां प्राजायेय इति श्रुति सिद्धं यत् ब्रह्मणः प्राथमिकं ईक्षणं तदेव सर्वजनकम् । तदेव इच्छारूपं, कृतिरूपञ्च । "सोऽकामयत" "तत्तपोऽकुरुत" इति श्रुत्यन्तरात् । स्वाभाविकी ज्ञानबलक्रिया च इति श्रुत्या अपि एकैव ब्रह्मात्मिका प्राथमिकी वृत्तिः ज्ञानेच्छाकृतिरूपा इति प्रतिपाद्यते । सा वृत्तिरेव इच्छाज्ञानक्रियासमष्टिरूपत्वात् शान्ता इत्युच्यते । पश्यन्ती मध्यमा वैखरीत्रय समष्टिरूपत्वात् "परा" इत्युच्यते । वामा ज्येष्ठा रौद्री समष्टिरूपत्वात् "अम्बिका" इत्युच्यते । सा शान्ताद्यात्मिका देवतैव श्रीचक्रस्थं बिन्दुचक्रम् । तदुक्तं नित्याहृदये परं ब्रह्म प्रक्रम्य

"प्रसृतं विश्वलहरीस्थानं मातृत्रयात्मकम् । बैन्दवं चक्रम्" इत्यादि । तदेव च तिस्रः पुरः, त्रिपथा, विश्वचर्षणी इति विशेषणत्रय

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

निर्दिष्टम् । विशेषणेषु एकवचनबहुवचनाभ्यां विशेष्यस्य त्रित्रिरूपत्वं, एकात्मकत्वं च सूचितम् । तादृश ईक्षणावच्छिन्नं ब्रह्म प्रक्रम्य कालिका पुराणे उक्तम् -

"त्रिकोणं मण्डलं चास्याः भूपुरं च त्रिरेखकम् ।
मन्त्रोऽपि त्र्यक्षरः प्रोक्तः तथा रूपत्रयं पुनः ॥
त्रिविधा कुण्डलीशक्तिः त्रिदेवानां च सृष्टये ।
सर्वं त्रयं त्रयं यस्मात् तस्मात्तु त्रिपुरा मता ॥"

"இனி கூறவிருக்கும் பொருள்கள் சாஸ்திர நுட்பங்கள் வாய்ந்தவைகளாக இருப்பதால் மிக்ககவனத்துடன் அவைகளை கிரஹிக்கவேண்டும்" என எச்சரிக்கப்படுகிறது.

"तदैक्षत" (அந்தப் பரம்பொருள் பார்த்தது) என்ற ச்ருதிப்படி பரப்பிரமத்தின் प्राथमिकं ईक्षणं (முதல் பார்வை) என்ற விருத்தியே ஸமஸ்த உலகங்களுக்கும் உற்பத்திகாரணம் என்றும், அதுவே (அந்த முதல் விருத்தியே) "ஞானசக்தி" என்றும், "तदकामयत" (அது விரும்பிற்று) என்ற சுருதிப்படி அந்த முதல் ஈக்ஷண விருத்தியே (ஞானசக்தியே) இச்சாசக்தி என்றும், तत्तपोऽकुरुत (அது தவங்களை செய்தது) என்ற சுருதிப்படி அந்த ஞான சக்தியே "கிரியாசக்தி" என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. "स्वाभाविकी ज्ञानबलक्रिया च" என்ற வாக்கியமும் இந்த प्राथमिक ईक्षण மே பரப்பிரமத்தின் ஞான, இச்சா, கிரியா சக்திகளாக விளங்கிக்கொண்டு இருக்கின்றன எனக் கூறுகிறது. இந்த ஞான, இச்சா, கிரியா சக்திகளின் சமஷ்டி சொரூபமே (கூட்டுத்தன்மையே) "शान्ता" சாந்தாதேவி எனப்படுகிறது. மற்றும் இந்த முதல் விருத்தியே पश्यन्ती, मध्यमा, वैखरी பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற ஒலிவடிவம் பெற்று அவைகளின் சமஷ்டியான மிகவும் சூக்ஷ்மமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"परा" "பரா" என்ற சப்த சக்தியாகவும் அதேபோல் वामा, ज्येष्ठा, रौद्री வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்ற கிரியா வடிவம் பெற்று அதன் சமஷ்டிரூபமாக अम्बिका அம்பிகா என்ற "கிரியா சக்தி"யாகவும் விளங்குகிறது. இந்த "शान्ता," "परा," "अम्बिका" என்ற ஈசுவர விருத்திகளே தேவதா ரூபம் பெற்று ஸ்ரீ சக்ரத்தின் மத்தியஸ்தானமான बिन्दु चक्र (பிந்து சக்ர) மாக பரிணமம் பெற்று இருக்கிறது. நித்யாஹ்ருதயம் என்ற நூல் "உலக விஸ்தாரத்திற்கு முக்கியஸ்தானமாகவும் சாந்தா, பரா, அம்பிகா என்ற மூன்று மாத்ரு தேவதைகளின் பரிணமரூபமாகவும் பிந்துசக்ரம் விரிவு பெற்று இருக்கிறது" எனக் கூறுகிறது.

இவ்வாறு சிறப்புற்ற "பிந்துசக்ரம்" தான் तिस्रः पुरः, त्रिपथा, विश्वचर्षणी, என்ற மூன்று விசேஷணங்களால் விவரணம் செய்யப்படுகிறது.

"மூன்று முக்தி புரங்களாகவும்" அதைப்பெறத்தக்க "மூன்று மார்கங்களாகவும்" உலக சிருஷ்டியாதிளுக்கு "ஆதிகாரணமாகவும்" இருப்பவள் இந்த "மஹா த்ரிபுரசுந்தரியே" என்பது இந்த மூன்று விசேஷணங்களின் உட்கருத்து.

இவ்வாறு ஈக்ஷணவிருத்தியை அடைந்த பரப்பிரமத்தை ப்பற்றி காளிகா புரானம் கூறுவதாவது -

" இதன் மண்டலம் (பிரகாச ஸ்தானம்) முக்கோணமாக உள்ளது. இதன் பூபுரம் என்ற ஸ்தானமும் மூன்று ரேகைகளால் ஆனது. இதன் மந்திரமும் மூன்று அக்ஷரங்களைக் கொண்டது. இதன் வடிவமும் "சாந்தா", "பரா", "அம்பிகா" என்ற மூன்று மாத்ரு தேவதா ஸ்வரூபம் பெற்றது. இதன் ஆதாரமான "குண்டலினீ சக்தியும்" மூன்று தேவர்களின் சிருஷ்டியை கருத்தில் கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரம்மக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, ருத்ரக்கிரந்தி என்ற மூன்று பிரிவுகளை அடைந்து இருக்கிறது. இவ்வாறு இதன் விரிவுகள் யாவும் மூன்று மூன்ருகவே பெருகியிருக்கின்றன. ஆகவே ஸ்ரீசக்ரத்தில் வீற்றிருக்கும் பரப்பிரம்ம அபின்னமான இந்த தேவதை "த்ரிபுரா" எனப்படுகிருள்."

भा. अर्थसृष्टिजनकत्वेन तां निर्दिश्य शब्दसृष्टिजनकत्वेनापि तां निर्दिशति यत्रेति'। यत्र - यस्यां शान्ता, परा, अम्बिकादिरूपायां त्रिपुरायां, अकथा - अकाराद्याः, ककाराद्याः, थकाराद्याः षोडश षोडश, अक्षरा सन्निविष्टा - अक्षराणि सन्निविष्टानि । वट बीजे वृक्षवत् सम्यक् नितरां च वर्तन्ते । हकारो हि विमर्शस्वरूप एव इति न व्यष्टिवेषेण पृथक् गृह्यते । **"हकारार्णः कलारूपः विमर्शाख्यः प्रकीर्तितः"** — इति वचनात् । ळकारस्तु न लकारात् भिद्यते । क्षकारस्तु कष संसर्गरूप एव न स्वतन्त्रः । तस्मात् अष्टाचत्वारिंशत् मातृकाः । एता एव मातृकाः । तथा च सूतसंहितायां -

"एकधा च द्विधाचैव तथा षोडशधा स्थिता ।
द्वात्रिंशद्भेद संभिन्ना या तां वन्दे परां कलाम् ॥ इति"

द्विधा - स्वर् व्यञ्जन भेदेन । स्वरः - षोडशरूपः । व्यञ्जनं - द्वात्रिंशत् भेदं इत्यर्थः । अक्षरादिपदद्वये जसोः डादेशः छान्दसः ॥

அர்த்தப்ரபஞ்ச சிருஷ்டிக்கு இந்த தேவதையே காரணம் என்பதை முதல் பாதத்தால் கூறி, சப்த ப்ரபஞ்ச (ஒலி உலக) சிருஷ்டிக்கும் இதே தேவதையே காரணம் என மந்திரத்தின் இரண்டாவது பாதத்தால் விளக்குகிருர்.

'சாந்தா,' 'பரா,' 'அம்பிகா' ஸ்வரூபமாயுள்ள இந்த பிந்துசக்ரத்தில் अ, क, थ *என்ற எழுத்துக்களை முதலாவதாகக் கொண்ட பதினறு, பதினறு அக்ஷரங்களாலான மூன்று*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூட்டங்கள் ஆலம் விதையினுள் ஆலமரம்போல் மிகவும் நுட்பமாக அடங்கியிருக்கின்றன. ह என்ற எழுத்து கலாரூபமானதால் விமர்சம் என்று கருதப்பட்டு अः என்ற ப்ரகாச, விமர்சாத்மகான விஸர்க்கம் என்ற பதினாறுவது ஸ்வ்ராக்ஷத்திற்குள் அடங்கியிருப்பதால் இங்கு தனியாக வ்யஷ்டி ரூபத்தில் கணக்கிடப்படவில்லை. ळ (ள) காரம் என்பது ल (ல) காரத்தைக் காட்டிலும் வேறல்ல. क्ष (க்ஷ) என்பது क + ष (க + ஷ) இவைகளின் கூட்டக்ஷரமே. ஆகவே ஹ, ள, க்ஷ நீங்கிய 48 அக்ஷரங்களே மாத்ருகா க்ஷரங்கள் எனப்படுகின்றன. இந்த मातृका அக்ஷரங்களை "சூத ஸம்ஹிதை" வெகு அழகாக ஸ்தோத்ரம் செய்கிறது "இந்த शब्दकला (சப்தகலா) என்பது ஆரம்பத்தில் परा (பரா) என்ற சூக்ஷ்ம நிலையில் ஒரே ஒரு வடிவமாகவும் பின்பு स्वरम् (உயிர் எழுத்து), व्यञ्जनम् (மெய்யெழுத்து) என்ற இருவகையாக உருப்பெற்று 'அவற்றில் ஸ்வரம் என்பது 16 உருவங்களாகவும், வ்யஞ்சனம் என்பது 32 வடிவங்களாவும் விஸ்தாரம் அடைந்து 48 ஸ்வரூபங்களாக பெருக்கம் அடைந்திக்கிறது. இவ்வாறு விஸ்தாரம் பெற்ற 'परा' என்ற சூக்ஷ்ம சப்தகலையை நான் வந்தனம் செய்கிறேன்" என்றவாறு.

अक्षरा सन्निविष्टा என்ற இருபதங்களும் வைதிகப் பிரயோகத்தில் பகுவசன जस् என்ற விகுதி डा என்ற மாற்று ரூபம் அடைந்தவைகளாக இங்கு ப்ரயோகம் செய்யப்பட்டு இருக்கிறது. (இதன் "லௌகிக ப்ரயோகம்" अक्षराणि सन्निविष्टानि என்பது.)

भा. एवं पूर्वार्धेन बिन्दुचक्रं उपदिश्य तदधिष्ठात्रीं उपास्यां परदेवतां आह — अधिष्ठायैनां इति । एनां — सांप्रतं उपदिष्टां बिन्दुरूपां त्रिपुरां, अधिष्ठाय काचित् अस्ति देवता । "अस्तिः भवन्तीपरः प्रथमपुरुषः अप्रयुज्यमानोऽपि अस्ति" इति कात्यायन वचनात् अस्तेः अध्याहारः। उत्तरमन्त्रस्थक्रियया वा ल्यपः अन्वयः । सा च देवता

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अजरा — मरणरहिता । "जॄवयोहानौ" इत्यत्र वयोहानि पदेन वयोनाशस्यैव कथनात् । पुराणी - अनादिः, जन्मरहिता । देवतानां ब्रह्मविष्णुशिवादीनां अतिप्रसिद्धानां मध्ये, - महत्तरा - सर्वोत्कृष्टा । तासां देवतानां यो महिमा तद्रूपाच । देवतान्तराणां माहत्म्यस्यापि एषैव निदानम् । "एतदुपासनयैव तेषां महिमालाभः" इति भावः । त्रिपुरोपनिषदि, तदनुयायि पुराण तन्त्रादिषु च शिवविष्ण्वाद्युपासितानां विद्यानां बहुशः प्रदर्शनात् । "शंभुः पूजयते देवीं मन्त्रशक्तिमयीं शुभाम्" इत्यादिना निखिल देवता पूजनीय प्रतिमाभेदानां पद्मपुराणे विशेषेण कथनाच्च । तथा च "न भिक्षुको भिक्षुकान्तरं याचितुमर्हति, सति अन्यस्मिन् अभिक्षुके" इति न्यायेन देवतान्तरोपास्त्यपेक्षया परदेवतोपास्तिरेव ज्यायसी इति तु ध्वन्योऽर्थः । तदिदं अस्माभिः उक्तं परमशिवस्तवे

"त्वद्दत्तैश्वर्य भाजः परमशिव -
कथंकारमन्यान् सुरेन्द्रान् -
याचे देहीति शक्रद्रुहिण -
हरीमुखान् भिक्षुकान् भिक्षुकोहम् ।
अज्ञोऽपि द्वादशाहक्रतुविकृति -
शतस्याङ्ग भूतोपि चोक्थ्यः-
ज्योतिष्टोमोक्थ्यधर्मान् अभिलषति
न तु द्वादशाहोक्थ्यधर्मान्" ॥ इति

இவ்வாறு பூர்வார்த்தத்திஞல் பிந்துசக்ர ஸ்வரூபத்தை விளக்கி பின்பகுதியால் அந்த பிந்துசக்ரத்தில் வீற்றிருக்கும் தேவதையை உபநிஷத் உபதேசிக்கிறது. இங்கு கூறப்பட்ட "த்ரிபுரா" என்ற பிந்துசக்ரத்தை ஆசிரயித்து சிறந்த தேவதை ஒன்று ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

('तिङन्त क्रियापदं வினைச்சொல் கூறப்படாத இடங்களில் अस्ति என்ற கிரியாபதம் சேர்த்து அன்வயம் செய்ய வேண்டும்' என்ற காத்யாயன மஹரிஷியின் வசனப்படி अस्ति , என்ற பதம் अध्याहारं (சேர்த்துக் கொள்வது) செய்யப்பட்டு அர்த்தம் விளக்கப்பட்டு இருக்கிறது. மற்றும் अधिष्ठाय என்ற பதத்தை அடுத்த மந்திரத்திலுள்ள வினைச்சொல்லுடன் அன்வயம் செய்து கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுகிறது).

அந்த தேவதை अजरा - ஜரை அற்றது (கிழத்தன்மை அற்றது). जूवयोहानौ என்ற விவரணத்திலுள்ள वयोहानि என்பதறகு வயதின் முடிவு என்பதே பொருள். ஆகையால் अजरा என்பதால் மரணம் அற்றது என்ற பொருள் கிடைக்கிறது. पुराणी - மிகவும் பழைமையானது. இந்த இரு விசேஷணங்களால் இத்தேவதை ''ஆத்யந்தம்'' அற்றது எனக்கிடைக்கிறது.

ப்ரும்ம, விஷ்ணு ருத்ராதி பிரசித்த தேவதை களைக்காட்டிலும் महत्तरा - மிகவும் உத்க்ருஷ்டமான தேவதை. அந்த ப்ரம்மாதி பிரசித்த தேவதைகளின் महिमा - சிறப்புத் தன்மையும் இத்தேவைதையின் சொரூபமே. (மற்ற தேவதைகளின் சிறப்பிற்கு இந்த தேவதையே தான் காரணம். இத்தேவதையை உபாசித்தே மற்ற தேவதைகள் சிறப்பைப் பெறுகிறுர்கள் என்று தாத்பர்யம்).

த்ரிபுரோபநிஷத்திலும், பத்ம புராணத்திலும் பல தந்திரங்களிலும் சிவ, விஷ்ணு முதலிய பல தேவதைகள் உபாசித்த பற்பல விதமான வித்யா மந்திரங்கள் ''शम्भुः पूजयते देवीं मन्त्रशक्तिमयीं शुभाम्'' என்ற பல வாக்யங்களால் விவரிக்கப்பட்டு இருக்கின்றன. பத்ம புராணத்திலும் ஸமஸ்த தேவதைகளும் பூஜிக்கத்தக்கதான ஸ்ரீ தேவியின் பிரதிமாவிசேஷங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பிரமாணங்களால் இந்த தேவி महत्तरा ''மிகச்சிறந்த தேவதை'' என்பது சித்தமாகிறது. ''மற்ற யாரொருவரையும் எதிர்பாராமல் எதைக் கேட்டாலும் வாரிவழங்கும் சக்தி பெற்ற ஓர் கொடை வள்ளல் கொடுக்கத் தயாராக இருக்கும் நிலையில் ஓர் பிச்சைக்காரன் தன்னைப்போன்ற மற்றோர் பிச்சைக்காரனிடம் பிச்சை கேட்பானா'' என்ற லோகோக்தியை (பழமொழியை) அனுசரித்து பிக்ஷுகர்க ளான மற்ற தேவதைகளை உபாசிப்பதைக் காட்டிலும் சர்வாபீஷ்டங்களையும் தானே தரவல்ல, சர்வ ஐஸ்வர்யங் களையும் தன்வசம் பெற்றிருக்கும் 'சர்வேச்வரி'யான அம்பிகையை உபாசிப்பதே சாலச்சிறந்தது என்பது இந்த மந்திரத்தின் நாலாவது பாதத்தின் சூக்ஷ்ம தாத்பார்யம். இந்த பாவத்தையே எனது ''பரமசிவ ஸ்தவம்'' என்ற ஸ்தோத் திரத்தில் கூறியுள்ளேன். அந்த ஸ்துதியின் விளக்கமாவது —

''ஹே ஸர்வேச்வரா ! பிக்ஷுகனான நான், உன்னால் பிச்சையாக அளிக்கப்பட்ட ஐஸ்வர்யங்களைப் பெற்று ஆடம்பரமாக உலாவி வரும் என் போன்ற பிக்ஷுகர்களான இந்திரன், விஷ்ணு முதலானவர்களிடம் எவ்வாறு எனது ஆபீஷ்டங்களை யாசிப்பேன்'' என்று கூறி அதற்கு ஒரு வைதிக த்ருஷ்டாந்தமும் இங்கு கூறப்படுகிறது ''எவ்வாறெனில் - வைதிக கிரதுக்களுள் (கர்மாக்கள்) ஜ்யோதிஷ்டோமம் என்பது மஹா க்ரது. இது சில சிறு யாகங்களுக்கு ஆதாரமாக இருப்பதால் 'ப்ரக்ருதி' யாகம் எனப்படுகிறது. 'பிரக்ருதி' யாகத்தை ஆச்ரயித்து இருக்கும் சிறு யாகங்கள் ''விக்ருதி'' எனப்படுகின்றன. 'ஜயோதிஷ்டோமம்' என்ற ப்ரக்ருதி யாகத்திற்கு द्वादशाहं த்வாதசாஹம் என்ற சில சிறு யாகங்கள் 'விக்ருதி' யாகங்களாக இருக்கின்றன. விக்ருதியில் கூறப்படாத பல தர்மங்களை (கிரியா விசேஷங்களை) தனது ப்ரக்ருதி யாகத்திலிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் என்பது விதிமுறை, இங்கு 'விக்ருதி' யான 'த்வாதசாஹம்' என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ரது தனது ப்ரக்ருதியான ज्योतिष्टोम க்ரதுவிலிருந்து அநேக தர்மங்களை अतिदेश (பிக்ஷையாக) மூலமாக பெற்று பூர்த்தி அடைகிறது. பிக்ஷை பெற்று பூர்த்தி பெறும் 'விக்ருதி' யான இந்த "த்வாதசாஹ'த்திற்கு அங்கமானதும் விக்ருதியானதுமான उक्थ्यं' (உக்த்யம்) என்று ஓர் யாகம் இருக்கிறது. இந்த 'உக்த்யம்' என்ற யாகமும் அநேக தர்மங்களை 'ப்ரக்ருதி'யிலிருந்தே பெற்று பூர்த்தி அடைகிறது. த்வாதசாஹத்தின் விக்ருதியான இந்த उक्थ्यं என்ற க்ரதுவும் தனது ப்ரக்ருதியான த்வாதசாஹத்திலிருந்து தர்மங்களைப் பெறாமல் அந்த த்வாதசாஹ க்ரதுவுக்கும் தர்மங்களை விநியோகம் செய்யும் 'மூலப்ருதியான ஜ்யோதிஷ்டோமம் என்பதனிடமிருந்துதான் தர்மங்களைப்பெற்று பூர்த்தி அடைகிறது.

ஜடமான இந்த "உக்த்யம்" என்ற கிரியா விசேஷமே பிச்சை பெற்று பூர்த்தி அடையும் தன் பிரக்ருதியான த்வாதசாஹத்திலிருந்து தனக்கு வேண்டிய தர்மங்களைப் பெறாமல் அந்த த்வாதசாஹத்திற்கும் தர்மங்களை அளிக்கும் பரமப்பிரகிருதியான ஜ்யோதிஷ்டமோத்தினிடமிருந்தே தனக்குறிய தர்மங்களைப் பெறும்போது சிறிது அறிவுள்ள நான் உன்னிடமிருந்தே மகிமைகளைப் பெறுகின்ற பிக்ஷுகர்களான இந்திராதி தேவர்களை, ஹே தேவியே! எவ்வாறு நான் யாசிப்பேன் என்றவாறு.

भा. अजरा इत्यादिभिः ब्रह्मलिङ्गैः बिन्दुचक्राधिष्ठात्री देवता परं ब्रह्म एव इत्युक्तं भवति । देवतापदस्य विशेष्यत्वाभिप्रायेण स्त्रीत्वं अजरादिपदानाम् । अत एव श्रुत्यन्तरे क्लीबनिर्देशः । तथा च स्पष्टमेव आथर्वणाः आमनन्ति -

"अष्टाचक्रा नवद्वारा । देवनां पूः
अयोध्या । तस्याँ हिरण्मयः कोशः ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

स्वर्गो लोको ज्योतिषावृतः ।
तस्मिन् हिरण्मये कोशे ,
त्र्यस्त्रे त्रिप्रतिष्ठितम् ।
तस्मिन् यद्यक्षमात्मन्वत्
तद्वै ब्रह्मविदो विदुः'' ॥

भूपुरादि त्रिकोणान्त चक्राष्टकोपरि यः कोशः- गर्भीकृत रूपत्रयः- बिन्दुः इति यावत् । तस्मिन् यक्षं - महत् भूतं अस्ति । बहिः पूजाऽयोग्यत्वात् यक्षपदेन निर्देशः । तत् ब्रह्मविदः एव स्वात्मनि विदुः । नान्ये इत्यर्थः इति सेतु बन्धे विस्तरः ॥

अजरा - மரணமற்றது. पुराणी - அநாதியானது என்ற இரு விசேஷணங்களும் இந்த தேவதை ''பரப்பிரம்மமே'' எனக்குறிப்பிடுகின்றன. தேவதா என்ற விசேஷ்யம் ஸ்தரீலிங்கத்தில் இருப்பதால் விசேஷணங்களும் ஸ்த்ரீ லிங்கத்தில் அமைந்துள்ளன. சில சுருதிகளில் இந்த தேவதை நபும்ஸகலிங்க சப்தங்களாலும் குறிப்பிடப் பட்டிருப்பதால் இந்த தேவதை 'பரப்பிரம்மமே' என்பது உறுதியாகிறது. இந்த தேவதை - பரப்பிரம்மமே என்பதை ஆதர்வண சுருதிகள் கூறுகின்றன - अष्टाचक्रा என்பவைகளால், அதாவது -

''பூபுரம் முதற் கொண்டு த்ரிகோணம் வரை எட்டு சக்ரங்கள். ஒன்பது த்வாரங்களைக் கொண்டவை. அது தேவபுரீ. யாவராலும் முற்றுகையிட்டு அணுகமுடியாதது. அந்த சக்ரசமூகத்திற்கு மேலே ஓர் தங்கமயமான கோசம். (தேவியின் இருப்பிடம்). அந்த கோசம் மூன்று தேவதாரூபங்களை தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிறது. (அதாவது பிந்து சக்ரம் எனக் கொள்க). அது ஸ்வர்க்க ரூபம். ஜ்யோதிர் மயமாக (ஒளி வடிவமாக) பிரகாசிக்கிறது. அந்த தங்க மயமான பிந்து சக்ரம் என்ற கோசத்தில் ஓர் யக்ஷம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(பெரிய பூதம்) வீற்றிருக்கிறது. அந்த யக்ஷத்தை சிறந்த பிரம்மவித்துக்கள் மட்டிலுமே தனக்குள் அறிந்து அனுபவித்து வருகிறார்கள். இந்த மத்ய கோசத்திலுள்ள தேவதை 'பாஹ்ய பூஜைகளுக்கு சாத்தியமற்றது என்பதால் ''யக்ஷம்'' எனக்குறிப்பிடப்படுகிறது.'' இது சம்பந்தமான மற்ற பல விஷயங்கள் 'சேது பந்தம்' என்ற கிரந்தத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.''

भा. एवं बिन्दुचक्रं उक्त्वा त्रिकोण, वसुकोणात्मकचक्रद्वय समष्टिरूप नवयोन्यात्मक चक्रद्वयं उपदेष्टुं द्वितीयां ऋचं आह - नवयोनीरिति

இவ்வாறு பிந்துசக்ரத்தை விஸ்தாரமாகக்கூறி அடுத்து 'த்ரிகோண' 'வஸு கோண' சக்ரங்களின் சமஷ்டிவடிவமான நவகோணசக்ரம் இரண்டாவது மந்திரத்தால் விளக்கப் படுகிறது.

उप. नवयोनीः नवचक्राणि दधिरे -
नवैव योगाः नवयोगिनीश्च ।
नवानां चक्रे अधिनाथाः स्योना -
नव मुद्राः नव भद्राः महीनाम्'' ॥ २ ॥ इति

भा. तिस्रः पुरः नवयोनीः दधिरे । एकं अपि बिन्दुचक्रं त्र्यात्मकत्वात् प्रत्येकं रूपत्रयं दध्रे इति । दीधीङ् दीप्तिदेवनयोः इति छान्दसधातोः इदं रूपम् । दीपनं च प्रकाशनम् । फलतः उत्पादनमेव विवक्षितोऽर्थः । शान्तात्वावच्छेदेन इच्छाशक्तिः, क्रियाशक्तिः ज्ञानशक्तिश्च इति तिस्रः देवताः उदपादयत् । अम्बिकात्वावच्छेदेन ब्रह्म विष्णु रुद्रान् स्त्रीरूपान् वामा जयेष्ठा रौद्री शक्तिनामकान् अजनयत् । परात्वावच्छेदेन पश्यन्ती, मध्यमा, वैखरी इति वाग्देवताः अजीजनत् इत्यर्थः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"सा परदेवतैव एनां त्रिपुरां अधिष्ठाय नवयोनीः दधिरे" इति वा अन्वयः । एताः वाग्देवताः एव नवयोनिचक्रात्मना परिणताः इति वासनाध्वनिः ।

किंच त्रैलोक्यमोहनादीनि नवचक्राणि जातजनिष्यमाणानि संस्कारात्मना नवयोनिष्वेव सन्ति । तदेतदाह - नवचक्राणि कर्तॄणि नवयोनीः - दधिरे इति । शक्तित्रिकोणद्वयेन वह्नित्रिकोणेन एकेन च नवयोनिचक्र निष्पत्तिः । प्रति त्रिकोणं - तिस्रो रेखाः इति नवानां रेखानां योगाः अपि कोणरूपाः नवैव । तेन नवयोनीः दधिरे । नवचक्राणां इहसत्वादेव तत्रत्य प्रकटादियोगिनी नवकमपि कोणात्मना इहैव तिष्ठति इति भावः ॥

முந்திய மந்திரத்திலிருந்து **तिस्रः पुरः** என்றவைகளை இங்கு **अनुवृत्ति** செய்து கொண்டு **"तिस्रः पुरः नवयोनीः दधिरे"** என்று அன்வயம் செய்க. **तिस्रः पुरः** என்பவைகளால் குறிப்பிடப்பட்ட ஒரே பிந்து சக்ரமானது ஒன்பது யோனிசக்ரங்களை ஸ்ருஷ்டித்தது என்பது பொருள். அதாவது பிந்து சக்ரமானது சாந்தா, பரா, அம்பிகா என்ற மூன்று சக்திகளை தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. அந்த மூன்று சக்திகளும் தனித்தனியே மூன்று மூன்று சக்திகளை சிருஷ்டித்தன. 'சாந்தா' சக்திமூலமாக இச்சா, க்ரியா, ஞான என்ற மூன்று சக்திகளும், 'அம்பிகா சக்தி' மூலமாக ஸ்த்ரீ வடிவம் கொண்ட ப்ரம்ம, விஷ்ணு, ருத்ர ரூபங்களான வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்ற மூன்று சக்திகளும், 'பரா' என்ற சக்தி மூலமாக பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற மூன்று வாக்தேவதா சக்திகளும் ஆக இந்த ஒன்பது சக்திகளும் பிந்து என்ற ஒரே சக்ரத்தாலேயே உற்பத்தி செய்யப்பட்டவைகள் என்பது தாத்பர்யம். **दधिरे** என்ற இங்குள்ள வைதிக சப்தத்திற்கு **दीपनं** ப்ரகாசப்படுத்தல் எனப்பொருள். (சிருஷ்டிக்கப்பட்டன என தாத்பர்யம்).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த பரதேவதையே பிந்து சக்ரத்தில் வீற்றிருந்து ஒன்பது யோனி சக்ரங்களை சிருஷ்டித்தது என்றும் ஓர் அன்வயம் கொள்க. "முன் குறிப்பிட்ட ஒன்பது வகையான சக்தி தேவதைகளே யோனி வடிவம் பெற்று நவயோனி சக்ர ஸ்வரூபமாக பரிணமம் பெற்று இருக்கின்றன என்று பாவனை செய்யப்படவேண்டும்" என்பது ஸூக்ஷ்மார்த்தம்.

த்ரிகோண சக்ரத்திற்கு மூலப்ரகிருதிகளான रेखा கோடுகளில் தனித்தனியே மும்மூன்று கோடுகளால் ஏற்பட்ட "சக்தி த்ரிகோணம்" இரண்டு, "வஹ்னி த்ரிகோணம்" ஒன்று ஆக இம்மூன்று கோணங்களின் சேர்க்கையால் நவயோனி சக்ரம். (மத்தியில் உள்ள த்ரிகோணம் ஒன்று. அதை ச்சுற்றி எட்டு த்ரிகோணங்கள். ஆக ஒன்பது நவயோனி சக்ரங்கள்) ஏற்படுகிறது. இந்த ஒன்பது கோடுகளின் सन्धि சேர்க்கைகளும் கோண ரூபத்தில் ஒன்பதாக இருக்கின்றன. கோடுகளும் அவைகளின் சேர்க்கைகளும் ஒன்பதாக இருப்பதால் ச்ருஷ்டிக்கப்பட்ட மூன்று சக்ரங்களும் இனி ச்ருஷ்டிக்கப்பட வேண்டிய ஆறு சக்ரங்களும் அதாவது (த்ரைலோக்ய மோஹனம் முதல் பிந்து வரை உள்ள ஒன்பது சக்ரங்களும்) ஸம்ஸ்கார ரூபத்தில் மிக ஸூக்ஷ்மமாக இந்த நவயோனி சக்ரத்திலேயே அடங்கியிருக்கின்றன என்பதும் அந்தந்த சக்ரங்களுக்குறிய प्रकटादि ப்ரகடாதி யோகிநீ தேவதா ஸமூஹமும் இந்த நவயோனி சக்ரத்திலேயே அமர்ந்திருக்கிறது என்பதும் "नव चक्राणि नव योनीः दधिरे" "ஒன்பது சக்ரங்களும் நவயோனிகளை ஆச்ரயித்திருக் கின்றன" என்ற் சொற்றொடரால் விளக்கப்படுகிறது.

भा. "देशकालानवच्छिन्नं तदूर्ध्वं परमं महः" इत्यादि व्यवहारात् देशकालावच्छिन्नः बिन्दुचक्रादिप्रपञ्चः ब्रह्मणः अधः तिष्ठति" इति लभ्यते । एतन्मूलक एव श्रीचक्रस्य मेरुप्रस्तारोऽपि। तेन एकस्मिन् चक्रे भूपुरादिबिन्द्वन्ताः उपर्युपरि नव भूमिकाः । तासां अधिपतयोऽपि त्रिपुराचक्रेश्वरी नामानः, नव एव । ताः अपि नवयोनिष्वेव सूक्ष्मरूपेण

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

तिष्ठन्ति इत्याह - "चक्रे नवानां महीनां अधिनाथाः अपि (कर्त्र्यः) नवयोनीः दधिरे" इति । स्योनाः इति चक्रेश्वरी विशेषणम् । सुखहेतुभूताः इत्यर्थः । नवमुद्राः — संक्षोभिण्यादि योन्यन्ताः अपि इहैव स्थिताः । नवभद्रास्तु तन्त्रे विवृताः-

"धर्माधर्मौ तथा आत्मानः
मातृमेये तथा प्रमा" । इति

पुण्यं, पापं, आत्मा, अन्तरात्मा, परमात्मा, ज्ञानात्मा, प्रमाता, प्रमेयं, प्रमा इति नवकं तदर्थः । आत्मचतुष्टयस्वरूप विवरणं आत्मोपनिषदि द्रष्टव्यम् ।

"चक्रं नवात्मकमिदं नवधा भिन्नमन्त्रकम्" इति उपबृह्मणदर्शनात् भद्रापदेन मन्त्रा वा ग्राह्याः । ते च "नवचक्रेश्वरीमन्त्राः" इति केचित् । सान्निध्यात् "मुद्रामन्त्रा" एव इति तु युक्तम् ।

"बिन्दुत्रिकोणवसुकोणात्मक चक्रत्रयरूपे संहारचक्रे एव सर्वं श्रीचक्रं सूक्ष्मरूपेण तिष्ठति" इति तु पिण्डितोऽर्थः । आपत्कालिकसंक्षिप्त-पूजाप्रकारेषु वसुकोणादिबिन्द्वन्त मातृपूजा विधिः यः तन्त्रेषु उपलभ्यते तत्र इयमेव श्रुतिः मूलम् । अत्र सर्वत्र उपबृह्मणानि तन्त्रपुराणवचनानि तु विस्तरभयात् न लिख्यन्ते ॥

"தேசகாலங்களால் வரையறுக்க இயலாதபடி யாவற்றிற்கும் மேலான உயரத்தில் "महः" என்ற பரப்பிரம்மம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது" என்ற உலக வ்யவகாரத்தால் ப்ரம்மாண்டம் முதலான சகல பிரபஞ்சங்களும் அந்த பரப்பிரம்மத்திற்கு கீழேயே அமைந்திருக்கின்றன என்று அறியமுடிகிறது. ஆகவே பிந்து சக்ரம் முதல்' த்ரைலோக்ய மோஹனம் வரையிலுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்பது சக்ர சமூஹமும் ஒன்றன் கீழ் ஒன்ருக मह: என்ற 'ஜ்யோதீ' ரூபமான பரப்பிரம்மத்திற்கு கீழேயே வரிசைக்கிரமமாக அமர்ந்திருக்கின்றன எனவும் கிடைக்கிறது. இந்நிலையின் அடைப்படையில் தான் ஸ்ரீ சக்ரத்திற்கு ''மேருப்ரஸ்தாரம்'' என்ற ஓர் ஸம்ப்ரதாயமும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒன்றின் மேல் ஒன்ருக அமைந்த பூபுரம் முதல் பிந்து வரையில் உள்ள ஒன்பது சக்ரசமூகமே 'நவபூமிகைகள்' எனக் கூறப்படுகிறது. இந்த பூமிகைகளின் நாயகிகளான த்ரிபுரா சக்ரேச்வரீ முதலான ஒன்பது சக்ரேச்வரீ தேவதைகளும் இந்த நவயோனி சக்ரத்திற்குள்ளேயே சூக்ஷ்மமாக வீற்றிருக்கிருர்கள். இந்த விபரத்தைத்தான் चक्रे नवानां महीनां अधिनाथाः अपि नवयोनीः दधिरे'' என்று சுருதியிலுள்ள பதங்கள் அறிவிக்கின்றன. स्योनाः என்பது மிகச் சுகத்தைத்தருபவள் என்ற பொருள் கொண்டு சக்ரநாயகிகளுக்கு விசேஷணமாக நிற்கிறது.

மற்றும் 'ஸம்க்ஷோபிணீ' முதல் 'யோனி' வரையிலுள்ள ஒன்பது 'முத்ரா தேவிகளும்' நவகோண சக்ரத்தினுள்ளேயே பிரகாசம் பெற்று இருக்கிருர்கள் என்பது ''नवमुद्राः नवयोनीः'' दधिरे என்ற சொற்ருெடர் விளக்குகிறது.

नवभद्राः - பாபம், புண்யம், ஆத்மா, அந்தராத்மா, ஞானத்மா, பரமாத்மா, மாதா, மானம், மேயம் இந்த ஒன்பதும் भद्राः பத்ரைகள் என தந்திரங்களில் கூறியிருக்கிறது. நான்கு வகையான ஆத்மாக்களைப்பற்றி ஆத்ம உபநிஷத்தில் கவனிக்கவும். ஒன்பது வகையான சக்ரங்களும் தனித்தனியே வெவ்வேறு வகையிலான வெவ்வேறு மந்திரங்களை உடையன என்ற உபப்ரம்மணம் இருப்பதால் இங்கு भद्राः என்பதற்கு மந்திரங்கள் என்றே பொருள். இவை 'நவசக்ரேச்வரீ மந்திரங்கள்' என சிலரது அபிப்ராயம். मुद्रा, भद्रा என்ற சேர்க்கை இருப்பதால் 'ஸாந்நித்யம்' (सान्निध्यं) என்ற அர்த்தநிர்ணய பிரமாணத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு 'முத்ரா (मुद्रा) மந்திர'ங்களேயே ஸ்வீகரிக்க வேண்டும் என்பது சாஸ்திரக் கொள்கை. இம்மந்திர தேவதைகளும் இச்சக்ரத்திற்குள்ளேயே சப்த வடிவத்தில் இருக்கின்றன என்பதை नव भद्रा अपि नव योनीः दधिरे என்ற பதங்கள் கூறுகின்றன.

பிந்து, த்ரிகோண, வஸு கோண சமூஹமான ஸம்ஹார சக்ரத்திற்குள்ளேயே ஸ்ரீசக்ரத்தின் மற்ற ஏனைய பொருள்களும் அதிநுட்பமாக அடங்கியுள்ளன என்பதே இந்த இரண்டு மந்திரங்களின் முக்கிய தாத்பர்யம்.

வஸு கோணத்திலிருந்து பிந்து வரை செய்யப்படும் ஆபத் காலத்திற்குறிய பூஜாவிதிகளை விளக்கும் தந்திர விதிகளுக்கு இந்த சுருதியே பிரமாணம். மற்ற ஏனைய ப்ரமாணங்கள் க்ரந்த விரிவின் அச்சத்தால் எழுதப்படவில்லை.

भा. अथ दशारद्वय, मन्वश्ररुपं स्थितिचक्रं उपदेष्टुं तृतीयां ऋचं आह-

இனி பத்து, பத்து த்ரிகோணங்களுள்ள இரு சக்ரம், பதினுலு கோணங்கள் உள்ள ஓர் சக்ரம் ஆக மூன்று சக்ரங்கள் கொண்ட ஸ்திதிசக்ரத்தை உபதேசிக்க மூன்ருவது மந்திரத்தை கூறுகிருர்.

उप. ''एका सा आसीत् प्रथमा सा नवासीत् -
आसोनविंशत् आसोनत्रिंशत् ।
चत्वारिंशत् अथ तिस्रः समिधा
उशतीरिव मातरो मा विशन्तु'' ॥३॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भा. एका सा आसीदिति - आभ्यः नवयोनिभ्यः सूक्ष्मभूतानि पञ्च, स्थूलभूतानि पञ्च इति भूतदशकं अभूत् । तेभ्यः स्थूलसूक्ष्म भेदेन शब्दादितन्मात्रदशकं अभूत् । तेभ्यश्च कर्मेन्द्रियाणि पञ्च, ज्ञानेन्द्रियाणि पञ्च, अन्तःकरणानि चत्वारि, इति चतुर्दशकं अजायत । एताः सर्वाः अपि देवताः स्त्रीरूपत्वात् योनिरूपा एव । तदिदं सर्वं - "भूततन्मात्रदशकं प्रकाशालम्बनत्वतः । द्विदशार स्फुरद्रूपं" इत्यादिना तन्त्रे विवृतम् । सैव प्रक्रिया पूर्वानुवादपूर्वकं इह उपदिश्यते ।

या प्रथमा - सर्व जगत्कारणभूता सा एकैव पूर्वं आसीत् बिन्दुरूपा । अथ नव आसीत् - नव योन्यात्मना । अथोनविंशत् - एकोनविंशति स्वरूपा आस - नवयोनयः - अन्तर्दशारयोनयश्च इति । त्रिंशत् इत्यादि छान्दसम् । अथ ऊनत्रिंशत् आस बहिर्दशारयोनीनां मेलनेन । अथ चत्वारिंशत् तिस्रश्च — पूर्वासु च चतुर्दश मेलनेन त्रिचत्वारिंशत् योनिस्वरूपा एकैव देवी जाता इत्यर्थः । बिन्दुचक्रस्य अन्तराकारत्वेन "एका सा आसीत्" इत्यस्य योन्याकृतीनां मध्ये अपरिगणनम् । समिधा-समिद्धा - देदीप्यमाना । एताः मातरः मा विशन्तु - मां प्रविशन्तु, मच्छरीरस्यापि श्रीचक्ररूपत्वात् इति स्तोत्रकृतः प्रार्थनम् । धेनवोऽपि वत्ससामीप्यं इच्छन्त्यः द्रुतं यथा गोष्ठं प्रविशन्ति तथा एताः प्रविशन्तु इत्यर्थः । इयमेवश्रुतिः चक्रन्यासविधीनां तन्त्रस्थानां मूलम् । एतासामेव देवतानां स्वशरीरे न्यस्तव्यत्वात् "योगिन्यो यास्तु तास्सर्वा गेहं कुर्वन्तु मे वपुः" इति शक्तिन्यासमन्त्रलिंगसंवादात्तस्यापि मूलम् ।

இந்த நவயோனி சக்ரங்களிலிருந்து ஸூக்ஷ்ம பூதங்கள் ஐந்தும் ஸ்தூல பூதங்கள் ஐந்தும் ஆக பத்து பூதங்கள் ஜனித்தன. ஸூக்ஷ்ம பூதங்களிலிருந்து சப்த, ஸ்பார்ச, ரூப, ரஸ, கந்த என்ற ஸூக்ஷ்ம தன்மாத்திரைகள் ஐந்தும் ஸ்தூல பூதங்களிலிருந்து சப்தாதி ஸ்தூல தன்மாத்ரைகள் ஐந்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டாயின. இவைகளிலிருந்து ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து ஞானேந்திரியங்கள், அந்தக்கரண பேதங்கள் நான்கு ஆக பதினுன்கு அம்சங்கள் ஏற்பட்டன. இவ்வாறு ஜனித்த (முப்பத்து நான்கு) 34 அம்சங்களும் ஸ்த்ரீ தேவதை களானபடியால் யோனி வடிவங்களையே பெற்றிருக்கின்றன. இவற்றுள் ஸ்தூல, ஸூக்ஷ்ம, பூதங்கள் பத்தும் 'அந்தர்தசாரசக்ரமாகவும், அவைகளின் தன் மாத்திரைகள் பத்தும் 'பஹிர் தசாரமாகவும்,' கர்மேந்திரிய, ஞானேந்திரிய, அந்தக்கரண பேதங்கள் ஆகிய பதினுன்கும் சதுர்தசகோண (பதினுலு கோண) சக்ரமாகவும் பரிணமித்தன என தந்திரங்கள் விவரிக்கின்றன. இந்த தந்திர விவரணங்களை அனுசரித்தும் முந்திய ரிக்கில் கூறியதை அநுவாதம் செய்தும் இந்த மூன்ருவது ரிங்மந்திரம் உபதேசிக்கிறது.

சமஸ்த ஜகத்தின் உற்பத்திக்கும் எந்த தேவதை காரணமாக முதலில் இருந்ததோ அந்த ஒரே தேவதையே பிந்து சக்ர வடிவமாக ஆரம்பத்தில் தோற்றமளித்தது. அந்த ஒரே பிந்துசக்ரமே ஒன்பது ரூபங்களாக விரிவடைந்து நவயோனிசக்ர உருவம் பெற்றது. மறுபடியும் பத்தொன்பதாக பெருக்கமடைந்து 'நவயோனி சக்ரமாகவும்', 'அந்தர்தசாரமாகவும்' விஸ்தாரம் அடைந்தது. அதன்பிறகு இருபத்தொன்பதாக ரூபங்களைப் பெற்று 'நவயோனி', 'அந்தர்தசார,' 'பஹிர்தசார' சக்ரங்களாக மாறியது. பின்பு நாற்பத்து மூன்று கோணங்களாக நவயோனிசக்ர, 'அந்தர்தசார', 'பஹிர்தசார', 'மன்வச்ர' சக்ரங்களாக மிக விஸ்தாரமான ரூபங்களில் பிரகாசித்தது. ஆகவே பிந்துசக்ரம் ஒன்று, அதன் விஸ்தாரம் நாற்பத்து மூன்று, ஆக நாற்பத்து நான்கு சக்ரங்களாக பிந்து சக்ரம் ஒன்றே விசாலமான உருவம் பெற்றது. பிந்துசக்ரம் கோணவடிவம் பெருததால் கோணங்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. இந்த நாற்பத்து நாலு சக்ரங்களும் மாத்ரு ஸ்வரூபங்களான ஸ்த்ரீ தேவதைகளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தேவதைகள் समिधा மிகுந்த ஒளியுடன் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறார்கள். ''இந்த மாத்ரு தேவதைகள், தங்களுக்கு யாதொரு காமனையும் இல்லை என்றாலும், உபாஸகர்களை அனுக்ரஹிக்கும் பொருட்டு, उशतीरिव காமனைகள் உள்ளவர்கள் போன்ற தோற்றத்துடன் 'பசுக்கள் தனது இளம் கன்றுகளை நினைத்து ஆவலுடன் வனங்களிலிருந்து தன் கொத்தடிக்கு வந்து தனது கன்றுகளை திருப்தி செய்வது போல்', உபாஸகர்களை அன்புடன் அணுகி அவர்களது தேஹமும் ஸ்ரீசக்ர ரூபங்களாகவே இருப்பதால் அவ்வுபாஸகர்களின் தேஹங்களில் பிரவேசித்து அனுக்ரஹம் செய்யட்டும்'' என்பதாக இந்த மந்திரத்தால் பிரார்த்திக்கப்படுகிறது.

இங்கு கூறப்படும் தேவதைகளையே சரீரத்தில் ஆங்காங்கு ந்யாஸம் செய்யுமாறு விதிக்கின்ற பற்பல தந்திர வசனங்களுக்கும் இந்த ச்ருதியுடன் மிகவும் ஒற்றுமைப்பட்டு வ்யக்தமாக கூறுகின்ற 'योगिन्यो यास्तु ताः सर्वाः गेहं कुर्वन्तु मे वपुः' (ஸமஸ்த யோகினிகளும் என்னுடைய சரீரத்தை இருப்பிடமாக (गेहम्) க்கொள்ளட்டும்) என்ற 'சக்தி சங்கம தந்திர'த்திலுள்ள மந்திரலிங்க வசனத்திற்கும் இந்த சுருதியே மூலப்பிரமாணமாகிறது.

भा. अथ सृष्टिचक्रे अवशिष्टे वृत्तत्रयविशिष्ट पद्मद्वयं उपदेष्टुं चतुर्थीं ऋचं आह - ऊर्ध्वज्वलदिति -

उप. ''ऊर्ध्वज्वलत् ज्वलनज्योतिः अग्रे -
तमो वै तिरश्चीनं अजरं तद्रजोऽभूत् ।
आनन्दनं मोदनं ज्योतिः इन्दोः
एता उ वै मण्डला मण्डयन्ति'' ॥४॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भा. चतुर्दशारं अधोऽधोहि द्वेपद्मे अष्टदलषोडशदलात्मके वर्तेते । तयोश्च कर्णिकावृत्ते द्वे । बाह्यवृत्तं एकम् । एवं च **"त्रीणि वृत्तानि"** इति कतिपयसिद्धान्तः । अत एव **"ज्येष्ठारूपं चतुष्कोणं वामारूपं भ्रमित्रयम्"** इत्यत्र भ्रमित्रयपदस्य वृत्तत्रयान्तराल द्वयवर्ति पद्मद्वयलक्षकत्वेन प्राचां आचार्याणां व्यारव्या युज्यते । **"वृत्तत्रितय संयुतं सरोरुहद्वयं शाक्तैः अग्नीषोमात्मकं प्रिये"** इति वचनेऽपि एषैव व्यारव्या । तानि च वृत्तानि अग्नि, सोम, सूर्यगुणत्रयरूपाणि इति प्रकृतायां ऋचि वर्णनेनैव तदन्तरालपद्मद्वयं वर्णितं वेदितव्यम् ।

अक्षरार्थस्तु - अग्रे - स्थिति चक्रोत्तर चक्रेषु । प्रथमं तमो वै - निश्चित तमोगुणात्मकं ज्वलननामकं ज्योतिर्मण्डलं अभूत् । ऊर्ध्वज्वलत् इति विशेषणेन अग्निज्वालारूप दृढीकारः, ऊर्ध्वभागे कज्जलदर्शनेन तमोरूपत्वदृढीकारश्च । अत एव तेजोमयस्य तमस्त्वोक्तौ असाङ्गत्यशंकापरिहाराय "वै" इत्यव्ययम् । ततः परं - तिरश्चीनं - तिर्यक् प्रसारि ज्योतिर्मण्डलं, रक्तत्वात् रजोगुणं अभूत् । तच्च सूर्यरूपम् । अग्नि सूर्ययोः ऊर्ध्वतिर्यक्प्रसृतेः प्रत्यक्षत्वात् । यदाहुः अभियुक्ताः-

"गतं तिरश्चीनं अनूरुसारथेः
प्रसिद्धं ऊर्ध्वज्वलनं हविर्भुजः" ॥ इति

अजरं इति विशेषणं अग्नितः वैलक्षण्यदृढीकाराय । ततः मोदनं - वैषयिक सुखोत्पादकम् इन्दोः ज्योतिर्मण्डलं अभूत् । आनन्दपदेन सत्वगुणात्मकता उक्ता । सत्वाधिक्यस्यैव ब्रह्मानन्दाभिव्यञ्जकत्वात् । उ, वै इति कोमलामन्त्रणे । वै - एवकारार्थे वा । एवं त्रीणि मण्डलानि वृत्तानि । एताः, मातृः मण्डयन्ति - शोभावतीः कुर्वते । वृत्तत्रयान्तरालवर्तिकमलयुगलविशिष्टं श्रीचक्रं कार्यक्षमम् । न केवलं

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मन्वश्रान्तम् इत्यर्थः । मन्वश्रादि बिन्द्वन्तपूजायाः आपत्कालिकत्वात् इति भावः ।

இனி மிஞ்சியுள்ள சிருஷ்டிசக்ரத்தில் அடங்கிய மூன்று வட்டங்களோடு கூடிய இரு பத்ம சக்ரங்கள் நான்காவது ரிக்கால் வர்ணிக்கப்படுகிறது.

சதுர்தசார சக்ரத்திற்கு கீழே, கீழே எட்டு தளங்களுடன் ஒன்றும், பதினாறுதளங்களுடன் ஒன்றும் ஆக இரு பத்மதள சக்ரங்கள் இருக்கின்றன. அவ்விருபத்மங்களின் இரு கர்ணிகைளிலும் தனித்தனியாக இருகர்ணிகா விருத்தங்கள். இரு பத்மசக்ரங்களையும் சுற்றி வெளியில் பாஹ்யவிருத்தம் ஒன்று ஆக மூன்று விருத்தங்கள் என்று ஓர் சித்தாந்தம். "ज्येष्ठारूपं चतुष्कोणं वामारूपं भ्रमित्रयम्" என்றதிலுள்ள भ्रमित्रयं என்ற பதத்திற்கு லக்ஷணா (लक्षणा) விருத்தியை ஆச்ரயித்து "மூன்று விருத்தங்களுக்குள் அடங்கிய இரு அஷ்டதள, ஷோடசதள பத்மசக்ரங்கள்" என ப்ராசீனர்கள் வ்யாக்யானம் செய்து இருப்பது மொத்தம் மூன்று விருத்தங்கள் என்ற சித்தாந்தத்திற்கு மிகப்பொருத்தமாக இருக்கிறது. மற்றும் "वृत्तत्रितयसंयुतं सरोरुहद्वयं अग्नीषोमात्मकं प्रिये" - ஹே அன்பின் வடிவமே! மூன்று விருத்தங்களால் சுற்றப்பட்ட பத்மத்வயங்களில் ஒன்று அக்னிரூபமாகவும், மற்றொன்று ஸோமரூபமாகவும் விளங்குகிறது என்ற ஈசனின் வாக்யமும் மூன்று வட்ட சித்தாந்தத்தையே வெளியிடுகிறது. இந்த மூன்று வட்டங்களும் முறையே அக்னி, சூர்ய, சந்திரர்களின் குணங்களாகிய தமஸ், ரஜஸ், சத்வம் என்ற முக்குணங்களின் வடிவங்களே. இவ்வாறு மூன்று வட்டங்களை விவரிப்பதன் மூலம் அதனுள் அடங்கிய இரு பத்மசக்ரங்களும் விவரிக்கப்பட்டதாக அறியவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த சுலோகத்தின் பொருளாவது - स्थिति சக்ரத்தை அடுத்துள்ள சக்ரங்களில் तमो वै தமோகுணத்தையே தனது தன்மையாகக் கொண்ட ज्वलनम् என்ற ஜ்யோதிர் மண்டலம் முதலாவதாக இருக்கிறது. ऊर्ध्वज्वलन என்ற ஜ்யோதிஸ்ஸிற்கு கொடுத்திருக்கும் விசேஷணத்தால் இந்த ஜ்யோதிஸ் அக்னிஜ்வாலா ரூபம் என்பதும், ஜ்வாலைகளின் நுனியில் கறுப்பு நிறம் தென்படுவதால் இது தமோகுணஸ்வரூபம் என்பதும் விளக்கப்படுகிறது. ஆகவே முதல் வட்டம் 'அக்னி மண்டலம்' என சித்திக்கிறது. वै என்ற பதம் நிச்சயம் என்ற அர்த்தத்தில் முதல் மண்டலம் அக்னிரூபம் என்பதையும், தமோகுணம் பெற்றது என்பதையும் நிச்சயிக்கிறது. ஆகவே ''தேஜோரூபமான அக்னிக்கு தமோகுணம் சொல்வது பொருத்தமா'' என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை.

இரண்டாவதாக ''तिरश्चीनं ज्योतिः'' - குறுக்காகச் செல்லும் தன்மை கொண்ட ஒளிக்கூட்டம். இது சிகப்பாக இருப்பதால் ரஜோ குணத்தன்மை உள்ளது. சூர்யன் குறுக்காகச் செல்லும் ஸ்வபாவம் உள்ளவனுதலால் இந்த இரண்டாவது வட்டம் ''சூர்ய மண்டலம்'' என்றுகிறது. மாகர் (माघ कवि) என்ற மகாகவி ''தொடையற்றவனை சாரதியாகக் கொண்ட சூரியனுக்கு குறுக்காகச் செல்லும் தன்மையும், ஹவிஸ்ஸை புஜிக்கும் அக்னிக்கு உயரே நோக்கிச் செல்லும் தன்மையும் சர்வபிரசித்தம்'' என வர்ணிப்பது இங்கு மிகப் பொருத்தம்.

अजरं என்ற இரண்டாவது வட்டத்திற்குறிய விசேஷணச் சொல் அக்னியைக் காட்டிலும் சூர்யன் விசேஷத்தன்மை பெற்றவன் என்பதை குறிப்பிடுவதற்காக. அதாவது அக்னி 'इन्धनम्' (எரிபொருள்) இல்லாவிடில் जरा (மறையும்) தன்மையை பெறுகிறது. மற்ற எதையும் எதிர் நோக்காமல் சதாசர்வ காலமும் விருத்தி, க்ஷயங்கள் அற்று ஒரே நிலையில் சூரியன் ஒளி வீசிக்கொண்டிருக்கிறுன் என்பது கருத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்ருவது வட்டத்தை ப்பற்றி आनन्दनम्, मोदनं ज्योतिः इन्दोः என்ற பதங்கள் விளக்குகின்றன; मोदनम् - விஷய சுகத்தைக் கொடுப்பது, आनन्दनं - பரானந்தத்தை தருவது. சத்வகுணத்தின் சிறப்பால்தான் ஆநந்தம் உண்டாகிறது என்பதால் இந்த ஆநந்தனம் என்ற சொல் சத்வகுணம் பெற்றது என்ற தாத்பர்யத்தில் நிற்கிறது. சந்திரன் மூலம் ஆநந்தம் ஏற்படுவது கண்கூடாக இருப்பதால் இந்த மூன்ருவது வட்டம் சந்திர மண்டலமாகிறது. ஆகவே இம்மூன்று விருத்தங்களும் (வட்டங்கள்) முறையே அக்னி, சூர்யன், சந்திரன் இவர்களின் மண்டலங்களே. சுருதி மாதாவானவள் உபாஸகர்களை மிக அன்புடன் उ, वै என்ற சொற்களால் சம்போதனம் செய்கிருள். மேலும் वै (நிச்சயம்) என்ற சொல் இங்கு கூறப்பட்டவைகள் நிச்சயமானவை என்ற பொருளில் இருக்கிறது. இந்த மூன்று வட்டங்களான அக்னி, சூர்ய, சந்திர மண்டலங்களும் மாத்ரு தேவதைகளை मण्डयन्ति - மிகவும் शोभा (அழகு) வுள்ளவைகளாக செய்கின்றன.

இந்த சுலோகத்தின் முக்கிய தாத்பர்யமாவது - மூன்று விருத்தங்களுடன் கூடிய பத்மத்வய சக்ரம் முதற்கொண்டு பிந்து வரையிலுள்ள ஸ்ரீசக்ரத்தின் ஆராதனமே மிகச்சிறந்தது. சாதகர்களுக்குறிய நற்பயன்களை கொடுக்கவல்லது. மன்வச்ரம் வரை உள்ள ஸ்ரீசக்ர பூஜை ஆபத்காலங்களுக்காக சங்க்ரஹ (குறுகிய) பூஜையாக விதிக்கப்பட்டு இருப்பதால் அந்த பூஜை அவ்வளவு சிலாக்கியம் இல்லை என்பதாக.

भा. नवमं भूगृहात्मकं चक्रं उपदेष्टुं पञ्चमीं ऋचं आह - ''तिस्रश्च रेखाः'' इति

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. तिस्रश्च रेखाः सदनानि भूमेः-
त्रिविष्टपाः त्रिगुणाः त्रिप्रकाशाः ।
एतत् पुरं पूरकं पूरकाणां -
अत्र प्रथेते मदनो मदन्या'' ॥५॥ इति

भा. तन्त्रान्तरेषु कर्णिकावृत्तद्वयातिरिक्तानि पद्मद्वयात् बहिः त्रीणिवृत्तानि विहितानि दृश्यन्ते । तत्पक्षे 'तिस्रश्चरेखाः' इत्येतावन्मात्रं वृत्तरेखात्रयपरं ज्ञेयम् । न चैवं सति कर्णिकाद्वयवृत्तस्यैव अवशेषेण मण्डलत्रय कथनासंगतिः - इति वाच्यम् । तन्त्रराजे मन्वश्रात् बहिः मर्यादावृत्तस्य अष्टदलवृत्तातिरिक्तस्य कथनेन अस्याः श्रुतेः तन्मूलकत्वस्य उपपत्तेः । ''भूमेः सदनानि रेखाः तिस्रः'' इति सामानाधिकरण्यं अक्लिष्टोऽर्थः । ता एव त्रिविष्टपाः । भुवनत्रयरूपाः । देवतावासभूमित्वात् स्वर्गरूपा वा । त्रिगुणाः गुणत्रयरूपाः । त्रिप्रकाशाः - सूर्य, चन्द्राग्निरूपवृत्तत्रयप्रकाशरूपाः ।

श्रीचक्रवर्णनं उपसंहरति एतदिति - सार्धचतुष्टयेन वर्णितं पुरं - श्रीपुरमिव सपरिवारपरदेवतावासस्थानं चक्रम् । पूरकाणां - भक्तमनोरथपरिपूरकाणां शिवविष्णवादीनामपि, पूरकं - मनोरथपरिपूरकम् । अत्र - श्रीचक्रे । मदनः - शिवकामेश्वरः । मदन्या - शिवकामसुन्दरी च । प्रथेते - स्वमयूखात्मकाणिमादि नानारूपविस्तारेण विलसतः इत्यर्थः । मदनी , आ इति छेदो वा । पुंयोगलक्षणो ङीष् । आ प्रथेते इति अन्वयः । छन्दसिपरेऽपि व्यवहिताश्च इत्यभ्यनुज्ञानात् ।

ஒன்பதாவது சக்ரமான பூகிருஹம் கூறப்படுகிறது.

சிற்சில தந்திரங்களில் பத்மத்வய சக்ரங்களுக்கு வெளியே மூன்று விருத்தங்கள் கூறப்பட்டுருக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த ரிக்கில் உள்ள "तिस्रश्च रेखाः என்ற இருபதங்கள் தனிவாக்கியமாக கருதப்பட்டு இருபத்மங்களுக்கும் வெளியில் உள்ள இந்த மூன்று வட்டங்களையே குறிக்கின்றன" என ஓர் வ்யாக்யானம் இருக்கிறது. இந்த வ்யாக்யானத்தை அங்கீகரிக்கும் பக்ஷத்தில் பத்ம த்வயங்களின் கர்ணிகா விருத்தங்கள் இரண்டு மட்டுமே மிஞ்சுவதால் முந்திய மந்திரத்தில் - "மூன்றுவட்டங்கள் அக்னி சூர்ய சந்திர மண்டலங்கள்" என க்கூறியது எவ்வாறு பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது. தந்திரராஜ கிரந்தத்தில் அஷ்டதள கர்ணிகா விருத்தத்திற்கும் மன்வச்ரத்திற்கும் இடையே மன்வச்ரத்தின் மர்யாதா விருத்தமாக ஓர் விருத்தம் கூறப்பட்டிருப்பதால் அந்த மன்வச்ர எல்லை வட்டம் ஒன்று பத்மத்வய கர்ணிகா விருத்தங்கள் இரண்டு, ஆக இந்த மூன்று வட்டங்களையே ऊर्ध्वज्वलन என்ற முந்திய ஸ்லோகம் விளக்குகிறது என்று இங்கு எழுந்த கேள்விக்கு சமாதானம் கூறலாம். மன்வச்ர மர்யதா விருத்தத்தைக் கூறும் தந்திர ராஜத்திற்கு இந்த ऊर्ध्वज्वलन என்ற சுருதிதையே ப்ரமாணமாகக் கொள்ளவும். ஆகவே இந்த கொள்கைப்படி சதுர்தசாரத்தின் எல்லை வட்டம் ஒன்று, பத்மங்களின் கர்ணிகா வட்டங்கள் இரண்டு, அவைகளின் எல்லை வட்டம் ஒன்று, உபரியும் தனியாக இரண்டு வட்டங்கள் ஆக ஆறு (6) வட்டங்கள் ஆகின்றன.

ஆனால் तिस्रश्च रेखाः என்ற சொற்களும், அதை அடுத்துள்ள सदनानि भूमेः என்றதிலுள்ள सदनानि என்ற சொல்லும் அடுத்துள்ள त्रिविष्टपाः, त्रिगुणाः त्रिप्रकाशाः என்ற சொற்களும் ஒரே வேற்றுமை வசனங்களில் இருப்பதால் ஒன்றுக் கொன்று விசேஷண விசேஷ்யங்கள் எனக்கொண்டு "संभवति सामानाधिकरण्ये वैयाधिकरण्येन अन्वयः अयुक्तः" என்ற சாஸ்திர சித்தாந்தப்படி तिस्रः रेखाः भूमेः सदनानि என்று सामानाधिकरण्य (अभेद) மாக அன்வயிப்பதுதான் உசிதமாகிறது என பாஷ்யகாரரின் ஆசயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலோக்தின் பொருளாவது. ''तिस्रः रेखाश्च भूमेः सदनानि'' மூன்று கோடுகளும் பூமியின் வீடுகள். அதாவது 'பூ'க்ருஹங்கள் இந்த பூக்ரஹங்கள் என்ற கோடுகளே त्रिविष्टपाः - மூன்று உலகங்கள் - சிறந்த தேவதைகள் வசிக்கும் இடமாதலால் 'ஸ்வர்க்கம்' எனவும் பொருள். त्रिगुणाः - முக்குணங்களின் உருவங்கள். त्रिप्रकाशाः - முன் மந்திரத்தில் கூறப்பட்ட அக்னி, சூர்ய, சந்திர மண்டலங்களான மூன்று வட்டங்களின் ஒளிப்பிழம்புகள்.

ஸ்ரீ ச்கரநிருபணம் முடிக்கப்படுகிறது. एतत् इति. நாலரை சுலோகங்களால் இதுவரை விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்ட पुरं என்ற ஸ்ரீசக்ரமானது சகல பரிவாரங்களுடன் கூடிய பரதேவதையின் முக்கிய வாஸ ஸ்தானமான 'ஸ்ரீபுரம்' என்ற ஸ்ரீநகரமே தான். மேலும் ''पूरकाणां अपि पूरकम्'' - பக்தர்களின் மனோரதங்களை நிறைபெறச் செய்யும் சக்தி பெற்றவர்களான ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், இந்திரன் முதலிய சகல தேவதைகளுடைய அபீஷ்டங்களை பூர்த்தி செய்விப்பதும் இந்த ஸ்ரீசக்ரமே. ஸமஸ்த தேவதைகளின் பற்பல விதமான சக்திகளும் இந்த தேவதையின் ஆதீனத்திலேயே உள்ளன எனக்கருத்து.

अत्र - இந்த ஸ்ரீசக்ரத்தில் मदनः - மதனன் என்ற சிவகாமேச்வரனும், मदन्या - மதன்யா என்ற சிவகாம சுந்தரியும் प्रथेते - (मयूख) ஒளிப்பெருக்கத்தின் உருவங்களான அணிமாதி சித்திகள் முதலிய பலவித விஸ்தார ஸ்வரூபத்துடன் மிகப்பெருமிதத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். मदन्या என்பதை मदनी + आ எனப்பிரித்து आ என்பதை प्रथेते என்பதுடன் சேர்த்து मदनः मदनी च आ प्रथेते என்றும் ஓர் விரிவுரை. मदनी என்பது पुंयोगे ङीष् என்ற விதிப்படி மதனின் மனைவி என்ற அர்த்தம் கொண்டிருக்கிறது. आ என்ற உபஸர்க்கம் छन्दसिपरेऽपि

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

व्यवहिताश्च என்ற சூத்திரப்படி प्रथेते எனபதுடன் छान्दस மாக சேர்ந்து இருக்கிறது. மதனன் என்ற ஈசனும் மதனீ என்ற ஈசுவரியும் நன்றாக ப்ரகாசித்து கொண்டிருக்கிறார்கள் எனப்பொருள்.

भा. क्षेत्रेषु विविधेषु नामभेदेन यानि देवीरूपाणि पुराणेषु तन्त्रेषु च उपलभ्यन्ते तानि सर्वाणि अस्या एव इति उपदेष्टुं षष्टीं ऋचं आह

उप. ''मदन्तिका, मानिनी, मङ्गला, च
सुभगा, च सा सुन्दरी, शुद्धिमत्ता।
लज्जा, मतिः, तुष्टिः, इष्टा, च पुष्टा
लक्ष्मीः उमा, ललिता, लालपन्ती'' ॥ ६ ॥

भा. मदन्तिकेति - पद्मपुराणे देवितीर्थपरिगणनावसरे कतिपयानि रूपाणि उक्तानि। ''प्रयागे लालितादेवी'' इत्यादि।

''लङ्कायां मङ्गलानाम त्रिकूटे भद्रसुन्दरी।
करवीरे महालक्ष्मीः उमादेवी विनायके॥
देवदारुवने पुष्टिः मेधा काश्मीरमण्डले।
तुष्टिः वत्सेश्वरे तथा''

इत्यादीनि। अन्यान्यपि रूपाणि तत्र तत्र अन्वेष्याणि। मदन्तिका इत्यादि चतुर्दशकं ''वाराणस्यां विशालाक्षी'' इत्यादीनामपि उपलक्षणम्। यदेव किंचित् देवीरूपं तेन लालप्यमाना अपि सैव इत्यर्थः। लालपन्तीपदं लालप्यमानपरम्। प्रातिपदिकात् उच्चरन्ती विभक्तिः प्रातिपदिकार्थे विशेषकं इति शाबरभाष्ये प्रयोगात्। अथवा पञ्चदश अक्षराणां पञ्चदश इमाः देवताः। शुद्धिमत्ता इत्यत्र सिद्धिमत्ता इति आथर्वणः पाठः॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவீயானவள் பற்பல க்ஷேத்திரங்களில் வெவ்வேறான பெயர்களுடனும் ரூபங்களுடனும் பிரசித்தமாக விளங்கிக் கொண்டிருப்பதாக பல புராண, தந்திரங்களில் கூறப்படுகிறது. அவ்வாறான தேவீ ஸ்வருபங்கள் யாவும் இந்த 'த்ரிபுரசுந்தரி'யின் ஸ்வரூபங்களே என்பது ஆறாவது மந்திரத்தால் கூறப்படுகிறது.

பத்மபுராணத்தில் தேவீதீர்த்தங்களை கணக்கிடும் சந்தர்ப்பத்தில் சில தேவீஸ்வரூபங்கள் கூறப்படுகின்றன. எவ்வாறெனில் -

''பிரயாகத்தில் லலிதா, லங்கையில் மங்களா, த்ரிகூடத்தில் பத்ரசுந்தரீ, கரவீரத்தில் மஹாலக்ஷ்மீ, விநாயகத்தில் உமாதேவீ, தேவதாருவனத்தில் புஷ்டிதேவீ, காச்மீர மண்டலத்தில் மேதா தேவீ, வத்ஸேச்வரத்தில் துஷ்டிதேவீ'' ,என்றவாறு. இதுபோன்று மற்றும் அநேக தேவீஸ்வரூபங்கள் பல தந்திரங்களில் பரிசீலனை செய்து கிரஹிக்கப்பட வேண்டும். மதந்திகா முதலிய பதினான்கும் **वाराणस्यां विशालाक्षी** வாரணசியில் விசாலாக்ஷீ முதலான பல தேவீ ரூபங்களையும் உபலக்ஷணமாக குறிப்பிடுகின்றன. **लालपन्ती** என்ற பதம் **प्रातिपदिकात् उच्चरन्ती** என்ற **शाबर** பாஷ்ய ப்ரயோகத்திலுள்ள **उच्चरन्ती** என்பது **उच्चार्यमाणा** என்ற மாற்றம் அடைவது போல **लालप्यमाना** என்பதின் அர்த்தத்தில் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ''**सौम्य** - அழகான, அல்லது **क्रूर** - பயங்கர உருவங்களாகவோ, அருவறுக்கத்தக்க அல்லது இனிமையான ரூபங்களாகவோ, சிறிய அல்லது பெரிய உருவமாகவோ, சிறந்த நற்சொற்களாலோ அல்லது கொச்சைச் சொற்களாலோ, அறிவாளிகாளாலோ அல்லது பாமரர்களாலோ மற்றும் எந்தெந்த வகைகளிலோ கொண்டாப்படும் தேவீ ஸ்வரூபங்கள் யாவும் இந்த 'மஹா த்ரிபுரசுந்தரி'யின் ஆநந்த ரூபங்களேயாகும்'' என்பது **लालपन्ती** என்பதின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உட்பொருள். மதந்திகா முதல் லாலபந்தீ வரையிலுள்ள பதினைந்து சொற்களும் பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் பதினைந்து அக்ஷரங்களின் அதி தேவதைகளின் நாமாக்கள் என்றும் சிலபெரியோர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். शुद्धिमत्ता என்பது सिद्धिमत्ता என்று இருப்பதாக ஆதர்வண பாடம் கூறுகிறது.

भा. एवं वर्णितायाः देवतायाः उपास्तिं विज्ञातुं सप्तमीं ऋचं आह - "इमां विज्ञाय" इत्यादि

उप. इमां विज्ञाय सुधया मदन्ति -
परिस्रुता तर्पयन्तः स्वपीठम्।
नाकस्य पृष्ठे महतो वसन्ति
परं धाम त्रैपुरं च आविशन्ति" ॥ ७ ॥

भा. इमां - पूर्वोक्तां परदेवतां, विज्ञाय - विधिविशेषपूर्वकं ज्ञात्वा - गुरूपसदन दीक्षादिपूर्वकं उपास्तिं स्वीकृत्य, स्वपीठं - स्वशरीराभिन्नं श्रीचक्रं, तत्र देवतां सावरणां, सुधया परिस्रुता - पीयूषीकृतेन द्रव्येण, तर्पयन्तः - तर्पणाद्युपचारैः पूजयन्तः, ये मदन्ति - विषयभानप्रमोषपूर्वकं स्वात्मैक विषयक निर्विकल्पकवृत्तिभाजः भवन्ति - ते महतो नाकस्य पृष्ठे वसन्ति, त्रैपुरं धाम आविशन्ति च इत्यर्थः। अमृतीकरणं संस्कारान्तराणां उपलक्षणम्। तदभिमानिदेवतायाः सुधादेवी इति, संवित् इति च नाम, इति संस्कारमन्त्र वर्णात् अवगम्यते। "मन्त्रसंस्कारसंशुद्धं देवतामृतमुच्यते" इति रुद्रयामले च। महानाकपृष्ठवासः विविध पुरुषार्थफलोपलक्षकः । त्रिपुरायाः परं धाम तु मुक्तोपसृप्यं स्वरूपम्। तेन मोक्षः उच्यते। सर्वान् कामान् मोक्षं च आप्नुवन्ति इति भावः। एवं सर्वगताशक्तिः सा ब्रह्म इति विविच्यते -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"सगुणा निर्गुणाचेति द्विविधोक्ता मनीषिभिः।
सगुणा रागिभिः सेव्या निर्गुणा तु विरागिभिः॥
धर्मार्थकाममोक्षाणां स्वामिनी सा निराकुला।
ददाति वाञ्छितान् अर्थान् अर्चिता विधिपूर्वकम्॥"

इति देवीभागवतेऽपि स्मरणात्। "सर्वथा मतिमान् दीक्षेत" इत्यादि कल्पसूत्रादिगत विशेषविधीनां इयमेव श्रुतिः मूलम्॥

இவ்வாறு வர்ணிக்கப்பட்ட தேவியின் உபாஸனுக்கிரமம் பற்றி 7வது மந்திரம் கூறுகிறது.

भा. इमां विज्ञाय - முந்திய சுலோகங்களால் விவரணம் செய்யப்பட்ட இந்த 'த்ரிபுரா தேவியை' அந்தந்த விசேஷ விதி முறைப்படி நன்ருக அறிந்து, அதாவது - ஓர் ஸத்குருவை அணுகி மாசற்ற பணிவிடைகளால் அவரை திருப்தியுறச்செய்து அவர் மூலமாகவே தீக்ஷா க்ரஹணம் முதலான பல ஸம்ஸ்காரங்களால் சுத்தி பெற்று மந்திர விசேஷங்களேயும், உபாஸனுக்கிரமங்களேயும் உபதேசக்கிரமம் மூலமாகவே ஸ்வீகரித்து பின்பு சிறந்த அப்யாஸமுறைகள் மூலமாக இந்திரிய, மனோநிக்ரஹம் செய்யும் திறம் பெற்று பக்குவம் அடைந்த மனத்தினராய் "தானே தேவதை, தன் சரீரமே ஸ்ரீசக்ரம், தனது தேகமாகிய ஸ்ரீசக்ரத்திலேயே ஸ்ரீதேவீ வீற்றிருக்கிருள்" என்ற திடச்சித்தத்துடன் परिस्रुता सुधया स्वपीठं तर्पयन्तः - மந்திர ஸம்ஸ்காரங்களால் அமிர்தமாக மாற்றப்பட்ட सुधा என்ற 'த்ரவத்ரவ்யத்தால்' ஸ்ரீ சக்ரமாக பாவிக்கப்பட்ட தனது பௌதிக சரீரத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ தேவியை தர்பணுதி உபசார விசேஷங்களால் பூஜை செய்து வருகின்ற உபாஸக ச்ரேஷ்டர்கள் मदन्ति - யாவற்று உலக விவகாரங்களிலிருந்தும் விடுபட்டு தன்னே மாத்திரமே (स्वात्ममात्रावशेष) விஷயமாகக் கொண்ட 'நிர்விகல்பக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருத்தி' என்ற சமாதிநிலை வாயிலாக ஞானம் பெற்றவர்களாய் மேன்மையான ஸ்வர்க்க வாஸத்தையும் பரமோத்க்ருஷ்டமான त्रैपुरं धाम த்ரிபுரசுந்தரியின் ஸ்தானம் என்ற மோக்ஷ பதத்தையும் அடைகிறார்கள்.

அமிருதீகரணம் செய்யப்பட்ட த்ரவத்ரவ்யத்திற்கு सुधादेवी என்பவள் அதிஷ்டான தேவதை. அவளே संवित् என்றும் அழைக்கப்படுகிறாள் என்பதாக சில மந்திரங்கள் சூசனை செய்கின்றன. मन्त्रसंस्कारसंशुद्धं देवतामृतमुच्यते 'மந்திரங்களால் சுத்தம் செய்யப்பட்ட த்ரவ்யம் தேவதாமிருதம்' என ருத்ரயாமளம் என்ற நூல் கூறுகிறது. नाकस्य पृष्ठे என்ற சொற்கள் ஸ்வர்க்க வாஸத்துடன் மற்ற தர்ம, அர்த்த, காம என்ற மூன்று அர்த்தங்களையும் உபலக்ஷணமாக கூறுகின்றன. त्रैपुरं धाम என்பது முக்தர்களால் மட்டிலுமே அடையத் தக்கதும் ஸ்ரீத்ரிபுரசுந்தரியின் வாஸ ஸ்தானமுமான பரப் பிரம்ம ஸ்தானமே. அதாவது மோக்ஷமே என்பது கருத்து.

இவ்வாறு எங்கும் நிறைந்திருக்கும் அந்த பராசக்தி பரப்பிரம்ம ஸ்வரூபமே என தேவீ பாகவதமும் கீழ்கண்டாறு விவேசனம் செய்கிறது.

"இப்பராசக்தி ஸகுணா, நிர்குணா என இரு வகை. காமனை உள்ளவர்கள் ஸகுண சக்தியையும், நிஷ்காமிகள் நிர்குண சக்தியையும் வழிபடுகிறார்கள். தர்ம, அர்த்த, காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களுக்கும் மோக்ஷம் என்ற உயர்ந்த புருஷார்த்தத்திற்கும் இப்பராசக்தியே யஜமானீ (உரிமை பெற்றவள்). முறைபடி ஆராதிப்பவர்களுக்கு சகல சௌபாக்யங்களையும் கொடுத்து பரிபாலித்து வருகிறாள்" என.

'सर्वथा मतिमान् दीक्षेत' - ஸகல வழிமுறைகளாலும் சிறந்த ஸம்ஸ்காரங்களைப்பெற்று அறிவு பெற்ற உபாஸகன் கண்டிப்பாய் தீக்ஷை பெற வேண்டும் என்ற கல்ப சூத்திரங்களிலுள்ள விசேஷ விதிகளுக்கும் இந்த சுருதியே மூலம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भा. श्री विद्यादीक्षितः द्रव्यवता स्वपीठार्चनेन निर्विकल्पकवृत्तिद्वारा सर्वान् कामान् भावयेत्'' इति भावनाविशिष्ट भावनान्तरविधिः पर्यवस्यति। विज्ञाय तर्पयन्तः इति अधिकारिविशेषणत्वेन श्रुतमपि तर्पणं फलभावनाकरणत्वेन सम्बध्यते। ''हिरण्यदा अमृतत्वं भजन्ते'' इतिवत्। अप्राप्तार्थकत्वात् विधिशक्ति प्रतिबन्धाभावाच्च मन्त्रत्वेऽपि न विधित्व व्याघातः। ''वसन्ताय कपिञ्जलान् आलभेत प्रणीयादीन् नाथमाना यतव्यान्। आस्य जानन्तो नामचित् विवक्तन'' इत्यादि मन्त्राणामपि बहुशो विधित्वस्वीकारात्।

இனி இம்மந்திரத்தின் பொருள் மீமாம்ஸா, சாஸ்திர முறைப்படி விளக்கப்படுகிறது. ''ஸ்ரீ வித்யா தீக்ஷாதி ஸம்ஸ்காரங்கள் பெற்ற உபாஸகன் தன் தேகமாகிய ஸ்ரீ சக்ரத்தில் ஸ்தானம் பெற்றிருக்கும் ஸ்ரீதேவியை அமிர்தமாக்கப்பட்ட சுதாத்ரவ்யத்தால் தர்பணம் (तर्पणम्) என்ற பூஜை செய்து, அப்பூஜையால் 'मदः' மதம் என்ற நிர்விகல்பக சமாதி ரூபமான अवान्तर (நடுநிலை) வ்யாபாரம் மூலமாக தர்மம் முதல் மோக்ஷம் ஈறாக உள்ள சகல பலன்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும்'' எனக் கூறுவதன் வாயிலாக மோக்ஷத்தை (भाव्य) ப்ரயோஜன மாகவும் தர்ப்பணம் என்ற அர்ச்சனையை காரணமாகவும் கொண்ட ஓர் பிரதான விதியையும், இவ்விதிக்கு அங்கமாக சுதாத்ரவ்யத்தை காரணமாகவும் பூஜையை भाव्य (பிரயோஜனம்) மாகவும் கொண்ட ஓர் உபவிதியையும் இந்த மந்திரம் விதிக்கிறது. भावनाविशिष्ट भावनान्तरविधिः (ஒருவிதிக்குள் அடங்கிய அங்கமான மற்றோர் விதி) என இதைக் கூறுவார்கள். घटः (குடம்) என்ற காரியத்திற்கு தண்டம் காரணம் என்பதில் தண்டத்தின் (भ्रमणं) சுழற்சியானது இடைநிலை (अवान्तर) வியாபாரமாவது போல் இங்கு ''பூஜையால் மோக்ஷம்'' என்ற பிரதான விதியில் मदः மதம் என்ற சமாதிநிலை இடைநிலை காரணமாகவே (अवान्तर

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

व्यापर) அமைந்திருக்கிறது. तर्पयन्तः என்ற பதம் முதல் வேற்றுமை (प्रथमाविभक्ति) யில் நின்று, உபாஸக அதிகாரிக்கு விசேஷணம் போல் தோன்றினாலும் (हिरण्यदाः अमृतत्वं भजन्ते) ஸ்வர்ணம் கொடுப்பவன் மோக்ஷம் பெறுகிறான் என்ற சுருதியில் முதல் வேற்றுமையிலுள்ள हिरण्यदाः என்பதிற்கு हिरण्यदानेन (ஸ்வர்ணம் கொடுப்பதினால்) என்று அர்த்தம் கொள்வது போல் இங்கும் तर्पयन्तः என்பதற்கும் தர்பணத்தினால் என்று பொருள் ஸ்வீகரிக்கப்படுகிறது.

மந்திரரூபமான இந்த ரிக் विधि (விதி) ரூபமாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. वसन्ताय कपिञ्जलान् आलभेत प्रणीयादीन् என்ற மந்திரத்திற்கு விதிசக்தியும், மந்திர சக்தியும் அங்கீகரிப்பது இதற்கு திருஷ்டாந்தம். "अज्ञातार्थ बोधनं विधिः" (அறியப்படாத விஷயங்களை அறிவிப்பது விதி) என்ற லக்ஷணப்படி "த்ரவத்ரவ்யம் அர்ச்சனைக்கு சாதனம், அர்ச்சனை மோக்ஷத்திற்கு சாதனம்" என்ற இரு அபூர்வ விஷயங்களை இவ்விதி கூறுவதாலும் விதிசக்தி, மந்திரசக்தி இரண்டிற்கும் ஒன்றுக்கொன்று விரோதம் இல்லாததாலும் வேறு பிரதி பந்தகம் ஏதும் இல்லாததாலும் இந்த ரிக் மந்திரம் விதியாகவும், மந்திரமாகவும் விளங்குகிறது.

भा. - वस्तुतस्तु - 'मदन्ति' इत्यस्य यदाग्नेयवाक्ये इव लेट्त्वकल्पनया भावार्थाधिकरणन्यायेन चिद्देव्यभिन्न स्वात्ममात्रविषयक वृत्तिविशेषवाचक मदधात्वर्थस्यैव करणत्वम्। अन्तर्याग पदवाच्यता अपि तस्यैव। मदतेः वृत्तिविशेषवाचकत्वात्। परिस्रुता इति तु मत्वर्थलक्षणया धात्वर्थेन अन्वेति। भावनान्वितयोः उभयोः अरुणैकहायनीन्यायेन वा पार्ष्टिकान्वयः। 'प्रतितिष्ठन्ति इत्यस्येव नाकस्य पृष्ठे इत्यादेः भाव्यसमर्पकत्वम्। चकारेण फलसमुच्चयकथनात् "पूत एव, तेजस्वी, अन्नादः इन्द्रियावी, पशुमान् भवति" इत्यत्रेव संवलिताधिकारत्वम्। अनेकेषां पुरुषार्थनां व्यासज्यवृत्ति फलत्वं इति यावत्। न पुनः सर्वेभ्यः

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कामेभ्यः इत्यत्रैव प्रत्येकपर्याप्तम्। तर्पणं तु फलवदफलन्यायेन अङ्गम्। इमां विज्ञाय इति तु विद्वत्तधिकारितावच्छेदको धर्मः। अत एव -

"कुलदीक्षाविहीनानां नाधिकारो द्विजन्मनाम्॥"

इति समयाचार स्मृतिः उपपद्यते।

இனி वस्तुतस्तु என ஆரம்பித்து தனது சொந்தக் கருத்தை பாஷ்யகாரர் விளக்குகிறார்.

"अग्निहोत्रं जुहोति" என்ற வாக்கியத்தில் உள்ள जुहोति பதத்தில் ப்ரகிருதியான हु என்ற धातु ஹோமம் என்ற பொருளையும் ति என்ற लेट् प्रत्ययम् (விகுதி) செய்ய வேண்டும் என்ற விதித்தன்மையையும் கூறுகிறது. இந்த விதித்தன்மையைத்தான் भावना என்று மீமாம்ஸா சாஸ்திரம் கூறுகிறது. விகுதியின் அர்த்தமான भावना என்ற விதி சக்தியில் ப்ரக்ருதியான हु தாதுவின் அர்த்தமான ஹோமம் கரண (முக்கிய சாதன)மாகவும் ஸ்வர்காதி அபீஷ்டங்கள் फल (भाव्य) மாகவும் அன்வயம் பெறுகிறது. अग्निहोत्रम् என்ற பதம் नाम (பெயர்) ஆக இருப்பதால் हु தாதுவின் அர்த்தமான ஹோமத்துடன் அபேதமாக சம்பந்தம் பெற்று "அக்னிஹோத்ரம் என்ற ஹோமத்தால் ஸ்வர்க்கத்தைப் பெறவேண்டும்" என விதிக்கிறது. "ப்ரக்ருதியின் அர்த்தம் விகுதியின் அர்த்தமான பாவனையில் கரணமாக சம்பந்தம் பெறவேண்டும்" என்று भावार्थाधिकरणम् என்ற பகுதியில் மீமாம்ஸா சாஸ்திரம் சித்தாந்தம் செய்து இருக்கிறது. இந்த 'பாவார்த்தாதிகரண' ந்யாயப்படியும் अग्निहोत्रं जुहोति என்ற வாக்யார்த்த திருஷ்டாந்தப்படியும் இந்த மந்திரத்திலுள்ள मदन्ति என்ற பதத்தில் मद என்ற ப்ரக்ருதி 'மதம்' என்ற பொருளையும், ति என்ற ப்ரத்யயம் (விகுதி) பயனைப் பெறவேண்டும் என்ற (भावना) விதி சக்தியையும் கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு मद என்பதின் பொருளாவது - "உலக சம்பந்தமான சகலவிதப் பற்றுதலும் நீங்கி தன்னை மாத்திரம் (स्वात्ममात्रावशेष) விஷயமாகக் கொண்ட நிர்விகல்பகஞான ரூபமான 'அந்தக்கரண விருத்தி' என்ற சமாதி நிலையை அடைதல்" என்றவாறு. இங்கு मदन्ति என்பதிலுள்ள ति பிரத்யயத்தின் அர்த்தமான பாவனையில் ப்ரக்ருதியான 'மத் என்பதின் அர்த்தமான சமாதிநிலை என்ற அந்தக்கரண விருத்திவிசேஷம் करण (முக்கிய சாதன) மாகவும் "नाकस्य पृष्ठे" என்ற பின்பகுதியால் கூறப்படும் ஸ்வர்காதி மோக்ஷம் வரையிலுள்ள ஸகல பலன்களும் भाव्य மாகவும் அன்வயம் பெறுகிறது. परिस्रुता सुधया என்ற பதங்கள் मत्वर्थलक्षणा விருத்தியின் மூலம் ஸம்ஸ்காரங்கள் பெற்ற த்ரவத்ரவ்ய ஸேவனத்தால் கிடைக்கப்பெற்ற என்ற அர்த்தம் பெற்று मद धातु வின் அர்த்தத்துடன் விசேஷணமாக அன்வயிக்கின்றன. इमां विज्ञाय तर्पयन्तः என்ற பதங்கள் இந்த விதிசக்தியான பாவனைக்கு அதிகாரிகளான உபாஸகர்கள் உபாஸ்தி முறைகளை நன்ருக அறிந்து (तर्पणम्) அர்ச்சனை பூஜை முதலியவைகளை செய்பவர்களாக இருக்க வேண்டும் என்ற அதிகாரியின் தன்மையை விளக்கும் விசேஷணங்கள்.

இந்த சுருதியின் பூர்ணதாத்பர்யமாவது "ஸ்ரீ சத்குருவின் மூலம் உபாஸ்திதர்மங்களை சந்தேக விபரீதங்களின்றி செம்மையாக அறிந்து தீக்ஷா ஸம்ஸ்காரங்களைப் பெற்று அந்தந்த விதிமுறைப்படி தர்ப்பணம், அர்ச்சனை, பூஜை முதலிய உபசார விசேஷங்களை அனுஷ்டித்து வரும் உபாஸக ச்ரேஷ்டன் மந்திராதி ஸம்ஸ்காரங்களால் அமிர்தமாக மாற்றப்பட்ட सुधा என்ற த்ரவத்ரவ்யத்தால் தனது தேகமாகிய ஸ்ரீ சக்ரத்தில் ஸ்தானம் கொண்டிருக்கும் ஸ்ரீ தேவியை ஆராதித்து அதனுல் ஏற்படும் मदं என்ற அந்தக்கரண விருத்தி விசேஷரூப நிர்விகல்பக சமாதியினுல் ஸ்வர்காதிகளையும் மோக்ஷம் என்ற பரப்பிரம்மாபேத நிலையையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெறவேண்டும் என்பதாக. இவ்வாறுன சமாதிநிலைதான் अन्तर्याग (அந்தர்யாகம்) எனக் கூறப்படுகிறது.

இந்த स्वात्ममात्रावशेष निर्विकल्पक अन्तःकरणवृत्ति என்ற சமாதி நிலைதான் परं धाम உயர்ந்த நிலையான மோக்ஷத்திற்கு முக்கிய சாதனம் என்பது ஸ்ரீ பாஸ்கரராயரின் கருத்து.

(குறிப்பு: சுருக்கமான விளக்கமாவது — முன் கூறப்பட்ட இருவித வ்யாக்யானங்களில் முதல் வ்யாக்யானப்படி சுதாத்ரவ்யத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும். அந்த அர்ச்சனையால் மோக்ஷம் பெறவேண்டும் என இரு விதிகள். அர்ச்சனையால் மோக்ஷம் என்ற விதியில் मदन्ति என்ற மதம் அவாந்தர வ்யாபாரம் (இடை நிலை) ஆகவே அர்ச்சனைதான் மோக்ஷத்திற்கு சாதனம் என்பதாக.

இரண்டாவது வ்யாக்யானப்படி அறிவாளியாயுள்ள சுத்திபெற்ற உபாஸகனுல் தேவீ பூஜாங்கமான த்ரவத்ரவ்ய ஸேவனத்தின் மூலமாக அடையப்பெறும் मदः என்ற நிர்விகல்பக சமாதி நிலைதான் மோக்ஷத்திற்கு பிரதான சாதனம் என்பதாக.)

'पूत एव तेजस्वी अन्नादो भवति'' என்று கூறப்பட்ட கர்மாவிற்கு பரிசுத்தி, தேஜஸ், அன்னம் முதலிய போக்ய பொருள்கள் என்ற யாவும் சேர்ந்தே ஒரே பலன் என்பது போல் இங்கு त्रैपुरं च என்ற च காரம் பலன்களின் சமுதாயத்தைக் கூறுவதால் ஸ்வர்க்கம் முதல் மோக்ஷம் ஈருக உள்ள யாவும் சேர்ந்தே பலன் எனக்கிடைக்கிறது. ஒவ்வொரு பலனுக்கும் தனித்தனி கர்மா எனக்கூறும் सर्वेभ्यः कामेभ्यः என்ற விதி இங்கு பொருந்தாது.

''फलवत्सन्निधौ अफलं तदङ्गम्'' பயனுடன் கூடிய கர்மாவிற்கு, பக்கத்தில் கூறப்பட்ட பலன் சொல்லப்படாத கர்மாவானது அங்கம்' என்ற சித்தாந்தப்படி ஸ்வர்க்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலிய பலன்களுடன் விதிக்கப்பட்ட 'மதந்தி' என்றதாகக் கூறப்படும் கிரியைக்கு, பலன்கூறப்படாத 'तर्पयन्तः' என்ற தர்ப்பணம் அங்க கர்மாவாக ஆகிறது.

इमां विज्ञाय என்ற பதங்கள் அதிகாரி விசேஷணங்கள். இந்த ஆசயத்தையே "कुलदीक्षाविहीनानां नाधिकारो द्विजन्मनाम्" 'குலதீக்ஷை இல்லை என்றால் மூவர்ணத்தார்களுக்கும் கூட இந்த சமயாசாரத்தில் அனுமதி கிடையாது' என்ற சமயாசார ஸ்ம்ருதியும் கூறுகிறது.

भा- इह "तर्पयन्तः" इति बहिर्याग विधौ वक्ष्यमाणे "निवेदयन्, स्वात्मीकृत्य" इति विधौ च शतृ, ल्यप् प्रत्ययाभ्यां देवतानिवेदन, स्वात्मीकरणयोः समानकालिकत्व कथनात् दिव्यपान विधौ एव श्रुतिस्वारस्यम्। न वीरपान विधौ। तेन

"पानं तु त्रिविधं प्रोक्तं दिव्य, वीर, पशुक्रमैः।
दिव्यं देव्यग्रतः पानं वीरं उद्वासने कृतम्॥"

इति स्मृतेः मूलश्रुत्यन्तरं अन्वेष्टव्यम्। पुरुषार्थनिषेधस्तु रागप्राप्तैकविषयकत्वात् क्रत्वर्थत्वेनविहितेषु न प्रवर्तन्ते एव।

"येनकेनाप्युपायेनं शिवे चित्तं निवेशयेत्"।
"तस्मात् केनाप्युपायेन मनः कृष्णे निवेशयेत्॥"

इत्यादि पौराणवचसां ईदृशाशये एव स्वारस्यात्। स्पष्टानां तन्त्रवचसां क्रत्वर्थतया सर्ववर्णोद्देशेन विधायकानां बहुलं उपलम्भात्, तेषां च ईदृश अनेक प्रत्यक्षश्रुतिमूलकत्वेन बलाबलचिन्तानवकाशात् इति दिक्॥

இங்கு तर्पयन्तः என்பதிலும், கூறப்படப் போகின்ற பகிர்யாக விதியில் निवेदयन्, स्वात्मीकृत्य என்பதிலும் உள்ள शतृ, ल्यप् என்ற நிகழ்கால ப்ரத்யயங்கள் "த்ரவத்ரவ்யத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவதைக்கு நிவேதனம் செய்வதும், ஸ்வாத்மீகாரம் செய்வதும் ஒரே சமகாலத்தில்தான்'' என்று கூறுவதால் பூஜாஸமயத்தில் செய்யப்படும் 'திவ்யபான' விதியில்தான் சுருதிக்கு ஸ்வாரஸ்யமான தாத்பர்யம். வீரபான விதியில் தாத்பர்யம் இல்லை என்று சித்திக்கிறது. ஆகையால் —

பானம் மூன்று வகை. திவ்யம், வீரம், பசுக்ரமம் என்பதாக. தேவியின் முந்நிலையில் பூஜாகாலத்தில் கிரகிப்பது திவ்யபானம், உத்வாஸநத்தில் (பூஜை முடிவில்) செய்யப்படுவது வீரபானம். (மற்றது பசு பானம்) என்ற ஸ்மிருதி வசனத்திற்கு பிரமாண சுருதி தேடவேண்டியதாக இருக்கிறது. பானத்தை நிஷேதம் செய்யும் பொதுப்படையான சுருதி, ஸ்மிருதி, புராண வசவனங்கள் **(पुरुषार्थनिषेधाः)** காமனையால் மட்டிலுமே செய்யப்படுகின்ற பானத்தையே தடைசெய்கின்றன. யாகாதிகளுக்கு உபயோகமாக விதிக்கப்பட்ட விஷயங்களில் நிஷேத வாக்யங்கள் தலையிடுவதில்லை.

> "எந்த வழிமுறையினாலாவது சிவனிடத்தில் சித்தத்தை நிலைத்து நிற்கச் செய்யவேண்டும்''
> ஆகையால் எந்த உபாயத்தினாலாவது மனதை கிருஷ்ணநிடத்தில் செலுத்த வேண்டும்.''

என்ற புராண வசனங்களுக்கும் இந்த திவ்யபானத்தில்தான் அபிப்ராயம் என்று ஒப்புக்கொள்வதில் தான் சுருதியின் ஸ்வாரஸ்யம். சர்வ வர்ணத்தாரையும் உத்தேசித்து க்ரது (யாக)ங்களுக்கு அங்கமாக பானத்தை விதிக்கின்ற ஸ்பஷ்டமான தந்திர வசனங்கள் பல பல ஆங்காங்கு தென்படுவதாலும் அவ்வசனங்களுக்கு इमां विज्ञाय என்பது போன்ற அநேக ப்ரயத்யக்ஷ சுருதிகள் மூலப்ரமாணங்களாக இருப்பதாலும் இந்த ஸ்ம்ருதி, புராண வசனங்களுக்குள் பலாபல (बलाबल - பலம் உள்ள அல்லது பலம் அற்ற) விசாரங்களுக்கு சிறிதும் இடமே இல்லை என்பதுடன் இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசாரம் முடித்துக் கொள்ளப்படுகிறது.

भा. एवं पररूपोपास्तिं विधाय सूक्ष्मरूपोपास्तिविधित्सया अष्टमीं ऋचं आह -

उप. "कामो योनिः कमला वज्रपाणिः
गुहा हसा मातरिश्वा अभ्रं इन्द्रः।
पुनर्गुहा सकला मायया च
पुरुची एषा विश्वमाता आदिविद्या" ॥८॥

भा. कामो योनिरिति - इह पञ्चदशाक्षरः मन्त्रः उद्ध्रियते। स च स्त्रीदेवत्यत्वात् चिद्रूपत्वाच्च विद्यापदेन उच्यते। तादृशी अपि वेदमाता गायत्री कण्ठरवेण पठ्यते। अस्य तु प्रत्यक्षरं तद्वाचकपदमन्तरेण कतिपयानां निर्देशात् अतिरहस्यत्वं मन्त्रस्य। तद्वारा तदधिकारिक कर्मणां च तथात्वं ध्वनितम्। किं बहुना - गायत्री अपि आदिविद्योद्धारिकैव इति त्रिपुरातापिन्यां स्पष्टं प्रदर्श्यते। भागवतप्रथमश्लोकोऽपि एवमेव उपबृंहयति -

"सर्वचैतन्यरूपां तां आद्यां विद्यां च धीमहि।
बुद्धिं या नः प्रचोदयात्" ॥ इति।

अतिरहस्यत्वादेव नाथचरणैकावगमनीयोऽयं मन्त्रः। मातरिश्वा, कामश्च चतुर्मुखवाचकाक्षरे। कमला योनी - चतुर्थैकादशस्वरौ। इन्द्रः वज्रपाणी तृतीयान्तस्थाक्षरे। गुहा माये - भुवनेश्वरी बीजे। अभ्रं - तस्या एव आद्यं अक्षरं हकारः। शेषपञ्चकं स्वरूपम्। एषा आदिविद्या पुरूची - पुरातनी। विश्वमाता - जगज्जनयित्री। विद्याक्षरैः जगदुत्पत्तेः

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

योगिनीहृदये संप्रदायार्थप्रकरणे सविस्तरं वर्णनात्। मन्त्रार्थस्तु दत्तात्रेयागस्त्यादिभिः बहुभिः तन्त्रभेदेन बहुधोक्तः। स च अस्माभिः वरिवस्यारहस्ये यथामति संगृह्य दर्शितः इति तत एव अवगन्तव्यम्।

இவ்வாறு பரரூப உபாஸனையைக் கூறி சூக்ஷ்மோ பாஸ்தியை விதிக்கும் இச்சையால் எட்டாவது ரிக்கை கூறுகிறார் - कामो योनिरिति - இங்கு பதினைந்து அக்ஷரங்கள் கொண்ட மந்திரம் உத்தாரம் செய்யப்படுகிறது. இம்மந்திரம் ஸ்த்ரீதேவதையை கொண்டிருப்பதாலும் சித் ரூபமாக இருப்பதாலும் विद्या வித்யா எனப்படுகிறது. இதே போன்ற சித்ரூப ஸ்த்ரீதேவதையை உடைய காயத்ரீ மந்திரம் பிரத்யக்ஷமான சப்தங்களால் கூறப்படுகிறது. இம்மந்திரமோவெனில் ஸ்பஷ்டமான அக்ஷரங்களால் கூறப்படாமல் சில சில அக்ஷரங்கள் சங்கேதச் சொற்களாலேயே கூறப்படுகின்றன. இதனால் இம்மந்திரம் மிகவும் ரகசியமானது என்பதும் இம்மந்திரத்தின் மூலமாக செய்யப்படும் சகல க்ரியா விசேஷங்களும் அதிரஹஸ்ய மானது என்பதும் சூசிப்பிக்கப்படுகிறது. அதிகம் கூறுவானேன் ! - காயத்ரீ மந்திரம் கூட இந்த வித்யையே உத்தாரம் செய்கிறது. என்று த்ரிபுராதாபினி உபநிஷத் விசதம் செய்கிறது. सर्वचैतन्यरूपां என்ற தேவீபாகவத முதல் சுலோகமும் இந்த வித்யை மற்ற சகல வித்யைகளுக்கும் ஆத்யமானது என்று உபப்ரம்மணம் செய்கிறது. மிக அதிரஹஸ்யமானது என்பதாலேயே இம்மந்திரம் குருநாதரின் உபதேசம் மூலமாக காதுவழியாகவே பெற்றுவரும் வழக்கம் இருந்து வருகிறது. மந்திரத்தின் உத்தாரண விபரம்.

1. कामः - பிரம்மாவைக் குறிக்கும் क என்ற அக்ஷரம்.

2. योनिः - 11வது ஸ்வராக்ஷரம் ए என்ற அக்ஷரம்.

3. कमला 4வது ஸ்வரம் - ई என்ற அக்ஷரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. वज्रपाणिः இந்திர வாசகம் - ल என்ற அக்ஷரம்.

5. गुहा புவனேச்வரீபீஜம் - ह्रीं என்ற அக்ஷரம்.

6. ह् மந்திர ஸ்வரூபம் - ह ஏன்ற அக்ஷரம்.

7. सा மந்திரஸ்வரூபம் - स என்ற அக்ஷரம்.

8. मातरिश्वा - பிரம்மவாசகம் - क என்ற அக்ஷரம்.

9. अभ्रम् - ஆகாச வாசகம் - ह என்ற அக்ஷரம்.

10. इन्द्रः - இந்திர வாசகம் - ल என்ற அக்ஷரம்.

11. गुहा - புவனேச்வரீ பீஜம் - ह्रीं என்ற அக்ஷரம்.

12. स - மந்திர ஸ்வரூபம் - स என்ற அக்ஷரம்.

13. क - மந்திர ஸ்வரூபம் - क என்ற அக்ஷரம்.

14. ल - மந்திர ஸ்வரூபம் - ल என்ற அக்ஷரம்.

15. माया - புவனேச்வரீ பீஜம் - ह्रीं என்ற அக்ஷரம்.

எனபதாக

இந்த ஆதிவித்யை புரூசீ மிகப்பழமையானது, विश्वमाता ஜகஜ்ஜனனீ என்றவாறு. இந்த வித்யாக்ஷரங்கள் மூலமாகவே உலகத்தின் உற்பத்தி என்று யோகினீஹ்ருதய கிரந்தத்தின் சம்பிரதாய பிரகரணத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. தத்தாத்ரேயர் அகஸ்தியர் முதலான பல மகரிஷிகளால் அந்தந்த தந்திர பேதங்களை அனுசரித்து இம் மந்திராக்ஷரங்களின் விசேஷார்த்தங்கள் மிகுதியாக கூறப்பட்டிருக்கின்றன. எங்களாலும் (அதாவது பாஷ்யகாரராலும்) வரிவஸ்யா ரஹஸ்யம் என்ற நூலில் கூடியவரையில் சுருக்கி விளக்கம் செய்யப்படுகின்றன. அவைகளை அந்தநூலில் கவனிக்கவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भा. कामराजोपासितां विद्यां उपदिश्य लोपामुद्रोपासितां विद्यां उपदेष्टुं नवमीं ऋचं आह षष्ठं सप्तमं इति —

उप. ''षष्ठं सप्तमं अथ वह्निसारथिं
अस्याः मूलत्रिकं आदेशयन्तः ।
कथ्यं कविं कल्पकं कामं ईशं
तुष्टुवांसः अमृतत्वं भजन्ते ।। ९ ।।

भा. अस्याः एव विद्यायाः मूलत्रिकं - प्राथमिकाक्षरत्रयं, उन्मूल्य इति शेषः। तत्स्थानेऽपि षष्ठादिवर्णत्रयमेव निवेशयन्तः जापकाः विद्याद्वयान्यतरेण, ईशं शुद्धसत्वोपाधिकं परशिवं तुष्टुवांसः - स्तुवन्तः, जपन्तः अमृतत्वं भजन्ते। ''विद्याजपेन मोक्षं भावयेत्'' इत्यर्थः। ईशं विशिनष्टिकामं - ''सोऽकामयत, बहुस्यां प्रजायेय'' इति श्रुतिप्रतिपाद्यत्वेन ईक्षत्यधिकरणे निर्णीतम्। कल्पकं जगत्कल्पनाधिष्ठानं, जन्माद्यधिकरणोक्तम्। कविं वेदप्रणेतारं, कथ्यं-वेदवेद्यं, - शास्त्रयोनित्वाधिकरणे वर्णकद्वयेन उक्तम्। परं ब्रह्मैव इति तु विशेषणसमर्थितोऽर्थः। अजरा, पुराणी इत्यादिभिर्ब्रह्मलिङ्गैः इह पुंलिङ्गैः वक्ष्यमाण कामकलाध्यानगत स्त्रीलिङ्गैश्च परदेवतायाः त्रिविधं ध्यानं विहितं भवति। तथा च उपबृंहितं कुलार्णवे

''पुंरूपं वा स्मरेत् देवीं स्त्रीरूपं वा विचिन्तयेत्।
अथवा निष्कलं ध्यायेत् सच्चिदानन्दलक्षणं'' ।। इति

यद्यपि परोपास्तौ निष्कलं, जपे पुंरूपं, बहिर्यागे स्त्रीरूपं ध्येयं इति व्यवस्था अपि सुवचा। तथापि स्त्रीपुंसयोः समप्राधान्यस्य वक्ष्यमाणत्वात् संप्रदायाच्च ऐच्छिकः एव विकल्पः। मनुचन्द्राद्युपासितानां

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

विद्यानां अन्यासामपि त्रिपुरातापिन्यां उद्धारदर्शनेऽपि प्रकृते द्वयोरेव उद्धारः तासु एनयोः आधिक्यध्वननार्थः। अत एव ज्ञानार्णवे द्वादशविधविद्यां उद्धृत्य

"विद्याद्वयं इदं भद्रे देवानां अपि दुर्लभम्" इत्यादिना उपबृंहितम्। अनयोरपि मध्ये कादिविद्यायाः एव प्रथमं उद्धारात् आधिक्यध्वनिः। अत एव

"श्रीविद्यैव तु मन्त्राणां तत्र कादिः यथा परा"

इति ब्रह्माण्डोपबृंहणम्। वस्तुतः सर्वासां विद्यानां अभेदात् तारतम्योक्तिः प्रशंसामात्रं इति समर्थितं सेतुबन्धग्रन्थे अस्माभिः। अत एव श्रीमदाचार्य भगवत्पादैः वैपरीत्येन अनयोः उद्धारः प्रदर्शितः सौन्दर्यलहर्याम्। तत्रापि प्रकृतश्रुत्यानुगुण्याय शिव, शक्ति, कामपदानां अन्यथा व्याख्यानं कतिपयानां क्लिष्टत्वात् निरर्थकत्वाच्च नादर्तव्यम्॥

முந்திய மந்திரத்திஞல் காமராஜ வித்யை விவரிக்கப் பட்டது. இந்த மந்திரத்தால் லோபாமுத்ரா வித்யை உத்தாரம் செய்யப்படுகிறது. எப்படியெனில் -

முன் உத்தாரம் செய்யப்பட்ட காமராஜ வித்யையில் உள்ள முதல் மூன்று அக்ஷரங்களை விலக்கி அந்த இடத்தில் அதே காமர்ாஜ வித்யையின் ஆறு, ஏழு, எட்டாவது அக்ஷரங்களை வரிசைக் கிரமத்தில் அமைத்து அடுத்து அந்த காமராஜ வித்யையின் நாலாவது அக்ஷரம் முதல் பதினைந்தாவது அக்ஷரம் வரையிலுள்ள அக்ஷரங்களை வரிசைக் கிரமமாக அமைத்தால் லோபாமுத்ரா வித்யை கிடைக்கிறது. இவ்விரு மந்திரங்களுள் ஏதாவது ஒன்ருல் சுத்த சத்வோபதிகஞன பரமசிவத்தை ஸ்தோத்ரம் செய்பவர்கள் (ஜபம் செய்பவர்கள்) மோக்ஷத்தை பெறுகிருர்கள். "ஸ்ரீ வித்யாஜபத்தால் மோக்ஷத்தை அடையவேண்டும்" என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த ரிக் கூறுவதால் இந்த ரிக்கானது மந்திரமாகவும், விதியாகவும் ஆகிறது.

இங்கு ஈசன் என்பதற்கு நான்கு விசேஷணங்கள் கொடுக்கப்படுகின்றன.

1. ''कव्यम्'' - வேதங்களில் சிறப்பாக விளக்கப்படுபவர். शास्त्रयोनित्वात् என்ற அதிகரணகத்தில் இருவர்ணகங்களால் வேதத்தால் மட்டிலுமே அறியத்தக்கவர் என வர்ணிக்கப்பட்டவர்.

2. ''कविम्'' - அந்த வேதங்களை இயற்றியவர்

3. ''कल्पकम्'' - जन्माद्यस्य यतः - என்ற அதிகரணத்தில் ஜகத் கல்பனைக்கு அதிஷ்டானமாக இருப்பவர் என வர்ணிக்கப்பட்டவர்.

4. ''कामम्'' - ''सोऽकामयत। बहुस्यां प्रजायेय'' என்று ईक्षत्यधि கரணத்தில் वेदप्रतिपाद्य வேதப்ரதிபாத்ய விஷயமாக நிர்ணயிக்கப்பட்டவர்.

இவ்வாறான இந்நான்கு விசேஷணங்களினால் ''இங்கு கூறப்படும் ஈசன் பரப்பிரம்மமேதான்'' என சமர்த்தனம் செய்யப்படுகிறது. உபநிஷத்தின் முதல் மந்திரத்திலுள்ள பரப்பிரம்மத்தின் தன்மைகளை விளக்கும் अजरा, पुराणी என்ற இரு விசேஷணங்களாலும், இந்தரிக்கிலுள்ள पुंलिङ्ग (பும்லிங்க) விசேஷணங்களாலும், இனி கூறவிருக்கும் कामकलाध्यान (காமகலாத்யான) விளக்கமான மந்திரத்திலுள்ள स्त्रीलिङ्ग (ஸ்த்ரீலிங்க) விசேஷணங்களாலும் இந்த தேவதையின் த்யானம் மூன்றுவிதமாக விளக்கப்படுகிறது. அதாவது புருஷ வடிவமாகவோ, ஸ்த்ரீ ரூபமாகவோ அல்லது லிங்கம் இல்லாத நிஷ்களமாகவோ மூன்று வித த்யானம் அதிகாரியின் தகுதிக்கு தக்கவாறு கூறப்படுகிறது. குலார்ணவம் என்ற நூல் இதுபற்றி விவரணம் செய்வதாவது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"पुंरूपं वा स्मरेत् देवीं स्त्रीरूपं वा विचिन्तयेत्।
अथवा निष्कलं ध्यायेत् सच्चिदानन्दलक्षणम्॥"

"புருஷ வடிவம் அல்லது ஸ்த்ரீ ரூபம் அல்லது சச்சிதானந்த ஸ்வரூபமான நிஷ்கள ரூபத்தில் தேவியை த்யானம் செய்யவும்" என்பதாக.

"பரோபாஸ்தியில் (ஆந்தரோபாஸ்தி) நிஷ்களம், ஜபத்தில் புருஷரூபம், பஹிர்யாகத்தில் (பாஹ்ய பூஜையில்) ஸ்த்ரீரூபம்" என ஓர் வ்யவஸ்தை செய்யத்தக்கதாக இருந்தாலும் ஸ்த்ரீ பும்ரூபங்களுக்கு சமப்ராதான்யம் கூறப்படவிருப்பதையும், ஆன்றோர்களின் சம்ப்ரதாய (நடைமுறை)ங்களையும் அனுசரித்து அதிகாரிகளின் மனோதர்மப்படி மூன்றில் எந்த ரூபமான த்யானத்தையும் கைக்கொள்ளலாம் என்ற விகல்பம் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது.

மனு, சந்திரன், குபேரன், லோபாமுத்ரா, மன்மதன், அகஸ்தியர், நந்திகேஸ்வரர், சூர்யன், விஷ்ணு, ஷண்முகன், சிவன், துர்வாஸர் என்ற பன்னிரண்டு உபாஸகர்களாலும் உபாஸிக்கப்பட்ட வேறு பல வித்யைகள் த்ரிபுராதாபினீ முதலிய உபநிஷத்துக்களில் உத்தாரம் செய்யப் பட்டிருந்தாலும் அவை யாவற்றுள்ளும் இந்த காமராஜ லோபமுத்ரா வித்யைகளே மிகச்சிறந்தவை என்பதால் அவை மட்டிலும் இங்கு உத்தாரம் செய்யப் பட்டிருக்கின்றன. ஞானார்ணவக்கிரந்தத்தில் பன்னிரண்டு வித்யைகளை உத்தாரம் செய்து கடைசியாக "(हे भद्रे) ஹே மங்கள ஸ்வரூபிணியே இந்த இரண்டு வித்யைகளும் தேவர்களுக்கும் கூட கிடைப்பது அறிது" என்று இவ்விரு வித்யைகளின் பெருமை விளக்கப்படுகிறது. இவ்விரு வித்யைகளுக்குள் காதிவித்யா (कादिविद्या) என்ற காமராஜ வித்யைதான் சாலச்சிறந்தது என்பதை ச்ருதி தேவியானவள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த வித்யையை முதலாவதாகக் கூறுவதன் வாயிலாக அறிவிக்கிருள். ப்ரமாண்ட புராணமும் - ''மந்திரங்களுள் ஸ்ரீவித்யைகளும், அவற்றுள் காதிவித்யையும் மிகமிகச் சிறந்தது'' எனக் கூறுகிறது.

உண்மை நிலை யாதெனில் வித்யைகளுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு என்பது கிடையாது. எல்லா மந்திரங்களும் சமசக்தி பெற்றவைகளே. ஆங்காங்கு கூறப்படும் சிறப்பு வசனங்கள் அந்தந்த மந்திரங்களை புகழவந்த அர்த்தவாத (अर्थवाद) சொற்களே என்பதை உண்மை நோக்கில் கவனிப்பவர்கள் அறிந்துகொள்வார்கள். மந்திரங்களில் உயர்வு, தாழ்வு கிடையாது என்ற கருத்தைக் கொண்டே ஸ்ரீ ஆதிசங்கரரும் 'ஸௌந்தர்யலஹரீ' என்ற கிரந்தத்தில் हादि வித்யையை முதலில் உத்தாரம் செய்து அடுத்து कादि வித்யையை உத்தாரம் செய்து இருக்கிருர். சில வ்யாக்யான கர்த்தாக்கள் இங்குள்ள ச்ருதியோடு (सामञ्जस्यम्) ஒற்றுமை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஸௌந்தர்ய லஹரியின் சுலோகத்திலுள்ள शिव, शक्ति, काम என்ற பதங்களுக்கு क्लिष्ट (க்லிஷ்ட) கல்பனைகள் செய்து மாறுபட்ட வ்யாக்யானம் செய்திருக்கிருர்கள். அவ்வியாக்யானம் கடின முறையைத் தழுவி இருப்பதாலும் சிறிதும் அவசியம் இல்லாதபடியாலும் அங்கீகரிக்கத் தக்கதல்ல.

भा. अत्र अन्तर्यागस्यैव प्रकरणित्वेन तदीयद्रव्यानुवादेन गुणान्तर समुच्चयस्य द्वादश्यां ऋचि विधास्यमानत्वेन प्रकरणानुवृत्तेः वक्तव्यतया तन्मध्यपतितस्य जपस्य प्रकरण्यन्तर्यागाङ्गत्वात् ''अमृतत्वं भजन्ते'' इति अपापश्लोकश्रवणवत् अर्थवादः। मन्त्रेऽपि विधित्वस्येव अर्थवादत्वस्यापि स्वीकारे बाधकाभावात्। तिस्रः पुरः इत्यादेस्तु अन्तर्यागविधिशेषत्वेऽपि न अर्थवादत्वम्। विधिशेषत्वस्य अर्थवादत्वव्याप्यत्वे मानाभावात्। अर्थवादत्वेऽपि वा भूतार्थवादत्वेन स्वार्थे प्रामाण्याच्च। न च द्वादश्यां

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ऋचि स्थूलोपास्तिः भिन्नैव बहिर्यागरूपा विधीयते इति वाच्यम्। तथापि पञ्चदश्यां ऋचि मदधात्वर्थविवरणेन उपसंहारदर्शनात् प्रकरणानुवृत्तेः दुर्वारत्वात्।

वस्तुतः उपास्तित्रयस्य समप्राधान्यमेव। विधित्रयेऽपि फलश्रवणेन अन्यतमस्य प्रकरणित्वकल्पने विनिगमनाविरहात्। आग्नेयादि षट्कस्येव मिलितानामेव च फलजनकत्वम्।

"अन्तर्याग बहिर्यागौ गृहस्थः सर्वदा आचरेत्।
चक्रराजार्चनं देव्याः जपो नाम्नां च कीर्तनम्।
भक्तस्य कृत्यं एतावत् अन्यत् अभ्युदयं विदुः॥"

इत्यादि वचनात्। अधिकारिविशेषेण केवलं अन्तर्याग जपयोः फलजनकत्वं तु वचनात्। असोमयाजिनः अग्नीषोमीयपुरोडाशसाहित्याभावेऽपि फलसिद्धिवत् इत्यादिकं न्यायविद्भिः ऊह्यम् इति नवमी ऋक्॥

இனி அந்தர்யாக, ஜப, பகிர்யாக ப்ரகரணங்கள் சம்பந்தமாக சாஸ்த்ரீய விசாரம் செய்யப்படுகிறது.

அதாவது **इमां विज्ञाय** என்பதிலிருந்து **परिस्रुता हविषा** என்ற பதினைந்தாவது ரிக் முடிய ஒரே அந்தர்யாக ப்ரகரணம். **इमां विज्ञाय** என்றதிலுள்ள **परिस्रुत** என்பதை அனுவாதம் செய்து அதனுடன் இதர த்ரவ்யங்களின் **(समुच्चय)** சமுதாயத்தை விதிக்கின்ற **परिस्रुतं झषं** என்ற வாக்கியமும் அந்தர்யாக ப்ரகரணத்தில் இருப்பதால் அதற்கு அங்கமாகவே ஆகிறது. அதேபோல் பிரகரணமத்தியில் **"तुष्टुवांसः अमृतत्वं भजन्ते"** என்று விதிக்கப்பட்ட ஜபமும் ப்ரகரணீயான அந்தர்யாகத்திற்கு அங்கமாகிறது. அங்கத்திற்கு கூறப்படும் பலச்ருதி அர்த்தவாதம் என்ற சித்தாந்தப்படி அந்தர்யாகத்திற்கு அங்கமான ஜபத்திற்கு கூறப்படும் **"अमृतत्वं भजन्ते"** (மோக்ஷத்தை அடைகிறார்கள்) என்ற பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

-சுருதியும் அர்த்தவாதமாகவே ஆகிறது. பல இடங்களில் மந்திரத்தை விதியாகவும் ஏற்றுக்கொள்வது போல் இங்கு மந்திரத்தை அர்த்தவாதமாகவும் அங்கீகரிக்கலாம். மந்திரத் தன்மைக்கும் அர்த்தவாதத் தன்மைக்கும் ஒன்றுக்கொன்று விரோதம் கிடையாது. तिस्रः पुरः என்று ஆரம்பிக்கின்ற ஆறு ரிக்குகளும் इमां विज्ञाय என்ற விதியின் சேஷங்கள். (விதியைப் பற்றிய விமர்சனம், அதன் பெருமைகளை விவரித்தல் என்ற தாத்பர்யத்துடன் கூடிய வாக்யங்கள்). அர்த்த வாதங்கள் இல்லை. விதிசேஷங்கள் அர்த்தவாதங்களே என்று ஏற்றுக்கொண்டாலும் புதிய விஷயங்கள் ஒன்றும் கூறுமல் உள்ளபடி இருக்கும் அர்த்தங்களையே கூறுவதால் भूतार्थवाद ங்கள் என்ற வகையில் இம்மாதிரியான அர்த்த வாதங்கள் பிராமாண்யம் பெறுகின்றன.

பன்னிரண்டாவது परिस्रुतं झषं என்ற மந்திரம் பற்பல த்ரவ்யங்களை சாதனமாகக் கொண்ட "பகிர்யாகமான" ஸ்தூலோபாஸ்தியையே விதிக்கிறது என்று ஏற்றுக் கொண்டாலும் परिस्रुता हविषा என்ற பதினைந்தாவது ரிக் மந்திரத்தில் मद धात्वर्थ (மத தாத்வர்த்த)மான அந்தர்யாகத்தை விவரணபூர்வமாக உபஸம்ஹாரம் (முடிவுரை) செய்வதால் அதுவரை அந்தர்யாக ப்ரகரணத்தின் தொடர்பு அவசியமாவதால் அதன் மத்தியில் விதிக்கப்படும் இந்த ஸ்தூலோபாஸ்தியும் ஜபம் போல் அந்தர்யாகத்திற்கு அங்கமேதான் என்று ஓர் அபிப்ராயம்.

वस्तुतस्तु என்பதால் சொந்தக் கருத்து வெளியிடப் படுகிறது. அதாவது

इमां विज्ञाय, परिस्रुतं झषं, तुष्टुवांसः என்ற மூன்று விதிகளும் தனித்தனியே பலன் கூறப்படுவதால் "சமப்ரதானங்கள்" என்ற தன்மையில் தனித்தனியாகவே अन्तर्याग, जप, बहिर्याग (அந்தர்யாக, ஜப, பஹிர்யாக) என்ற மூன்று அம்சங்களை விதிக்கின்றன. மூன்று விதிகளிலும் பலன் கூறப்படுவதால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எது ப்ரதானம் (प्रधान) எது அப்பிரதானம் (अप्रधान) என பிரித்துக்கூறுவதற்கு தகுந்த பிரமாணம் இல்லை.

1. ''அந்தர்யாகம், பஹிர்யாகம் ஆக இரண்டையும் கிருஹஸ்தன் எப்பொழுதும் செய்துவர வேண்டும்'' என்றும்

2. ''சக்ரராஜார்சனம் (ஸ்ரீ சக்ரபூஜை), ஸ்ரீ வித்யாஜபம், ஸஹஸ்ரநாம கீர்த்தனம் இம் மூன்றையும் உபாஸகன் தனது தினசர்யையாக (நித்யவிதியாக) செய்து வரவேண்டும். மற்ற ஸ்தோத்ர பூஜாதிகள் நன்மை தரக்கூடிய கர்மாக்கள்'' என்றும் இது போன்ற பல தந்திர, ஸ்மிருதி வசனங்கள் இருப்பதால் இம்மூன்று உபாஸ்திகளும் சமானமானவைகளே. दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजेत என்ற வாக்யத்தால் आग्नेयं முதலிய ஆறு யாகங்களுக்கு சேர்ந்தே பலன். என்று விதித்திருப்பது போல் இங்கும் இம்மூன்று உபாஸ்திகளுக்கும் சேர்ந்தே பலன். ஸோமயாகம் செய்யாதவனுக்கு ஆக்னேயாதி ஆறு யாகங்களில் அடங்கிய ''அக்னீஷோமீய'' யாகம் செய்ய அதிகாரம் இல்லை என்ற நிலைமையில் 'அக்னீஷோமீயத்தில்' அதிகாரம் இல்லாத ஓர் யஜமானன் ஆறுக்குள் அடங்கிய 'தர்சபூர்ணமாஸ' என்ற இதர யாகங்களைச் செய்தால் அதனதற்குறிய பலன் உண்டு என்பதுபோல் இங்கும் தனித்தனியாக உபாஸ்திகளை செய்தாலும் பலன் கிட்டும் என்பதான விபரங்கள் மீமாம்ஸா ந்யாயங்களை அறிந்த வித்வான்களால் ஊகித்து அறியத்தக்கவைகளே.

(குறிப்பு:- இந்த ஆறு யாகங்களைப்பற்றி கூற ஆரம்பித்தால் விரிவுரை விஸ்தாரமாகும் என்பதால் அது பற்றி விவரிக்கப்படவில்லை)

இவ்வாறு ஒன்பதாவது மந்திரம் முடிவுற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भा. अथ स्थूलोपास्ति विधित्सया मूलदेवतायाः अन्तः सगुणत्वेन चिन्तितायाः बहिश्चक्रे स्थापनाय स्थूलरूपविशेषं निर्देष्टुं दशमीं ऋचं आह॥ -

उप. "त्रिविष्टपं त्रिमुखं विश्वमातुः
नवरेखाऽस्वरमध्यं तदीडे (ले)।
बृहत्तिथीः दशपञ्च आदिनित्या
सा षोडशी पुरमध्यं बिभर्ति" ॥ १० ॥

भा. त्रिविष्टपमिति - रेखापदोत्तरं षोडशस्य विसर्गस्वरस्य प्रश्लेषः। नवरेखासु-नवयोनिघटिकासु, अः इति स्वरस्थानीयः मध्यः यस्य तत्। यद्वा नवसंख्याकाः रेखाः यस्य तत् नवरेखम्-संहारचक्रम्। तस्य अस्स्वरोपलक्षितं स्थानं-मध्यं यस्य तत्। अः इति अकार एव स्वरः यस्मिन् तत् अःस्वरं इति वा विग्रहः। तादृशं त्रिमुखं-त्रिकोणं-मध्यत्रिकोणं इति यावत्। तत् विश्वमातुः - त्रिपुरसुन्दर्याः, त्रिविष्टपं-निवासस्थानं - पूजास्थानं इति यावत्। स्वर्गस्य देवतावासभूमित्वेन तद्वाचकपदेन अत्र स्थाननिर्देशः। तदीले इति स्तोतुर्वाक्यम्। **"द्वयोश्चास्यस्वरयोः मध्यं एत्य संपद्यते सः डकारः लकारः"** इति प्रातिशाख्यविधितः डकारस्य लकारः संजातः। इयमेव उपनिषत् आथर्वणैरपि पठ्यते। तत्पक्षे न दुस्पृष्टादेशः इति व्यवस्था। अःस्वरस्य मध्यमत्वोक्त्यैव इतरेषां पञ्चदशस्वराणां रेखात्रये बिन्दुं अभितः "समं स्यात्-अश्रुतत्वात्" - इति न्यायेन पञ्चपञ्चधा विभज्य अवस्थानं ध्वनितम्। तत् त्रिकोणं बृहत्, विभावितं सत् दशपञ्चतिथीः - दशपञ्चतिथिदेवताः, नित्याः - कामेश्वर्यादि चित्रान्ताः बिभर्ति - दक्षिण, उर्ध्व, उत्तररेखासु स्वस्वस्थाने पञ्चपञ्चनित्याः पूजनीयाः इति भावः। तत् उपबृंहितं ज्ञानार्णवे -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''विभाव्य च महत्र्यस्रं अग्रदक्षोत्तरक्रमात्।
रेखासु विलिखेत् पश्चात् पञ्चपञ्चक्रमेणह ॥
अकाराद्यानुकारान्तान् दक्षिणायां विचिन्तयेत्।
ततश्च पूर्वरेखायां दीर्घकर्णादि पञ्चकम्॥
विलिख्य उत्तररेखायां शक्त्यादिविलिखेत् ततः।
अनुस्वारं ततो मध्ये विसर्गे षोडशीं यजेत्॥'' इति॥

चन्द्रस्य कलाः वृद्धिक्षयशालिन्यः पञ्चदश। ताः एव हि तिथयः ''दर्शाद्याः पूर्णिमान्ताश्च कलाः पञ्चदशैवतु'' इत्यादिना तन्त्रे निर्दिष्टाः। दर्शा, दृष्टा, दर्शता इत्यादिना तैत्तिरीयैः आम्नाताश्च। एतासां कारणभूता सादाख्या वृद्धिक्षयशून्या षोडशीकला। सा च पञ्चदशानां नित्यानां कारणत्वात् आदिनित्या इत्युच्यते। सा-पूर्वं वर्णिता त्रिपुरसुन्दरी आदिनित्यास्वरूपासती, पुरस्य - श्रीचक्रस्य, मध्यं-विसर्गस्थानं, बिभर्ति-अध्यास्ते। प्रकाशविमर्शरूप अकारहकारव्यञ्जकत्वात् षोडशस्वरस्य तदात्मकतायाः युक्तत्वात् इति द्रष्टव्यम्॥

இனி ஸ்தூலோபாஸ்தியைப் பற்றி அறிவிக்கும் பொருட்டு अन्तःकरण (அந்தக்கரண)த்துக்குள்ளேயே சகுணமாக பாவனை செய்யப்பட்ட மூலபூதமான பரதேவதையை பாஹ்யமான ஸ்தூலசக்ரத்தில் ஸ்தாபனம் செய்வதற்காக ஸ்தூலரூப விசேஷங்கள் கூறப்படுகின்றன. त्रिविष्टपं त्रिमुखं என்ற சுருதியால்.

''नवरेखा अःस्वरमध्यं त्रिमुखं विश्वमातुः त्रिविष्टपम्'' इति அந்வயம் செய்து கொள்ளவும். இங்கு रेखा என்பதை அடுத்து अः என்ற ஓர் அக்ஷரம் உள்ளடங்கியிருக்கிறது. இதை प्रश्लेषः என்பார்கள். ஒன்பது ரேகை (கோடு)களால் அமையப்பெற்ற ஸம்ஹார சக்ரத்திற்குள் (நவயோநிசக்ரத்திற்குள்) अः என்ற ஸ்வரத்திற்கு இருப்பிடமான மத்ய பாகத்தை உடைய त्रिमुखं

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- மூன்று முகங்களைக் கொண்ட த்ரிகோண சக்ரமானது **विश्वमातुः त्रिविष्टपं** - உலகமாதாவான தேவியின் ஸ்வர்க்கம். (ஸ்ர்ஸஸ்தானம்). தேவதை வசிக்கும் ஸ்தலமானதால் ஸ்வர்க்கம் என்று கூறப்படுகிறது. **तत् ईले** - அந்த த்ரிகோணசக்ரத்தை ஸ்துதி செய்கிறேன் என்று உபாஸகனின் பிரார்த்தனு வாக்யம். இந்த த்ரிகோணசக்ரம் **बृहत्** - மிகப்பெரியது. **अः** என்ற பதினறாவது ஸ்வராக்ஷரத்தை மத்தியில் அடக்கியுள்ளது என்ற **अःस्वरमध्यं** என்ற விசேஷணத்தால் மற்ற பதினைந்து ஸ்வராக்ஷரங்களும் சக்ரத்தின் வெளிப்பக்கங்களான மூன்று ரேகைகளில் **समंस्यात् अश्रुतत्वात्** என்ற நியதிப்படி சமமாக பங்கிடப்பட்டு ஒவ்வொரு கோடுகளிலும் ஐந்து, ஐந்து ஸ்வரங்கள் வீதம் அடங்கியுள்ளன என்பது சூசனை செய்யப்படுகிறது. இந்த பெரியத்ரிகோணமானது தக்ஷிண, ஊர்த்தவ, உத்தர ரேகைகளில் பதினைந்து திதி நித்யைகளை அந்தந்த ஸ்வரஸ்தானங்களில் தரித்துக் கொண்டிருக்கிறது. **सा** - முன்பு கூறப்பட்ட த்ரிபுரா என்ற அதே பரதேவதை பதினருவது (16வது) மஹாநித்யையாக த்ரிகோணத்தின் மத்யஸ்தானத்தை நிர்வகிக்கிருள். த்ரிகோணத்தின் மூன்று பக்கங்களில் பதினைந்து (15) திதி நித்யைகளையும் மத்யமான பிந்து ஸ்தானத்தில் மஹாநித்யையையும் பூஜிக்கவேண்டும் என்பது கருத்து. ஞானர்ணவத்தில் இவ்விஷயம் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.

''த்ரிகோணத்தை மிகப்பெரியதாக பாவித்து அதன் ஊர்த்தவ, தக்ஷிண உத்தர ரேகைகளில் ஒவ்வொன்றிலும் ஐந்து ஐந்து அக்ஷரங்களாக எழுதவும். 'அ'காரம் முதல் 'உ'காரம் வரை தெற்கு ரேகையிலும், ஊகாரம் முதல் ஐந்து அக்ஷரங்கள் **अग्र** ரேகையிலும் 'ஏ'முதல் 'அம்'வரை உத்தர (வடக்கு) ரேகையிலும் மத்தியில் விஸர்க்காக்ஷர (**अः**) த்தையும் எழுத வேண்டும். விஸர்க்கத்தில் ஷோடசியை பூஜிக்க வேண்டும்'' என்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருத்தி (वृद्धि) க்ஷயம் (क्षयं) என்ற தன்மையுள்ள பதினைந்து சந்திர கலைகளே பதினைந்து திதி நித்யா தேவிகள். वृद्धिक्षयं (விருத்தி, க்ஷயம்) இல்லாத सादा என்ற பதினாருவது நித்யா கலையே மற்ற . பதினைந்து நித்யாகலைகளுக்கும் காரணமாக இருப்பதால் இந்த सादा கலை ஆதிநித்யா எனப்படுகிறது. दर्शाद्याः पूर्णिमान्ताः என்ற தந்திரமும் दर्शा, दृष्टा என்ற தைத்திரீய சுருதிகளும் இந்த திதிநித்யா கலைகளையே கூறுகின்றன. பதினாறாவது கலையான सादा என்ற ஆதிநித்யா கலையே 'மஹாத்ரிபுரசுந்தரீ' ஸ்வரூபமாக த்ரிகோணத்தின் மத்திய ஸ்தானத்தில் अः (அ:) என்ற 16வது விஸர்க்காக்ஷர வடிவத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிருள்.

अः என்ற விஸர்க்கமானது अ (அ) என்ற ப்ரகாச ரூபத்துடனும்: (ஹ) என்ற விமர்சரூபத்துடனும் விளங்குவதால் अः (அ:) என்ற அக்ஷரத்திற்கும் ப்ரகாச விமர்சாத்மகமான. தேவீக்கும் தாதாத்ம்யம் பொருத்த மானதே.

भा. प्रसङ्गात् काम्यं कामकलाध्यानं बहिर्यागाश्रितं उपदेष्टुं एकादशीं ऋचं आह

उप. "द्वामण्डला द्वास्तना बिम्बं एकं
मुखं च अधः त्रीणि गुहा सदनानि।
कामीं कलां काम्यरूपां विदित्वा
नरो जायते कामरूपश्च काम्यः ॥ ११ ॥

भा. द्वामण्डलेति - द्वामण्डलौ - द्वास्तनौ, एकं बिंबं - मुखं, त्रीणि सदनानि - भूगृहाणि। गुहा - हकारार्धरूपा। यद्यपि "बिम्बोऽस्त्रीमण्डलं त्रिषु" इति कोशेन बिम्बपदस्यापि मण्डलवाचकत्वेन

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

चतुर्थ्यां ऋचि वर्णितानां त्रयाणां मण्डलानामेव एषः विभागः। तत्रापि वह्नि सूर्यमण्डलावेव स्तनौ। बिम्बपदस्वारस्यात् पाठक्रमाच्च। तदधस्तनं इन्दुबिम्बमेव मुखम्। तदधस्तनमेव भूपुरं हकारार्ध इति स्पष्टं प्रतीयते। सन्ति व्यक्तं तान्यपि कामकलारूपाणि बहुविधानि तन्त्रेषु तत्र तत्र निर्दिष्टानि। तथापि भगवत्पादैः

"मुखं बिन्दुं कृत्वा कुचयुगं अधः तस्य तदधो हरार्धं ध्यायेत्"

इत्युपबृह्मणात्, अर्थक्रमेण पाठक्रमवाधात् बिंबपदं बिन्दुपरं सत् बिन्द्वादिमन्वश्रान्तचक्रगणपरम्। "मण्डलत्रयरूपं तु चक्रं शक्त्यनलात्मकम्" इति सुन्दरीश्लोके मण्डलपदस्य दशारादिचक्रपरत्वेनापि व्याख्यानदर्शनात्। बिन्द्वादिमण्डलानां षण्णां एकावयवित्वेन विभावनाय एकं इति पदम्। "द्वा मण्डला" इति अष्टदल षोडशदलचक्रद्वय परम् इति योज्यम्। इदं अवयवत्रयकथनं सर्वावयवोपलक्षणम्। वस्तुतः शरीरे अपि त्रयः एव अवयवाः। शीर्षादि घण्टिकान्तः, कण्ठादि स्तनान्तः, हृदयादि सीविन्यन्तश्च। केशपाणिपादन्तु तत्तच्छाखाः इति। एवं सर्वचक्रात्मना परिणतां कामीं - कामेश्वरात्मक मन्मथसंबन्धिनीं, कलां - चित्कलां। काम्यरूपां - कमनीयस्वरूपां, विदित्वा - ध्यात्वा (चिकित्वा इति शाखान्तरपाठः) नरः - उपासकः, कामरूपः - मन्मथसुन्दरः, - सद्यः सकलवनिताक्षोभकरः जायते। अत्यल्पमिदं उच्यते इत्याह "काम्यः" इति। अविशेषेण श्रवणात् त्रिभुवनान्तर्वर्ति सकलजनैः अभिलषणीय स्वरूपश्च भवति। तदुक्तं भगवत्पादैः

"ध्यायेत् यो हरमहिषि ते मन्मथकलां। सः सद्यः संक्षोभं नयति वनिता इत्यतिलघु त्रिलोकीमपि आशु भ्रमयति रवीन्दुस्तनयुगाम्॥"

इति

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"कामरूपत्व, काम्यत्वकामः कामकलां ध्यायेत् इति गुणफलसंबन्धविधिः। अत्र फलार्थतया विधेयस्य ध्यानस्य स्वतः क्रियारूपस्य आश्रयान्तरानपेक्षतया श्येनक्रत्वादेः सौमिकाङ्गसंवलितत्वस्येव बहिर्यागसंवलितत्वस्याप्यभावेन बहिर्यागात् बहिरपि अनुष्ठानात् फलम्" इति तु भगवत्पादानां आशयः।

"बिन्दुं संकल्प्य वक्त्रं तु तदधस्थं कुचद्वयम्।
तदधः सपरार्धन्तु चिन्तयेत् तदधोमुखम्॥

इति नित्याषोडशिकार्णवे। क्रतुप्रकरणस्थविधिना अस्य ध्यानस्य क्रत्वर्थत्वमपि संपद्यते इति चेत् किं तावता। अन्नाद्यकामनाफलक अवेष्टेरिव फलार्थिनः बहिः प्रयोगस्यापि अक्षतत्वात्। अत एव भगवत्स्मरणं उपक्रम्य उक्तम्-शाण्डिल्यभक्तिसूत्रे "बहिरन्तस्थमुभयं अवेष्टिसववत्" इति॥

பகிர்யாகத்தை, சார்ந்த ஸ்தூலமான 'காமகலா' (कामकला) த்யானம் விவரணம் செய்யப்படுகிறது.

'बिंबोऽस्त्री मण्डलं त्रिषु' என்ற அமர கோசப்படி இங்கு बिंब என்ற பதத்திற்கு மண்டலம் என அர்த்தம் ஸ்வீகரித்து முன்பு நாலாவது மந்திரத்தில் கூறப்பட்ட முதல் இரு அக்னி, சூர்ய மண்டலங்கள் 'ஸ்தனங்கள்' எனவும், அடுத்த மூன்றாவதான சந்திரமண்டலம் 'முகம்' எனவும் அவைகளுக்கு கீழ் உள்ள सदनं என்ற பூகிரஹங்கள் 'ஹ' காரார்த்தம் (हकारार्धम्) எனவும் பாடக்ரமத்தையும், 'பிம்ப பத' ஸ்வாரஸ்யத்தையும் அனுசரித்து வ்யாக்யானம் செய்து இவ்வாறு காமகலா சொரூபத்தை சிலர் வெளியிடுகிறார்கள். இதேபோன்றும் வேறு பல வகையான காமகலா ஸ்வரூபங்களும் பல தந்திரங்களில் கூறப்படுகின்றன. ஆயினும்

"मुखं बिन्दुं कृत्वा कुचयुगमधः तस्य तदधो
हरार्धं ध्यायेद्योहरमहिषि ते मन्मथाकलाम्"॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

("பிந்துவை முகமாகவும், அதன் கீழ் உள்ளவற்றை இரு ஸ்தனங்களாகவும், அதற்கும் கீழே உள்ள பாகங்களை ह (ஹ) காரத்தின் अर्ध ('அர்த்த'-பாதி) மாகவும் பாவித்து எவன் உனது காமகலையை த்யானம் செய்கிறானோ") என்ற ஸ்ரீ பகவத் பாதாளின் விவரணத்தையும், "मण्डलत्रयरूपन्तु" என்ற சுந்தரீ சுலோகத்தின் मण्डल பதத்திற்கு "தசாரம் முதலிய சக்ரங்கள்" என அர்த்தம் செய்திருப்பதையும் அனுசரித்து मण्डल பதத்திற்கு சக்ரங்கள் என்ற அர்த்தத்தையும் बिम्ब என்பதற்கு பிந்து சக்ரம் முதல் மன்வச்ரம் வரையிலுள்ள சக்ர ஸமூஹம் என்ற அர்த்தத்தை உபலக்ஷண விதிப்படி ஸ்வீகரித்தும் இந்த சுலோகத்திலுள்ள द्वामण्डला என்பதிற்கு அஷ்டதள, ஷோடசதள பத்மங்கள் எனவும், 'बिम्बं एकं मुखं' என்பதற்கு பிந்து முதல் சதுர்தசார சக்ரம் வரையுள்ள சக்ரசமூஹம் எனவும், ஷோடசதளத்திற்கு கீழேயுள்ள பூகிருகங்கள் गुहा-हकारर्ध (ஹ்காரார்த்தம்) எனவும் அர்த்தம் கூறுவது பொருத்தமாக இருக்கிறது. பிந்து முதல் மன்வச்ரம் முடிய உள்ள ஸமூஹம் ஒரே अवयवी ஒரே உருவம் என பாவனை செய்யவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறுவதற்காகவே 'एकम्' (ஏகம்) என்ற பதம் அமைந்திருக்கிறது. கூறப்பட்ட மூன்று அவயவங்களும், கூறப்படாத இதர அவயவங்களை உபலக்ஷண வகையில் கூறுகின்றன. நமது சரீரத்திலும் உச்சிமுதல் முகவாய்கட்டை வரை ஓர் பாகம், கண்டத்திலிருந்து (கழுத்திலிருந்து) மார்பு வரை அடுத்த பாகம், ஹ்ருதயம் முதல் ஸீவிநீ வரை மற்றோர் பாகம், கை, கால், சிகை முதலியவைகள் மரத்திற்கு கிளைகள் போல் சாகைகளாக இருக்கின்றன.

இவ்வாறு சர்வாவயவங்களோடு பூர்ண சக்ரஸ்வரூபமாக பரிணமம் பெற்றதும், कामी - காமேசுவரன் என்ற மன்மதனை சார்ந்ததும் ஆகிய कलां - காமகலை என்ற சித்கலையை काम्यरूपां - விரும்பிய அழகுடன் கூடிய உருவத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடையதாக नरः विदित्वा - அறிந்து த்யானம் செய்யும் உபாஸகன் மன்மதன் போன்ற அழகிய வ்டிவம் பெற்று ஸகல ஸ்த்ரீ ஜனங்களுக்கும் ஓர் மயக்கத்தை உண்டாக்குபவனுக ஆகிறான். கூறப்பட்ட இந்த பயன் மிகவும் அல்பமானது என்பது அடுத்த काम्यः என்றதால் குறிப்பிடப்படுகிறது. மூன்று உலகங்களிலும் உள்ள ஸமஸ்த பிராணிகளாலும் விரும்பி வேண்டப்படுகின்ற, மேனியை பெறுபவனுக ஆகிருன்.

இந்த மந்திரமானது ''காமரூபத்வம்'', ''காம்யத்வம்'' என்ற பலங்களை விரும்புவன் ''காமகலையை'' ''த்யானம் செய்ய வேண்டும்'' என்று த்யானத்தையும் அதன் பலன்களையும் விதிப்பதால் 'குண பல சம்பந்த விதி' (गुणफलसंबन्ध विधि) என ஆகிறது. க்ரியாரூபமான த்யானம் தனக்கு ஆச்ரயமாக வேறுக்ரியையை அபேக்ஷிக்காததாலும், ஸோமயாகத்தின் அங்ககலாபங்களால் சூழப்பட்ட ச்யேன (श्येन) என்ற யாகம் போல் பகிர்யாகத்தின் அங்கங்களால் சூழப்படாமல் ஸ்வதந்திரமாக இருப்பதாலும், இந்த 'காமகலா த்யானம்' பஹிர்யாகத்துக்கு அங்கமாகவும், அதுவன்றி வெளியில் தனியாகவும் அனுஷ்டித்து பலன் பெறத் தக்கது என ஸ்ரீ ஆசார்ய பகவத்பாதரின் கருத்து.

நித்யாஷோடசிகார்ணவம் என்ற நூலும் காமகலா ஸ்வரூபத்தைப் பற்றி 'बिन्दुं संकल्प्य वक्त्रं तु' என்று இங்கு கூறப்பட்ட ஆசயத்தையே வெளியிடுகிறது. இந்த த்யானம் பஹிர்யாக ப்ரகரணத்தில் படிக்கப்பட்டு அதற்கு அங்கமாக இருந்தாலும், अन्नाद्यकाम (அன்னுத்ய காம)னை உள்ளவன் अवेष्टि (அவேஷ்டி) என்ற க்ரதுவை, राजसूय யாகத்திற்கு அங்கமாக இருந்தாலும், ராஜஸூய யாகத்திற்கு வெளியிலும் செய்யலாம் என்பது போல் இந்த காமகலா த்யாநத்தையும் பஹிர்யாகத்துக்கு வெளியில் தனியாகவும் செய்யலாம். சாண்டில்ய சூத்ர கர்த்தாவும் பகவத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்மரணத்தை கூறுமிடத்தில் "अवेष्टि" (அவேஷ்டி) என்ற யாகம் போல் உள்ளும், வெளியிலும் என்று கூறுகிறார்.

भा. बहिर्यागद्रव्याणि, बहिर्यागं, द्रव्यप्रतिपत्तिं च विधातुं द्वादशीं ऋचं आह -

उप. "परिस्रुतं, झषं, आद्यं पलं च
भक्तानि योनीः सुपरिष्कृतानि।
निवेदयन् देवतायै महत्यै
स्वात्मीकृत्य सुकृती सिद्धिं एति" ॥ १२ ॥

भा. परिस्रुतं इति - झषो -मत्स्यः। पलं-मांसं, तस्य झषस्य आद्यं, प्रथमस्य उत्तरं द्वितीयं इत्यर्थः। तेन झषः तृतीयः। भक्तानि-वटकचणकानि मुद्गाद्यात्मकानि नानाविधान्यन्नानि चतुर्थम्। योनिपदं कुण्डगोलोद्भवोपलक्षणम्। तत् पञ्चमम्। योनीः इति बहुवचनन्तु ब्राह्मणक्षत्रियादि कतिपयजातिभेदाभिप्रायम्। तदुपबृंहणं कलाष्टकादिपदेन तन्त्रेषु द्रष्टव्यम्। चकारः पञ्चानां समुच्चयपरः। पलस्य झषोत्तरं पठितस्यापि झषात्पूर्वं आद्यपदेन निवेशात् मकाराणां क्रमः विवक्षितो ध्वन्यते। तेन मुख्यालाभेऽपि प्रतिनिधिभिः अर्चनस्य न्यायेन, "मपञ्चकालाभेऽपि नित्यक्रमप्रत्यवमृष्टिः" इति कल्पसूत्रेण च सिद्धत्वेऽपि "पूर्वपूर्वालाभेसति, न उत्तरोत्तरस्य मुख्यस्य लाभेऽपि ग्रहणं" इति द्योतितम्। प्रथममात्रालाभेऽपि चतुर्थस्य नैवेद्यार्थं आवश्यकत्वात् तावन्मात्रग्रहणं संप्रदायलभ्यम्। आज्यं इति शाखान्तरपाठे घृतमेव अर्थः। तत्र पक्वं इत्यर्थेन तत् काकाक्षिगोलकन्यायेन उभयोः विशेषणम्। अजसंबन्धी इति व्याख्या तु न युक्ता। तन्त्रे विकारार्थकस्य दर्शनात्। सूत्रोक्तानां पञ्चत्वादीनां परिसंख्यापत्तेश्च। परदेवतातर्पणमात्र पर्याप्तमात्रस्य लाभेऽपि

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

न प्रतिनिधिना यागः। बहिर्यागे स्वात्मीकारस्य प्रतिपत्तित्वेन तल्लोपेऽपि बाधकाभावात् इत्यादिकन्तु षष्ठन्यायसिद्धं ऊहनीयम्।

सुपरिष्कृतानि-दृष्टादृष्टसंस्कारैः संस्कृतानि। तेच पाकादिरूपाः लौकिकाः, शापमोचनादिरूपाः वैदिकाश्च बहुषु तन्त्रेषु प्रसिद्धाः। ''बह्वल्पं वा स्वगृह्योक्तं'' इति न्यायेन कल्पसूत्रोक्तमात्राः वा। महत्यै देवतायै - महादेव्यै। निवेदयन्-यजन्, सुकृती-बहिर्यागकर्ता। तानि स्वात्मीकृत्य-स्वयमपि भक्षयित्वा। सिद्धिं यागफलं, एति-प्राप्नोति। ''परस्परसमुचित प्रथमादिमपञ्चकवता यागेन महादेवीदेवताकेन इष्टसिद्धिं भावयेत्'' इति विधिपर्यवसानादि प्रकारः अन्तर्यागविधिवदेव द्रष्टव्यः॥

பகிர்யாகத்திற்குறிய திரவியங்களையும் அவைகளை ஸ்வீகரிக்கும் முறையையும் பன்னிரண்டாவது ரிக் வர்ணிக்கிறது.

இந்தரிக்கில் **परिस्रुत** தத்தை முதலாவதாக கூறி அடுத்து **झषं**, (மத்ஸ்யம்) **आद्यं पलं**, ஆத்யமாக (முந்தியதாக) மாமிசம் என்று இரு பொருள்கள் கூறப்படுகின்றன. எதற்கு முந்தியது என்ற கேள்வி எழுகிறது. அதற்கு **प्रत्यासत्ति, सान्निध्यं** என்ற இரு ந்யாயங்களால் **आद्य** என்பதற்கு பக்கத்திலுள்ள **झषं** என்பதையே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே **पलं** என்பது **झष** த்துக்கு முந்தியும் **परिस्रुत** த்திற்கு பிந்தியும் என கிடைக்கிறது. எனவே **झषः** என்ற பொருள் மூன்றுவது ஸ்தானத்தை பெறுகிறது. **भक्तानि** என்பவை பயறு, கடலை, உளுந்து முதலான நாநாவகை தான்யங்களால் பாகம் செய்யப்பட்ட வடை, சுண்டல் முதலிய பக்ஷ்யவர்க்கத்தை குறிக்கிறது. **योनि** பதம் குண்டகோளோத்பவம் **(कुण्डगोलोत्भवम्)** என்பதை உபலக்ஷணமாக கூறுகிறது. அது ஐந்தாவது பொருள். **योनीः** என்ற பகுவசனம் ப்ராம்மண, க்ஷத்ரியாதி சிற்சில ஜாதிபேதங்களை அபிப்ராயப்பட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

கூறுகிறது. இது சம்பந்தமான விரிவான விபரங்களை कलाष्टकं (கலாஷ்டகம்) என்ற நூலில் கவனிக்கவும். च என்ற சொல் இவ்வைந்து பொருள்களின் சமுச்சயத்தை (ஒரே கூட்டத்தை) கூறுகிறது. परिस्रुतं, पलं, झषः என்று க்ரமமாக கூறாமல் மாறுதலாகக் கூறி आद्य பதத்தால் पल த்தை இரண்டாவது பொருளாக கூறுவதன் வாயிலாக, "கூறப்படும் திரவியங்களின் வரிசைக்கிரமம் विवक्षितं (மிக மிக அவசியம்)" என வற்புறுத்தப்படுகிறது.

"मपञ्चकालाभेऽपि नित्यक्रमप्रत्यवमृष्टिः" என்ற சூத்திரத்தாலும், மற்றும் உலக வழக்காலும் முக்கியத்ரவ்யம் இல்லாவிடில் பிரதிநிதித்ரவ்யத்தால் அர்ச்சனம் என்பது கிடைத்தாலும், இந்த மந்திரத்தில் 'ம' பஞ்சகத்ரவ்யங்களின் வரிசைக் கிரமம் வற்புறுத்தப்படுவதால், முந்திய முந்திய முக்ய த்ரவ்யம் கிடைக்காமல், பிந்திய பிந்திய முக்யத்ரவ்யம் கிடைத்தாலும், அந்த த்ரவ்யங்களால் அர்ச்சனம் இல்லை என்று சித்திக்கிறது. இவ்வாறு முந்திய முக்ய த்ரவ்யம் இல்லாத இடத்திலும் भक्तानि என்ற நாலாவது த்ரவ்யம் நைவேத்யத்திற்கு அவசியமாக இருப்பதால் அதை மட்டிலும் பூஜையில் ஸ்வீகரித்து கொள்வது ஸம்ப்ரதாய சித்தமாக இருக்கிறது.

இந்த சுலோகத்தில் आद्य என்பதற்கு பதிலாக आज्य என்று வேறு சாகாந்தரங்களில் பாடம் இருக்கிறது. அந்த आज्य என்பதற்கு घृतं நெய் என்பதே அர்த்தம். அது काकाक्षिगोलक (காக்கையின் கண்போல) ந்யாயப்படி முந்திய झष த்திலும் பிந்திய पल த்திலும் அன்வயித்து நெய்யில் பாகம் செய்யப்பட்ட மத்ஸ்யம், நெய்யில் பக்குவப்படுத்தப்பட்ட மாம்ஸம் என்ற பொருளைத் தருகிறது. आज्य என்றதிலுள்ள यत् என்ற ப்ரத்யயம் அஜத்தின் விகாரமான (மாறுபட்ட) என்று विकारार्थ த்தில் அமைந்தது. அவ்வாறு விகாரம் என்ற அர்த்தத்திலேயே यत् என்ற விகுதி இருப்பதாக தந்திரங்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபிப்ராயப்படுகின்றன. இந்த आज्य என்பதற்கு अज சம்பந்தம் உள்ளது என संबन्धार्थे प्रत्ययः எனக்கொண்டு अज மாமிசம் என சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். அது தந்திரங்களுக்கு விரோதமானது. மேலும் சுருதியில் அங்கீகரிக்கப்பட்ட पञ्च पञ्च नखाः என்பவைகளுக்கும் தந்திரங்களில் भूचर பத்துவகை, खेचर பத்து வகை பிராணிகள் என கூறப்பட்ட எண்ணிக்கைகளுக்கும் (परिसंख्या) விரோதம் வரும்.

பரதேவதையின் தர்ப்பணத்திற்கு மாத்திரம் போதுமான திரவியம் கிடைத்த இடத்திலும் பிரதிநிதித்ரவ்ய ஸ்வீகாரம் என்பது கிடையாது. பஹிர்யாகத்தில் ஸ்வாத்மீகாரம் என்பது प्रतिपत्ति மிஞ்சியதை சிலவு செய்வது என்ற கர்மாவானதால் த்ரவ்ய குறைவால் அதற்கு லோபம் வந்தாலும் தோஷமில்லை என்பதான விஷயங்கள் ஷாஷ்ட (ஆறாவது (6) அத்யாயம்) ந்யாய மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

सुपरिष्कृतानि - த்ருஷ்டமான லௌகிக பாகாதிகளாலும், அத்ருஷ்டமான சாபவிமோசனம் முதலான சாஸ்திர ஸம்ஸ்காரங்களாலும் சுத்தி செய்யப்பட்டவைகள். தந்திரங்களில் வேறு பற்பல ஸம்ஸ்காரங்கள் விரிவாகக் கூறப்பட்டிருந்தாலும் बहल्पं वा स्वगृह्योक्तं'' (ஏராளமாகவோ, அல்லது கொஞ்சமாகவோ தனது க்ருஹ்ய சூத்திரத்தில் சொல்லியபடி) என்ற ந்யாயப்படி கல்பசூத்திரங்களில் கூறப்பட்ட அவசியமான ஸம்ஸ்காரங்களால் சுத்தம் செய்யப்பட்டவைகள் என தாத்பர்யம்.

''महत्यै देवतायै निवेदयन्'' மகாதேவிக்கு நிவேதனம் செய்து அந்நிவேதனப் பொருளை தானும் சிறிது ஸ்வீகரித்த सुकृती மிக புண்ய சீலனான பஹிர்யாக கர்த்தா सिद्धिं एति அதற்குறிய பூர்ண பலனை அடைகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

ஸ்ரீ மகாதேவியை உத்தேச்ய தேவதையாக பாவித்து ஒன்றுக்கொன்று இணைபிரியாதபடி பிணைந்துள்ள 'மபஞ்சக' த்ரவ்யத்தால் செய்யப்படும் யாகம் மூலமாக இஷ்டபலனை பெறவேண்டும் என்ற தாத்பர்யங்களை அந்தர்யாகக்ரமத்தில் கூறிய விவரப்படி அறியவும்.

भा. देवतायाः सगुणं ध्यानं क्रत्वङ्गं उपदेष्टुं त्रयोदशीं ऋचं आह -

उप. "सृण्येव सितया विश्वचर्षणिः
पाशेन प्रतिबध्नात्यभीकान्।
इषुभिः पञ्चभिः धनुषा च विद्ध्यति
आदिशक्तिः अरुणा विश्वजन्या" ॥ १३ ॥

भा. सृण्येव सितया इति इत्थं भूतलक्षणे तृतीया। सितया-श्वेतया रजतमय्या। सशयोः अभेदात् निशितया-तीक्ष्णधारया वा। सृण्या-अङ्कुशेन इव उपलक्षिता। विश्वजन्या-विश्वं जन्यं यस्याः सा जगज्जननी। अरुणा लौहित्यवती, आदिशक्तिः - महात्रिपुरसुन्दरी। विश्वचर्षणिः - प्राणिमात्रस्य शुभाशुभकर्मद्रष्ट्री सती। अभीकान् - कामुकान्। तृष्णया लौल्येन इह मार्गे प्रवर्तमानान् भ्रष्टान्। पाशेन प्रतिबध्नाति - पाशेन तान् बध्वा, धनुषा पञ्चभिः इषुभिः - बाणैः, विध्यति च - अधः पातयति इति यावत्। तृष्णाहीनान् वैधविधया प्रवर्तमानान् ऊर्ध्वं नयति इति तु विधिसिद्धमेव इति पुनः नोक्तम्। तदुक्तम् -

"विधिबुध्यैव सेवेत तृष्णया चेत् सः पातकी।
यैरेव पतनं द्रव्यैः मुक्तिः तैरेव चोदिता॥
अभीकस्य अनभीकस्य इत्येवं एते व्यवस्थिताः ॥ इत्यादि ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

सृण्येवेति - द्विविधा सृणिर्भवति - भर्ता च, हन्ता च इति तु यास्कः। इव शब्दः सर्वत्र अन्वितस्सन् सगुणरूपस्य भक्तानुग्रहार्थं कल्पितत्वेन निर्गणरूपस्यैव पारमार्थिकत्वं व्यञ्जयति ॥

ஸ்ரீ பரதேவதையின் பஹிர்யாகாங்கமான த்யான ஸ்வரூபம் பதிமூன்றாவது ரிக்கால் விஸ்தரிக்கப்படுகிறது.

सितया - வெண்மையான (வெள்ளியால் செய்யப்பட்ட) **शितया** என்ற பாடத்தில் கூர்மையான என்று அர்த்தம். **सृण्या** அங்குசத்தோடு கூடியவளும், **विश्वजन्या** - சர்வ உலகங்களேயும் தன்னிடமிருந்தே தோற்றுவித்தவளும், **अरुणा** - சிவந்த மேனியை உடையவளுமான, **आदिशक्तिः** ஆதிசக்தியான பரதேவதை **विश्वचर्षणिः** சர்வ பிராணிகளும் செய்துவரும் சுபாசுப காரியங்களே நேரில் கண்டு அறிந்தவளாய் **अभीकान्** - காமுகர்களே (சாபல்யத்தால் நப்பாசை கொண்டு இந்த மார்க்கத்தில் பிரவர்த்திகின்ற பதிதர்களே) **पाशेन बध्वा धनुषा विध्यति च** - பாசத்திஞல் கட்டி, தனுசில் ஏற்றிய பஞ்ச பாணங்களால் அடித்து வீழ்த்துகிறாள் (அதல பாதளத்தில் அமிழச் செய்கிறாள்).

''வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் இம்மார்கம் சிறப்பாக கூறப்படுகிறது.'' என்ற திடசித்தம் கொண்டவர்களாய் பேராசை, நப்பாசைகளே அறவே விலக்கி இந்த மார்கத்தில் ஈடுபடும் உண்மை பக்தர்களே மேலான பதவியில் அமரச் செய்கிறாள் என்ற விபரம் சாஸ்திரசித்தமானபடியால் அதுபற்றி இங்கு கூறவில்லே.

''சாஸ்திரங்களால் விதிக்கப்படுகின்றன'' என்ற புத்தியுடனேயே இதை சேவிக்க வேண்டும். நப்பாசையால் சேவித்தால் மஹாபாதகஞக ஆகிறான். எந்த த்ரவ்யத்தால் வீழ்ச்சியோ அதே த்ரவ்யத்தாலேயே முக்தியும் **अभीकः** - காமுகன் (நப்பாசை உள்ளவன்), **अनभीकः** - அவ்வாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நப்பாசை அற்றவன் என்ற இவ்விரண்டு மட்டுமே வீழ்ச்சிக்கும், உயர்வுக்கும், காரணங்கள். இதுதான் வியவஸ்தை'' (व्यवस्था) என்று பல இடங்களில் தென்படுகின்றன.

''ஸ்ருணி என்பது இருவகை. भर्ता - உய்விப்பது, हर्ता - வீழ்ச்சி அடையச் செய்வது'' என யாஸ்கர் என்பவர் கூறுகிறார்.

இந்த சுருதியிலுள்ள इव பதத்தை மற்ற எல்லா பதங்களோடும் அன்வயித்து ''அது போல, அதுபோல'' என்று தாத்பர்யம் கொள்வதால் இங்கு கூறப்படும் தன்மைகள் யாவும் பக்தர்களை அனுக்ரஹம் செய்யும் பொருட்டு சகுண உருவமாக கல்பிக்கப்பட்டவைகளே என்றும், பாரமார்த்திக ஸ்வரூபம் நிர்குணமே என்றும் குறிப்பு (व्यंग्य) முறையில் கூறுவதாக ஆகிறது.

भा. सगुणस्य कल्पितत्वादेव स्त्रीपुंसयोः समप्राधान्यं निदेष्टुं - चतुर्दशीं ऋचं आह -

उप. ''भगः शक्तिः भगवान् कामः ईशः
उभौ दातारौ इह सौभगानाम्।
समप्रधानौ समसत्वौ समोतयोः
समशक्तिः अजरा विश्वयोनिः'' ॥ १४ ॥

भा. 'भगः' विमर्श पर्यायः
ऐश्वर्यस्य समग्रस्य धर्मस्य यशसः श्रियः।
ज्ञानवैराग्ययोश्चैव षण्णां भग इति ईरणा॥''

इत्यादि स्मृतिभिः ईश्वरत्व शरीरघटकः यावान् धर्मराशिः सः सर्वोऽपि भगपदेन इह निर्दिष्टः। तादृशः धर्मसमूहः एव ''शक्तिः'' इत्युच्यते।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उपास्यत्वेन वर्णितायाः स्त्रीरूपायाः देवतायाः इदं स्वरूपम्। तदुक्तं नागानन्द सूत्रे -

''प्रकाशात्मनः ब्रह्मणः स्वभावात्मकं विमर्शं
प्रक्रम्य एषः एव-'विमर्शः, चितिः, चैतन्यं,
आत्मा, स्वरसा, उदिता, परावाक्, स्वातन्त्र्यं,
परमात्मौन्मुख्यं, ऐश्वर्यं, सत्तत्वं, सत्ता, स्फुरत्ता,
सारः, मातृका, मालिनी, हृदयं, ऊर्मिः, स्वसंवित्,
स्पन्दः' इत्यादि शब्दैः आगमैः उद्धुष्यते'' इति।

एतेषां धर्मविशेषाणां विवरणं तद्भाष्ये एव द्रष्टव्यम्। भगवान् - तादृश धर्मसमूहविशिष्ट एव। ''कामः'' ''ईशः'' - कामेश्वरः, इदमेव उपास्यदेवतायाः पुमात्मकं रूपम्। ''इह'' - उपासनायाम्। ''सौभगानां'' - धर्मार्थकामरूपाणां विविधफलानां 'दातारौ उभौ' अपि। ''एकस्याः एव देवतायाः द्वेधापि सगुणध्याने त्रिवर्गसिद्धिः'' इत्यर्थः। 'समप्रधानौ'। समसत्वौ - सत्वशब्दः गुणपरः। तेन परस्परं गुणगुणिभावापन्नौ इत्यर्थः। कामेश्वर्याः कामेश्वराङ्कनिलयत्वेन ध्याने शिवः आधारत्वात् गुणः। शक्तिः प्रधानम्। शिवस्य अर्धाम्बिकासमायुक्तत्वेन ध्याने करशीर्षाद्यवयव विशेषरूपत्वात् शक्तिः गुणः। शिव एव प्रधानं इति भावः। एवं अभिमतफलदानसामर्थ्यस्य अन्योन्यगुणप्रधानभावस्य च साम्येऽपि जगत्कर्तृत्वांशः शक्तिनिष्ठ एव। तेन स्त्रीरूपध्यानेनैव शीघ्रं फलसिद्धिः इति ध्वनयन् आह ''समोतयोः'' इति। सम्यक्-परस्पराभेदेन, ओतयोः - मिलितयोः अर्धनारीश्वररूपयोः शिवशक्त्योर्मध्ये, समशक्तिः - सर्वशक्तिः निखिलधर्मसमूहात्मिका देव्येव, विश्वयोनिः - जगत्कर्त्री। तथा च शक्तिसूत्रम् - ''चितिः स्वतन्त्रा विश्वसिद्धिहेतुः'' इति। समशब्दः ''उरुष्याणो अधायतस्समस्तात्'' इत्यादौ प्रसिद्धः सर्वपर्यायः। 'अजरा'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

इति विश्वयोनित्वांशे विशेषणम्। जगत्कर्तृत्वं प्रत्यक्षादिप्रमाणसिद्धत्वेन शङ्काकलङ्कराहित्यादृतं इत्यर्थः। तदुक्तं भागवते -

"शक्तिः करोति ब्रह्माण्डं सा वै पालयतेऽखिलम्।
इच्छया संहरत्येषा जगदेतच्चराचरम्॥
न विष्णुः न हरो नेन्द्रः न ब्रह्मा न च पावकः।
नार्को न वरुणः शक्ताः स्वे स्वे कार्ये कथञ्चन॥
तया युक्ता हि कुर्वन्ति स्वानि कार्याणि ते सुराः।
कारणं सैव कार्येषु प्रत्यक्षेणावगम्यते"॥ इति॥

अन्यत्रापि

"शिवोऽपि शवतां याति कुण्डलिन्या विवर्जितः।
शक्तिहीनोऽपि यः कश्चित् असमर्थः स्मृतो बुधैः"॥

इत्यादि विशेषः सेतुबन्धे द्रष्टव्यः। तेन शिवस्य विद्यमानमपि फलदादृत्वादिकं शक्त्यधीनत्वात् विलम्बितम्। शक्तेस्तु निरपेक्षत्वात् अविलम्बितं इति शीघ्रसिद्धिकामैः स्त्रीरूपैव देवता ध्यातुं युक्ता इति भावः॥

ஸகுண உருவம் கல்பிதமானபடியால் ஸ்த்ரீ, புருஷ ரூபங்களுக்கு சமப்ராதான்யம் உபதேசிக்கப்படுகிறது.

भगः विमर्शः (பக:, விமர்ச:) இரண்டு சொற்களும் ஒரே பொருள் கொண்டவைகள்.

சகல ஐச்வர்யங்கள், தர்மம், கீர்த்தி, அழகு, அறிவு, வைராக்கியம் இந்த ஆறும் (6ம்) भगः (பக:) என்பதின் பொருள். ஈசுவரனுடைய ஸ்வரூபத்திற்குள் அடங்கிய சகல தர்மங்களும் சகல ஸ்வபாவ விசேஷங்களும் இந்த भग (பக) சப்தத்தின் பொருள்கள். இவ்வாறான भग (பக) என்பதின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலவகை அர்த்தங்களின் கூட்டம்தான் சக்தி என்ற தேவதை. இந்த தர்ம ஸமூகமே விமர்சம் எனவும் கூறப்படுகிறது. இதுவரை உபாஸ்யதேவதையாக வர்ணிக்கப்பட்ட ஸ்த்ரீரூப தேவதையின் ஸ்வரூபம் இந்த தர்ம ஸமூஹமே. நாகாநந்த சூத்திரத்தில் பிரகாச ஸ்வரூப்மாயுள்ள பிரமத்தின் ஸ்வபாவ விசேஷங்களான विमर्श விமர்சத்தைப்பற்றி கூறுமிடத்தில் இந்த தர்ம ஸமூஹமே -

'விமர்ச:, சிதி:, சைதன்யம், ஆத்மா, ஸ்வரஸா, உதிதா, பராவாக், ஸ்வாதந்திரியம், பரமாத்மௌன்முக்யம் (பரப்பிரமத்தையே எதிர்நோக்கியிருத்தல்), ஐச்வர்யம், ஸதத்வம், ஸத்தா, ஸ்புரத்தா, ஸார:, மாத்ருகா, மாலிநீ, ஹ்ருதயம், ஊர்மி:, ஸ்வசம்பத், ஸ்பந்த: என்பதான பல சப்தங்களால் உத்கோஷிக்கப்படுகிறது'' என சொல்லப் பட்டிருக்கிறது. இந்த தர்மங்களின் விவரணம் அதன் பாஷ்யத்தில் கவனித்து அறியத்தக்கது.

பகவான் என்பவர் இந்த தர்ம ஸமூஹத்திற்கு आश्रय (ஆதார)மாக இருப்பவர். कामः ईशः (காம: ஈச:) - காமேசுவரன். இவர்தான் உபாஸ்ய தேவதையின் புருஷ வடிவம் (பும் ரூபம்). இந்த உபாசனைக்குறிய सौभगानां (ஸௌபகானும்) - தர்மம், அர்த்தம், காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களையும் கொடுப்பவர் ''சக்தி, சிவன் (அம்பிகை, ஈசுவரன்) என்ற இருவருமே. (''ஸகுண ஸ்வரூபங்களான இவ்விரு ஸ்த்ரீ, பும் தேவதைகளுக்குள் எந்த தேவதையை உபாசித்தாலும் த்ரிவர்க்க பலன் கிடைக்கும் என்பது'' உள்ளடக்கப் பொருள்). இந்த சிவன், சக்தி இரண்டும் समप्रधानौ (சமப்ரதானௌ) - சமமான ப்ராதான்யத்தை பெற்றவைகள். அதேபோல் समसत्त्वौ (சமஸத்வௌ) - இங்குள்ள सत्त्व என்பதற்கு ''குணம்'' என்று அர்த்தம் இருப்பதால் 'சமமான குணத்தை' (அப்பிராதான்யத்தை) அடைந்தவர்கள் எனப் பொருள். இவ்விரு விசேஷணங்களால் சக்தியும் சிவனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவருக்கொருவர் गुण, गुणि (குண, குணீ) பாவத்தை (அப்பிராதான்யம், ப்ராதான்யம் என்ற தன்மையை) பெற்றவர்கள் என்பது குறிப்பிடப்படுகிறது. காமேசுவரரின் மடியில் காமேசுவரீ அமர்ந்திருப்பதாகச் செய்யப்படும் தியானத்தில் காமேசுவரன் ஆதாரமாக இருப்பதால் குணம் (அப்பிராதானம்) என்றும், காமேசுவரீ ஆதேயமாக இருப்பதால் குணீ (பிரதானம்) என்றும், அர்த்த நாரீசுவர ரூபமான த்யானத்தில் ஈசனது கை, கால், தலை (कर शीर्षादि) என்ற அவயவ விசேஷ ஸ்வரூபங்களாக அம்பிகை இருப்பதால் சக்தி என்பது குணம் (அப்பிராதனம்) என்றும், அவயவீயாக இருக்கும் சிவன் குணீ (பிரதானம்) என்றும் ஆகிறது.

இவ்வாறாக பக்தர்களுக்கு பலன்களை வழங்கும் தன்மையிலும், பிராதான்ய, அப்பிராதான்ய தன்மையிலும் சக்தி சிவன் இருவருக்கும் பரஸ்பரம் ஒற்றுமை இருந்தாலும் ''உலகத்தை சிருஷ்டித்தல், ரக்ஷித்தல்'' என்ற தன்மை அம்பிகையிடத்தில் மாத்திரமே உள்ளது. ஆகையால் ''ஸ்த்ரீரூப த்யானத்தால் சீக்கிரமாகவும், சுலபமாகவும் பலனைப் பெறலாம்'' என்பதை சூசனை செய்வது போல் समोतयोः என்ற வாக்கியம் ஆரம்பமாகிறது. सम + ओत - ஒரே மாதிரியாக ஒன்றுக்கொன்று பேதமின்றி விஸ்தாரத்தை அடைந்து இருக்கும் சிவ, சக்திகளுக்குள் समशक्तिः - (இங்கு सम என்பதற்கு சமஸ்தமான என்று அர்த்தம்). சகலவித தர்ம சமூக ரூபமான சக்திதேவியே विश्वयोनिः - ஜகத் ஸ்ருஷ்டியாதிகளுக்கு காரணமாக இருக்கிறாள். ''चितिः स्वतन्त्रा विश्वसिद्धिहेतुः'' - ''சைதன்ய சக்தியே மற்றொன்றை அபேக்ஷிக்காமல் உலக ஸ்ருஷ்டிக்கு காரணம்'' என சக்தி சூத்திரமும் கூறுகிறது. अजरा என்பது विश्वयोनिः என்பதற்கு விசேஷணம். உலக ஸ்ருஷ்டிக்கு தேவியே காரணம் என்பது ஜரைத்தன்மை பெறாத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(எக்காலத்திலும் ஒரே மாதிரியாக பிரத்யக்ஷமாக பிரகாசித்துக்கொண்டிருக்கும்) விஷயம், என்பது இந்த விசேஷணத்தால் குறிக்கப்படுகிறது." இதுபற்றி பாகவதம் கூறுவதாவது -

''சக்தியே பிரம்மாண்டத்தை சிருஷ்டிக்கிறது. அதே யாவற்றையும் பரிபாலனம் செய்கிறது. சராசரமான இவ்வுலகை அந்த சக்தியே தன் விருப்பப்படி ஸம்ஹாரம் செய்கிறது. விஷ்ணுவோ, சிவனோ, பிரம்மாவோ, அக்னியோ, சூரியனோ, வருணனோ இவர்களில் யாரும் ஸ்வதந்திரமாக தன் தனது காரியங்களை செய்துகொள்ளும் சாமர்த்தியம் பெற்றவர்கள் இல்லை. சக்தியின் சம்பந்தத்தால் தான் தங்களது காரியங்களை நிறைவேற்றி கொள்கிறார்கள். ஸமஸ்த காரியங்களுக்கும் அந்த சக்தியே காரணம் என்பது பிரத்யக்ஷமாக தெரிகிறது'' என்பதாக. மற்றோர் இடத்தில்

''சிவனும் குண்டலினீ சக்தியினின்றும் விலக்கப்பட்டால் சவம் ஆகிறான்'' எனவும் ''சக்தியற்ற எவனும் சாமர்த்தியம் அற்றவன் என அறிவாளிகள் கூறுகிறார்கள்'' எனவும் கூறப்பட்டிருக்கிறது. இது முதலிய விஷயங்களை விஸ்தாரமாக ''சேதுபந்தம்'' என்ற நூலில் காணலாம்.

இந்த வ்யாக்யானங்களினால் அறியப்படுவது யாதெனில் ''उभौ दातारौ'' என்றபடி ஈசுவரனுக்கும் பலன்களை விநியோகிக்கும் உரிமை இருந்தாலும் அவ்வுரிமையும் அம்பிகையின் அதிகாரத்திற்கு உட்பட்டதே என்பதால் ஈசுவரன் மூலமாக பலன்கள் கிடைப்பதற்கு சிறிது தாமதம் ஏற்படலாம். அம்பிகையோவெனில் பக்தர்களுக்கு அபீஷ்டங்களை நிறைவேற்றி வைப்பதில் ஈசுவரனின் சம்பந்தம் சிறிதுமின்றி தனி ஸ்வாதந்திரியம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றிருப்பதால் சீக்கிரமாகவும், சுலபமாகவும் பலன்களைப்பெற அம்பிகையின் ஆராதனையே சாலச்சிறந்தது என்பதாக.

भा. एवं सगुणध्यानं उक्त्वा निर्गुणध्याने वक्तव्यांशाभावात् तज्जन्यफलं तज्जनन प्रणालिकां च उपदेष्टुं पञ्चदशीं ऋचं आह - परिस्रुतेति

उप. ''परिस्रुता हविषा पावितेन
प्रसङ्कोचे गलिते वै मनस्तः ॥
सर्वः सर्वस्य जगतो विधाता
भर्ता हर्ता विश्वरूपत्वं एति'' ॥ १५ ॥

भा. कर्ममार्ग, ज्ञानमार्ग, भक्तिमार्गेषु तत्तच्छास्त्रप्रवर्तकैः प्रणाडिकाः नानाविधाः परस्परविलक्षणाः उक्ताः। ताः सर्वाः अपि दुस्साधाः चिरकालफलप्रदाः इति तु तत्तच्छास्त्रविदां स्पष्टमेव। अत्र तु द्रव्यस्वीकारैः आवर्त्यमानैः उल्लासपरम्परा एव प्रणाडिका। तत्र प्रौढोल्लासपर्यन्तं समयाचारिकृताः धर्माः। तदन्तोल्लासे याथाकाम्यम्। चरमोल्लासे ब्रह्मस्वरूपता इति। तथा च कल्पसूत्रं - ''आरम्भ, तरुण, यौवन, प्रौढ, तदन्त, उन्मना, अनवस्थोल्लासेषु प्रौढान्तं समयाचारः। ततः परं याथाकाम्यम्'' इति। उल्लाससप्तकलक्षणानि कुलार्णवादिषु द्रष्टव्यानि। यद्यपि प्रतिदिनं सुषुप्तिदशायां ब्रह्मस्वरूपतावाप्तिः जायते एव। तदानीं मनसः विलीनत्वात्। तथापि अविद्यापरिणामविशेषरूपया निद्रया संवलितत्वात् न सा पुरुषार्थः। निद्राराहित्येन तादृशी दशा तु पुरुषार्थः एव, यां ज्ञानभूमिकासु सप्तमीं मन्यन्ते ज्ञानिनः, यां च निर्विकल्पकसमाधित्वेन व्यवहरन्तः अनुभवन्ति योगिनः, सैव उन्मनोत्तर अनवस्थोल्लासेऽपि योगिभिः अनुभूयते। तदुक्तं -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"आनन्दं ब्रह्मणो रूपं तच्च देहे व्यवस्थितम्।
तस्य अभिव्यञ्जकं द्रव्यं योगिभिः तेन पीयते"॥ इति
कल्पसूत्रे तु "तस्य अभिव्यञ्जकाः पञ्च मकाराः"- इत्युक्तम्।

परन्तु तदेव द्रव्यं अयज्ञाङ्गं चेत् अपवित्रम्। पीतं तदा पुरुषार्थनिषेधप्रवृत्या पापेन प्रतिबद्धं न तां दशां उत्पादयितुं क्ष्मम्। मन्त्रैः पावितं हवीरूपमेव तु समाधिदशां उत्पादयति। तदुक्तं समयाचारस्मृतौ

"असंस्कृतं पशोः पानं कलहोद्वेगपापकृत्।
मन्त्रपूजाविहीनं यत् पशुपानं तदेव हि॥
पशुपानविधौ पीत्वा वीरोऽपि नरकं व्रजेत्।
संस्कृतं बोधजनकं प्रायश्चित्तं च शुद्धिकृत्॥
मन्त्राणां स्फुरणं तेन महापातकनाशनम्।
आयुः श्रीः कान्ति सौभाग्यं ज्ञानं संस्कृतपानतः॥
अष्टैश्वर्यं खेचरत्वं, पतनं विधिवर्जितम्॥
सौत्रामण्यां कुलाचारे मदिरां ब्राह्मणः पिबेत्।
अन्यत्र ब्राह्मणः पीत्वा प्रायश्चित्तं समाचरेत्॥" इत्यदि। परन्तु
"वरं प्राणाः प्रगच्छन्तु ब्राह्मणो नार्पयेत् सुराम्।
ब्राह्मणो मदिरां पीत्वा ब्राह्मण्यादेव हीयते॥"

इत्यादि शक्तिसङ्गम, तन्त्रराजादि वचनैः निषिद्धत्वात् इह धर्मपाशनिरसनोपायः संप्रदायादेव अवसेयः। व्यवस्थाप्रकारश्च कौलोपनिषद्भाष्ये अस्माभिः प्रदर्शितः। ततश्च तदधिकारिणां तादृशैः उल्लासैः अन्तःकरणावच्छिन्न जीवात्मनः अन्तःकारणोपाधिकृत-सङ्कोचापनये सति ब्रह्मभावे किमवशिष्यते?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

न च द्रव्योल्लासस्य आगमापायित्वेन न तावतैव कृतार्थता इति वाच्यम्। अस्य पर्यनुयोगस्य समाधावपि तुल्यत्वात्। अथ तत्र पवननियमनादिभिः उपायैः पुनः पुनः समाधिप्रवेशनेन चिराभ्यास पाटवेन कतिपयदिवसोत्तरं विनापि पवननिरोधं सार्वकालिकः समाधिः उत्पद्यते। समुद्रे नौकामारुह्य गच्छतां तत्कल्लोलैः सुचिरं आन्दोलितवातां नौकावरोहणे अपि आन्दोलनानुवृत्तिदर्शनात् इति चेत् तुल्यं प्रकृतेऽपि। संस्कृत-द्रव्यपानजन्योन्मनावस्थाभ्यासपाटवेन विनापि द्रव्यं कतिपयदिवसैः तादृशदशायाः अकृत्रिमायाः सिद्धेः।

இவ்வாறு சகுணத்யானத்தை விரிவாக கூறி நிர்குணத்யான சம்பந்தமாக கூறப்படவேண்டிய அம்சங்கள் யாதும் இல்லாததல் அந்த நிர்குணத்யானத்தால் அடையப் பெறும் பயனையும் அந்த பயனை உண்டாக்கக்கூடிய வழிமுறைகளையும் परिस्रुता என்ற பதினைந்தாவது ரிக்கால் விளக்குகிறார்.

கர்ம, பக்தி, ஞானம் என்ற மூன்று மார்க்கங்களைக்குறித்து அந்தந்த சாஸ்திர கர்த்தாக்கள் பற்பல வழிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். அவ்வழி முறைகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் உள்ளவைகளாகவும், அனுஷ்டானத்திற்கு சாத்திய மற்றவைகளாகவும் இருக்கின்றன என்பதும், கடின முயற்சியுடன் அநுஷ்டானம் செய்தாலும் அதனதற்குறிய பலன்களை உடனுக்குடன் அளிக்கும் ஆற்றல் அற்றவைகளாய் காலாந்தரங்களிலேயே பயன்பெறத் தக்கவைகளாகவும் இருக்கின்றன என்பதும் இம்மார்கங்களை கூறிவரும் சாஸ்திர விற்பன்னர்களும் அறிந்தவைகளேதான்.

ஆனால் இங்கு விவரிக்கப்படுகின்ற कौल சாக்தமார்க்கத்தின் வழிமுறை யோ வெனில் அவ்வப்போது அடிக்கடி செய்யப்படுகின்ற திரவியஸ்வீகாரத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிடைக்கின்ற (उल्लासपरम्परा) உல்லாஸ பரம்பரை (மனதை ஒரு நிலைப்பெறச்செய்து க்ரமமாக ஆத்மாவுடன் மனது கறைந்து विलीन மாகி தன்னை மாத்திரமே விஷயமாகக் கொண்ட ஞானரூபமான समाधि நிலையில் இடையற்ற ஆநந்தத்தை அனுபவித்துக் கொண்டிருத்தல்) என்ற मदन्ति என்ற பதத்தால் मदं என கூறப்படும் உன்மத்தநிலைதான்.

இந்த உல்லாஸ பரம்பரையானது வரிசைக்கிரமமாக (सप्त सोपान) ஏழு பூமிகைகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் आरम्भ, तरुण, यौवन, प्रौढ என்ற முந்திய நான்கு (பூமிகை) படிகளில் அப்பியாசம் செய்து வருபவர்களுக்கு "समयाचाराः" ஸமயாசாரங்கள் என்ற பற்பல கட்டு ப்பாடுகளுடன் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த பூமிகை (படி)களில் தேர்ச்சிபெற்ற சாதகன் சிறிது சிறிதாக கட்டுப்பாடுகளின்றும் விலக்கப்பட்டு அடுத்த பூமிகை களான तदन्त, उन्मना என்ற உயர்வான ஸ்தானத்தை ப்பெற்று அந்த நிலையிலும் தனது திடமன அப்பியாஸ விசேஷத்தால் கடைசியான ஏழாவது பூமிகையான अनवस्था என்ற உல்லாஸ ஸ்தானத்தை அடைந்து நிரதிசய சுகத்தை அனுபவிக்கிறான். ஆகவே இந்த ஏழு உல்லாஸ பூமிகைகள் மூலமாகவே சிறந்த அப்பியாச பலத்தால் பரப்பிரம்மாபின்னமான ஆத்மாநந்த ஸ்வரூபத்தை அடையலாம் என்பது இந்த சாஸ்திரத்தின் சித்தாந்தம். குலார்ணவ தந்திர கிரந்தத்தில் இந்த ஏழுவகை உல்லாஸ பூமிகைகள் பற்றி விஸ்தாரமாக கூறப்பட்டிடுக்கிறது.

சுஷுப்திநிலையில் அந்த:கரணம் (மனது) ஜீவாத்மாவுடன் ஒன்றி (विलीन) விடுவதால் தூக்கம் என்ற பரப்பிரம்மானந்ததை நாம் யாவரும் ஒவ்வொரு நாளும் அனுபவித்து வருகிறோம். ஆனாலும் அந்த அனுபவம் மாயையின் மாற்று உருவமான நித்திரையால் (தூக்கத்தால்) பிணைக்கப்பட்டிருப்பதால், அந்த தூக்கம் என்ற ஆநந்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மையான பரப்பிரம்மாநந்தமாக ஆகாது. निद्रा (தூக்கம்) சம்பந்தமின்றி அந்த நிலையை அடைவது தான் உண்மை ஆநந்தம் - அதாவது மோக்ஷம் என்ற புருஷார்த்தம். இந்த निद्रा தூக்கம் சம்பந்தம் அற்ற ஆனந்தானுபவத்தைத்தான் ஞான பூமிகைளில் கடைசியர்ன ''ஏழாவது . ஞானபூமி'' என்று வேதாந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ''நிர்விகல்பக சமாதி'' என்று வர்ணிக்கப்படுகின்ற ஏழாவது ஞான பூமிகையில் வேதாந்த யோகிகள் எந்த பரப்பிரம் மானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ சிறப்புற்ற அதேபரப்பிரம்மானந்தத்தையே உபாஸக சிரோமனிகளும் उन्मना அவஸ்தைக்கு அடுத்த अनवस्था என்ற உல்லாஸ ஸோபானத்தில் பெற்று அனுபவித்து மகிழ்கிறார்கள்.

''ஆனந்தம் என்பது பரப்பிரம்மத்தின் உருவம். அந்த ஆனந்தமும் நமது சரீரத்திலேயே நிலைத்து நிற்கிறது. அவ்வாறு மறைந்துள்ள ஆனந்தத்தை அனுபவ சாத்யமானதாகச் செய்ய உரியசாதனமாக அமைந்துள்ளது த்ரவத்ரவ்யம். ஆகையினுலேயே யோகிகளால் அடிக்கடி பானம் செய்யப்படுகிறது'' என்பதாக பல வசனங்கள் இருக்கின்றன.

கல்ப சூத்ர கர்த்தாவும் இவ்வாறு கூறுகிறார் - ''நமது தேகத்தினுள் மறைந்திருக்கும் ஆநந்தத்தை அனுபவிக்க சாத்யமாக செய்யும் சாதனங்கள் ஐந்து மகாரங்கள்'' என்பதாக.

ஆனுல் இதேதிரவியம் யக்ஞ சம்பந்தம் இன்றி சாஸ்திரீய ஸம்ஸ்காரங்கள் பெறாமல் அசுத்தமான நிலையில் ஸ்வீகரிக்கப்படுமேயானுல் இந்த அசுத்த திரவியம் சாஸ்திரநிஷேதங்களுக்கு உட்பட்டு பாபங்களுடன் பிணைக்கப்பட்டு இருப்பதால் நற்பயன்களை அளிக்கத்தக்க ஆற்றல் பெறாமல் கேடு செய்வதற்கே காரணமாக ஆகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த திரவியம் மந்திரசுத்தி பெற்ற "ஹவிஸ்" என்ற பெருமையை பெறுமாஞல் உயர்வான சமாதிநிலையை அளிக்க வல்லதாக ஆகிறது.

திரவிய சேவனம் பற்றி பற்பல வசனங்கள் கீழ் வறுமாறு கூறுகின்றன.

1. "ஸம்ஸ்காரம்பெறாத திரவ்யபாநம் பசுபானம் எனப்படும். அது கலகம், பதட்டம், பாபம், கோபம் முதலியவைகளை உண்டாக்கும்.
2. மந்திரசுத்தி இல்லாத பானம் - பசுபானம்.
3. "வீரன்" என்ற நிலையைப்பெற்ற உபாசகனும், பசுபான முறையில் சேவித்தால் நரகம் அடைவான்.
4. (बोध) போத ஜனகமான வஸ்துவும் மந்திர ஸம்ஸ்காரம் என்ற பிராயச்சித்தத்தால் சுத்திபெற்று ஸமஸ்தபாபங் களையும் நசிக்கச் செய்யும் சக்தியுடன் புதிய புதிய மந்திரங்கள் தோன்று வதற்கும், அம்மந்திரங்களின் சக்திவெளியில் பிரகாசிப்பதற்கும் சாதனமாக ஆகிறது.
5. சுத்திபெற்ற திரவிய சேவனத்தால் ஆயுள், கீர்த்தி, லக்ஷ்மீ, சம்பத், சௌபாக்கியங்கள், ஞாநம், அஷ்டைசுவரிய ப்ராப்தி, ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சக்தி இவைகள் கிடைக்கின்றன். விதிக்கு உட்படாத பானம் வீழ்ச்சிக்கு (நாசத்துக்கு) காரணம்.
6. சௌத்ராமணி யாகத்திலும், குலாசாரகிரமத்திலும் சுரோத்திரிய பிராமணனும் கூட பானம் செய்யலாம். மற்ற இடங்களில் பிராமணன் பானம் செய்தால் பிராயச்சித்தம் செய்ய வேண்டும்." இவ்வாறான பல வசனங்கள் பானத்தை அனுமதிக்கின்றன. ஆனுல்

1. "தனது பிராணன் போனுலும் போகட்டும். பிராமணன் சுரையை (மதுவை) சேவிக்கக்கூடாது.
2. பிராமணன் சுரையை சேவித்தால் பிராமண த்தன்மையை இழக்கிறான்." இவ்வாறான விதி, நிஷேதங்களும் இருக்கின்றன. "இவ்வாறு விதி, நிஷேதங்கள் என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்ம்பாசத்தால் ஏற்படும் பந்தனத்தை (முட்டுக்கட்டை அல்லது கட்டுப்பாடு) விலக்குவதற்குள்ள வழியை ஆன்றோர்களின் ஸம்ப்ரதாயம் மூலமாகத்தான் நிச்சயிக்க வேணும். அந்த வியவஸ்தை குறித்து கௌளோபநிஷத் உரையில் கூறப்பட்டிருக்கிறது.

ஆகவே, அந்தந்த அதிகாரிகளுக்கு உரிய விதிப்படி ஸ்வீகரிக்கும் த்ரவ்ய சேவனத்தால் வரிசைக்கிரமமாக ஏற்படுகின்ற உல்லாஸானுபவங்களால் ஜீவாத்மாவை மறைத்துக் கொண்டிருக்கும் அந்த:கரணம் என்ற உபாதியானது நீங்கிய நிலையில் ஜீவர்கள் 'பிரம்மபாவத்தை' அடைவதைத்தவிர வேறு என்ன பாக்கி இருக்கிறது?

ஆத்மானந்தானுபவ சம்பந்தமாக கீழ்கண்டவாறு அபிப்ராயம் கூறுகிறார்கள். அதாவது "திரவிய ஸ்வீகாரத்தால் ஏற்படும் मदः என்ற (उल्लास) உல்லாஸ நிலையானது திரவியத்தின் வீர்யம் குறைந்த சந்தர்ப்பங்களில் நீங்கிவிடுவதால் அநித்யமான அந்த உல்லாஸத்தால் ஏற்படும் ஆநந்தானுபவம் நிரந்தரமாக இருக்க முடியாது. யமம், நியமம், முதலான யோகப்பயிற்சியால் அடையப்பெறும் சமாதி நிலை மூலமாகத்தான் நித்யமான ஆநந்தானுபவம் ஏற்படமுடியும்" - என்பதாக. இதற்குக்கூறும் பதிலாவது.

யமாதி கடின அப்பியாசத்தால் அடையப்படுகின்ற நிர்விகல்பக சாமதிநிலையும் அடிக்கடி கலைந்து விடுவது பிரத்தியக்ஷசித்தமாக இருப்பதால் இவ்வாறு ஏற்படும் ஆத்மானுபவமும் அநித்யம்தான் என்பதாக.

சமுத்திரத்தில் படகில் செல்பவனுக்கு சமுத்திர அலைகளாலும், சுழற்சிகளாலும் ஏற்படுகின்ற आन्दोलनम् (படகின் ஆட்டத்தாலும், குலுங்கல்களாலும் ஏற்படும் இன்பநிலை) படகிலிருந்து இறங்கியபிறகும் தொடர்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருவது, போல், யமம், நியமம் முதலிய சாதனங்களை மறுபடியும், மறுபடியும் கடினமான அப்பியாசத்தின் மூலம் ஏற்படும் சமாதிநிலையில் அடையப்பெறும் ஆத்மானந்தம் சமாதிகலைந்தாலும் தொடர்ந்து நீடித்து நிற்கிறது என்று கூறுவார்களேயானுல் அம்மாதிரியாகவே இந்த மார்க்கத்திலும் சுத்தம் செய்யப்பட்ட த்ரவ்ய சேவனந்தை மறுபடியும், மறுபடியும் அனுஷ்டித்து அதன் மூலம் उन्मना என்ற உல்லாஸநிலையை அடைந்து அந்நிலையிலும் செய்யப்படுகின்ற திடமான அப்பியாச விசேஷத்தால் अनवस्था என்ற கடைசி உல்லாஸ நிலைக்கு வந்தவனுக்கு திரவிய சேவனம் இல்லாமலேயே அவ்வுல்லாஸ நிலையில் ஸ்திரமாக நின்று ஸ்வாத்மாநந்தானுபவத்தை நிரந்தரமாக ப்பெறுவதும் சாத்யமே என்பதாக. ஆகவே கடினமான யோக முறையைக்காட்டிலும் சுலபமான இவ்வுல்லாஸ முறை மூலமாக ஆத்மானந்தானுபவம் பெறுவதே சிறந்ததாகும்.

भा. अक्षरार्थस्तु - पावितेन - मन्त्रसंस्कारसंस्कृतेन, हविषा - देवीपूजाशेषभूतेन, परिस्रुता - पीयमानेन, मनस्तः - अन्तःकरणात् जाते संकोचे - आत्मनः परिच्छेदे, प्रगलिते - निर्व्युत्थानं विलीने सति - उन्मन्युल्लासोत्तरानवस्थायां इति यावत्। वै - निश्चयेन, सर्वः - सर्वात्मको भवति। तेन स्वात्मैकविषयकनिर्विकल्पकवृत्तिजनकः मदः एव ''अन्तर्यागविधायकवाक्ये धात्वर्थः'' इति उपसंहृतं भवति। अनेनैव आशयेन तन्त्रे मत्तस्य बहुविधता प्रतिपाद्यते -

''रमन्ते कामुकाः मत्ताः मत्ताः कुप्यन्ति कोपिनः।
गायन्ति गायकाः मत्ताः मत्ताः ध्यायन्ति योगिनः'' ॥

तेन योगविशेषोऽपि एतत्सहायत्वेन आक्षिप्तः। सर्वात्मकत्वमेव विवृणोति 'सर्वस्य जग्रतः विधाता - ब्रह्मा, भर्ता - विष्णुः, हर्ता

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- रुद्रश्च स एव। किं बहुना - दास, दाश कितवादिप्राणि मात्ररूपः स एव भवति इत्याह विश्वरूपत्वं एति इति। शरीरपातस्तु प्रारब्धवशात् यदाकदापि यत्रकापि भवतु। न तावता अस्य कोऽपि विशेषः। कृत कृत्यत्वात् इति भावः। उक्तं च कल्पसूत्रे - ''इत्थं विदित्वा विधिवत् अनुष्ठितवतः कुलनिष्ठस्य सर्वतः कृतकृत्यता। शरीरत्यागे श्वपचगृह, काश्योः नान्तरम्। सः जीवन्मुक्तः'' इति.

மந்திரத்தின் அர்த்தமாவது.

மந்திர ஸமஸ்காரங்களால் சுத்திபெற்றதும் தேவீ பூஜையின் சேஷமும் பிரஸாதமுமான திரவிய பானத்தால் இதுவரை ஆத்மாவை சிறுமைப்படுத்திக் கொண்டிருந்த அந்த:கரணம் என்ற உபாதியானது மறுபடியும் தலைதூக்கமுடியாதபடி ஆத்மாவுடன் ஒன்றாக கறைந்து பூர்ணமாக நசித்துப்போகும் இடமான अनवस्था என்ற உல்லாஸ அனுபவ நிலையில் உபாஸக ச்ரேஷ்டர்கள் நித்யானந்தானுபவத்துடன் சர்வாத்மபாவ ஸ்வரூபத்தை பெறுகிறார்கள் என்றவாறு.

இவ்வாறு இங்கு கூறுவதன் மூலமாக அந்தர்யாகத்தை விதிக்கும் इमां विज्ञाय என்ற மந்திரத்திலுள்ள मद என்ற தாதுவுக்கு தன்னை மாத்திரமே விஷயமாகக் கொண்ட நிர்விகல்பகவிருத்திக்கு ஜனகமான 'मद' என்ற உல்லாஸ விசேஷமே பொருள் என்று உறுதி செய்திருப்பதை இந்த वै என்ற பதத்தால் மறுபடியும் உறுதி செய்து உபஸம்ஹாரம் (முடிவுரை) செய்யப்படுகிறது.

மத்தர்கள் பலவகை - ''1. பானத்தால் மதம் கொண்ட காமுகர்கள் காமலீலைகளில் ஈடுபடுகிறார்கள். 2. கோபகுணம் படைத்தவர்கள் இதை சேவித்து மேலும் கோபமடைகிறார்கள். 3. காயகர்கள் (கானம் செய்பவர்கள்) இதை சேவித்து மிகவும் சிறப்பாக கானம் செய்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டேயிருக்கிறார்கள். 4. அதே போல் 'யோகிகள்' இதை சேவித்து ஈசுவர த்யான யோகத்தில் (சமாதி நிலையில்) த்ருடமாக நிற்கிறார்கள்.'' என்று தந்திரங்கள் த்ரவ்ய சேவனம் பற்றி கூறுகின்றன. இந்த தந்திர வாக்யத்திலுள்ள मत्ताः ध्यायन्ति योगिनः என்ற சொற்றொடர் - இந்த உல்லாஸத்திற்கு யோகப்பயிற்சியும் அனுகூலமாக இருக்கிறது என சூசனை செய்கிறது.

உபாஸகன் பெறும் சர்வாத்மபாவஸ்வரூபம் உத்தரார்த்தத்தினுல் (பின்பகுதியால்) விளக்கப்படுகிறது.

இக்குலாசர நிஷ்டனுன உபாஸகசிரேஷ்டன் सर्वस्य जगतः विधाता - சராசரமான சர்வ உலகத்துக்கும் ஸ்ருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவனாகவும், भर्ता - ரக்ஷிக்கும் தன்மை பெற்றவரான விஷ்ணுவாகவும், हर्ता - ஸம்ஹார கர்த்தாவான ருத்ரமூர்த்தியாகவும் ஆகிறான். சுருக்கமாக கூறுவதாவது - சமஸ்த உலகங்களிலுமுள்ள சேதனாசேதன, சராசராத்மகமான சர்வ வஸ்துக்களின் உருவமாகவே ஆகிவிடுகிறான் என.

இவ்வுபாஸகனின் பௌதிகதேக வீழ்ச்சியானது எந்தக்காலத்தில் ஏற்பட்டாலும், எந்த இடத்தில் நேர்ந்தாலும் யாதொரு வித்யாசமோ, விசேஷமோ இல்லை. இவன் ''कृतकृत्यः'' செய்யவேண்டியதை செய்து, பெறவேண்டியதை பெற்றவனாக இருக்கிறான். என்று தாதபர்யம்.

கல்ப சூத்திரம் கூறுவதாவது — இவ்வாறு நன்றாய் அறிந்து சாஸ்திர விதிப்படி அனுஷ்டானம் செய்துவரும் குலநிஷ்டன் (கௌளாசாரத்தை கைக்கொண்டவன்) (कृतकृत्यः) செய்யவேண்டிய யாவற்றையும் செய்து முடித்தவன் என்பதால் அவனது சரீரவிழ்ச்சி நாய்மாமிசம் புசிக்கும் நாயாடியின் குடிசையில் ஏற்பட்டாலும், அல்லது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- रुद्रश्च स एव। किं बहुना - दास, दाश कितवादिप्राणि मात्ररूपः स एव भवति इत्याह क्लिश्वरूपत्वं एति इति। शरीरपातस्तु प्रारब्धवशात् यदाकदापि यत्रकापि भवतु। न तावता अस्य कोऽपि विशेषः। कृत कृत्यत्वात् इति भावः। उक्तं च कल्पसूत्रे - "इत्थं विदित्वा विधिवत् अनुष्ठितवतः कुलनिष्ठस्य सर्वतः कृतकृत्यता। शरीरत्यागे श्वपचगृह, काश्योः नान्तरम्। सः जीवन्मुक्तः" इति.

மந்திரத்தின் அர்த்தமாவது.

மந்திர ஸமஸ்காரங்களால் சுத்திபெற்றதும் தேவீ பூஜையின் சேஷமும் பிரஸாதமுமான திரவிய பானத்தால் இதுவரை ஆத்மாவை சிறுமைப்படுத்திக் கொண்டிருந்த அந்த:கரணம் என்ற உபாதியானது மறுபடியும் தலைதூக்கமுடியாதபடி ஆத்மாவுடன் ஒன்றாக கறைந்து பூர்ணமாக நசித்துப்போகும் இடமான अनवस्था என்ற உல்லாஸ அனுபவ நிலையில் உபாஸக ச்ரேஷ்டர்கள் நித்யானந்தானுபவத்துடன் சர்வாத்மபாவ ஸ்வரூபத்தை பெறுகிறார்கள் என்றவாறு.

இவ்வாறு இங்கு கூறுவதன் மூலமாக அந்தர்யாகத்தை விதிக்கும் इमां विज्ञाय என்ற மந்திரத்திலுள்ள मद என்ற தாதுவுக்கு தன்னை மாத்திரமே விஷயமாகக் கொண்ட நிர்விகல்பகவிருத்திக்கு ஜனகமான 'मद' என்ற உல்லாஸ விசேஷமே பொருள் என்று உறுதி செய்திருப்பதை இந்த वै என்ற பதத்தால் மறுபடியும் உறுதி செய்து உபஸம்ஹாரம் (முடிவுரை) செய்யப்படுகிறது.

மத்தர்கள் பலவகை - "1. பானத்தால் மதம் கொண்ட காமுகர்கள் காமலீலைகளில் ஈடுபடுகிறார்கள். 2. கோபகுணம் படைத்தவர்கள் இதை சேவித்து மேலும் கோபமடைகிறார்கள். 3. காயகர்கள் (கானம் செய்பவர்கள்) இதை சேவித்து மிகவும் சிறப்பாக கானம் செய்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டேயிருக்கிறார்கள். 4. அதே போல் 'யோகிகள்' இதை சேவித்து ஈசுவர த்யான யோகத்தில் (சமாதி நிலையில்) த்ருடமாக நிற்கிறார்கள்.'' என்று தந்திரங்கள் த்ரவ்ய சேவனம் பற்றி கூறுகின்றன. இந்த தந்திர வாக்யத்திலுள்ள **मत्ता: ध्यायन्ति योगिन:** என்ற சொற்றொடர் - இந்த உல்லாஸத்திற்கு யோகப்பயிற்சியும் அனுகூலமாக இருக்கிறது என சூசனை செய்கிறது.

உபாஸகன் பெறும் சர்வாத்மபாவஸ்வரூபம் உத்தரார்த்தத்தினால் (பின்பகுதியால்) விளக்கப்படுகிறது.

இக்குலாசர நிஷ்டனான உபாஸகசிரேஷ்டன் **सर्वस्य जगत: विधाता** - சராசரமான சர்வ உலகத்துக்கும் ஸ்ருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவனாகவும், **भर्ता** - ரக்ஷிக்கும் தன்மை பெற்றவரான விஷ்ணுவாகவும், **हर्ता** - ஸம்ஹார கர்த்தாவான ருத்ரமூர்த்தியாகவும் ஆகிறான். சுருக்கமாக கூறுவதாவது - சமஸ்த உலகங்களிலுமுள்ள சேதனாசேதன, சராசராத்மகமான சர்வ வஸ்துக்களின் உருவமாகவே ஆகிவிடுகிறான் என.

இவ்வுபாஸகனின் பௌதிகதேக வீழ்ச்சியானது எந்தக்காலத்தில் ஏற்பட்டாலும், எந்த இடத்தில் நேர்ந்தாலும் யாதோரு வித்யாசமோ, விசேஷமோ இல்லை. இவன் "**कृतकृत्य:**" செய்யவேண்டியதை செய்து, பெறவேண்டியதை பெற்றவனாக இருக்கிறான். என்று தாதபர்யம்.

கல்ப சூத்திரம் கூறுவதாவது — இவ்வாறு நன்றாய் அறிந்து சாஸ்திர விதிப்படி அனுஷ்டானம் செய்துவரும் குலநிஷ்டன் (கௌளாசாரத்தை கைக்கொண்டவன்) (**कृतकृत्य:**) செய்யவேண்டிய யாவற்றையும் செய்து முடித்தவன் என்பதால் அவனது சரீரவிழ்ச்சி நாய்மாமிசம் புசிக்கும் நாயாடியின் குடிசையில் ஏற்பட்டாலும், அல்லது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முக்திக்ஷேத்ரமான ஸ்ரீ காசியில் நேர்ந்தாலும் இரண்டிற்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை. அவன் ஜீவன் முக்தன் அல்லவா! என்று.

भा. इत्थं त्रैपुरसिद्धान्तं कथितं उपसंहरन् एतदध्ययनादपि फलं अस्ति इति उपदेष्टुं षोडशीं यजुरन्तां ऋचं आह - इयं महोपनिषत् इति

उप. ''इयं महोपनिषत् त्रिपुरायाः
यां अक्षरं परमे गीर्भिः ईट्टे।
एषा ऋक् यजुः परं एतत् च सामेव
अयं अथर्वा इयं अन्या च विद्योम्'' ॥२६॥

उप. इत्युपनिषत्''

भा. उपबृंहितं च एतत् कल्पसूत्रकृता भगवता श्रीपरशुरामेण -

''यः इमां दशमखण्डीं
महोपनिषदं महात्रैपुरसिद्धान्तसर्वस्यभूतां
अधीते सः सर्वेषु यज्ञेषु यष्टा भवति।
यं यं क्रतुं अधीते तेन तेन
अस्य इष्टं भवति इति हि श्रूयते
इत्युपनिषत् इति शिवम्'' - इति।

एतेन अस्यां महोपनिषदि ये अकथिताः अपेक्षिताः अर्थाः ते कल्पसूत्रात् ग्राह्याः। ''कल्पसूत्राधिकरणे शाखभेदेन विप्रकीर्णानां अंशानां उपसंहारसमर्थान् प्रत्येव प्रयोगशास्त्रस्य प्रामाण्यसमर्थनात्'' इति सिद्ध्यति।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு வர்ணிக்கப்பட்ட த்ரைபுரசித்தாந்த விவரணத்தை முடிவுறச் செய்பவராய் "இந்த உபநிஷத்தை அத்யயநம் செய்தாலும் பயன் கிட்டுகிறது" என்பதை உபதேசம் செய்யும் நோக்கத்துடன் வேதசிரஸ் (वेदशिरः) ஆன ॐ என்ற யஜுர் வேத மந்திரத்தை கடைசி பதமாகக் கொண்ட "इयं महोपनिषत्" என்ற பதினாறாவது ரிக் மந்திரத்தை உபதேசம் செய்கிறார். (வேத புருஷன்)

கல்ப சூத்ர கர்த்தாவான பகவான் ஸ்ரீ பரசுராமர் இவ்வுபநிஷத்தின் பெருமையை அடியிற்கண்டவாறு விரிவு செய்கிறார்.

"எவனொருவன் எந்தெந்த கிரதுக்களை (யாகங்களை) க்கூறும் வேதபாகங்களை அத்யயநம் செய்கிறானோ அந்தந்த வேதபாகங்களில் கூறப்பட்ட க்ரதுக்களை அனுஷ்டானம் செய்த பலனை, அந்த அத்யேதாவும் (வேதத்தை அப்பியசிப்பவன்) அடைகிறான்" என்று சுருதி கூறுகின்ற படியால் ஸ்ரீ மஹாத்ரிபுர சித்தாந்தங்களின் நிறைவு பெற்ற சொத்தாகத் திகழ்கின்றதும், ரிக் சாகையின் பத்தாவது பகுதியை சார்ந்ததுமான இந்த சிறப்புற்ற மஹோபநிஷத்தை அத்யயநம் செய்யும் மகாபுருஷன் ஸமஸ்த க்ரதுக்களையும் அனுஷ்டித்தவனாக ஆகிறான் என்றவாறு.

'பற்பல பிரிவுகளைக்கொண்ட வேதசாகைகளில் ஆங்காங்கு பரவலாக வெவ்வேறு முறைகளில் கூறப்படுகின்ற பற்பல தர்மங்களை ஒன்றுக்கொன்று விரோதமின்றி ஒழுங்காக ஒன்று சேர்த்து सामञ्जस्यं செய்து தரும் சிறப்பைப் பொருத்தே பிரயோக சாஸ்திரங்களுக்கு பிராமாண்யம், சித்திக்கிறது' என்பதாக கல்பசூத்ராதிகரணத்தில் நிர்ணயம் செய்திருப்பதால் இங்கு இந்த உபநிஷத்தில் கூறப்படாததும் ஆனால் அவசியமாகவும் உள்ள அநேக தர்மங்களை கல்பசூத்ரம் முதலிய நிபந்தன க்ரந்தங்களிலிருந்து ஸ்வீகரித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்ளலாம் (எடுத்துக்கொள்ளலாம்) என்பதும் இந்த உபப்ரம்மண வசனத்தால் சூசனை செய்யப்படுகிறது.

भा. अक्षरार्थस्तु - इयं, त्रिपुरायाः महोपनिषत् - रहस्यप्रतिपादकवाक्यसन्दर्भरूपा, पठनीया इति शेषः। तत्र हेतुमाह 'यां' इत्यादिना। परमं अक्षरं - ब्रह्म कर्तृ, यां - इमां उपनिषदं, गीर्भिः - स्तुतिवाग्भिः, ईट्टे - स्तौति। ईडस्तुतौ इत्यस्य रूपम्। परमे इति - सोः शे आदेशः। यां ब्रह्म इति पदयोः व्यत्यासेन प्रथमाद्वितीयान्ततास्वीकारेण उपनिषत्कर्तृकब्रह्मकर्मकस्तुतिर्वा। परमेश्वरेणापि स्तुतत्वात्, तत्स्तावकत्वाच्च इत्यर्थः। हृल्लेखाक्षरं यां त्रिपुरां स्तौति इति वा। परं, ए, इति छेदः। एकाररूपं अक्षरं इति वा -

''यदेकादशमाधारं बीजं कोणत्रयोत्भवम्।
ब्रह्माण्डादिकटाहान्तं जगदद्यापि दृश्यते''
इति वचनात्॥

एकारेऽपि - अ, ई इति छेदो वा।
''अकारो वै सर्वा वाक्''। ''यदीं (यत् ईं)
शृणोति अलकँ शृणोति'' - इति श्रुतेः।

चरमः ओंकारो वा अक्षरे विशेष्यत्वेन अन्वेति सः गीर्भिः - अकार, उकार, मकारैः परमः- अखण्डोऽपि यां स्तौति इत्यर्थः। ''समस्तं व्यस्तं वा शरणद गृणाति 'ओम् इति पदम्'' - इति शिवरहस्ये स्मरणात्॥

''மந்திரத்தின் பத உரையும் தாத்பர்யமும்''

पठनीया என்று ஓர் பதம் சேர்த்து त्रिपुरायाः इयं महोपनिषत् पठनीया என்று ஓர் வாக்யம் அமைத்துக்கொள்க. ரஹஸ்யார்த்தங்களை அறிவிக்கின்ற இந்த த்ரிபுராதேவியின் மஹோபநிஷத் படிக்கப்பட வேண்டும் என பொருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வாறு அவசிய பாடத்திற்குறிய (அதாவது கட்டாயம் படிக்கப்படவேண்டும் என்பதற்குறிய) காரணங்களை ''यां अक्षरं परमे गीर्भिः ईट्टे'' என்ற பகுதி விளக்குகிறது.

1. இங்கு परमे என்பது परमं என்பதின் வைதிக உருமாற்றம்.

परमं अक्षरं - பரப்பிரம்மமானது, यां - எந்த உபநிஷத்தை, गीर्भिः ஸ்துதி வசனங்களால் ईट्टे - புகழ்கின்றதோ; அல்லது.

2. ''यां'' என்பதை வைதிக முதல் வேற்றுமையுள்ள या என்ற பதமாகவும், परमं अक्षरं என்பதை இரண்டாம் வேற்றுமையுள்ள பதங்களாகவும் கொண்டு, எந்த உபநிஷத் பரப்ரம்மத்தை ஸ்துதி செய்கிறதோ எனவும் அர்த்தம் கொள்க. (பரமேசுவரனால் ஸ்துதிக்கப்படுவதும் பரமேசுவரனை ஸ்துதி செய்கிறதுமான உபநிஷத் என உள்தாத்பார்யம்)

3. परमं अक्षरं - சிறப்புற்ற ह्रीं என்ற ஹ்ருல்லேகாக்ஷரமானது यां எந்த உபநிஷத்தை गीर्भिः - தன்னுள் அடங்கிய हकार, ईकार, रेफ, अनुस्वार ங்களால் ईट्टे - ஸ்துதி செய்கிறதோ.

4. परमे என்பதை परं + ए என பிரித்து ए परं अक्षरं - 'ए' என்ற சிறப்புற்ற பதினொன்றாவது ஸ்வராக்ஷரம் यां ईट्टे எந்த உபநிஷத்தை ஸ்துதி செய்கிறதோ -

''மூன்று கோணங்களால் தோற்றம் பெற்றதும், பிரம்மாண்டம் முதல் கடாஹம் (சட்டிப் பானைகள்) வரை உள்ள உலகிற்கு ஆதாரமாக இருப்பதும், பீஜாக்ஷரமாயும் உள்ள பதிஞென்றாவது ஸ்வரக்ஷரமான ए என்ற அக்ஷரம் விளங்கிக்கொண்டிருக்கிறது'' என்று தந்ரங்கள் கூறுகின்றன.

5. ए என்பதை இன்றும் சிறப்பாக अ + ई எனப்பிரித்து 'अकारो वै सर्वावाक्' என்ற சுருதிப்படி ஸமஸ்த வாக்ஜாலங்களுக்கும் ஜநகமான अ என்ற அக்ஷரமும், यां - எந்த த்ரிபுரையை ஸ்துதிக்கிறதோ, அல்லது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. இம்மந்திரத்தின் கடைசி பதமான ओं என்பதை விசேஷ்யமாக ஏற்று ''परमं अक्षरं ओं'' பரப்பிரம்ம வாசகமான ओं என்ற பிரணவாக்ஷரமானது எந்த உபநிஷத்தை ஸ்துதி செய்கிறதோ, அல்லது

7. ओं என்ற அக்ஷரம் परमं अपि (अपि என்று சேர்த்துக்கொள்ளவும்) - தான் அகண்டமாக இருந்தாலும் गीर्भिः - தன்னுள் அடங்கிய अ, उ, म என்ற சொற்களால் यां எந்த உபநிஷத்தை ईट्टे - ஸ்துதி செய்கிறதோ என்றபடி.

''समस्तं व्यस्तं वा शरणद गृणाति ओं इति पदम्'' - ''ஹே சரணம் அளிப்பவனே கூட்டாகவோ, தனித்தனியாகவோ ओं என்ற சொல் உன்னையே குறிப்பிடுகிறது'' என்ற சிவரஹஸ்ய வசனம், மேற்கண்ட 6, 7 வ்யாக்யானத்திற்கு பலம் கூட்டுவதாகவே இருக்கிறது.

उपसंहारः - स्वाध्यायोध्येतव्यः इति विधिविहित विविधाध्ययनान्यपि एतदध्ययनेनैव सिद्ध्यन्ति इत्याह ''एषा'' इति। ऋगादि शब्दाः वेदपराः। न तु एकैकमन्त्रपराः। अथर्वादि प्रायपाठात्। एषा, एतत्, अयं इति शब्दाः ऋग्यजुषाथर्वणां विशेष्यत्वाभिप्रायेण। साम्नः ध्वनिरूपत्वेन अनक्षरत्वात्। इव इति पदेन अक्षरेषु तत्तुल्यफलकत्वद्योतनम्। अष्टादशसु विद्यासु चतुर्णां उपादानात् अन्यपदेन उपवेदाद्याः चतुर्दश गृह्यन्ते। सर्वस्वरूपा इयं उपनिषत् इत्यर्थः। प्रणवस्वरूपापि एषैव इत्याह - 'ओं इति। ओमाङोश्च इति पररूपम्। तेन यतिभिरपि अध्येतव्यं इति भावः।

इयं उपनिषत् एतादृशी इत्येवं यो हि एतस्याः महिमानं वेद तस्य महिमानं साक्षात् श्रुतिरपि वक्तुं असमर्थ्या। तस्य ब्रह्मैकरूपत्वात्। तत्र वाचां अप्रवृत्तेः इत्याशयेन श्रुत्या मौनं आस्थितम् ''इत्युपनिषत्'' इति। इतः अधिकस्य रहस्यस्य वक्तव्यांशस्य अभावात् इति भावः।। इति श्रीः।।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"इति भास्कररायेण अग्निचिता त्रिपुरामहोपनिषदः अर्थाः।
प्रकटयितुं अयोग्या अपि विदुषां तोषाय कतिपये कथिताः॥

इति श्रीभास्कररायमहाशय रचितं
त्रिपुरोपनिषत् भाष्यं संपूर्णम्॥

முடிவுரை

அவரவர்களுக்குரிய வேதசாகைகளை யாவரும் அத்யயநம் செய்தேயாகவேண்டும் என்று விதிக்கப்படுகின்ற பலவகையான வேதங்களின் அத்யயநமும் இவ்வுபநிஷத்தை அத்யயனம் செய்வதாலேயே பூர்த்தியாகிறது என்பதை இந்த சுலோகத்தின் பின்பகுதி (उत्तरार्ध) தெறிவிக்கிறது.

अथर्वा, अन्या च विद्या என்பவையுடன் சேர்த்துப் படிப்பதால் (प्रायपाठः) இங்குள்ள ऋक्, यजुः साम என்ற பதங்கள் அந்தந்த வேதங்களையே குறிக்கின்றன, - ரிக்மந்திரம் யஜுர் மந்திரம் என தனி தனி மந்திரங்களை கூறுபவை அல்ல. ऋक्, यजुः अथर्वा என்பவைகளை विशेष्य ங்களாகக்கொண்டு முறையே அதனதன் லிங்கங்களை பெற்று விசேஷணங்களாக एषा, एतत्, अयं என்ற சொற்கள் திகழ்கின்றன. साम என்பது த்வனி வடிவம் பெற்று அக்ஷர பிரதான்யம் அற்றதாக இருப்பதால் அதற்கு தனி விசேஷணம் கொடுக்கப்படவில்லை. 'सामेव' என்றதிலுள்ள इव சப்தத்தால் த்வனிரூபமான சாமாவைப்போல் இவ்வுபநிஷத்தின் ஒவ்வொரு அக்ஷரங்களுக்கும் साम த்திற்கு துல்யமான பலன் உண்டு என்பது சூசிப்பிக்கப்படுகிறது.

பதினெட்டு வித்யைகளுள் நான்கு 'வேத'வித்யைகள் இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதால் अन्या என்ற பதம் மற்ற பதினான்கு வித்யைகளை கூறுவதாக கொள்ளவும். (இவ்வுபநிஷத் வித்யையானது சர்வவித்யா ஸ்வரூபம் என்பது கூடார்த்தம் (गूदार्थः) அதாவது ரஹஸ்யார்த்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரணவ ஸ்வரூபமாக விளங்குவதும் இவ்வுபநிஷத்தே தான் என்பது ''ओम्'' என்ற கடைசி பதத்தால் குறிப்பிடப்படுகிறது. ஆகையால் யதிகளாலும் அத்யயனம் செய்யத்தக்கது என்றும் கிடைக்கிறது.

'இவுவுபநிஷத் இவ்வாறு மஹிமை பெற்றது' என்று இதன் சிறப்பை எவனொருவன் அறிகின்றானோ அவனது பெருமையைப் பற்றி கூறுவதற்கு சாக்ஷாத் ச்ருதிகூட சாமர்த்தியம் பெற்றதாக இல்லை. அவன் சாக்ஷாத் பரப்பிரம்ம ஸ்வரூபமாகவே ஆகிவிட்டதால் அவன் விஷயத்தில் வாக்குகளுக்கும் பிரவிருத்தி இல்லை என்ற எண்ணத்துடன் சுருதி மாதாவும் (வேதமாதா) மௌனத்தை கைக்கொள்கிறாள் ''इत्युपनिषत्'' என்று.

(கூறப்பட்டவைகளைக் காட்டிலும் சொல்லப்பட வேண்டிய வேறு அதிகமான ரஹஸ்ய விஷயங்கள் யாதும் இல்லை என்பது பொருள்)

இவ்வாறு 'அக்னிசித்' ஆகிய ஸ்ரீ பாஸ்கரராயரால் 'த்ரிபுராமஹோபநிஷத்தின் பொருட்களில் சில வெளியிடக்கூடாதவைகளாக இருந்தாலும் அறிவாளிகளின் (வித்யா சம்பத்தி உள்ளவர்களின்) சந்தோஷத்திற்காக கூறப்பட்டன.

இவ்வாறு ஸ்ரீ பாஸ்கரராய மஹாசயரால் எழுதப்பட்ட "த்ரிபுரோபநிஷத் பாஷ்யம்" நிறைவுற்றது.

॥ ஸ்ரீ மஹாத்ரிபுர சுந்தர்யை நம: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

॥ श्री कौलोपनिषत् ॥

॥ श्री भास्करराय मखि विरचित भाष्यसमेता ॥

॥ ஸ்ரீ கௌளோபநிஷத் ॥

ஸ்ரீ பாஸ்கரராயரால் இயற்றப்பட்ட பாஷ்யத்துடன்
கூடியது
தமிழ் உரையுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

|| श्रीः ||

ஸ்ரீ பாஸ்கரராய யஜ்வாவிஞல்

இயற்றப்பட்ட

ஸ்ரீ கௌளோபநிஷத் பாஷ்யம்

தமிழ் உரையுடன்

'SRI KAULOPANISHAT'

Commentary in Sanskrit by

Sri Bhaskararaya

with Tamil translation of the commentary

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्रीः

॥ श्रीकौलोपनिषत् ॥

உரையாசிரியரின் முன்னுரை:

அதர்வ வேதத்தைச் சார்ந்த 'அதர்வசிரஸ்' என்ற பகுதியில் அடங்கிய மிக நுட்பமான சாக்த சித்தாந்தங்களை வெளியிடும் कौलोपनिषत् (கௌளோபநிஷத்) என்ற ஓர் சிறுபகுதி சின்னஞ் சிறியதான 42 சூத்திரங்களாலும் இரு பலச்ருதி சுலோகங்களாலும் அமையப்பெற்றிருக்கிறது.

மற்ற சாக்தோபநிஷத்துக்களில் போல இவ்வுபநிஷத்தில் ஸ்ரீதேவியின் விசேஷ சிறப்புகள் பற்றியோ, ஸ்ரீ சக்ரத்தின் அமைப்பு, ஆராதன முறைகள் மற்றும் அதன் பெருமைகளைப் பற்றியோ அல்லது ஸ்ரீ வித்யாமந்திரம் சம்பந்தமான விஷயங்கள் பற்றியோ எதுவும் கூறப்படவில்லை.

ஆனால் பெருமை வாய்ந்த எந்த சாக்த க்ரந்தங்கள் மூலமாகவும் நாம் அறிந்து கொள்ள முடியாததும் மிகவும் நுட்பமுமான ஸ்ரீ வித்யா தந்திர சித்தாந்தங்களையும் இக்கௌளாசார மார்க்கத்தில் அனுசரிக்க வேண்டிய விசேஷ சட்டதிட்டங்களையும் வெகு சூக்ஷ்மமாக அறிவிக்கும் இவ்வுபநிஷத்துக்கு ஈடாக எந்த உபநிஷத்தையும் கூறமுடியாது.

மேலும் மற்ற உபநிஷத்துகளின் சாந்திபாட மந்திரங்கள் யாவும் அந்தந்த உபநிஷத்துக்குறிய தேவதைகளையோ அல்லது பரப் பிரம்மத்தையோ ஸ்துதி செய்யும் வகையில் அமைந்திருக்கின்றன. இவ்வுபநிஷத்திலோவெனில் ஆரம்பத்தில் "शं नः कौलिकः" என்று கௌளமார்க்கமும், அதன்பின் "शं नो वारुणी" என்று இக்குலாசார

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மார்க்கத்தில் பிரதான திரவியமாக விளங்கும் "वारुणी" (வாருணீ) என்ற மகார திரவியமும், அதையடுத்து "शं नः शुद्धिः" என்று இரண்டாவது முக்கிய திரவியமான शुद्धिः (சுத்தி) என்ற மகார திரவியமும் பிரார்த்திக்கப்படுகிறது. இவ்வாறு கூறுவதன் வாயிலாக இக்குலாசாரத்தில் वारुणी என்ற பூஜாதிரவியமும் शुद्धि என்ற நைவேத்தியப் பொருளும் மிகவும் முக்யமானது என்று சூசனை செய்யப்படுகிறது.

குலம் என்றால் கூட்டம் (समूहः) என்று பொருள். சாக்த சித்தாந்தப்படி ஈசன் (1) குருவாகவும், தேவி (2) சிஷ்யையாகவும், உபதேசிக்கப்படும் மந்திரங்களும் (3) தத்துவங்களும் விஷயமாகவும் இருப்பதால் ஈசன், தேவி, மந்திரம் இம்மூன்றும் சேர்ந்தது ஓர் குலம். இக்குலத்துக்கு ஆதிபுருஷனாக இருக்கும் ஈசன் கௌளிகன் எனப்படுகிறான். அந்த ஈசன் மூலமாகவே இக்கௌளாசாரம் உலகத்திற்கு கிடைத்ததால் அந்த ஈசனே குலமார்க்க பிரவர்த்தாகாசார்யன் என கூறப்படுகிறான். ஆகவே कौलिकः என்ற பதத்தால் குலாசாரத்தை பிரபஞ்சத்திற்கு அளித்த சர்வேச்வன் என்றும் वारुणी, शुद्धि என்பதால் அதனதன் அதிஷ்டான தேவதைகள் என்றும் அர்த்தம் செய்து கொண்டு அம்மூவர்களையும் முதலில் ப்ரார்த்தித்து பிறகு ओं नमो ब्रह्मणे என்றவாறு பரப்ரம்மமும், பஞ்ச பூதங்களும் வணங்கப்படுகின்றன.

இவ்வுபநிஷத்தின் முதல் சூத்திரம் "अथातो धर्मजिज्ञासा" என்பது. தன்னைக்காட்டிலும் வேறுபடாததான (धर्म) தர்மங்கள் எனக் கூறப்படும் சகலசக்திகளுக்கும் ஆச்ரயனான "धर्मी தர்மீ என்ற பரம்பொருள் 'नित्यसिद्धवस्तु' நித்யமானதும் சித்தமானதுமான பொருளாக இருப்பதாலும் (अनिर्वाच्य) சப்தங்களால் எடுத்துக்காட்ட முடியாத வஸ்துவாக இருப்பதாலும் அந்த धर्मी தர்மீ என்பதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பற்றி எதுவும் கூறாமல் அதன் சக்திரூபமான தர்மங்களைப்பற்றி அறிந்து கொள்ள விசாரம் செய்யவேண்டும் என்பதாக இச்சூத்திரம் கூறுவதால் இது ''प्रतिज्ञा वचनं'' மாக ஆகிறது.

அதையடுத்து ''ज्ञानं बुद्धिश्च'' என ஆரம்பித்து ''एतत् ज्ञानम्'' என்பது வரையிலுள்ள பதினாறு (16) சூத்திரங்களால் இந்த சாஸ்திரத்தின் முக்ய சித்தாந்தங்கள் வெகு சூக்ஷ்மமாக அறிவிக்கப் படுகின்றன. அதற்கடுத்த சூத்ரம் ஞானத்தின் ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷம் (நிச்சயம்) செய்கிறது.

அதற்கடுத்த ஆறு (6) சூத்திரங்கள் सिद्धोपासकः (உபாசனாமூலம் சித்திபெற்று தன்னை மறந்து யோகநிஷ்டையைப் பெற்றவன்) என்றவனுடைய தர்மங்கள் பற்றி கூறுகின்றன. 'சித்தோபாஸகனின்' செய்கைகள் வெளிப்பார்வையில் அதர்மமாகத் தோன்றினாலும் தன்னையே மறந்திருக்கும் யோகிகளுக்கு அவைகளும் தர்மம்தான் என்றும் கூறுகின்றன. இந்த ஆறு (6) சூத்திரங்களும் சாமான்ய உபாஸகர்களுக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லை என்பதை நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

அடுத்துள்ள பத்தொன்பது (19) சூத்திரங்களும் சாதகன் (சாமான்ய உபாஸகன்) அனுசரிக்க வேண்டிய விசேஷதர்மங்களை தெளிவு படுத்துகின்றன. அதற்கடுத்த இரு அனுஷ்டுப் சுலோகங்களால் பலச்ருதி கூறப்பட்டு உபநிஷத் முடிவடைகிறது.

சிறந்த சாக்ததத்துவங்களை விளக்கும் (महोपासक) மஹோபாஸகரும் சர்வதந்திர ஸ்வதந்திரரும் வைதிககர்மாக்கள் யாவற்றையும் நன்ருய் அறிந்தும் அனுஷ்டித்தும் வந்தவரும் சிறந்த ஆசார்யபுருஷனுமான ''ஸ்ரீ ஸ்ரீ பாஸ்கரராய மகீ'' என்ற மகனீய புருஷர் இச்சிறு உபநிஷத்திற்கு சுருக்கமாகவும் கம்பீரமாகவும் பல தத்துவங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளடக்கியதாகவும் விளங்கும்படி ஓர் சிறப்பான பாஷ்யம் அமைத்திருக்கிறார். அந்த பாஷ்யமும் அதன் தமிழ் உரையும் இப்புதகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. யாவரும் பக்தி, சிரத்தையுடன் இவைகளைப் படித்து, அறிந்து அம்பிகையின் அருளால் சர்வசௌபாக்யத்தையும் அடையவேண்டும் என்ற ப்ரார்த்தனையுடன்.

நாராயணஸ்மரணம் செய்யப்படுகிறது.

क्रियते नारायणस्मृतिः

உரையாசிரியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''श्रीगुरुचरणाब्ज किरण -
विसरण निर्धूत हृद्गतावरणः ।
भास्कररायः कौलोपनिषदं
आथर्वणीं विकासयति'' ॥

ஸ்ரீ பாஸ்கரராயர் என்பவர் தனது குருவின் பாதகமலங்களிலிருந்து எங்கும் பரவிவருகின்ற கிரணஜாலங்களால் தன் மனத்தின் பால் உள்ள 'ஆவரணம்' என்ற அஞ்ஞான இருட் திரையை நாசம் செய்து ஒளி என்ற ஞானம் பெற்றவராய் அதர்வணவேத்ததைச் சேர்ந்த ''கௌளோபநிஷத்'' என்ற பகுதியை பாஷ்யவடிவில் மலரச்செய்கிறார். (பிரகாசப்படுத்துகிறார்)

भा. वक्ष्यमाण अतिरहयार्थेपदेशे अवश्यभावि विघ्ननिरासाय देवताः प्रार्थयते - ''शं नः कौलिकः'' इत्यादिना -

விவரிக்கப்படப் போகின்ற மிக ரகசியமான பொருட்கௗ உபதேசிக்கும் சந்தர்ப்பங்களில் நிர்ப்பந்தமாக ஏற்படக்கூடிய இடையூறுகள் நீங்குவதற்காக தேவதைகள் வணங்கப்படுகிறாகள் - शं नः कौलिकः என்ற உபநிஷத வசனங்களால்

उप. ''शं नः कौलिकः । शं नो वारुणी ।
शं नः शुद्धिः । शं नोऽग्निः ।
शं नः सर्वं समभवत् ॥

भा. कुलमाभार्गप्रवर्तकः कौलिकः - परमशिवः । शं - विघ्ननिराकरणपूर्वकं स्वात्मानन्दप्रापकः । नः - अस्माकं । समभवत् - भूयात् ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

वारुणी - प्रथमाभिमानिनी महतीदेवता च शं नो भूयात् ।

शुद्धिः - द्वितीयाभिमानिनी देवताऽपि शं नो भूयात्

अग्निः - तेजः । किं बहुना - सर्वमपि सुखकरं भवतु ॥

குலமார்க்கம் என்ற சாக்ததர்மத்தை முறைப்படி தான் அனுஷ்டித்தும் மற்ற உலகத்தினற்கும் ஆதிகுருவாய் நின்று உபதேசித்தும் வருவதன் மூலம் குலமார்க்கப் பிரவர்த்தகராக விளங்கி வருகின்ற சாக்ஷாத் பரமேச்வரனே கௌளிகர் (कौलिकः) என்ற பதத்தால் கூறப்படுகிறார். கௌளிகர் எனற சர்வேச்வரன் நமக்கு ஏற்படவிருக்கும் சகல இடையூறுகளையும் விலக்கித்தந்து ஸ்வாத்மாநந்தம் என்ற பேராநந்தத்திற்கு நம்மை அழைத்துச்செல்பவராக திகழட்டும்.

கௌளமார்க்க விதிப்படி அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஸ்ரீ தேவீபூஜைக்கு மிகவும் அவசியமாயுள்ள ''பிரதமம்'' என்ற த்ரவத்ரவ்யத்திற்கு ''வாருணீ'' என்று சங்கேதச்சொல். இந்த த்ரவ்யத்திற்கு அபிமானியான தேவதையும் ''வாருணீ'' எனப்படுகிறாள். இந்த தேவதையும் நமக்கு நன்மைகளை தருபவளாக அமையட்டும்.

இதே போல இந்த சக்தி பூஜையின் நைவேத்யத்திற்கு முக்யமான பொருள் ''சுத்தி'' என்பது. இதுவும் சங்கேதச்சொல்லே. இப்பொருளின் அதிதேவதையும் சுத்தி என்பவளே. இத்தேவதையும் நமக்கு க்ஷேமத்தை தருபவளாக விளங்கட்டும்.

அவ்வாறே ''அக்னி'' என்ற தேஜோதண்ட ரூபமான பரப்பிரம்மமும் மற்றும் தேவதா ஸ்வரூபங்களாக விளங்குகின்ற சகல பொருட்களும் நமக்கு நன்மைகளை செய்பவைகளாக பிராகாசிக்கட்டும். (பின்வரும் பிரார்த்தனையில் அக்னி என்று தனியாக வருவதால் இங்கு அக்னி என்பது பரப்பிரம்மம் என்று கொள்ளப்படுகிறது).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. "ओं नमो ब्रह्मणे, नमः पृथिव्यै, नमोऽद्भ्यो, नमोऽग्नये, नमो वायवे, नमो गुरुभ्यः" ॥

भा. परब्रह्मणे, पृथिव्यादि चतुष्टयदेवताभ्यः परमशिवादि स्वगुरुपर्यन्तेभ्यश्च नमः। भूतचतुष्टयं आकाशस्याप्युपलक्षणम्॥

பரப்பிரம்மத்திற்கும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களுக்கும், ஆதிநாதர் முதற்கொண்டு இன்றுவரையிலுள்ள நமது குருபரம் பரைக்கும் நமஸ்காரம். இங்கு குறிப்பிட்ட நான்கு பூதங்களும் ஆகாசம் என்ற பூதத்திற்கும் உபலக்ஷணம்.

उप. "त्वमेव प्रत्यक्षं सैवासि । त्वामेव प्रत्यक्षं तां वदिष्यामि । ऋतं वदिष्यामि । सत्यं वदिष्यामि । तन्मामवतु । तद्वक्तारमवतु । अवतु माम् । अवतु वक्तारम् । ओं शान्तिः शान्तिः शान्तिः" ।

भा. प्रत्यक्षं - अहंप्रत्यय व्याजेन सर्वैरनुभूयमानं, ब्रह्म-सैव-त्वमेव असि - त्रिपुरसुन्दरीरूप कैलोपनिषदसि । अत एव - हे कौलपनिषत् - त्वामेव तदभिन्नां अहं वदिष्यामि । ऋतशब्दः ब्रह्म परः । सत्यशब्दोऽपि तथैव । आदरे वीप्सा । स्पष्टमन्यत् । शान्तिः शान्तिः शान्तिः इति विघ्नशान्तिप्रार्थना इयम् ।

சப்த வடிவமான உபநிஷத் ஸ்வரூபம் பரப்பிரம் மத்துடன் அபின்னமான மஹாத்ரிபுரசுந்தரீயாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாவிக்கப்பட்டு சுருதியால் சம்போதனம் செய்து பிரார்த்திக்கப்படுகின்றது—

ஹே, உபநிஷத்தே ! நீ சர்வ ஜனங்களாலும் சகலவித ஞானங்களிலும் 'நான்' 'நான்' என்ற வ்யாஜத்தில் அனுபவிக்கப்பட்டு வருகின்ற பரப்பிரம்மத்தைக் காட்டிலும் வேறுபடாத ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரியின் பிரத்யக்ஷ உருவமான சப்தாத்மகமான உபநிஷத் என்று வடிவத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாய். ஆகவே ஹே உபநிஷத்தே - உன்னை ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரியின் (अभिन्न) அபிந்ந வடிவமாகவே (ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரீயாகவே) கருதுகிறேன். நீயே பரப்பிரம்மம் என்று கூறுகிறேன். (பக்திப் பெருக்கால் இரு தடவை கூறப்படுகிறது). உபநிஷத் ரூபமான பரப்பிரம்மம் என்னையும் எனக்கு உபதேசம் செய்யும் ஆசார்யனையும் ரக்ஷிக்கட்டும். விக்னங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும், ஏற்பட்ட இடையூறுகள் நிவர்த்தி அடைவதற்கும், இந்த கிரந்த ரசனம் முடிவடைவதற்கும், ஆக மூன்று தடவை சாந்தி ஸ்தவம் செய்யப்படுகிறது.

ஓர் சிறு குறிப்பு

கிரந்த ஆரம்பத்தில் செய்யப்படும் மங்களங்கள் "आशीः, नमस्क्रिया, वस्तुनिर्देशोवापि मङ्गलम्" என மூன்று வகை. அதாவது 1. பிரார்த்தனை, 2. நமஸ்காரம், 3. கிரந்தத்திற்குறிய விஷயத்தையே ஆரம்பித்தல் என்பன. இவற்றுள் ஏதாவது ஒருவகை மங்களம் தான் கிரந்தாரம்பத்தில் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. உபநிடதங்களில் பிரார்த்தனையுடன் சாந்தி வசனமும் . மங்களமாக படிக்கப்பட்டு வருகின்றன. இந்த உபநிஷத்திலோவெனில் "शं नः कौलिकः" என்ற வசனங்களால் பிரார்த்தனுரூப மங்களமும், "ओं नमो ब्रह्मणे" என்ற வாக்யங்களால் நமஸ்காரரூப மங்களமும், "त्वमेव प्रत्यक्षं सैवासि" என்பவைகளால் வஸ்து நிர்தேசம் என்ற மங்களமும், ஆக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்று வகையான மங்களங்களும் கடைசியில் சாந்திபடனமும் ஆத்யந்தங்களில் செய்யப்பட்டு வருகின்றன. கௌளமார்க்க சித்தாந்தங்களைக் கூறும் இவ்வுபநிஷத் மற்றவைகளைக் காட்டிலும் அதிரஹஸ்யத் தன்மை வாய்ந்ததாக இருப்பதால் இவ்வுபநிஷத்தை படிக்கும் சமயத்திலும் அதன் தத்துவார்த்தங்களை விளக்கும் சமயத்திலும் பலவத்தரமான விக்னங்கள் ஏற்படலாம் என்று நினைத்து அவ்விக்னங்களின் நிவர்த்தியின் பொருட்டு மூன்று வகையான மங்களங்களும், சாந்திபடனமும் இவ்வுபநிஷத்தின் ஆத்யந்தங்களில் அத்யயனம் செய்து வரப்படுகின்றன. இதன் மூலம் இவ்வுபநிஷத்தின் பெருமை சூசகமாக விளக்கப்படுகிறது.

उप. "अथातो धर्मजिज्ञासा" ॥ १ ॥

भा. अथ - ब्रह्मज़िज्ञासानन्तरं । अतः - धर्मिज्ञानस्य जातत्वात् । धर्मस्य - विमर्शशक्तेः, "ज्ञानाय विचारः कर्तव्यः" इत्यर्थः ॥

தர்மியான பிரம்மஞ்ஞானம் சித்தமாக இருப்பதால் அதில் அடங்கியுள்ள தர்மத்தை (விமர்ச சக்தியை) ப்பற்றி அறிந்து கொள்ள விசாரங்கள் செய்யவேண்டும்.

उप. "ज्ञानम् । बुद्धिश्च" ॥ २ ॥

भा. ब्रह्मापरोक्षानुभवो ज्ञानम् । तज्जनकं तु शाब्दं परोक्षज्ञानं बुद्धिः । "यस्य अनुभवपर्यन्ता बुद्धिः तत्वे प्रवर्तते" इत्यादौ द्वैविद्ध्य व्यवहारदर्शनात् । तदुभयमपि धर्मस्वरूपमेव; इत्यर्थः । चकारात् अनुक्तानां चैतन्यादिधर्माणां नागानन्दादिभिः गणितानां परिग्रहः ॥

அந்த தர்மம் என்ற விமர்ச சக்தியும் ஞானம், புத்தி என இருவகை. ஞானம் என்பது பிரம்மாபரோக்ஷானுபவம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதாவது இதர விருத்திஞ்ஞானங்களுக்குறிய "த்ரிபுடீ", என்ற ஞாத்ரு, ஞான, ஞேய பாவங்கள் மூன்றும் விலகி அதனால் ஏற்படும் பிரம்மானுபவமே 'ஞானம்' என்ப்படுகிறது. இந்த பரோக்ஷானுபவத்தையே "அகண்டாகார விருத்தி" என்றும் "மூலாஞ்ஞானம்" என்றும் கூறுவார்கள். இதுவும் ஓர் அந்த:கரண விருத்தியே. இவ்வாறு அனுபவிக்கப்படும் பிரம்மசாக்ஷாத்காரம் வலுப்படட , தானாகவே இந்த விருத்திஞாநமான அனுபவமும் நீங்கி பரம்பொருளுடன் ஒன்றுபடக் கலப்பதே "கைவல்ய முக்தி" எனப்படுகிறது. இந்த ப்ரம்ம சாக்ஷாத்கார அனுபவத்திற்கு சாப்தாபரோக்ஷஞானம் காரணமாகிறது. அதாவது-சிறந்த உபாஸகர்கள் மூலமாக உபநிஷத் வாக்யங்களால் ப்ரம்மத்தைப் பற்றி பல பல விசாரங்கள் செய்து அவ்வாறு அடிக்கடி செய்து வருகின்ற சிரவண மனனாதிகளால் அந்த:கரணத்தில் ஏற்படுகின்ற சாப்த ப்ரம்ம அபரோக்ஷ ஞானமே "புத்தி" எனப்படுகிறது. இந்த சாப்தாபரோக்ஷ ஞாநமே முன்கூறபட்ட அனுபவ ஞானத்திற்கு காரணமாக நிற்கிறது. "यस्य अनुभवपर्यन्ता बुद्धिः तत्वे प्रवर्तते" - "எவனொருவனுடைய புத்தியானது அனுபவம் ஏற்படும் வரை தத்வ விசாரணையில் ஈடுபட்டிருக்கிறதோ" என்பதாக பல இடங்களில் புத்தி, அனுபவம் , என்ற இருவகை வியவகாரங்கள் தென்படுவதால், புத்தி என்ற சாப்த ஞானமும், அனுபவம் என்ற ஞாநமும் வெவ்வேறானவை என்பது அறியப்படுகிறது. இந்த புத்தி, ஞாநம் என்ற இரண்டும் தர்மம் என்ற சக்தியின் ஸ்வரூபங்களே. बुद्धिश्च என்ற च காரத்தால் இங்கு கூறப்படாத நாகாநந்தர் முதலியோரால் விவரிக்கப்பட்ட சைதன்யம் முதலிய தர்மங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அவைகளும் விமர்சசக்தியான தர்ம ஸ்வரூபத்தில் அடங்கியவைகளே என்பது குறிக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. "ज्ञानं मोक्षैककारणम्" ॥ ३ ॥

भा. स्पष्टोऽर्थः ॥

ஞானம் என்ற பிரம்மத்தை மட்டிலும் விஷயமாகக் கொண்ட அபரோக்ஷானுபவம்தான் கைவல்ய முக்திக்குக் காரணம் என்று முன் விவரிக்கப்பட்டிருப்பதால் இந்த சூத்திரத்தின் பொருள் வ்யக்தமாக இருக்கிறது.

उप. मोक्षः सर्वत्मतासिद्धिः ॥ ४ ॥

भा. सर्वस्य स्वात्माभेदः सर्वात्मता । तस्याः सिद्धिः तद्विषयक सविलास अज्ञाननिवृत्तिः । तेन देवीभागवते कथितार्धश्लोकभागवतस्य - "सर्वं खल्विदमेवाहं नान्यदस्ति सनातनम्" इत्यस्य समानार्थकंज्ञानं मोक्षजनकं इति ध्वनितम् । तादृशज्ञानजन्यं अखण्डं वृत्यन्तरं वा ।

"நானே எல்லாமாக இருக்கிறேன். என்னிடமே யாவும் அடங்கியுள்ளன" என்ற பாவமே "சர்வத்மதா" என்பது. சர்வ பொருள்களிலும் அபேத புத்தி அடைதல் என பொருள். அதன் சித்தி என்பது - இந்த அபேத புத்தி தடித்து நாளடைவில் இந்த அபேத பாவனேயும் ஸவிலாஸ (சகல விதமான) அக்ஞானமும் நசித்து ஸர்வமாகவே ஆகிவிடுதல்.இதுவே மோக்ஷம் எனப்படுகிறது. தேவீ பாகவதத்திலுள்ள "காணப்படுகின்ற இந்த எல்லாப் பொருட்களும் நானே தான். நிலேயான வேறு எப்பொருளும் இல்லே" என்று தாத்பர்யம் உள்ள अर्ध சுலோகமும் கூறப்பட்ட இந்த "சர்வாத்மத்வத்தையே" விளக்கிக் காட்டுகிறது. இந்த அபேதபாவம் தான் கைவல்யத்துக்குக் காரணம். அல்லது இந்த சர்வாத்ம பாவத்தால் ஏற்படுகின்ற மற்றுமொரு அகண்டாகார விருத்தியே மோக்ஷ காரணமாகிறது என்று இந்த வாக்யங்களின் கருத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. "पञ्च विषयाः प्रपञ्चः" ॥ ५ ॥

भा. सर्वपदं विवृणोति - शब्दादि विषयपञ्चकं प्रपञ्चपदेन उच्यते । तेषां भूतसूक्ष्मत्वेन स्थूलभूतानां तदभेदात्, षट्त्रिंशत्तत्वानामपि तत्रान्तर्भवात् । "सर्वत्र पञ्चभूतानि षष्ठं किञ्चित् न विद्यते" इति वासिष्ठात् ।

ஸர்வ பத்தின் அர்த்தம் விவரிக்கப்படுகிறது. சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற சூக்ஷ்மமான ஐந்து பூத தன்மாத்திரைகளும், சூக்ஷ்மத்தைக் காட்டிலும் அபிந்நமான ஸ்தூலமன ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பிருதிவீ என்ற ஐந்து மஹா பூதங்களும், "எங்கும் பஞ்ச பூதங்களே உள்ளன. ஆறாவதாக யாதொரு பொருளும் இல்லை" என்று வாசிஷ்டத்தில் கூறியபடி சிவாதி - பிருதீவி வரையுள்ள முப்பத்தாறு (36) தத்வங்களும் பஞ்ச பூதங்களுக்குள் அட்ஙகியவைகளாக இருப்பதாலும், இந்த प्रपञ्च என்ற பதமானது முப்பத்தாறு (36) தத்வங்களையும், பஞ்ச பூதங்களையும் அதனதன் தன்மாத்திரைகளான சப்தாதி ஐந்து சூக்ஷ்ம பூதங்களையும் குறிபபிடுகின்றது.

उप. "तेषां ज्ञानस्वरूपाः" ॥ ६ ॥

भा. इति जडजातं निर्दिश्य चेतनजातं निर्दिशति । ज्ञश्चसौ अनश्च ज्ञानम् । विषयान् जानाति, प्राणिति च इत्यर्थः । तादृशस्वरूपा जीवाः इति यावत्॥

முந்திய சூத்திரத்தால் ஸர்வ பதத்திற்கு அர்த்தமாக ஜடப் பொருட்கள் கூறப்பட்டன. இனி வரும் சில சூத்திரங்களால் அறிவுள்ள சேதனப் பொருட்கள் சொல்லப்படுகின்றன. இங்குள்ள "ஞாந" (ज्ञान) என்ற பதம் ज्ञ, अन - என்ற இரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொற்களால் அமைந்தது. ज्ञ என்றால் அறிவுள்ளவன், अन என்றால் சுவாசிப்பவன் என்ற பொருள் வ்யாகரண நியதிப்படி கிடைக்கிறது. ஆகவே ज्ञानस्वरूपाः என்பபதற்கு அறிவும், பிராணனும் உள்ள ஜீவன் என்று பொருள்.

उप. "योगो मोक्षः ॥ ७ ॥

भा. योगः - वृत्तिनिरोधः । मोक्षोऽपि ।

யோகம் என்றால் மனத்தை அடக்கி ஒருநிலைப் படுத்தல். மோக்ஷம் என்பது இங்கு தடுத்து நிறுத்தப்பட்ட அந்தःகரண விருத்திகளில் ஒருவகை.

उप. अधर्मकाराणाज्ञानमेव ज्ञानम् ॥ ८ ॥

भा. धर्म रहितत्वात् अधर्मः - परं ब्रह्म । तस्य यत् कारणाज्ञानं - तद्विषयक मूलाज्ञानम् ज्ञानं एव । एवकारो भिन्नक्रमः । विषयाः, जीवाः, योगः, मुक्तिः, अविद्या इत्येतत्सर्वं ज्ञानमेव । शक्तेर्भिन्नं नास्त्येव इत्यर्थः । भेदस्य मिथ्यात्वात् इति भावः ।

இங்கு அதர்மம் என்ற சொல் எதில் 'சத்' வாதி தர்மங்கள் (ஸத், சித், ஆநந்தம் முதலிய) இல்லையோ அப்பேர்பட்ட பரப்பிரம்மம் என்ற பொருளை (பஹுவ்ரீஹி ஸமாஸத்தால்) குறிப்பிடுகிறது. அந்த நிர்தர்மகமான பரம்பொருளாக ஆவதற்கு மூலகாரணமாகிய மூலாஞ்ஞானம் என்பதும் ஞானம் என்ற 'தர்ம ஸ்வரூபமான விமர்ச சக்தியே. ஆகவே பிருதிவ்யாதி சிவாந்தமான முப்பத்தாறு (36) தத்வங்களாகிய விஷயங்கள், ஜீவ வர்க்கங்கள், யோகம், முக்தி, அவித்யை என்ற மூலாஞ்ஞானம் ஆகிய யாவும், ஞாநம், தர்மம் என்ற சொற்களால் வ்யவகரிக்கப்படுகின்ற விமர்ச சக்தியின் உருவங்களே. சக்தியைத்தவிர மற்றொன்று கிடையது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்தியைக்கட்டிலும் வேறாகத் தோன்றுவது பொய்த் தோற்றமே. பேதம் என்பது தான் பொய்.

उप. "प्रपञ्च एव ईश्वरः"

भा. भेदव्याप्यस्य नियम्य नियन्तृ भावस्यापि ःव्यापकविरुद्धोपलब्ध्या मिथ्यात्वात्।

யாவற்று உலகமும் ஈசுவர ஸ்வரூபமே. ஈசுவரன் - அடக்குபவன், ப்ரபஞ்சம் - அடக்கப்படுபவைகள் என்பது பேதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. நியந்த்ரு, நியம்ய (नियन्तृ, नियम्य) பாவம் என்ற சம்பந்தமும் பேதத்தின் மூலமே ஏற்பட்டவை. இங்கு அடிப்படையான பேதமே பொய் என்றதால் அதனுல் ஏற்பட்ட நியந்தா, நியம்யம் என்பதும் அதற்குறிய நியம்ய, நியந்த்ரு பாவ சம்பந்தமும் மித்யை தான். ஆகவே प्रपञ्च एव ईश्वरः என்ற சூத்திரம் ஈஸ்வரனுக்கும் ப்ரஞ்சத்திற்கும் அபேதத்தை குறிப்பிடுவதுடன் "ப்ரபஞ்சம் ஈசுவரனே" (அதாவது பிரபஞ்சம் சத்யமே) என்பதையும் வலியுறித்துக் கூறுகிறது.

उप. "अनित्यं नित्यम्" ॥ १० ॥

भा. अनित्यत्वेन भासमानं घटादिकमपि नित्यशक्तिरूपमेव।

உற்பத்தி, நாசம் என்ற தன்மையுள்ள அநித்யப் பொருள்களாகத் தோன்றுகின்ற கட, படாதிப் பொருள்களும் அழிவற்ற நித்ய சக்தியின் ஸ்வரூபங்களே.

उप. "अज्ञानं ज्ञानम्" ॥ ११ ॥

भा. अवस्थारूपं अज्ञानमपि ज्ञानरूपमेव । शक्तिरेव इत्यर्थः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜாக்ரத், ஸ்வப்நம், சுஷுப்தி, துரீயம், துரீயாதீதம் என்ற ஐந்து அவஸ்தா பேதங்களேயும் அவற்றை பாவனே செய்ய வேண்டிய முறைகளேயும், பாவனேக்குறிய ஸ்தானங்களேயும் நித்யாஷோடசிகார்ணவத்தில் பாஷ்யகாரர் விஸ்தாரமாக குறிப்பிடுகிறார். அந்த ஐந்து அவஸ்தைகளே இங்கு அஞ்ஞானம் என்பதின் பொருள். இந்த ஐந்து அவஸ்தைகளும் ஞானம் என்ற தர்மத்தின் விமர்ச சக்தியின் உருவமே.

उप. "अधर्म एव धर्मः" ॥ १२ ॥

शक्तिरूपो धर्मोऽपि न पदार्थान्तरम् ।
किन्तु धर्माधारधर्मिरूपं ब्रह्मैव ॥

தர்மம் என்ற விமர்ச சக்திப்பொருளும் தனி வஸ்து அல்ல. தனக்கு ஆதாராமாயுள்ள தர்மீ ரூபமான பரப்பிரம்ம ஸ்வரூபமே. (இந்த சூத்திரலுள்ள अधर्म என்றபதம் निर्धर्मक (யாதொரு தன்மைகளும் அற்றதான) பரப்பிரும்மத்தையே குறிப்பிடுகிறது.)

उप. "एष मोक्षः" ॥ १३ ॥

भा. एष एव पन्थाः मोक्षस्य । नान्यः ॥

இதுவரை க்ரமமாகக் கூறப்பட்ட சர்வாத்ம - பாவத்தை (सर्वात्मत्वभाव) பெறுவதே முக்தி பெறுவதற்குறிய மார்க்கம். வேறு யாதொரு மார்க்கமும் கிடையாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. ''पञ्च बन्धाः ज्ञानस्वरूपाः'' ॥ १४ ॥

भा. अनात्मनि आत्मता बुद्धिः, आत्मनि अनात्मताबुद्धिः इत्यादि ज्ञानान्येव बन्धरूपणि। ''ज्ञानं बन्धः'' इति शिवसूत्रात्। जीवानां परस्परं भेदः. ईश्वरात् भेदः, चैतन्यात् भेदः इति ज्ञानत्रयेण सह पञ्च ॥

இனி பிறவி எடுப்பதற்குறிய காரணங்களும் அதனிலிருந்து விடுபட சிறந்த மார்க்கமும் கூறப் படுகின்றன.

ஞாநம் என்ற உருவத்தில் ஐந்து பந்தங்கள் நற்கதியை அடையவிடாமல் ஜீவர்களைத் தடுத்து வருகின்றன - அவைகளாவன.

1. ஆத்மாவாக இல்லாத சரீராதி வஸ்துக்களில் ''ஆத்மா'' என்ற ஞானம்.
2. ஆத்மாவிடத்தில் இது ஆத்மா இல்லை என்ற எண்ணம்.
3. ஜீவன்களில் பரஸ்பரம் பேத புத்தி.
4. நியந்தாவன ஈசுவரனைக் காட்டிலும் நியம்யமான தான் வேறு என்று நினைப்பது.
5. சைதைன்யத்தைக் காட்டிலும் தான் வேறு என்று எண்ணுவது. ஆக இந்த ஐந்து ஞானங்களும் ஜீவர்களைக் கட்டுப்படுத்துவதால் இவைகளை சிவசூத்ரம் என்ற நூல் ''ज्ञानं बन्धः'' (ஞாநம் பந்த:) என்ற சூத்திரத்தால் பந்தங்கள் எனக் குறிப்பிடுகிறது.

उप. ''पिण्डात् जननम्'' ॥ १५ ॥

भा. ईदृशबन्धसद्भावादेव पिण्डाण्डसम्बन्धरूपं जननं भवति।

இந்த ஐந்து வகை பந்தங்கள் இருப்பதால் தான் ஜீவர்களுக்கு பிண்டாண்ட சம்பந்தமான பிறவி என்பது ஏற்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. ''तत्रैव मोक्षः'' ॥ १६ ॥

भा. परन्तु कौलिकज्ञानमहिम्ना मोक्षोऽपि तत्रैव - पिण्डाण्डे एव भवति । न पुनः शताधिक नाड्युत्क्रमणम् देवयानगतिः, ब्रह्मणा सह मुक्तिः इत्येवं रूपो विलम्बः। ''तस्य तावदेव चिरम्, न तस्य प्राणाः उत्क्रामन्ति'' इत्यादि श्रुत्यन्तरात्।

அவ்வாறு பிறவி எடுத்தாலும் இச்சிறந்த கௌளிக மார்க்கத்தை பூர்ண விசுவாசத்துடன் கைக்கொண்டு அதற்குறிய அனுஷ்டான விசேஷங்களை முறைப்படி ஸத்குரு மூலமாக அறிந்து செம்மையாக அனுஷடித்து வரும் ஓர் சாதகன் இப்பிறவிலேயே இச்சரீர வாழ்க்கையிலேயே ''கைவல்யம்'' என்ற பிரம்ம சாக்ஷாத்காரத்தை பெறமுடியும். மற்ற மார்க்கங்களில் போல் நூற்றுக்கணக்கான நாடிகளைப் பிளந்து கொண்டு பிராணன் வெளியேறி அதன் பின் ஜீவன் பித்ருமார்க்கம், தேவமார்க்கம் இவைகளைக் கடந்து பிரம்மலோகம் சென்று, அங்கு வெகு காலம் தாமதித்து, அங்குள்ள ஸ்ருஷ்டிகர்த்தாவான ஆதிபிரம்மதேவனுடன் சேர்ந்து கூட்டாக பரப்பிரம்ம ப்ராப்தியை பெறுவது என்பதான சிரமங்களும், கால தாமதமும் இம்மார்கத்தை ஆசிரயித்தவனுக்கு கிடையாது. ''न तस्य प्राणाः उत्क्रामन्ति'' - அவனுடைய பிராணன்கள் வெளியேறுவதற்கு முன்பே அவனுக்கு முக்தி' என்று பல சுருதிகள் கூறுகின்றன. முக்திக்கு தாமதம் என்பது கௌளிக ஞானம் ஏற்படுவது வரை தான். இதுதான் இந்த கௌளிக மார்க்கத்தின் அபரிமிதமான பெருமை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. ''एतत् ज्ञानम्'' ॥ १७ ॥

भा. प्रथमं शास्त्रसिद्धान्तं उक्त्वा ज्ञाननिष्कर्षं आह - एतत् वक्ष्यमाणं ज्ञानसर्वस्वम् ॥

இதுவரை இக்கௌள மார்க்க சாஸ்திர சித்தாந்தங்கள் கூறப்பட்டன. இனி வரும் சூத்திரத்தால் சாதகன் அடைய வேண்டிய முடிவான ஞான உருவத்தை கூறுகிறார் - एतत् - இனி கூறப் போவதே ज्ञानम् - ஞான ஸர்வஸ்வம். அதாவது ஞாநம் என்ற சிறந்த தனம்.

उप. ''सर्वेन्द्रियाणां नयनं प्रधानम्'' ॥ १८ ॥

भा. ब्रह्म प्रति नयेत् । षड्भिरपि इन्द्रियैः जन्येषु प्रत्यगात्मक ज्ञानेषु ''अहं इदं जानामि'' इत्यादि प्रकारेषु अहन्तया भासमानं ब्रह्मैव प्रधानम् । ''तमेव भान्तं अनुभाति सर्वं'' इति श्रुत्या तदितरस्य सर्वस्याऽपि अनुभासमानतोक्तेः । ईदृश विवेचनं सर्ववृत्तिषु यथास्यात् तथा यतेत। एकेन्द्रियजन्यमपि ज्ञानं विवेचनमात्रेण प्रधानं नयेत् ।

''ग्राह्य ग्राहक संवित्तिः सामान्या सर्वदेहिनाम् ।
योगिनां तु विशेषोऽयं सम्बन्धे सावधानता'' ॥

इति वचनात् । अविवेचनाभाव एव ज्ञानसर्वस्वम् इत्यर्थः ॥

ஆறு இந்திரியங்களாலும் ஏற்படுகின்ற எல்லா ஞானங்களையும் பிரதானத்தினிடம் (ஞாந ஸ்வரூபியான ப்ரம்மத்தினிடம்) நயநம் (नयनं) - சேர்ப்பித்தல். எல்லா விருத்தி ஞாநங்களையும் பிரம்மத்தினிடம் ஒன்றாக லயிக்கச் செய்தல் என்பதில் மிகவும் திடமான அப்பியாசங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாதகன் செய்துவர வேண்டும். ஸமஸ்த இந்திரியங்கங்களாலும் ஏற்படுகின்ற 'நான் அறிகிறேன்', நான் கேட்கிறேன், 'நான் பார்க்கிறேன்' என்பது போன்ற எல்ல ஞாநங்களிலும் தொடர்ச்சியாக 'நான்' 'நான்' என்று தோன்றுகின்ற பிரகாசம் என்ற பொருள் ப்ரதானமான பிரம்ம ஸ்வரூபமேதான். ப்ரகாசம் என்பது பரப்பிரம்மத்திற்கு மட்டிலுமே உரித்தான ஓர் விசேஷத் தன்மையாகும். அந்த பரப்பிரம்ம பிரகாசமேதான் சூரிய ஒளி கண்ணாடியில் பிரதிபலிப்பது போல மற்ற எல்லா வஸ்துக்களிலும் பிரதிபலிக்கின்றன. "ஒளி மயமான பிரம்மத்தினிடமிருந்தே ஒளியைப்பெற்று மற்ற பொருட்கள் (अनुभासन) 'அனுபாஸநம்' "பிரதிபலனம்' எதிரொளி ரூபமாக பிரகாசிக்கின்றன" என்று तमेव भान्तं என்ற சுருதி கூறுகிறது. எனவே ஸமஸ்த ஞாநங்களிலும் உள்ள பிரகாசம் என்பது பிரம்ம ஸ்வரூபமே என்பதால் ஸமஸ்த விருத்தி ஞாநங்களும் பிரம்மக்ஞானமேதான் என ஆகிறது. ஆகவே ஓர் சாதகன் தனக்கு உணடாகும் எல்லா வகையான ஞாநங்களையும் பிரம்மத்தினிடம் சேர்ப்பித்து அவைகள் பிரம்மத்திடம் லயம் ஆவதற்குறிய திடமான அப்பியாசங்களை சிறந்த விவேசனங்களுடனும் ஸ்திரசித்தத்துடனும் தொடர்ந்து செய்து வரவேண்டும் என்பது இந்த சூத்திரத்தின் பொருள்.

இவ்வாறு செய்துவரும் இடைவிடாத திடாப்பியாசத்தால் காலக்கிரமத்தில் ஸர்வமும் பரப்பிரம்ம பிரகாசமே என்ற திவ்விய ஞாநம் சாதகனுக்கு ஏற்படுகிறது.

இந்த அபிப்ராயத்தையே "ग्राह्य ग्राहक......... सावधानता" என்றசுலோகமும் அறிவுறுத்துகிறது. அதாவது.

"சாமான்யமானவர்களுக்கும், யோகசித்தி பெற்ற மஹான்களுக்கும் ஏற்படுகின்ற ग्राह्य - ज्ञानं - அறியப்படும் பொருள், ग्राहक - ज्ञाता - அறிபவன், संवित्ति - ज्ञानं - அறிவு என்ற இந்த த்ரிபுடிகளையும் அதனதன் சம்பந்தங்களையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷயங்களாகக் கொண்ட வருத்தி ஞாநங்கள் யாவும் ஒரே மாதிரியானவைகளே. ஆனால் சாமான்ய ஜனங்கள் இந்த ஞாநத்திலுள்ள திரிபுடீ விஷயங்களை பலவித பேத சம்பந்தங்களால் வெவ்வேறாக அறிகிறார்கள். யோகீச்வரர்களோயெனில் ''இந்த விருத்திகளிலுள்ள த்ரிபுடீ விஷயங்களும் சம்பந்தமும் அபிந்நமான ப்ரம்ம ஸ்வரூபங்களே'' என்ற அபேத பாவனையில் மிகவும் விழிப்புடன் இருந்து வருகிறார்கள்''-

- என்பது இந்த ஸ்மிருதியின் பொருள். ஆகவே சாதகன் என்பவன் எந்த ஒரு ஞானத்திலும் விஷய விவேசனம் இல்லாதவனாக எந்த சந்தர்ப்பத்திலும் (எக்காலத்திலும்) இருந்துவரக் கூடாது. விவேசனம் செய்து கொண்டே இருக்க வேண்டும். இந்த கருத்தையே ''अविवेचन अभाव एव ज्ञानसर्वस्वम्'' என்று பாஷ்யத்திலுள்ள வாக்கியம் கூறுகிறது.

இந்த விவேகபுத்தியே ज्ञानसर्वस्वं ஞாநத்திற்கு அடிப்படையான மூலதனம் என்பது இந்த பாஷ்ய சந்தர்ப்பத்தின் ஆசயம்.

उप. ''धर्मविरुद्धाः कार्याः'' ॥ २९ ॥

भा. इतः प्रभृति उपासककर्तव्यप्रकारान् अनुशास्ति।

तादृश विवेचकज्ञानाधारैकरसिकानां चित्तस्थैर्यार्थं कर्मकालेऽपि संविदादिसेवनं धर्मशास्त्रविरुद्धं प्रतिकर्तुं युक्तम्॥

இனி सिद्धोपासक (சித்தோபாஸகன்) னுடைய தர்மங்கள் (கடமைகள்) சில சூத்திரங்களாலும் பிறகு சாதகோபாஸனுடைய தர்மங்கள் (கடமைகள்) பல சூத்திரங்களாலும் விவரிக்கப்படுகின்றன. முன்பு குறிப்பிடப்பட்ட விவேக ஞாநம் என்ற ஆதாரத்தையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலமாகக் கைப்பிடித்து அந்த விவேசனத்திலேயே ஈடுபட்டிறிக்கின்ற உபாஸக ச்ரேஷ்டர்களுக்கு மனநிறைவு, மனத்தின் திடத்தன்மை கிடைப்பதற்காக கர்மானுஷ்டான காலத்திலும் 'கூட தர்ம சாஸ்திரங்களில் வெகுவாக நிஷேதிக்கப்பட்ட संवित्सेवनम् எனற த்ரவத்ரவிய பானம் குற்றமாக ஆகாது. அது அனுமதிக்கப்படுகிறது.

उप. "धर्मविहिता न कार्याः॥ २० ॥

भा. धर्मशास्त्र विहिता अपि ज्योदिष्टोमादयः तादृशधाराविरोधसंभावनायां प्रतिकर्तुं युक्ताः। करणाकरणयोः अभ्यनुज्ञानमिदम्। न तु आत्यन्तिक विधिनिषेधरूपम्। गौतमेनापि चत्वारिंशत् संस्कारान् बहिरङ्गान् अष्टौ अन्तरङ्गाश्च उक्त्वा आन्तरशुद्ध्युत्तरं बहिरङ्गानां अनावश्यकता उक्ता। मनुनाऽपि सर्वान् धर्मान् विस्तरेण उक्त्वा शास्त्रान्ते ब्रह्माभ्यासं विधाय तत्पराणां स्वपूर्वोक्तधर्मानादरः उक्तः। तादृश स्मृतेः इयमेव श्रुतिः मूलम्॥

சங்கிலித்தொடர்போல் இடைவெளியின்றி धारावाहि யாக சென்று கொண்டிருக்கின்ற தனது ஆத்மானுசந்தான நிலைக்கு தர்ம சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட ஜ்யோதஷ்டோமா த்யனுஷ்டனங்களால் தடங்கல் ஏற்படலாமோ என்ற சம்பாவனை தோன்றினலும் மேற்கண்ட சாஸ்திர விஹித கர்மாக்களை சாதகன் செய்யவேண்டியதில்லை. (குறிப்பு - இந்த மேற்கூறிய இரு சூத்திரங்களும் கண்டிப்பான விதி நிஷேதங்கள் இல்லை. நிஷித்தங்களை செய்வதற்கும், விதிக்கப்பட்டவைகளை செய்யாமலிருப்பதற்கும் உபாஸகனுக்கு அனுமதியை மட்டிலும் வழங்குகிறது.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கௌதமர் என்ற ஸ்மிருதிக்காரரும் பஹிரங்கமான நாற்பது (40) ஸம்ஸ்காரங்களேயும், அந்தரங்கமான எட்டு (8) ஸம்ஸ்காரங்களேயும் விதித்து கடைசியாக - ''அந்தரங்கசுத்தி ஏற்பட்டவனுக்கு முந்திய நாற்பது (40) ஸம்ஸ்காரங்கள் தேவையில்லே'' என்று கூறுகிறார். மனுவும் எல்லா தர்மங்களேயும் விஸ்தாரமாகக்கூறி கடைசியில் பிரம்மானுசந்தாஞப்யாசத்தையும் கட்டாயமாக விதித்து, ''அந்த பிரம்மானுசந்தானத்தில் ஈடுபட்டவர்களுக்கு முன் கூறப்பட்ட கர்மானுஷ்டானங்களில் அவ்வளவு ஈடுபாடு தேவையில்லே;' என்று கூறுகிறார். இந்த இரு ஸ்மிருதிகளுக்கும் இந்த சுருதியே மூலம்.

उप. ''सर्वं शाम्भवीरूपम्'' ॥ २१ ॥

भा. विहिताचरणे इव निषिद्धाचरणेऽपि, त्रिपुरसुन्दर्याः भावनस्य अविशेषात्। तद्भावनवैषम्यवतां भ्रष्टानामेव विधिनिषेधकृतो बन्धः इति भावः। अत एव भगवत् वाक्यम्

''मत्कर्मकुर्वतां पुंसां कर्मलोपो भवेद्यदि।
तत्कर्म ते प्रकुर्वन्ति त्रिंशत्कोटयो महर्षयः'' ॥ इति ।

விதிக்கப்பட்ட கர்மானுஷ்டான விஷயத்திலும், நிஷேதிக்கப்பட்ட கர்மானுஷ்டான விஷயத்திலும் த்ரிபுரசுந்தரீ பாவனு விசேஷத்தில் ஈடுபட்டவர்களுக்கு யாதொரு வித்யாசமும் கிடையது. மேற்கண்ட த்ரிபுரசுந்தரீ பாவனு விசேஷத்திலிருந்து விலகி வேறு விஷயங்களில் மனம் ஈடுபட்டவர்களுக்குத்தான் விதி, நிஷேதங்களால் ஏற்படும் கட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன. ஆகவேதான்

''என்னேயே அனுசந்தானம் (பாவனே)செய்பவர்களுக்கு சாஸ்திரங்களில் கூறப்பட்ட கர்மாக்களுக்கு லோபம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏற்பட்டால், அந்த கர்மாக்களை முப்பது கோடி மஹரிஷிகள் உபாஸகர்களுக்குப் பதிலாக செய்து வருகிறார்கள்'' என்ற பகவத் வாக்யமும் உள்ளது.

उप. ''आम्नाया न विद्यन्ते'' ॥ २२ ॥

भा. ज्ञातत्वात् तं प्रति वेदा अपि न प्रवर्तन्ते। अतएवोक्तं भगवत्पादैः अध्यासभाष्ये '' अविद्यावत्विषयाणि शास्त्राणि'' इति। उक्तयोरभ्यनुज्ञयोः हेत्वर्थवादरूपे - सूत्रे॥

பிரம்மானுபாவத்தை அடைந்தவன் வித்யாவானாக இருப்பதால் அவனிடத்தில் விதி, நிஷேத ரூபமான வேதங்கள் செல்வதில்லை. ஸ்ரீபகவத் பாதாளும் ''வித்யை அற்றவன் விஷயத்தில் தான் சாஸ்திரங்கள் பிரவர்த்திக்கும்'' என்று அத்யாஸ பாஷ்யத்தில் கூறுகிறார்.

''धर्मविरुद्धाः कार्याः, धर्मविहिता न कार्याः'' என்ற இரு சூத்திரங்களுக்கும் ''सर्वं शाम्भवीरूपं'' என்ற சூத்திரம் காரணம் கூறும் ஹேது வசக்யமாகவும், ''आम्नाया न विद्यन्ते'' என்ற சூத்திரம் அர்த்தவாத (अर्थवाद) மாகவும் அமைந்திருக்கிறது.

उप. ''गुरुरेकः'' ॥ २३ ॥

भा. एकस्य यथोक्तलक्षणलक्षितस्य गुरोः उपास्त्या अयमर्थो लभ्यते। गुरुबाहुल्येन उपदेशवैषम्ये संशयावश्यंभावात्। अतएव परशुरामकल्पसूत्रे ''एकगुरूपास्तिरसंशय'' इति।

''लब्ध्वा कुलगुरुं संयक् न गुर्वन्तरमाश्रयेत्''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

इति कुलार्णवोक्त निषेधस्य इयं श्रुतिर्मूलम्। लब्ध्वा इत्युक्त्यैव "कौलिके गुरवोऽनन्ताः" इति शक्तिरहस्य वचनं तादृग्गुरोः अलाभाभिप्रायम्॥

விதிக்கப்பட்ட லக்ஷணங்கள் பொருந்திய ஒரே குருவை ஆசிரயித்து உபாசிப்பதால் இந்த வித்யை மூலமாக "கௌளிகஞ்ஞானம்" என்ற இப்பெரும் பொருள் அடையப்படவிருக்கிறது. பற்பல ஆசிரியர்களை ஆசிரயித்தால் உபதேசக்ரமங்களில் வித்யாஸம் ஏற்பட்டு சிஷ்யனுக்கு அவற்றில் சந்தேகம் உண்டாகி வித்யோபாஸனைக்குத் தடங்கல்கள் ஏற்படக்கூடும். ஆகையினாலேயே பரசுராம கல்பசூத்திரமும் "ஒரே குருவை அணுகுவது சம்சயங்களுக்கு இடம் அளிக்காது" என்று கூறுகிறது.

"சிறந்த குருவை அடைய வேண்டும். அவ்வாறு சிரேஷ்ட குருவை அடைந்த பிறகு இதரகுருக்களை அணுகக் கூடாது" என்ற குலார்ணவ வாக்யத்திற்கு இந்த சூத்திரமே மூலம். இக்குலார்ணவ வாக்யத்தில் "संयक् कुलगुरुं लब्ध्वा" - "நன்றாக பரிசீலனை செய்து சிறந்த குருவை அடைந்த பிறகு" என்று கூறியிருப்பதால் அப்படி நல்ல குரு கிடைக்காவிட்டால் வேறு குருவை ஆசிரயிக்கலாம் என்ற அபிப்ராயத்தில் "கௌளிக மார்க்கத்தில் பற்பல குருக்கள்" என்று "சக்திரஹஸ்ய" என்ற நூலின் வசனம் பிறந்திருக்கிறது.

उप. "सर्वैक्यता बुद्धिमन्ते" ॥ २४ ॥

भा. ऐक्यं इति स्वार्थे ष्यञ्। एवं रीत्या वर्तमानः साधकोऽपि अन्तकाले अद्वैतबुद्धिमेव लभते।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வாறு ஏககுரு உபாஸ்தி செய்து வரும் சாதகனும் (சிஷ்யனும்) கடைசி காலத்தில் அத்வைத (ஆத்மாபேத) ஞாநத்தையே அடைகிறான்.

उप. "आमन्त्रसिद्धेः" ॥ २५ ॥

भा. अधिकारोऽयम्। इत आरभ्य मन्त्रसिद्धिपूर्वकाले ये ये नियमाः अनुष्ठेयाः ते धर्माः कथ्यन्ते इत्यर्थः। तेन वक्ष्यमाणेषु एकस्यापि अनादरे सिद्धिहानिरेव इति भावः।

இது அதிகார சூத்திரம். (அதிகாரம் மேலே கூறப்படும் சூத்திரங்கள் ஒவ்வோன்றிலும் இந்த அதிகார சூத்திரமும் (अधिकार सूत्र) அன்வயிக்கிறது எனப்பொருள்)

மந்திர சித்தி ஏற்படுவதற்கு முந்திய காலங்களில் அனுஷ்டிக்கப்பட்டவேண்டிய வைகளாக எந்த நியமங்கள் உள்ளனவோ அந்தந்த தர்மங்கள் இனிவரும் சூத்திரங்களால் கூறப்ப்படுகின்றன. கூறவிருக்கின்ற இந்த நியமங்களில் எந்த ஒரு நியமத்திலாவது அசிரத்தை ஏற்பட்டு அனுஷ்டிக்கத் தவறினல் நிச்சயமாக மந்திரசித்திக்கு (ஹாநி) தடை ஏற்பட்டு விடும் என்பது இந்த அதிகார சூத்திரத்தின் பொருள்.

उप. ॥ मदादिस्त्याज्यः ॥ २६ ॥

भा. मादकद्रव्य सेवनजन्यो विकारविशेषो मदः। विकारान्तराणि आदिपदग्राह्याणि। अरिषड्वर्गश्च संस्त्याज्य एव। मन्त्रसिद्ध्युत्तरं तु स्वत एव कामक्रोधादयो न प्रसरन्ति। विकारविशेषास्तु पूर्वमेव अभ्यनुज्ञाताः। तथा च "यावन्न चलते दृष्टिः", "आगलान्तं

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

पिबेत् द्रव्यं'' इति वचनयोः मन्त्रसाधक, सिद्धमन्त्रपरत्वेन व्यस्थासिद्धेः अविरोधः ॥

மயக்கம் தரும் திரவியங்களை உட்கொள்வதால் மனத்திலும் சரீரத்திலும் ஏற்படுகின்ற அறுவறுக்கத்தக்க விகாரங்களை மதம் என்ற சொல் குறிக்கிறது. (आदि) ஆதி பதத்ததால் வேறுவகைகளால் உண்டாகின்ற தேகமாறுபாடுகளையும் அரிஷட்வர்க்கம் என்ற காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்ய என்ற சத்ரு வர்க்கத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சரீரத்தில் ஏற்படவிருக்கும் கெட்ட விகாரங்களையும் காம, க்ரோதாதிகளையும் பூர்ணமாக களைய வேண்டும் என்பது இதன் பொருள். மந்திர சித்தி பெற்றவன் விஷயத்தில் அரிஷட் வர்க்கங்கள் தானாகவே நீங்கிவிடுகின்றன. திரவிய சேவனத்தால் ஏற்படும் விகாரங்கள் சித்தபுருஷனுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

''यावन्न चलते दृष्टिः'' - ''கண்களில் சுழற்றல் ஏற்படாதவரை தான் திரவிய சேவனம்,'' ''आगलान्तं पिबेत् द्रव्यं'' - ''தொண்டையில் இடம் கிடைக்கும் வரை பானம் செய்யவும்'' என்ற ஒன்றுக் கொன்று முரண்பட்ட இருவகை விதி - நிஷேத வாக்யங்களில் முதல் வாக்கியமான நிஷேதம் அப்பியாச நிலையிலுள்ள சாதகனுக்கு உரியது என்றும், இரண்டாவதான விதிவாக்யம் சித்தபுருஷனுக்கு உரியது என்றும் பங்கீடு செய்து கொண்டால் (பாகுபாடு செய்து கொண்டால்) இவ்விரு வாக்யங்களுக்கும் பரஸ்பரம் யாது விரோதமும் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. "प्राकट्यं न कुर्यात्"॥ २७ ॥

भा. स्वकीय मन्त्रदीक्षोपास्ति रहिताः, धर्मान्तरेषु अत्यन्तं आदरशीलाः, स्वीयमन्त्रोपासकाभासाश्च, सर्वेऽपि बहिर्मुखाः। तैः यथा "अयं तदुपासकः" इति न ज्ञायेत तथा उपास्तिं गोपयेत्। इदं च दीक्षान्तरेष्वपि तुल्यम्। "नैनमदीक्षिताव्रतयन्तं पश्यन्ति" इत्यादि तत्तत्प्रकरणगत वचनात्। यद्यपि अस्याः दीक्षायाः वेदेषु आरण्यक काण्डे विहितत्वादेव रहस्यता सिद्धा। क्रत्वङ्ग प्रवर्ग्यादिवत्। तथापि पुनः कण्ठरवेण तद्विधानं रहस्यान्तरेभ्यो वैलक्षण्यार्थम्। धर्मान्तरेषु रहस्यभङ्गे क्रतुवैगुण्यमात्रम्। इह तु तथात्वे नरक एवेति। तथा च भगवान् परशुरामः

"प्राकट्यात् निरयः" - इति ॥

ஓர் சாதகனுக்கு, தான் கைக்கொண்டிருக்கும் மந்திரமோ, தீக்ஷையோ, உபாஸ்தியோ இல்லாத மற்றவர்களும், தானும் உபாஸகன் என்று வெளிவேஷம் போட்டு ஆடம்பரப்படுத்தும் உபாஸக போலிகளும், இதரமார்க்கங்களிலுள்ள நியமங்களில் அதிகம் பற்றுதல் உள்ளவர்களும் பஹிர்முகர்கள் எனப்படுகிறார்கள். அவ்வித பஹிர் முகர்களால் "இவனும் ஓர் உபாஸகன்" என்று அறிந்துகொள்ள முடியாதபடி தனது உபாஸனைகளையும் அடையாளங்களையும் சாதகன் மறைத்துக்கொள்ள வேண்டும். மற்ற மார்க்கங்களுக்கும் இந்த கட்டுப்படு பொருந்துகிறது. "தீக்ஷையற்றவர்களையும், உரிய நியமங்களை கைக்கொள்ளாதவர்களையும் பார்க்கவே கூடாது" என்று அந்தந்த மார்க்கங்களின் நியம ப்ரகரணங்களில் கூறப்பட்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

"ப்ரவர்க்யம்" (प्रवर्ग्यं) என்ற யாகாங்க கர்மா ரகசியமாக உள்ளது போல் வேதத்தின் ரகசிய பாகமான ஆரண்யக காண்டத்தில் இந்த வித்யோபாஸ்தி கூறப்பட்டிருப்பதால் இவ்வுபாஸ்தி 'ரஹஸ்யமானது என்று சித்தித்தாலும் மற்ற ரகசியங்களைக் காட்டிலும் இக்கௌளமார்க்கம் மிகவும் அந்தரங்கதமம் (ரகசியதமம் - रहस्यतमं) என்ற விசேஷத்தை வலியுறுத்தி சுட்டிக்காட்டுவதற்காக சுருதியே தன் வாயிலாக வ்யக்தமாக (வெளிப்படையாக) "प्राकट्यं न कुर्यात्" (ப்ராகட்யம் ந குர்யாத்) என்று நிஷேத முறையில் மறுபடியும் கூறுகிறது. மற்ற மார்க்கங்களில் ரகசியம் வெளிப்பட்டால் कर्मवैगुण्यं - செய்யும் கர்மாவில் குறைவு ஏற்படுகிறது என்பது மட்டிலுமே. அதை பிராயச்சித்தத்தால் நீக்கிக் கொள்ளலாம். இந்த மார்க்கத்திலோவெனில் ரஹஸ்யபங்கம் (ரகசியம் வெளிப்படுதல்) ஏற்பட்டால் மீளாத நரகமே. இக்கருத்தையே ஸ்ரீபரசுராமரும் "प्राकट्यान्निरयः" - "ரகசியம் வெளிப்பட்டால் நரகம்" என்று கூறுகிறார்.

उप. "न कुर्यात् पशुसंभाषणम्" ॥ २८ ॥

भा. बहिर्मुखास्सर्वेऽपि पशवः। विद्याहीनत्वात्। "न शिल्पादिज्ञानयुक्ते विद्वच्छब्दः प्रयुज्यते" इत्यादि वचनात्। तैस्सह सम्यक् स्वहृदयज्ञापनपर्यन्तं भाषणं न कार्यम्। तेन आपातभाषणस्य न निषेधः।

மிக மிக புதுமையான அதிசயிக்கத்தக்க நுட்பமான தொழில்களைச் செயபவர்களையும், தனது சாமர்த்தியத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலரும் பிரமிக்கும்படி அபரிமிதமான பற்பல விந்தைகளைச் செய்யும் மகாவீரர்களையும் ''வித்வான்'' என்ற சொல் குறிப்பதில்லை. ''न शिल्पादिज्ञानयुक्ते विद्वत् शब्दः प्रयुज्यते'' - ''சிலம்பம் முதலிய தொழில் உள்ளவர்களை 'வித்வான்' என்ற சப்தம் குறிப்பதில்லை'' என்பது ஆன்றோர் வாக்கு. ''வித்யா'' என்ற சொல் இந்த ''சாக்த வித்யையை'' மட்டிலுமே குறிப்பிடுவதால் இந்த ''சாக்த வித்யை'' உள்ளவன் மட்டுமே 'வித்வான்' எனப்படுகிறான். இந்த வித்யை அற்றவர்கள் யாவரும் ''विद्याविहीनः पशुः'' என்றபடி வித்யா விசாரமற்ற பசுக்களுக்கு சமானமாகிறார்கள். இவ்வாறுள்ள சாமான்ய பசுஜனங்களோடு வித்யோபாசகன் தன் மனம் திறந்து ரகசியமான விஷயங்கள் எதையும் சம்பாஷிக்க (பேச)க்கூடாது. லௌகிகமான சாதாரணக் காரியங்களைப் பற்றியவைகளை மட்டிலுமே சம்பாஷித்துக் கொள்ளலாம்.

उप. ''अन्यायो न्यायः'' ॥ २९ ॥

भा. यदि कश्चिद्वावदूकः पूर्वोत्तरमीमांसान्यायैः कौलिकाचारं दूषयेत् तथापि न मनागपि कोपः कार्यः इत्याशयेन आह - ''अन्याय'' इति। अल्पार्थो नञ्। अल्पबलो न्यायः। पुर्वपक्षन्यायः इति यावत्। सोऽपि न्याय एव । न हि पूर्वपक्षोऽपि न्यायोपन्यासमन्तरेण प्रवर्तते। अतः तादृशन्यायसिद्धोऽपि न्याय एव अयं पन्थाः। न चैवं सति सिद्धान्तन्यायेन अपवादात् कथं आश्वासः? सिद्धान्तानां ऋषिभेदेन बहुविधत्वेन तदभिमानिभिः तथा तथा उपपादनस्य परस्परविरुद्धस्य पूर्वोत्तर तन्त्रस्थ देवताधिकरणादिषु बहुशो दर्शनात्।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

वादिनो दौर्बल्यम्। न न्यायस्य इति भावः। ''तर्काप्रतिष्ठानात्'' इति भगवान् व्यासः। ''अचिन्त्याः खलु ये भावाः न तांस्तर्केण योजयेत्'' इति च। ईदृश न्यायानां चित्तसमाधानैक फलकानां संप्रदायाविरोधेनैव उपन्यासस्य उचितत्वात्। यथा - श्रुतिस्मृतिसंप्रदायानां उत्तरोत्तरस्य दुर्बलत्वेऽपि प्रकृततन्त्रे वैपरीत्यं ऊह्यम्। न चायं सुतरां अन्यायः। धर्मशास्त्रविद्भिरपि उत्तरोत्तरेण पूर्वपूर्वसंकोचस्य बहुशः स्वीकारात्॥

எதிர் வாதம் செய்வதில் வல்லமையுள்ள ஒருவன் ''கௌளிக'' ஆசாரங்களை பூர்வ, உத்தர மீமாம்ஸா நியாயங்களைக் கூறி பலமாக கண்டித்தாலும் (தூஷித்தாலும்) அவனிடத்தில் வித்யோபாஸகன் சிறிதும் கோபம் அடையக் கூடாது. அவன் கூறுவதும் ஒருவித நியாயத்தை அனுசரித்ததுதரன் என்ற ஆசயத்தில் இந்த சூத்திரம் பிறந்திருக்கிறது. **अन्यायः** என்றதில் உள்ள **अ** என்ற **नञ्** பதத்திற்கு அல்பம், சிறிது எனப் பொருள் **''अनुदरा कन्या''** இடையற்றவள் என்றதிலுள்ள அற்ற என்ற சொல்லுக்கு அல்ப (சிறிய) என்ற அர்த்தம் கொண்டு 'சிறிய இடையுள்ளவள்' என பொருள் கொள்வது போல. ஆகவே **अन्यायः** என்பதற்கு அல்ப பலம் கொண்ட ந்யாயங்களை அனுசரித்தது — அதாவது பூர்வ பக்ஷம் எனப்பொருள். பூர்வபக்ஷங்களும் சில நியாயங்களை ஒட்டியே வாதிக்கப்படுவதால் அந்த பூர்வபக்ஷ முடிவுகளும் நியாமானவைகளே. ஆனால் சித்தாந்த நியாயங்களோடு விரோதேம் ஏற்படுவதால் இப்பூர்வபக்ஷ முடிவுகளில் எவ்வாறு நம்பிக்கை உண்டாகும், எவ்வாறு ஒத்துக்கொள்வது என்று ஓர் சந்தேகம் ஏற்படலாம். இம்மாதிரியான சங்கைகளை நிவர்த்தி செய்வதற்காக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்க்கசாஸ்திர ஆதாரங்களுடன் மிகவும் தைரியமாக திருஷ்டாந்தங்களுடன் விளக்கங்கள் கூறுகின்ற ஸ்ரீபாஷ்யாகாரரின் (ஸ்ரீபாஸ்கரராய:) மேதாவிலா சத்திற்கும், ஸர்வதந்திர ஸ்வாதந்தர்யத்திற்கும் நாம் யாவரும் அடிபணிந்தேயாகவேண்டும்.

சகல சாஸ்திரங்களிலும் அநேக மஹரிஷிகளின் பலவித அபிப்ராய பேதங்களால் பல சித்தாந்தங்கள் தோன்றி அந்தந்த ரிஷிகளின் சிஷ்யர்களாலும் அபிமானிகளாலும் பரஸ்பரம் விருத்தமான (ஒன்றுக்கொன்று எதிரிடையான) அந்தந்த சித்தாந்தங்கள் கைக்கொள்ளப்பட்டு அந்தந்த தர்சனங்களிலும் விரிவாக எழுதப்பட்டும், அங்கீகரிக்கப் பட்டும், அனுஷ்டானங்களிலும் கையாளப்பட்டு வருகின்றன. உதாரணமாக பூர்வ உத்தர மீமாம்ஸா தர்சனங்களிலுள்ள தேவதாதிகரணாதிகளில் விரிவாக விவாதிக்கப்பட்டு அபிப்ராய பேதத்தால் பல முடிவுகள் ஏற்பட்டு ஆசாரத்திலும் அந்த முடிவுகள் கைக்கொள்ளப் பட்டுருக்கின்றன.

வாதி துர்பலனாக (திறமை அற்றவனாக) இருந்தால் அவனது வாதம் பூர்வபக்ஷம் என்றும், பலிஷ்டனாக (திறமை உள்ளவனாக) இருந்தால் அவனது வாதம் சித்தாந்தம் என்றும் பழக்கத்தில் வந்திருக்கிறது. வாதி பிரதிவாதிகளின் பலாபலமே (திறமை, திறமையின்மை) பூர்வபக்ஷம் அல்லது சித்தாந்தங்களுக்கு காரணமாகிற தேயன்றி, ந்யாயங்களுக்குள் பரஸ்பரம் ப்ராபல்யம் (வலிமை உள்ளது) தௌர்பல்யம் (வலிமையற்றது) என்ற தன்மையே கிடையாது. "तर्काप्रतिष्ठानात्" - தர்க்கத்தினால் (நியாயத்தால்) ஓர் சித்தாந்தத்தை ஸ்தாபனம் செய்யக் கூடாது என பகவான் ஸ்ரீவ்யாஸர் கூறுகிறார். अचिन्त्याः खलु ये भावाः न तांस्तर्केण योजयेत्" - "நமது புத்தி சக்திக்கு எட்டாத பல भाव (விஷய)ங்களில் தர்க்கவாதங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தப்படுத்தி சித்தாந்தம் செய்யக்கூடாது'' என்று முதியோர் வாக்கும் உள்ளது. ஆகவே ''தாங்கள் முடிவு செய்த சித்தாந்தம், சரியானதே'' என்று தங்கள் மனதை தேற்றிக் கொள்வதற்கு மட்டிலுமே இந்த நியாயங்கள் பயன்படுகின்றன. ''அவரவர்களது சம்பிரதாய ஆசாரத்திற்கு விரோத மன்னியில் இவ்விருவித நியாயங்களையும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு கைக்கொள்ள வேண்டும்'' என்பதே இந்த சூத்திரத்தின் உட்பொருள்.

பொதுப்படையக சுருதி, ஸ்மிருதி, ஆசாரம் என்ற சம்பிரதாயங்களுக்குள் முந்தியவைகளைக் காட்டிலும் பிந்தியவைகள் துர்பலமானவை (பலம் குறைந்தவைகள்) என கருதப்பட்டாலும் இந்த வித்யாதந்திரத்தில் விபரீதமாக அதாவது பிந்தியவைகளைக் காட்டிலும் முந்தியவைகள் பலமற்றது என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஏற்றுக்கொள்வது மிகவும் அக்கிரமம் தப்பிதம் என்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில் தர்ம சாஸ்திரங்களை செம்மையாக கற்றறிந்த மகான்களும் ஆங்காங்கு பின்னுல் உள்ளவைகளால் முன்னுல் உள்ளவைகளை संकोचं - சுருக்கம் செய்து முடிவு செய்து அந்த முடிவுகளை ஏற்றிருக்கிறார்கள்.

उप. ''न गणयेत् कमपि'' ॥ ३० ॥

भा. ब्रह्माणमपि स्वसिद्धान्तविरोधवादिनं न गणयेत्। अतीव दृढं विश्वसेत् इत्यर्थः। अत एव ''विश्वासभूयिष्ठं प्रामाण्यम्'' इति कल्पः॥

''இந்த சித்தாந்திற்கு எதிராக வாதம் செய்பவன் சிருஷ்டி கர்த்தாவான பிரம்ம தேவனாக இருந்தாலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனையும் நாம் மதிக்க வேண்டியதில்லை "என்றால் சாதாரண ஜனங்களைப்பற்றி என்ன கூறுவது. அதாவது - இந்த சித்தாந்தத்தில் திடமான வழுவற்ற (குற்றமற்ற) நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பது பொருள். இந்த கருத்தையே "विश्वासभूयिष्ठं प्रामाण्यम्" என்று கல்ப சூத்திரமும் கூறுகிறது. அதாவது "சாஸ்திரங்களுக்கு ப்ராமாண்யம் என்பது அந்தந்த சாஸ்திர சித்தாந்தங்களில் வைக்கப்பட்டுள்ள திடமான பூர்ணமான நம்பிக்கையை பொருத்துத்தான்" என்பதாக.

उप. "आत्मरहस्यं न वदेत्॥ ३१ ॥

भा. प्राकट्यापत्तेः मित्रायापि न वदेत्।

"விளம்பரமாக வீண் பிரசாரம் ஆகி விடலாமோ" என்ற பயத்தில் தன்னுள் அடங்கிய வித்யாரஹஸ்யங்களை தன் ஆப்த மித்திரனிடமும் (உயிர் சிநேகிதனிடமும்) கூட கூறக்கூடாது.

उप. "शिष्याय वदेत्"॥ ३२ ॥

भा. अत एव "कर्णात् कर्णोपदेशेन सम्प्राप्तं अवनीतलम्" इति स्मृतिः। ईदृश संप्रदायैक वेद्यत्वेनैव ईदृशार्थविषये श्रुतिस्मृत्यपेक्षया सदाचारस्यैव बलवत्त्वम्। व्याकरणापेक्षया सत्प्रयोगरूपाचारस्येवेत्यादिकं ऊह्यम्॥

சாக்த சம்பிரதாயத்திற்கும் அதன் பரம்பரைக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடைவெளி ஏற்படாமலிருக்கும் பொருட்டும், வீளுக ப்ராகட்யம் (விளம்பரம்) ஆகாமல் காப்பற்றப்படுவதற்காகவும் தனது சத்சிஷ்யனுக்கு மட்டிலுமே இதன் ரகசியங்களை உபதேசிக்க வேண்டும் என்பதையே "कर्णात् कर्णोपदेशेन संप्राप्तं अवनीतलम्" என்ற ஸ்மிருதி "காதோடு காதுவழியாகவே இந்த தர்மம் பூலோகத்திற்கு வந்திருக்கிறது" என்று கூறுகிறது. இந்த ரகசியங்கள் குரு,சிஷ்ய பரம்பரை மூலமாகவே அடையப்பட வேண்டியிருப்பதால் இந்த விஷயத்தில் சுருதி, ஸ்மிருதிகளைக் காட்டிலும் சம்பிரதாயத்திற்கே அதிக முக்யத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சம்பிரதாயத்திற்கு அதிக ப்ராமாண்யம் என்பது வ்யாகரணுதி சாஸ்திரங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. வேதங்களில் உள்ள சாஸ்திர விருத்தமான சில சப்தப்ரயோகங்கள் 'छान्दसत्वात् साधुः' - சாந்தஸமானதால் சாதுசப்தங்கள் என்றும், புராணங்களில் உள்ள சில சப்தங்கள் आर्षत्वात् - மகரிஷியால் கூறப்பட்டதால் சாது சப்தங்கள் என்றும், காவ்யங்களிலுள்ள அசாது சப்தங்கள் ஸத்கவிகளால் கூறப்பட்டதால் (सत्कविप्रोक्तत्वात्) சாது சப்தங்கள்தான் என்றும் சம்பிரதாயத்திற்கு அதிக ப்ராமாண்யம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. "यथोत्तरं मुनीनां प्रामाण्यम्" என்ற சித்தாந்தமும் சம்பிரதாயத்தின் முக்யத்வத்தையே விவரிக்கிறது.

उप. "अन्तः शाक्तः, बहिः शैवः, लोके च वैष्णवः ॥ ३३ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भा. अप्राकट्येऽपि कर्तव्यतामेव विवृणोति। शक्तेः उपास्तिः अन्तःकरणैकवेद्या कार्या। "कुचन्दनेन शाक्तानां भ्रूमध्ये बिन्दुरिष्यते"। इति चिह्नानि विहितान्यपि विभूतिधारणादिशैवचिह्नैः आच्छादितानि एव कार्याणि। शिवस्यापि शक्त्यभेदात्।

"मामेव पौरुषं रूपं गोपिकानयनामृतम्"। इत्यादिवचनैः विष्णुरूपस्य परशिवावरोध त्रिपुरसुन्दरीप्रकटरुपान्तरात्मकतया सभासु विष्णुनामाम्रेडादिना विष्णूपास्तिमेव प्रकटयेत् इति सुत्रत्रयार्थः। अत एव विष्णु शिव शक्तीनां उत्तरोत्तरफलाधिक्यं उत्तरोत्तर रहस्याभिप्रायेण उक्तं रहस्यनाम साहस्रे॥

சக்தியின் உபாஸனையானது தனது அந்த:கரணத்திற்கு மட்டுமே தெரியும்படி ரகசியமாக செய்யப்படவேண்டும். "குங்குமப்பூ கலந்து அரைக்கப்பட்ட பூஜைக்குறிய செஞ்சந்தனத்தால் சாக்தன் தனது புருவங்களின் மத்தியில் "பிந்து" அதாவது பொட்டு அணியவேண்டும்" என்ற விதிப்படி இட்டுக்கொண்ட சந்தன திலகத்தை விபூதி தாரணம் முதலிய சைவ அடையாளங்களால் உடனே மறைத்துக் கொள்ளவேண்டும். ஏனெவில் இந்த திலக சின்னத்தால் (அடையாளம்) "இவன் ஓர் சாக்தன்" என்று மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடாது. சிவனும் சக்தியின் அபிந்ந ரூபமானதால் சைவ சின்னங்களும் சாக்தனுக்கு பொருத்தமானவைகளே. உள்ளுக்குள் சாக்தனுகவும் வெளியாரின் பார்வைக்கு சைவனுகவும் விளங்க வேண்டும் என்பது தாத்பர்யம். "मामेव पौरुषं रूपं गोपिकानयानमृतम्" - "என்னையே 'கோபிகைகளின் கண்களுக்கு அமிர்தமாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைந்த புருஷவடிவம் கொண்ட கிருஷ்ணனாக' அறியுங்கள்'' என்பதான பல வசனங்களால் ''விஷ்ணு ஸ்வரூபமானது பரமேச்வரனின் மிகவும் ரகசியதமமான அந்த:புர பட்டமஹிஷீயான மஹாத்ரிபுரசுந்தரியின் (ப்ரகடமாக) வெளிப்படையாகத் தோன்றுவதற்குறிய புருஷவடிவம் பெற்ற மற்றோர் உருவமே'' என்று சித்திப்பதால் வெளிப்படையாயுள்ள சபைகளிலும் பொதுஸ்தலங்களிலும் அம்பிகையின் பஹிர்முக சொரூபமான , விஷ்ணுவின் நாமாக்களேயே அடிக்கடி கூறிக்கொண்டு விஷ்ணு உபாஸ்தியையே சாக்தன் வெளிப்படுத்த வேண்டும். உள்ளுக்குள் சாக்தனுகவும். வெளித்தோற்றத்தில் சைவனுகவும். பொதுஸ்தலங்களில் வைஷ்ணவனுகவும் இருந்து வரவேண்டும் என்பது இம்மூன்று சூத்திரங்களின் பொருள். இந்த சூத்திரங்களின் சித்தாந்த அபிப்ராயங்களே அவலம்பித்துத்தான் விஷ்ணு, சிவ, சக்தியின் தன்மைகள் உத்தரோத்திரம் (மேலுக்கு மேல்) ரஹஸ்யதமம் என்றும் அந்த மூன்று உபாஸ்திகளுக்கும் முறையே முந்தியதைவிட பிந்தியதற்கு அதிக பலன்களேத் தரும் தன்மையும் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் கூறப்பட்டிடுக்கிறது.

उप. अयमेव आचारः ॥ ३४ ॥

भा. सन्त्यन्येऽपि कौलिकानामाचाराः तन्त्रेषु विहिताः। तेषां सर्वेषां मध्ये प्राकट्याभावरूपाचारः एव अतीव मुख्य इत्यर्थः ॥

இவைகள் தவிர மற்றும் அநேக ஆசாரங்களும் (நியமங்கள்) அந்தந்த தந்திரங்களில் விதிக்கப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டிருக்கின்றன. அவ்வாறு கூறப்பட்டுள்ள யாவற்று நியமங்களைக் காட்டிலும் இந்த "ப்ராகட்யாபாவம்" - "தனது சாக்தத் தன்மையை வெளிப்படுத்தாதிருத்தல்" என்ற ஆசாரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இந்த சூத்திரம் வலியுறுத்துகிறது.

उप. "आत्मज्ञानात् मोक्षः" ॥ ३५ ॥

भा. कर्मवत् अतीव आचारे एव आसक्तस्सन् आत्मानुसन्धाने न प्रमाद्येत। अपितु उभयमपि सम्यक् अनुतिष्ठेत् इति द्योतनाय इह पुनः स्मरणम्॥

கர்மாக்களில் ஈடுபட்டவன் அதற்குறிய கால, ஆசார நியமங்களில் அதிகமாக ஈடுபட்டிருப்பதுபோல் உபாஸகன் ஆசாரங்களில் அதிகம் ஈடுபட்டு ஆத்மானுசந்தானத்தில் சிறிதளவும் प्रमादத்தை மந்தத்தன்மையை அடையக்கூடாது. இயன்ற மட்டிலும் ஆசாரங்களையும் அனுஷ்டித்து ஆத்மப்பயிற்சியையும் சிறப்பாகச் செய்துவரவண்டும் என்று இச்சூத்திரம் ஆத்மானுசந்தானத்தின் அவசியத்தை திரும்பவும் ஞாபகப்படுத்துகிறது.

उप. "लोकान् न निन्द्यात्" ॥ ३६ ॥

भा. प्रवाहणादिरूपाणि नानाविधानि दर्शनानि सर्वाण्येव तत्तदधिकारिभेदेन प्रमाणान्येव। तानि सर्वथा न निन्देत्। तन्निन्दनेन तदधिकारिणां संशयोत्पत्त्या स्वावलम्बित दर्शनेष्वपि अविश्वासः, कौलिकेऽपि अनधिकारात् उभयभ्रष्टतापत्त्या छिन्नाभ्रवन्नाशापत्तेः। तेन

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उपासकस्य निन्दनीयतापत्तेर्वैगुण्यम्। अत एव

"न बुद्धिभेदं जनयेत् अज्ञानां कर्मसङ्गिनाम्" इति भगवान् कृष्णः। "सर्वदर्शनानिन्दनम्" इति भार्गवरामश्च॥

"உலகத்திலுள்ள எந்த ஒன்றையும் நிந்திக்கக் கூடாது" என இந்த சூத்திரத்தின் கருத்து.

விளக்கமாவது - உலகத்தில் "ப்ரவாஹணம்" முதலான ப்ராமாண்யம் அற்றதாக சிலரால் கருதப்படுகின்ற பற்பல தர்சனங்கள் காணக்கிடைக்கின்றன. அவைகள் யாவுமே அந்தந்த அதிகாரிகளைப் பொருத்து ப்ராமாண்யம் பெற்றவைகளே. அவற்றில் எந்த ஒரு பகுதியையும் யாரும் கண்டிப்பாய் குறைகூறி நிந்தனம் செய்யக்கூடாது. நிந்தனையால் அந்தந்த தர்சனங்களில் பற்றுதல் கொண்டவர்களுக்கு தான் கைக்கொண்ட மார்க்கத்தில் சந்தேக, விபரிதபாவங்கள் ஏற்பட்டு நம்பிக்கை இழந்து அம்மார்க்கத்தை கைவிட வழி பிறக்கிறது. கௌளிக மார்க்கத்திலும் அதிகாரம் (அதற்குறிய யோக்யதை) இல்லாததால் அவர்களுக்கு இடமில்லை. ஆகவே சிதறுண்ட மேகம் போல் இருமார்க்கங்களிலிருந்தும் சிதறி ("इतो भ्रष्टः ततो भ्रष्टः" என்பதாக) அந்த சாதாரண மனிதன் நசித்துப் போவதற்கே இதர தர்சன நிந்தனைகள் காரணமாகின்றன. மேலும் இவ்வுபாஸ்தியை யாவரும் தூஷிக்கும் நிலை ஏற்பட்டு உபாஸகனுக்கும், உபாஸ்திக்கும் களங்கம் உண்டாகிறது.

"न बुद्धिभेदं जनयेत् अज्ञानां कर्मसङ्गिनाम्" । "தன் தனக்குறிய காரியங்களில் ஈடுபட்டிருக்கும் சாமான்ய அறிவு கொண்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாதாரண ஜனங்களுக்கு அறிவு மயக்கம் உண்டாகும்படி யாரும் எந்த ஒரு செய்கையையும் கைப்பாளக்கூடாது'' என்று கிருஷ்ண பரமாத்மாவும், ''सर्वदर्शनानिन्दनम्'' என மகரிஷி பரசுராமரும் எதனேயும் தூஷணே செய்யக்கூடாது என்பதையே போதிக்கிறார்.

उप. ''इत्यध्यात्मम्'' ॥ ३७ ॥

भा. सर्वदर्शनानिन्दनं क उपयुज्यते इत्याशङ्कायां आह। परेषां छिन्नाभ्रवन्नाशापेक्षया स्वस्य सर्वात्मत्वभावे न्यूनतापत्तेः अयमाचारोऽपि आत्मज्ञाने एव उपकुरुते इत्यर्थः॥

''சர்வதர்சனநிந்தனம்'' (சர்வ தர்சனங்களேயும் குறை கூறாமல் இருத்தல்) என்பது சிறந்த வேறு எந்த கார்யத்திற்காவது உபயோகப்படுகிறதா? என்று சுருதியே சங்கை சொய்து பதில் அளிக்கிறது.

இதர தர்சன தூஷணேகளால் சாதாரண ஜனங்கள் சிதறுண்ட மேகம் போல் ஸ்வரூபம் அற்று கெட்டுவிடுகிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, இம்மாதிரியான தூஷணேகளால் உபாஸகனுக்கே ஸ்வாத்மானுசந்தானம் தடைபட்டு ஸர்வாத்மபாவமும் க்ரமமாக நாசமடைந்து இவ்வுபாஸகன் சீர்கெட்டுப் போகவும் வழி உண்டாகிறது. ஆகையால் ''எதையும் தூஷிக்காமல் இருத்தல்'' என்ற சிறந்த நியமம் சிறிது சிறிதாக நாளடைவில் உபாஸகனது ஆத்மஞ்ஞானத்திற்கே உபயோகப்படுவதாக ஆகிறது.

उप. ''व्रतं न चरेत्'' ॥ ३८ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भा. पुरुषार्थरूपाणि व्रतानि नाचरेत्। तैः प्राप्यस्य अर्थस्य इतोऽप्यधिकस्य अभावात्; यानि वर्णाश्रमधर्मरूपाणि पुरुषार्थसाधकत्वेन प्राप्तानि, प्राप्तानां नित्य नैमित्तिकानां अङ्गत्वेन प्राप्तानि दर्शपूर्णमासाद्यङ्गभूतानि क्रत्वर्थानि तानि तु कार्याण्येव। नित्य नैमित्तिकानां त्यागाविधानात्॥

உடனுக்குடன் சாக்ஷாத்தாகவே லௌகிக காம்ய புருஷார்த்தங்களைத் தரக்கூடிய விரதங்களை உபாஸகன் அனுஷ்டிக்கக் கூடாது. இந்த உபாஸனையால் அடையக்கூடிய பலன்களைக் காட்டிலும் விசேஷமாக அதிகமாக அவ்விரதங்களால் அடையக்கூடிய பயன்கள் எதுவும் இல்லை என்பதால் இவ்வாறு கூறப்பட்டது.

அலௌகிகமான ஸ்வர்காதி புருஷார்த்தங்களுக்கு சாதகமாக இருக்கின்ற வர்ணாசிரம தர்ம ரூபங்களான அக்னிஹோத்ரம் முதலிய யக்ஞங்களும், அந்த யக்ஞங்களையே நிறைவேற்றி வைக்கும் அதனதன் அங்கங்களாக விதிக்கப்பட்ட 'க்ரத்வர்த்தமான' (யாகத்தை பூர்த்தி செய்வதையே பிரயோஜனமாகக் கொண்ட) தர்சபூர்ணமாசம் முதலான கர்மாக்களும் யாவராலும் கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்பட்டேயாக வேண்டும். நித்ய, நைமித்திக கர்மாக்களுக்கு எந்த இடத்திலும் 'த்யாகம்' (விலக்கு) விதிக்கப்படவில்லை.

उप. "न तिष्ठेत् नियमेन"॥ ३९ ॥
"नियमात् न मोक्षः"॥ ४० ॥

भा. तस्यैव इदं विवरणम्। नियमनस्य निर्बन्धरूपत्वेन

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

आत्मानुसन्धानविरोधित्वात्। आत्मानुसन्धानाभावादेव मोक्षे विलम्बितत्वापत्तेः इत्यर्थः ॥

இந்த இரு வாக்யங்களும் "व्रतं न चरेत्" என்பதின் விரிவுரைகளே.

நியமனம் (ஆசாரம்) என்பது கட்டுப்பாடு என்ற உருவத்தில் இருப்பதால் ஆத்மானுசந்தானத்திற்கு எதிரியாக ஆகிறது. கட்டுப்பாடு என்ற நிர்பந்தத்தில் இருப்பவனால் ஆத்மானுசந்தானம் செய்ய இயலாது. ஆத்மானுசந்தானம் தடைபடுமானால் மோக்ஷத்திற்கு தாமதம் ஏற்படும். முக்தி கிடைப்பது அறிது என்பது பொருள்.

उप. "कौलप्रतिष्ठां न कुर्यात्" ॥४१॥

भा. यदिकश्चित् न्यायोपन्यास निपुणः कौलं सन्यायैः अवस्थापयितुं क्षमेत सोऽपि नेमं मार्गं प्रतिष्ठापयेत्। प्राकटयभङ्गापत्तेः। अत एव एतच्छास्त्रविषये ग्रन्थकारस्यापि कौलप्रतिष्ठारूपत्वेन तत्रापि निषेधप्रवृत्त्या सांप्रदायिकानां कतिपयांशानां अप्रकटनाय गुरुमुखादेव ज्ञेयं इति तत्र तत्र लेखः सङ्गच्छते॥

தர்க்க ந்யாய சாஸ்திரங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்று அவற்றை பிறருக்கு எடுத்துக்கூறுவதில் வாக் வல்லமை பெற்ற ஓர் உபாஸகன் சிறந்த சித்தாந்த ந்யாய வாதங்களால் எதிர் தரப்பினரை வென்று இந்த கௌளமார்க்கத்தை யாரும் அசைக்கமுடியாதபடி சாங்கோபாங்கமாக நிலைநிறுத்தும் சாமர்த்தியம் பெற்றவனாக இருந்தாலும் அப்பேர்பட்ட மஹாபண்டிதனான உபாஸகனும் இந்த கௌளமார்க்கத்தை ஸ்தாபிக்க முன்வரவே கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏனெனில் இச்செய்கையால் प्राकट्यं தானும் ஓர் சாக்தன் என்பது விளம்பரப்படுத்தப்பட்டு விடும். அதன்மூலம் அவன் உபாஸ்திக்கு ஹாநி (குறைவு) ஏற்படுவிடும்.

இந்த பாஷ்யம் எழுதுவதன் மூலம் தானும் ஓர் கௌளமத ப்ரதிஷ்டாபகனாக ஆகலாம். தன்னிடத்திலும் இந்த நிஷேதம் பிரவர்த்திக்கும் என்று எண்ணியே சம்பிரதாயத்தால் மட்டிலும் அறியப்படவேண்டிய பல பல விஷயங்களை ஆங்காங்கு விளக்கிக் கூறாமல் "குருவின் வாயிலாகத்தான் அறிய வேண்டும்". என்று பல இடகளில் இந்த பாஷ்யாசார்யர் (ஸ்ரீ பாஸ்கரராயர்) எழுதுவது மிகவும் பொருத்தமாக விளங்குகிறது.

उप. "सर्व समो भवेत्" ॥ ४२ ॥

भा. एतच्छास्त्रेष्वेव आचारान्निष्कृष्य विधत्ते। प्राणिमात्रे स्थावरमात्रे वा समो भवेत्। अनन्यभावेन वर्तेत। अत एव भागवते "खं वायुं अग्निं सलिलं महीं च" इत्यादि॥

இந்த உபநிஷத்தில் கூறப்பட்ட ஆசாரங்களை கடைந்தெடுத்து வெண்ணை போன்ற ஓர் முடிவான ஆசாரத்தை இந்த சூத்திரம் கூறுகிறது. ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் எல்லா ஸ்தாவர, ஜங்கம வஸ்துக்களிலும் சம பாவனை அடையவேண்டும். "தன்னைககாட்டிலும் இவைகள் வேறல்ல" என்ற பாவனையை அப்பியசித்து வரவேண்டும் என்று கருத்து. ஸ்ரீ பாகவதத்திலும் "ஆகாசம், காற்று, அக்னி, ஜலம், பிருதிவீ இந்த ஐந்து பூதங்களையும் சமமாக பாவிக்கவேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उप. "स मुक्तो भवति" ॥ ४३ ॥

भा. स एव सद्यो मुच्यते। तादृश पुरुषधौरेयात् ईषत् न्यूनास्तु शनैः शनैः मुच्यन्ते इति भावः ॥

இவ்வாறு யாவற்றிலும் சமபாவனை நிலைபெற்றவன் உடனேயே முக்தியைப் பெறுகிறான். இப்பேர்பட்ட புருஷ சிரேஷ்டரைக் காட்டிலும் சிறிது குறைந்த சம பாவனை உடையவர்கள் காலக்ரமத்தில் மெதுவாக முக்தியைப் பெறுகிறார்கள்.

उप. " पठेदेतानि सूत्राणि प्रातरुत्थाय देशिकः । आज्ञासिद्धिर्भवेत्तस्य इत्याज्ञा पारमेश्वरी" ॥ ४४ ॥

भा. अर्थानुसन्धानपूर्वकं एतानि सूत्राणि यः पठति स एव देशिकः। तस्यैव आज्ञासिद्धिः। अप्रतिहताज्ञता। शिवभावः इति यावत्। एवं परमेश्वरस्य आज्ञा। अतः अनाश्वासो न कार्यः इति भावः ॥

எவனொருவன் அதிகாலையில் இந்த சூத்திரங்களை அதனதன் அர்த்தங்களை அறிந்து அனுசந்தானம் செய்து ஏகாக்ர சித்தத்துடன் படித்து வருகிறானோ அவனே தேசிகன் ஆகிறான். அத்தேசிகனுக்கு "आज्ञासिद्धिः" - "தன்னால் கட்டளையிடப்படும் எந்தக் காரியமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தடையின்றி நிறைவேறும் தன்மை'' என்ற மகத்தான சித்தி கிடைக்கிறது. இந்த आज्ञासिद्धिः என்ற தன்மை பரமேசுவரன் ஒருவனுக்கே உரியது என்பதால் இத்தேசிகனும் பூர்ண சிவ பாவத்தையே (शिवभाव) அடைகிறான் என்பது பொருள். இவ்வாறு பலன் குறிப்பிட்டு பரமேசுவரனே கட்டளை செய்து கூறுகின்றபடியால் இவ்விஷயத்தில் சிறிதும் அவநம்பிக்கை அடையக்கூடாது என்பது கருத்து.

उप. ‘‘यश्चाचारविहीनोऽपि यो वा पूजां न कुर्वते।
यदि ज्येष्ठं न मन्येत नन्दते नन्दने वने।। ४५ ।।

भा. यः पूर्वोक्तान् आचारान् नानुतिष्ठति। संशयापन्नमनाः तदुक्तविधां सपर्यां न करोति। (वचनव्यत्ययः छान्दसः।) अयं पन्थाः सर्वोत्तमः इति न मन्यते - एतादृशोपासकाभासोऽपि उक्तफलालाभेऽपि स्वर्गमात्रं लभत एव। किमु यथावत् तदुपासकस्य यथोक्तफलप्राप्तिः इति भावः ।।

எவனொருவன் இவ்வுபநிஷத்தில் கூறப்பட்ட நியமங்களை அனுஷ்டிக்காமலும், இவைகளில் சந்தேகம் கொண்ட மனத்தினனாய் விதிக்கப்பட்ட பூஜைகளை செய்யாமலும் இந்த ‘‘கௌளமார்க்கம்'' சர்வோத்தமம் இல்லை என்று எண்ணுபவனாகவும் இருக்கின்றானோ அந்த (उपासकाभास) உபாஸகாபாஸன் கூட (உபாஸகன் மாதிரி நடிப்பவன்) ஸ்வர்க்கத்தை அடைகிறான் என்றால் பூர்ண விசுவாசத்துடன் இந்த மார்க்கத்தை அனுஷ்டிக்கும் உபாஸகச்ரேஷ்டனுக்கு சாஸ்திரத்தில் கூறப்பட்ட சிறந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலனாயுள்ள "கைவல்யம்" என்பது உறுதியாய் கிடைக்கும் என்பதை கூறவும் வேண்டுமா?

"इति कौलमार्ग पारावारपारीण
श्रीमत् भास्करराय विरचितं
कौलोपनिषत्भाष्यं सम्पूर्णम्" ॥
इति॥ श्रीरस्तु॥

இவ்வாறு கௌளமார்க்கம் என்ற சமுத்திரத்தின் ஆழத்தைக் கடந்த ஸ்ரீ பாஸ்கர ராயர் என்பவரால் எழுதப்பட்ட கௌளோர்பநிஷத் பாஷ்யம் முற்றுப்பெற்றது

ஸ்ரீ ரஸ்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Sanskrit Test & Tamil Translation of the Commentaries of

SRI TRIPUROPANISHAT

&

SRI KAULOPANISHAT

by

SRI BHASKARARAYA MAKHĪ

(A Bhaskara Prakasha Ashrama Publication

Tamil Translation by :

SRI SATYANANDANATHENDRA SARASWATHI SWAMI

Copies can be had from

Sri Bhaskara Prakasha Ashram
7, First Main Road.
Raja Annamalaipuram
Chennai-600028.
Phone : 4936571.